

வெண்பனி மூத்தாய்
என்.சீதாலெட்சுமி

# வெண்பனி முத்தாய்!



## பதிப்புரை

மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நல்ல நாவல்களின் வரிசையிலே குறிப்பிடத் தக்கவை சீதாலெட்சுமி நாவல்கள். படித்தவர்கள் பாராட்டுகிறார்கள். படிப்பவர்கள் மேலும் மேலும் புதிய நாவல்களை எதிர்பார்க்கிறார்கள்.

60 ஆண்டுகளாக அருணோதயம் அறிமுகப் படுத்திய எழுத்தாளர்களில் தோல்வி கண்டவர்களே இல்லை. சீதாலெட்சுமி நாவல்களை மேலும் மேலும் படித்து கருத்தினை எழுதுங்கள்.

- **அருணோதயம் அருணன்**

# வெண்பனி முத்தாய்!

---

## 1

"என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய் தனை பெருவேல் காக்க!"

உதடுகள் சஷ்டிக் கவசத்தை வார்த்தை மாறாது உச்சரிக்க, இந்திராவின் கைகள், வாழைத்தண்டை வேகமாய் நறுக்கிக் கொண்டிருந்தன.

இன்று ஞாயிற்றுக்கிழமைதான்! வார விடுமுறை! வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை! மெது வாகச் சமைக்கலாம்! ஆனால், பழக்கம் யாரை விட்டது!?

குளித்து முடித்து, விளக்கேற்றியதும், கந்தனைத் துதிபாடத் துவங்கும்போதே, காய்கறிகளின் மீது கண் போய் விடுகிறது!

ஏனோ, கணவர் இறந்த இந்த இரண்டு வருடங்களாக, அவருக்கு இது வழக்கமாகி விட்டது!

இந்திராவிற்கு சட்டென கண்ணைக் கரித்துக் கொண்டு வந்து விட்டது. இந்நேரம் ஜெகதீசன் மட்டும் இருந்திருந் தால், அவளது வேலைகளில் பாதியை அவர் பார்த்திருப் பார்.

''நீயும் தானே வேலைக்குப் போறே? என்னைவிட உனக்குத் தான் டென்ஷன் அதிகமான பேங்க் வேலை. அப்படியிருக்கும்போது, சமையல் செய்றது பொண்டாட்டி யோட கடமைன்னு என்னால ஒதுங்கி இருக்க முடியல, இந்து!'' என்று இந்திராவின் நெற்றி வருடிச் சொல்பவர்,

''எனக்கு உன்னோட கூடமாட வேலை பார்க்கிறதில ஒரு சந்தோசம். வெளி வேலைக்குப் போற நாம, நைட் தான் பார்த்துக்க முடியுது. இப்படி அடுப்படில நின்னா, கூடக் கொஞ்ச நேரம் பேசலாம் இல்ல!?'' என்பார் ஏக்கமாக.

அவரது ஏக்கத்தைப் பார்த்து, ''நான் வேணும்னா வேலையை விட்டுட்டுமாப்பா?'' என்பார் இந்திரா.

''ம்ஹூம்! பொண்ணுக்குத் தைரியமே வேலைக்குப் போறதுதான்! என்னதான் நான் சம்பாதிக்கிறது எல்லாம் உனக்கும் நம்ம பொண்ணுகளுக்கும் தான்னாலும்,



உனக்குன்னு ஒரு வருமானம் வரணும். அது தான், உன்னை நிமிர்ந்து நிற்க வைக்கும்!'' என்று மறுப்பார் திடமாக.

அவரது கடைசி வாக்கியத்தின் பொருள், நெஞ்சு வலி யால் அவர் இறந்தபோதுதான் புரிந்தது, இந்திராவிற்கு.

கூடி வந்த சொந்தங்களின் இறக்கம் பூசிய இகழ் பேச்சுக் கும், பரிதாபத் தோல் போர்த்திய பொறாமை வார்த்தைக் கும் அவரால் இனம் காண முடிந்தது.

இந்திராணியின் தெளிவான முடிவுகளும், தடுமாற்ற மில்லா வார்த்தைகளும், நேர் கொண்ட பார்வையும் அவர் களது வாயை அடைத்துவிட, சில நல்ல உள்ளங்களின் துணையுடன் வாழ்ந்து வருகிறார், இந்திரா.

ஏனோ, கணவனின் நினைப்பில் முதுகு தானாக நிமிர்ந்து அமர்ந்தது!

கைகள் வாழைத்தண்டை, மோரில் கழுவிக் கொண் டிருக்கும்போதே, அடுத்து துருவ வேண்டிய தேங்காயின் மீது கண்கள் படிந்தன.

ஜெகன் இருக்கையில், இதெல்லாம் அவரது இலாக்கா!

தேங்காய் துருவுவது.

இட்லி அவிந்ததும், தட்டில் எடுத்து வைப்பது.

அனைவருக்கும் சாப்பாடு கட்டுவது.

கழுவ வேண்டிய பாத்திரங்களைக் கூடையில் போட்டு, பின்கட்டில் வைப்பது.

ஹ்ம்ம். முக்கியமான வேலை, அவர்கள் வீட்டுச் சின்ன வாலு அருள்மொழிக்கு உணவு ஊட்டுவது.

கணவனும் சின்ன மகளும் கொஞ்சி விளையாடும் காலை வேளை உணவு நேரங்களை அசை போட்ட

வாறே, தேங்காயை எடுத்தவரின் கவனத்தைக் கலைக்க வென, வெளியே சத்தம் கேட்டது!

சத்தமில்லை, கூச்சல்! ஆர்ப்பாட்டம்!

''அம்மாமாமாமாமாமாமா... இவ என்னை அடிக்கிறா!''

''பொய் சொல்லாதடி, எருமை! இன்னைக்கு மதியம் பண்ற சிக்கன் பிரியாணில சாதம் முழுசையும் நானே சாப்பிட்டு, வெறும் பீசை மட்டும் உனக்கு மீதம் வைக் கிறேன் பாரு!''

''போடி... போடி! நீ சாப்பிடுற வரைக்கும் நான் உன் வாயைப் பார்த்திட்டு உட்கார்ந்திருப்பேனாக்கும்!? ஒரே அடி! தட்டைத் தள்ளிடுவேன்!''

''தள்ளேன்! உனக்குமில்லாம... எனக்குமில்லாம சாப்பாடு தரைக்குப் போவும்!''

''போகட்டும் போகட்டும்! நீயே எல்லாத்தையும் கொட்டிக்கிட்டு, குந்தாணி மாதிரி... தரை அதிர நடக் கிறதை விட, உன்னோட நூறு கிலோ வெயிட்டைத் தாங்குற இந்தத் தரையாவது இதைச் சாப்பிட்டு, கொஞ்சம் குண்டாகட்டும்!''

''அம்மாமாமாமாமாமாமாமாமாமா... என்னை குந் தாணினு சொல்றாமா.''

''அப்படித் தான்டி சொல்வேன்! குந்தாணி! குந் தாணி! குந்தாணி!''

''போடி! ஒளியும் ஒலியும்! நீ ஒழிஞ்சு போவேடி, ஒளியும் ஒலியும்!''

''ஏய், வேணாம்!'' தன்னொளிங்கிற அழகான பேரைக் கொலை பண்ணாத!''



''பெரிய அழகு! அழகு... பேர்ல மட்டும் இருந்தா போதுமா?! முகத்தில இருக்கணும்!''

''என் முகத்துக்கு என்னடி குறைச்சல்!? உன்னோட பூசணிக்கா முகத்துக்கு, என்னோட நிலவு முகம் எவ் வளவோ அழகு!''

''இழுத்துக் கிள்ள உனக்கு கொஞ்சமாவது சதை இருக்கா? எனக்குத் தான் இருக்கு! குண்டா இருக்க பொண் ணுங்களைத்தான்...'' என்று ஆரம்பித்துவிட்டு, அந்த வீட்டுச் சின்ன வாலு அருள்மொழி பம்ம,

''ஹே! என்ன பம்முற? அம்மா வாங்கம்மா... வசமா சிக்கிட்டா! வாங்க வாங்க!'' என்று குதூகலித்துக் கத்தி னாள், தன்னொளி.

''ஹே ஹே ப்ளீஸ் தனு! என் செல்ல அக்கா இல்ல! அம்மாகிட்ட மாட்டி விடாதடி!''

''இப்ப மட்டும் தனுவா? அப்போ என்ன சொன்னே? ஒளியும் ஒலியுமா? மகளே வாடி வா!'' என்று போட்டிருந்த இரவு உடையின் கையைத் தூக்கி விட்டுக் கொண்டு, இல்லாத மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு நின்றது மூத்தக் காளை.

தமக்கையின் சீண்டலில் சிலிர்த்தாலும், எதிர்த்து எதுவும் பேசவில்லை, அருள்மொழி.

பின்னே, தாயிடம் யார் பாட்டுக் கேட்பது!?

ஆனால், தன்னொளி விடுவதாக இல்லை! கல்லூரி படிப்பு முடிந்து, கடந்த ஒரு வருடமாக சென்னையில் வேலை பார்க்கும் அவள், நன்றாக உறங்குவதே திரு வண்ணாமலைக்கு வரும் விடுமுறை நாட்களில் தான்! அந்த ஆனந்தத் தூக்கத்தைத், தன்னை அடித்துக்

கெடுக்கும் இந்தக் குரங்கை மாட்டிவிட்டே ஆக வேண்டும் என்று தோன்றியது, தனுவிற்கு!

வேகமாய் அடுக்களைக்குள் ஓடியவள், ''அம்மா... அம்மா... அருள் இப்போ என்ன சொன்னா தெரியுமா? குண்டா இருக்கப் பொண்ணுங்களைத் தான் பசங்களுக்குப் பிடிக்கும்ன்னு சொல்றாமா'' என்று, தங்கை சொன்னது, சொல்லாமல் நிறுத்தியது என எல்லாவற்றையும் போட்டு உடைத்தாள்.

அதற்குள், அங்கு ஓடி வந்த அருள் ''ஐயோ இல்லமா! இவ சும்மா சொல்றா! நா சொல்லவே...'' என்று தொடங்கவும்,

கையில் வைத்திருந்த தேங்காயால் நொட்டென ஓர் அடி வைத்தார் இந்திரா.

''ஷ்...ஆஅ... ஆஅ...'' என்று கையை உருவிக் கொண்ட அருள், பரிதாபமாய் பார்க்கவும்,

''பொய் சொல்லாத, கழுதை! ரெண்டு வீடு தள்ளி நின்னா கூட, நீங்க சண்டை போட்டது கேட்கும்! பத்தடி தூரத்தில இருக்கிற என்கிட்ட... சொல்லவே இல்லைன்னு பொய் சொல்றே?'' என்றார் இந்திரா, கண்டிப்புடன்.

''இல்லம்மா... நிஜமா நான் சொல்லலை...''

''இல்லம்மா... சொன்னா! சொன்னா! நீங்க கூட கேட்டீங்க தானே?''

''போடி! பசங்களுக்குப் பிடிக்கும்ன்னு சொல்லலைம்மா... பொதுவா சொன்னேன்... உங்களுக்குக் கூட இவளை விட என்னைத் தானேமா ரொம்பப் பிடிக்கும்! அதைத் தான் சொன்னேன்! இவதான்... தேவையில்லாத வார்த்தையைப் போட்டு என்னை மாட்டி விடுறா?!''



''நீ சொன்ன 'பொது' எதுன்னு எனக்குப் புரியும்!'' என்ற இந்திரா,

''தனு, அந்த வாழைத்தண்டை எடுத்து மிக்சில ஜூஸ் போடு!'' என்றார் பெரிய மகளிடம்.

''ஹய்யையோ! வாழைத்தண்டு ஜூஸா? உவ்வே!'' - அருள்மொழி இரண்டடி பின்னே வைக்க,

''நல்லதெல்லாம் அவளுக்குப் பிடிக்காதும்மா! பீட்சா... பர்கர்... ஹ்ம்ம்... பசங்க... லவ்ஸ்...'' என்று கண்ணடித்துக் கொண்டே, வாழைத்தண்டை எடுத்தாள் தன்னொளி.

''ஏய்... ஏய்... சும்மா சும்மா என்னை மாட்டிவிடாதடி!''

''அருள்... இந்த வயசில எல்லாமே விளையாட்டா தான்மா இருக்கும். பசங்க பார்க்கும்போது மனசு பறக்கும்... அவங்க கண்ணடிச்சா பெரிய அழகின்னு நினைப்பு வரும்... லவ் லெட்டர் கொடுத்தா என்னைவிட அழகி இல்லைன்னு தோணும்...'' - இந்திரா பேசிக்கொண்டே போக,

''அம்மா! ஸ்டாப்! ஸ்டாப்! தினம் தினம் சொல்ற உங்களுக்கு போர் அடிக்குதோ இல்லையோ, எனக்கு ஏக போர் அடிக்குது! ப்ளீஸ் வேணாமே! அழுதுருவேன்!'' என்று அருள்மொழி, கையெடுத்துக் கும்பிடவும்,

''நல்லது சொன்னா கேட்டுக்கணும், அருள்! ஒருத்தன் நல்லவனா கெட்டவனான்னு பகுத்தறிஞ்சு பார்க்கிற வயசு உனக்கு வரலை...'' - இந்திரா தீவிரமாகப் பேசவும்,

தன்னொளி அவரருகே வந்தாள். தரையில் மண்டியிட்டு அவரது தோளைச் சுற்றிக் கை போட்டு, அவரது தலையில் தலை சாய்த்துக் கொண்டவள்,

''அம்மா... பயப்படாதீங்கம்மா! நானோ அருளோ, உங்களை மீறி... உங்களுக்குப் பிடிக்காத ஒரு பையனைக்

கல்யாணம் பண்ணிக்க மாட்டோம்!'' என்றாள், தேங்காய் மூடியிலிருந்து அவரது கையை விடுவித்து, தன் கன்னத்தோடு வைத்துக் கொண்டு.

தன்னைப் பின்பற்றி தங்கையும் தாயின் அருகே அமரவும்,

''அப்பா இல்லாத குழந்தைகளை நாம நல்லபடியா கல்யாணம் பண்ணிக் கொடுக்கணுமேங்கிற உங்க பயம் எங்களுக்குப் புரியுதுமா! கண்டிப்பா உங்க மனசு நோகுற மாதிரி நடந்துக்க மாட்டோம்!'' என்றாள் உறுதி மிகுந்த குரலில்.

கூடவே, ''அப்பாவை இழந்துட்டு நீங்க படற வேதனையையே எங்களால தாங்க முடியலை... அப்படியிருக்கும்போது, நாங்களே எப்படிம்மா உங்களை வேதனைப் படுத்துவோம்!'' எனக் கூறியபோது, தன்னொளியின் குரல் நடுங்கியது.

''இல்லைடா... அம்மா சந்தோஷமா தான் இருக்கேன்...'' என்று மகளின் கன்னம் வருடி, தாய் சொல்லவும்,

''ஏன்மா பொய் சொல்றீங்க? நடு ராத்திரில... தூக்கம் வராம நீங்க அழுதிட்டு இருக்கிறது எங்களுக்குத் தெரியும்!'' என்றாள், அருள்மொழி அழுகையும் ஆத்திரமுமாய்.

பொங்கி வந்த கண்ணீரைப், புறங்கையால் துடைத்துக் கொண்டே ''எங்களுக்குத் தெரிஞ்சா நாங்க உடைஞ்சு போய்டுவோம்ன்னு தானே நைட்ல அழறீங்க?'' என்ற சின்ன மகளை வாரியெடுத்து, மடியில் இட்டுக் கொண்டார் இந்திரா.

''இல்லைடா! அப்பா என்னை ஒரு சராசரி குடும்பத் தலைவியா நடத்தலை... எதையுமே தன்னம்பிக்கை



யோட பார்க்கிற மனுஷியா தான் மாத்தினாங்க! அப்படியிருக்கும்போது நான் ஏன் அழணும்!? அதுவும், கண்ணுக்குக் கண்ணா ரெண்டு பொண்ணுங்க இருக்கும் போது, அம்மா அழுவேனா?''

''இல்ல... அழுதீங்க! நாங்க பார்த்தோம்!''

''அது... அது...''

''அழுதீங்க தானே? ஏன்மா? என்னம்மா கஷ்டம் உங்களுக்கு? எங்ககிட்ட சொல்லக் கூடாதா?'' என தன்னொளி வினவவும்,

''ச்சீ! லூசுங்களா! எனக்கு என்னடி கஷ்டம்?'' என்று மலர்ந்து சிரித்தவர்,

''தனுவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டா... நானும் அருளுமா இருக்கணுமேன்னு கஷ்டமா இருந்துச்சு!'' என்றார் சட்டென வருத்தம் சூழ்ந்த குரலில்.

''என்னம்மா நீங்க? கல்யாணம் வேணாம்ன்னு நான் சொன்னா... அதுக்கும் வருத்தப்படுறீங்க! இப்போ... கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் போறோமேன்னு வருத்தப்படுறீங்க?! குழப்பாதீங்கம்மா!''

''பெரிய குழப்பம்! கல்யாணமாகி.. பொண்ணைப் பெத்தா தெரியும் உனக்கு!''

''ஆஹா! இதுக்காக கல்யாணம் பண்ணிக்க முடியுமா?''

''ஏன்டி, கல்யாணம் பண்ணிக்க முடியாது? கல்யாணத்து மேல உனக்கு என்னடி பயம்?''

''அய்யே! எனக்கென்ன பயம்? நீங்களும் அப்பாவும் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்திட்டும், எனக்குக் கல்யாணத்து மேல வெறுப்பு வருதுன்னா நான் ஒரு லூசுன்னு அர்த்தம்!''

"ஒரு லூசே தன்னை லூசு என்கிறதே! மூனு புள்ளி ஒரு ஆச்சரியக்குறி!" - அருள்மொழி இடைவெட்டியதைக் கண்டு கொள்ளாமல்.

"எனக்கு உங்களையும், அருளையும் விட்டுட்டுப் போணுமேன்னு தான் பயமா இருக்கு!"

"இப்ப மட்டும் எப்படி இருக்கியாம்?" - அருள்மொழி கழுத்தை வெட்டினாள். என்னதான் சண்டையும் சச்சரவுமாய் இருந்தாலும், அக்கா வெளியூரில் இருப்பது, ஒரு கை உடைந்தது போலிருந்தது அச்சிறு பெண்ணிற்கு!

## 2

"அடடா! இதை மறந்தே போனேன் பாரேன்!" என்று தலையில் லேசாய் தட்டிக் கொண்ட இந்திரா,

"இப்ப நீ ஹாஸ்டல்ல தனியா இருக்கிறதை நினைச்சாலே, பல ராத்திரி எனக்குத் தூக்கம் வர மாட்டேங்குது! கல்யாணம்ன்னு ஒண்ணு ஆகிட்டா, நீ மாப்பிள்ளையோட இருப்பே! நானும் கவலையில்லாம இருக்கலாம்!" என்றார்.

"போங்கம்மா! ஹாஸ்டல்ல என்னோட சேர்ந்து இருபது பேர் இருக்காங்க... கல்யாணமாகிட்டா ரெண்டு பேர் தான் இருப்போம்!" என்று உதட்டைப் பிதுக்கிய தன்னொளி,

"ரெண்டு பேர் பெருசா? இருபது பேர் பெருசா?" என்றாள் விஞ்ஞானியின் மேதாவிக் குரலில்.



கூடவே, "நம்ம வீட்டு அறிவாளியைக் கேட்போமா?" என்றுவிட்டு, "ஏய் பப்பாளிப்பழம்! சொல்லு? ரெண்டு பேர் பெருசா? இருபது பேர் பெருசா?" என்றாள் சவால் பார்வையுடன்.

"ரெண்டு" எனக் கூறினால், அக்கா அடிப்பாள்!

"இருபது" என்றாலோ, இன்று முழுதும் தாய் சோறு போட மாட்டாள்! என்ன சொல்வதென்று புரியாமல், அப்பப்பாளிப் பழம் பேந்தப் பேந்த விழித்தது.

அடியை விட பசி பெரிதாய் தெரிய, "இரண்டு பேர் தான், தனுக்கா!" என்றது சின்னது.

முறைத்துக் கொண்டிருந்த தமக்கையை நோக்கி "நான் ஒரு படிப்பாளி, தனுக்கா! எப்பவுமே ஸ்கூலை மனசில வச்சுத்தான் பேசுவேன்... ஸ்கூல்ல எப்பவுமே செகண்ட் ரேன்க் தான் பெருசு! இருபதாவது ரேன்க்கை யாருமே மதிக்க மாட்டாங்க!" என்றாள் அருள்மொழி விளக்கமாக.

சிரிப்பு நதியென பொங்கி வந்தபோதும், சிங்கமென உறுமிக் கொண்டிருந்த மூத்த மகளைக் காண, இந்திராவிற்கு பரிதாபமாய் இருந்தது!

அவளது மனம், அன்னைக்குப் புரிந்தது! ஆனால், அவள் மனம் போன போக்கில் விட்டுவிட முடியாதே!

"சரி... இப்போதைக்கு இந்தப் பேச்சு வேண்டாம்! போங்க... போய்... குளிச்சிட்டு வாங்க. சாப்பிடலாம்!" என்று மக்களை அனுப்பி வைத்தார், தாய்.

"குளியல்" என்ற ஒரு வார்த்தை போதுமானதாய் இருந்தது அடுத்த சண்டை வருவதற்கு!

''நான் தான் ஃபர்ஸ்ட் குளிப்பேன்!'' என்று கத்திக் கொண்டு அருள் ஓட,

''ஏய், நீ குளிக்கிற காக்கா குளியலுக்கு எதுக்குடி பாத்ரூம்! போ... போய், வாஷ் பேசின்ல குளி!'' என்று துரத்தினாள் தன்னொளி.

''அப்புறம் உன்னை மாதிரி, தோல் தேயத் தேய, சோப்பு கரையக் கரைய, ரெண்டு மணி நேரமா குளிப் பாங்க?! உன்னாலதான், சென்னையில தண்ணிப் பஞ்ச மாம்... பேசிக்கிறாங்க!''

''நான் குளிக்க மட்டுமா செய்றேன்...'' என்று தன்னொளி தொடங்கியதை முடிக்க விடாமல்,

''அய்யே, பாத்ரூம்ல போய்... தூங்க வேற செய்வியா? அதான் அம்புட்டு நேரமாகுதா?''

''ஏய் வேணாம்! துணி துவைப்பேன்னு சொல்ல வந்தேன்!''

''துணி துவைப்பியா? அப்புறம் எதுக்கு, ஒரு மூட்டைத் துணியை வாராவாரம் வீட்டுக்கு அள்ளிட்டு வந்து, அம்மாவோட முதுகை ஒடிக்கிறே?''

''மெஷின் தானேடி துவைக்குது? அம்மாவா துவைக் கிறாங்க? உனக்கென்ன வந்துச்சு?''

''எனக்கொண்ணும் வரலை! உன்னோட அழுக்குத் துணியோட என்னோட துணியைப் போட்டு, அதோட அழ கையே கெடுக்கிறாங்களே, அதான் ஆத்திரம் வருது!''

''அய்யே, இவ பெரிய இவ! ரித்து பேரி டிசைன் பண்ண டிரஸ்ஸைத் தான் போடுவா! போடி போ!'' என்ற தன்னொளி, இமைக்கும் நேரத்தில் குளியலறைக்குள் புகுந்துவிட,



''எருமைமாடு! கழுதை! குதிரை!'' என்று அருளால் கத்த மட்டுமே முடிந்தது!

தாயிடம் சென்று குற்றப்பத்திரிகை வாசித்தவளிடம், ''நீ பேச்சு மட்டும் தான் அருள்குட்டி! தனு, பேச்சோட பேச்சா வேலையையும் முடிச்சிடும்!'' என்றார் தாய், அவளது மூக்கை நிமிண்டி.

கேலியும் கிண்டலுமாக காலை வேளை உணவு கழிய, பதினோரு மணி அளவில், ஓர் தமிழ் படத்தில் இரு பெண்களும் ஒரு சேர மூழ்கி இருந்தனர்.

இந்திரா செய்து வைத்த ரிப்பன் பக்கோடா நடுவில் வீற்றிருக்க, அதன் இரு மருங்கிலும் அமர்ந்திருந்த பெண்கள் இருவரும், அதை மின்னல் வேகத்தில் வயிற்றுக்கு இடமாற்றிக் கொண்டிருந்தனர்.

தன்னொளியின் அருகே அமர்ந்த இந்திரா, அவள் கையிலிருந்த ரிமோட்டை வாங்கிக் கீழே வைத்தார்.

அதற்காகவே காத்திருந்தார் போல, புலியென பாய்ந்து ரிமோட்டை அருள் கைப்பற்றவும்,

''ஹய்யோ! ஏன்மா? இந்தப் படம் நல்லா இருக்கும்... அவ மாத்திடுவா!'' என்று மூக்கால் அழுதாள் தன்னொளி.

''தனு! நான் ஒரு முக்கியமான விஷயம் பேசணும். சும்மா அவளோட வாய்ச்சவடால் அடிக்காம, என்னைப் பேச விடு!'' என்றார் இந்திரா கண்டிப்புடன்.

தாயின் குரலில் தெரிந்த தீர்க்கம், தன்னொளியை வாய் மூடச் செய்தது!

ஜகனே இந்திராவின் இக்குரலுக்கு அடிபணிவார் என்கையில், பிள்ளைகள் எம்மாத்திரம்!

கோபமென்றாலோ அல்லது தனது முடிவை குடும்பத்திற்கு அறிவிக்க வேண்டுமென்றாலோ, அதை அதட்டியோ மிரட்டியோ முகத்தைச் சுழித்தோ வெளிக் காட்ட மாட்டார் இந்திரா. ''இது என் முடிவு. இதை மாற்று வதில் எனக்கு இஷ்டமில்லை'' என்பதை அவரது குரலே சொல்லிவிடும். அந்த சமயத்து தோற்றம், இப்போது தெரியவும், தனுவும் கூடவே அருள் தாயின் சொல்லுக் காகக் காத்திருந்தனர்.

கையிலிருந்த கவரிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து, தனுவிடம் கொடுத்தவர்,

''இந்த வரன், வெள்ளிக்கிழமை சாயந்திரம் தான் வந்தது. நேத்து காலையிலேயே, ஜாதகம் பொருந்தி யிருக்குன்னு சொல்லி, போன் பண்ணிட்டாங்க'' என்றார் தொடக்கமாக.

''அவ்வளவு அவசரமா?'' என்று தனு யோசித்ததை ஊகித்தவராய்,

''மாப்பிள்ளையோட அம்மாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லையாம்... அவங்க கண்ணோட பையன் கல் யாணத்தைப் பார்க்கணும்ன்னு நினைக்கிறாங்க.''

''என்ன உடம்புக்கு?''

''ஏதோ பேர் சொல்லாத வியாதி. கொஞ்சம் கொஞ்சமா அவங்களோட எல்லா உறுப்புகளும் செயலிழந்திட்டு வருதாம்... சுருக்கமா சொன்னா அவங்களோட நாளை எண்ணிக்கிட்டு இருக்காங்க. மிஞ்சி மிஞ்சிப் போனா, ஆறு மாசம் இருப்பாங்கன்னு டாக்டர் சொல்றாராம்!'' என்றார் இந்திரா, வருத்தம் மேலிட குரலில்.

யாரோ என்ற போதிலும், தனுவிற்கு மனதைப் பிசைந்தது!



''ப்ச். பாவம்!'' என்று அவள் உதடு பிதுக்கும்போதே,

''ஹையா! மாமியார் தொல்லை இல்லாம ஜாலியா இருக்கலாம் தனுக்கா! ஒத்துக்கோ!'' என்றாள் அருள்.

அவ்வளவுதான்! இந்திரா ஓங்கி அருளின் கன்னத்தில் ஓர் அரை வைத்து விட்டார்.

ஸ்தம்பித்து விழித்தாள், தன்னொளி!

அவளறிந்த தாய், அவர்களை அடித்ததே இல்லை! திட்டுவாள், கண்டிப்பாள், உபதேசம் செய்வாள், தப்பைத் திருத்துவாள்! ஆனால், கை நீட்டி அவர்களை ஒரு நாள், ஒரு பொழுது அடிக்க மாட்டாள்! தந்தையும் அவ்வழியே!

அவள் கொண்ட அதிர்ச்சியில் ஒரு சதவீதம் கூடக் குறையாமல், தானும் கொண்டு ''அம்மா!'' என்று அருள் விம்ம,

''வாயை மூடு, கழுதை! ஒருத்தரோட மரணத்தில சந் தோஷப்படுற அளவுக்கு, ஈனத்தனமா வளர்த்திருக் கேனா நான்?''

''இல்லைம்மா... சும்மா விளையாட்டுக்கு!''

''என்னடி விளையாட்டு? எதில விளையாடுறதுன்னு ஒரு அளவில்ல? தனுக்கும் தான் அப்பா இல்லை... அதை ஒரு நல்ல விஷயமா மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பார்த்தா, நமக்கு எப்படி இருக்கும்? மனசு வலிக்காது?'' இந்திரா கேட்டபோது, இரு பெண்களுக்கும் தாயின் மிதமிஞ்சிய கோபம் புரிந்தது.

''சாரிம்மா!'' என்று ஒற்றை வார்த்தையில் ஒத்துக் கொண்ட அருள், எழுந்து உள்ளே போனாள்.

இந்திராவும் அவளைத் தடுக்கவில்லை. பெரிய மக ளிடம், எந்தவிதமான தடங்கலுமின்றி பேச வேண்டும் என்று தோன்றியது அவருக்கு.

புறங்கையால் கன்னத்தைத் துடைத்துக் கொண்டே சென்ற தங்கையைப் பார்வையால் பின் தொடர்ந்த தன்னொளி, ''பாவம்மா... அருள்'' எனவும்,

''அதை அப்புறம் பார்க்கலாம்! நான் சொல்றதைக் கேளு!'' என்றார் தாய், கண்டிப்புடன்.

தங்களை விடவும் முகம் தெரியாத அந்த மாப்பிள்ளை வீட்டார் மேல் என்ன கரிசனம் என்ற எரிச்சல் தன்னொளிக்கு எழுந்தது.

இந்த மாப்பிள்ளையை, 'வேண்டாம்' என்று சொல்லி விட வேண்டும் என்ற தீர்மானத்துடன் தாயின் புறம் திரும்பி அமர்ந்தாள் மகள்!

ஆனால், எண்ணி இரண்டே நாட்களில் அவன் தனது கணவன் ஆகி விடுவான் என்பதை அவள் எங்ஙனம் அறிவாள்!?

''தனும்மா, மாப்பிள்ளை பேர் இளம்பரிதி. எம்.பி.ஏ. படிச்சிட்டு, ஒரு பெரிய கம்பெனில பிசினஸ் கன்சல்டன்ட்டா இருக்கார். ஒன்றரை லட்சம் சம்பளம். அடையார்ல சொந்தமா ஃபிளாட் இருக்கு. ஒரே ஒரு தங்கச்சி. அப்பா - அம்மா, தங்கச்சி எல்லாருமே செஞ்சில இருக்காங்க. செஞ்சி தான் அவங்க சொந்த ஊரு... மாப்பிள்ளையோட அப்பா ஊர்ல இருக்கக் கடையைப் பார்த்துக்கிறாங்க. அம்மாவைப் பத்தித் தான் சொன்னேனே... ஹ்ம்ம் தங்கச்சி ஒன்பதாவது படிக்கிறா'' - ஒரே மூச்சாக, மாப்பிள்ளை வீட்டு ஜாதகத்தை ஒப்பித்து முடித்தார் இந்திரா.

ஒன்றும் சொல்லாமல், மகள் கோர்த்திருந்த கைகளிலேயே பார்வையை வைத்திருக்கவும்,



''இந்தா அவரோட போட்டோ'' என்று அவளிடம் புகைப்படத்தைத் திணித்தவர்,

''எனக்கு என்னவோ அவரை உனக்குப் பிடிக்கும்ன்னு தான் தோணுது! பாரு... பார்த்திட்டுச் சொல்லு!'' எனக் கூறியவாறே எழுந்து, படுக்கையறையின் பக்கம் நகர்ந்தார்.

''ஏய், சின்னக் குட்டி! ஓவரா அழுது, தலைகாணியை அழுக்காக்காத!'' என்ற சொல்லோடு மறைந்த தாயின் முதுகையே பார்த்துக் கொண்டிருந்த தனுவின் பார்வை, கையிலிருந்த புகைப்படத்தின் மீது படிந்தது.

''ம்ஹூம். இவனைப் பிடிக்கக் கூடாது! பிடிக்கக் கூடாது!'' என்ற எண்ணத்துடனே பார்த்தால்,

''ஹ்ம்ம்... இல்லையே இவன் மோசமில்லையே!'' என்ற மின்னல் வெட்டியது அவளுள்.

கதைகளில் வருவது போல் ஆணழகன் இல்லை!

மூக்கு கூராக இல்லை! சராசரியை விடவும் சின்னதாய் இருந்தது!

ஏர் நெற்றியில்லை! சின்ன நெற்றி!

காந்தக் கண்கள் இல்லை! சாந்தம் படிந்த கண்கள்!

அழுத்தமான உதடுகள் இல்லை! புன்னகையை மறைத்த உதடுகள்!

முறுக்கு மீசை இல்லை! சன்னமாய் ஓர் பிரஞ்ச் பியர்ட்!

ஆறடி இல்லை! அதற்காக ஐந்தடி இல்லை! ஆறரையடி! ஏக உயரம்!

ஆனாலும், அவளுக்குப் பிடித்தது!

ஏன்? ஏன்? ஏன்? என்ற கேள்வியுடன், தாயின் ''உனக்குப் பிடிக்கும்'' என்ற சொல்லும் சேர்ந்து கொள்ள, இரண்டே நிமிடத்தில் விடை கிடைத்தது!

"இவன் கொஞ்சம் கொஞ்சம்... அப்பா மாதிரி இருக்கானோ?" என்ற சிறு சந்தேகம், ஐந்தே நிமிடத்தில் உறுதி பெற்றது!

அனைத்துப் பெண் குழந்தைகளைப் போலும், தந்தையை ஹீரோவாய் எண்ணி வளர்ந்த தன்னொளிக்கு, அவனைப் பிடித்தது!

ஆனால், பார்வையில் தந்தை போல் இருந்தால் மட்டும் போதுமா? குணம் பழக்க வழக்கம்? நடவடிக்கை? இதெல்லாம் பார்க்க வேண்டாமா என்று மனம் எதிர் வாதம் செய்து!

கையிலிருந்த கணாளனையே பார்த்திருந்த தன்னொளி, எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ!

"ஹே, இவரு தான் சொத்தானா? ஆஹா! எம்புட்டு வளர்ந்திருக்காரு? ஒருவேளை, இவங்கம்மா இவரைப் பனமரத்துக்குக் கீழ நின்னு பெத்திருப்பாங்களோ?"

"எல்லாரும் பால் குடிச்சு வளருவாங்க... இவரு கள்ளு குடிச்சு... ஆஆ... அடிக்காதீங்கம்மா... பாலும் வேணாம் கள்ளும் வேணாம்... பதநீர் குடிச்சு வளர்ந்திருப்பாரோ?"

"அக்கா, நீ அவரு பக்கத்தில நின்னா... ரொம்பத் துக்கிளியூண்டா இருப்பேக்கா! பார்க்கிறவங்க எல்லாரும், அவரோட பதினாறாவது வயசில பிறந்த பொண்ணான்னு உன்னைக் கேட்பாங்க."

"ஏய் கழுதை! சும்மா அவ மனசைப் போட்டுக் குழப்பாத!" என்று இந்திரா சொல்லும்போதே,

"அப்படியாம்மா இருக்கும்? அவர் பக்கத்தில நின்னா ரொம்பச் சின்னப் பொண்ணா தெரிவேனா?" என்றாள் தன்னொளி, கவலை மிகுந்த குரலில்.



அக்குரலிலேயே, தாய்க்கு மகளின் மனது புரிந்து விட்டது! அவர் எண்ணியதுபோல், தனுவிற்கு மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறது!

சிறு சிரிப்புடன், மகளின் சிகையைக் கோதி விட்டவர் "இவ ஒரு லூசு, தனு! இவ சொல்றதை எல்லாம் மனசில வச்சுப்பாங்களா? நீ அவளை விட உயரமா இருக்கேன்னு அவளுக்குப் பொறாமை..." என்றார் சமாதானமாய்.

அப்போதும் தனுவின் முகம் தெளியவில்லை. கையிலிருந்த புகைப்படத்தையே பார்த்திருந்தவள், "ரொம்ப உயரமா இருக்கார் இல்லைம்மா" என்றாள் ஒரு மாதிரியான குரலில்.

கடையிலிருக்கும் பொருள் தனக்குக் கிடைக்காதோ என்ற வருத்தத்தில் வரும் குரல் அது!

அதை உணர்ந்தவர் போல், "என்னை எப்போ பார்த்தாலும் லாஸ்ட் பெஞ்ச்லேயே உட்காரச் சொல்றாங்கம்மான்னு எத்தனை வாட்டி, நீயே என்கிட்ட புலம்பி இருக்கே? இப்ப... நீயே இப்படிப் பேசுறியே? நீ எல்லா பொண்ணுங்களை விடவும் உயரம் ஜாஸ்திடா... அதனாலேயே, அவங்களுக்கு உன்னைப் பிடிச்சிடுச்சு. ஜாதகம்... உயரம்... நிறம்... குடும்பம் எல்லாமே ஒத்து வருது. மேல பேசலாமான்னு கேட்டாங்க..."

"என்னது பிடிச்சிடுச்சா? எப்படி? எங்க பார்த்தாங்க? எனக்குத் தெரியாம என்னோட ஆபீஸ்க்கு அவங்களை வரச் சொன்னீங்களா? ஏன்மா? ஏன்மா இப்படிப் பண்ணே?"

"ஏய்... ஏய்... நிறுத்து! நிறுத்து! பேசிட்டே போவியே! அவங்க உன்னை போட்டோல மட்டும் தான் பார்த்திருக்காங்க."

''போட்டோல பார்த்து சரி சொல்லிட்டாங்களா? பொண்ணு பார்க்க வரலையா?'' - அருள் ஏகத்திற்கும் ஆச்சரியப்பட்டுப் போனாள். தனுவுக்கும், அதே அளவு அதிர்ச்சி இருந்தது.

''ஹ்ம்ம். ஆமா! அவங்க அம்மாவோட ஹாஸ்பிடலுக்கும் வீட்டுக்குமா அலையிறதால வரலைன்னு சொல்லிட்டாங்க.''

''அவங்க பார்க்கலைன்னா போகட்டும். நாம மாப்பிள்ளையைப் பார்க்க வேணாமா? நம்மளை விடுங்க... தனு? பார்க்காமலே எப்படிம்மா கல்யாணம் பண்ணிக்கிறது? சுத்தப் பழங்காலம்!'' என்று அருள் சீற,

''அவங்க பக்கத்தை மட்டுமே பார்க்கிறாங்களே?! அவங்களுக்கு இது அவசரமா பார்த்து முடிவு பண்ற கல்யாணம். நமக்கு அப்படியா? என்னால போட்டோவை மட்டும் பார்த்திட்டு ஒத்துக்க முடியாது!'' என்றாள் தன்னொளி, தீர்மானமாய்.

''அக்காவும் தங்கச்சியும் எதில கூட்டுச் சேர்ந்துக்கிறீங்களோ இல்லையோ? ஒரு விஷயத்தைக் குறை சொல்றதில, தோளில கையப் போட்டு, ஒண்ணா சுத்துவீங்க!'' என்று சலித்துக் கொண்ட இந்திரா,

''உன்னை யாரும் கந்தர்வக் கல்யாணம் பண்ணச் சொல்லலை. மாப்பிள்ளை வீட்டு ஆளுங்க எல்லாருமே சென்னையில தான் இருக்காங்க... ஒரு நாள், நீயும் மாப்பிள்ளையும் தனியா சந்திச்சுப் பேசிப் பாருங்க. பிடிச்சிருந்தா அப்புறம் பார்க்கலாம்!'' என்றார்.

''பிடித்திருந்தால் பார்க்கலாம்'' என்ற வார்த்தைக்கு மேல், வேறென்ன சொல்வது? தன்னொளி மௌனம்



காத்தாள்! ஆனால், நெஞ்சுக்குள் ஆயிரமாயிரம் கேள்விகள் ஓடின

இந்தா அந்தா என்று கல்யாணம் என்ற விஷயம் வந்தே விட்டது!

பல வரன்கள், ஜாதகப் பொருத்தமின்றி தள்ளிப் போயின!

சில வரன்கள், மாப்பிள்ளை வீட்டின் எதிர்பார்ப்புகளில் தயங்கி, ஒதுங்கி வைக்கப்பட்டன! இருப்பதையெல்லாம், தனக்கே கொடுத்து விட்டால், அருளுக்கும் பின்னாளில் இந்திராவுக்கும் என்ன இருக்கும் என்று வாதாடி, தன்னொளி தான் அக்காரியத்தைச் செய்தாள்!

இந்த ஒரு வரன் தான், எல்லா தடைகளையும் மீறி, நேரில் சந்திக்கும் நிலைக்கு வந்திருக்கிறது!

ஆனால், இவன்... ஹ்ம்ம்... இளம்பரிதி!

நன்றாகத்தான் இருக்கிறான்!

நிழலைப் பார்த்து நிஜத்தின் மேல் நேசம் கொள்ள அவளொன்றும் முட்டாள் இல்லையே!

நிஜத்தின் மீது அவளுக்கு ஆயிரமாயிரம் சந்தேகங்கள்!

தாயின் உடல்நிலையை மனதில் கொண்டு, பெண்ணை நேரில் பார்க்காமலே சரி சொல்கிறான் என்றால், அம்மா கோண்டாக இருப்பானோ?

இல்லை, தாயின் வற்புறுத்தலுக்காக மட்டுமே திருமணம் செய்து கொள்கிறானா?

தாய்க்காக மணம் செய்து கொண்டு, அவரது விதி முடிந்ததும் அவளைக் கழட்டிவிட நினைக்கிறானோ?

மாமியாரில்லா வீட்டில் வாழ்க்கைப்பட்டு, அந்த வீட்டுப் பொறுப்பு முழுதும் அவள் மீது விழுந்து விடுமோ?

சின்னப் பெண்ணான நாத்தனார் வேறு? அவளது படிப்பு... கல்யாணம்.... குழந்தை... என்று எல்லாமே அவள் தலை மீது விழுந்து விடுமோ?

தன்னுடன் படித்தவர்கள் / வேலை பார்த்தவர்கள் என்று பலரும், திருமணத்திற்குப் பின்னர் அல்லாடுவதையும், ''சை... ஏன்டா கல்யாணம் பண்ணிக்கிட்டோம்ன்னு இருக்கு'' என்று புலம்புவதையும் கேட்டிருந்த தன்னொளிக்கு, கொஞ்சமாய் மயக்கம் கூட வந்தது. இவன், தந்தையைப் போல் இருக்கிறான் தான்! ஆனால், தான் தாயைப் போல் இருப்போமா?

தாயையும் தந்தையையும் போல் இரண்டு பேரும் விட்டுக் கொடுத்து வாழ்வோமா?

அப்பப்பா! ஏகப்பட்டக் கேள்விகள்!

## 3

அன்றைய தினம் மட்டுமல்ல, அடுத்த நாள் சென்னைக்குச் சென்று, வேலையில் மூழ்கியபோதுகூட, அக்கேள்விகள் முற்றுப் பெறுவதாய் இல்லை.

ஐந்து மணிக்கு மேல், அவளால் அலுவலகத்தில் உட்கார்ந்திருக்க முடியவில்லை! தலை வெடித்து விடும் போல் தோன்றியது!

மேலாளரிடம் சென்று, சீக்கிரம் செல்வதாகக் கூறி விட்டு, விடுதிக்கு வந்து படுத்தாள் தன்னொளி.

ஆனால், தூக்கம் தான் வந்த பாடாய் இல்லை.



''ப்ச்...'' என எரிச்சலே மேலோங்க,

தாய் கொடுத்தனுப்பிய நொறுக்குத் தீனி டப்பாவை எடுத்தாள். அறையைப் பகிர்ந்து கொள்ளும் வானரங்கள் வந்து விட்டால், ஒரு துணுக்குக் கூட மிச்சமிருக்காது! ஐந்தே நிமிடம்தான்... டப்பா காலியாகிவிடும்! கழுவும் வேலை கூட வைக்க மாட்டார்கள்!

தன் அறைத் தோழிகளான ரேகா, அபர்ணா, சம்யுக்தா ஆகியோரை எண்ணியதும், தன்னொளியின் இதழ்களில் சிரிப்பின் சாயல் மெல்லத் தெரிந்தது!

புன்னகை மாறாமல், காரியமே கண்ணாக இருந்தவளின் கைப்பேசி கிணுகிணுத்தது!

பார்த்தால் ''அம்மா...'' என்றது கைப்பேசியின் திரை!

வேலை நேரத்தில் அழைக்கிறார்களே என்ற எண்ணத்துடன் காதில் வைத்தவளிடம்

''தனுமா, இன்னைக்கு ஆபீஸ்ல இருந்து சீக்கிரம் கிளம்ப முடியுமா?'' என்று நேரடியாக விஷயத்திற்கு வந்தார் இந்திரா.

''என்ன விஷயம்மா?'' என்று கேட்டவளுக்கு, ''இளம்பரிதி''யின் முகம் ஒரு முறை மனதில் வெட்டிச் சென்றது.

அவளது ஊகம் சரியே என்பது போல், ''மாப்பிள்ளை இன்னைக்கு சாயந்திரம் ஃப்ரீயாம். உன்னோட வேலையைப் பொறுத்து, எங்கயாவது பொது இடத்தில சந்திக்கலாம்ன்னு சொன்னாங்க. அதான் கேட்கிறேன்'' என்றார்.

ஏனோ, மறுக்கத் தோன்றியது தனுவிற்கு! ஆனால், மறுக்காதே என்று கூவியது மனம்!

''என்னம்மா இன்னைக்கேன்னு சொல்றீங்க? எனக்கு ஒரே தலைவலியா இருக்கும்மா... யாரையும் பார்த்துப் பேச முடியும்னு தோணலை... நாளைக்குப் பாப்போம்மா... ப்ளீஸ்'' என்று சலித்துக் கொண்டாள் மகள்.

''அப்படியாடா?!'' - சட்டென சூழ்ந்த வருத்தத்துடன் பேசிய இந்திரா,

''ரொம்ப முடியலையா, தனுமா?'' என்றார் கெஞ்சு தலாக.

அவருக்கு, தலைவலியுடன் மகளை அனுப்பினால், அதனால் உண்டான எரிச்சலில் மாப்பிள்ளையை வேண் டாம் என்று விடுவாளோ என அச்சமாக இருந்தது.

''ஹ்ம்ம்... ஆமாம்மா!'' எனக் கூறிய போதும், ''அப் படியொன்றும் இல்லையே'' என்றது மனது!

''ஹ்ம்ம். இன்னைக்குத் தவிர இந்த வாரம் முழுசும், அவங்கம்மாவை சாயந்திரம் சாயந்திரம் ஏதோ ஒரு டெஸ்ட்டுக்குக் கூட்டிட்டுப் போணுமாம்'' என்று கூறியவர்,

தன்னொளி பதில் சொல்லும் முன்னர், ''உனக்கும் முடியலைன்னா என்ன செய்வே? இந்த வீக் எண்டுல நீ திருவண்ணாமலை வரவேண்டாம்... அவரைப் பார்த்துப் பேசு. வேறென்ன பண்றது!'' என்றார் சலிப்பும், அலுப்பும் மேலிட.

சட்டென சிந்தித்த தன்னொளி, ''ம்ஹூம்! நான் இந்த வாரம் வீட்டுக்கு வந்தே ஆவேன்! தமிழ் நியூ இயர்க்கு... கோவில்ல விசேஷமா இருக்கும்... போங்கம்மா!'' என்று சிணுங்கிவிட்டு,

''சரி... இன்னைக்கே போறேன்!'' என்றாள் அரை மனதாய் ஒத்துக் கொள்பவள் போல்.



''சமத்துப் பொண்ணு!'' என்று சிலாகித்துக் கொண்ட தாயிடம்,

''அவரோட போன் நம்பர் கொடுங்க. எங்க வரணும்னு கேட்டுக்கிறேன்'' எனக் கூறி, கைப்பேசி எண் வாங்கி னாள்.

ஆனால், அதைக் கைப்பேசியில் அழுத்தும்போது தான் நெஞ்சம் வெளியே வந்து தடதடத்தது.

என்ன சொல்லுவான்?

''ஹலோ'' என்றா?

அப்பாவைப் போல் ''வாழ்க வளமுடன்'' என்றா?

இல்லை, ''இளம்பரிதி ஸ்பீக்கிங்'' என்றா?

''யார் பேசுறது?'' என்று அதட்டுவானோ?

ஹ்ம்ம். பெயரைச் சொன்னதும் என்ன செய்வான்?

''ஹ்ம்ம். யார் தன்னொளி!?'' என்று யோசிப்பானோ!

''ஹலோ தன்னொளி! எப்படி இருக்கே?'' என்று முதலிலேயே ஒருமைக்குத் தாவுவானோ?

''ஹாய் தன்னொளி!'' என்பானோ தன்மையாய்?

இல்லை, ''ஹே தனு!'' என்பானோ காதல் இளவரச னாய்!?

எண்ணங்களின் ஓட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல், தத்தித் தடுமாறி அவனது எண்ணை அழுத்திவிட்டு, அவன் எடுப்பதற்காக காத்திருந்தாள் தன்னொளி.

அவளது எதிர்பார்ப்புகளை எல்லாம் கிடப்பில் போடு வது போல், முழு அழைப்பும் சென்று மறைய, அவன் எடுக்கவே இல்லை!!!

தன்னை அவன் உதாசீனப் படுத்தியது போலிருந்தது, தன்னொளிக்கு!

பெரிய பிரதம மந்திரி, இன்னைக்கு மட்டும் தான் ஃப்ரீயாம்!

நாங்க எல்லாம் என்ன வேலை வெட்டி இல்லாம இவனுக்கு போன் பண்றோமோ?

வேலையாகவே இருந்தாலும், போனை எடுத்து வேலையாய் இருக்கிறேன் என்று சொல்வதற்கு என்ன?

மரியாதை தெரியாதவன்! பெண்களை மதிக்காதவன்! ஆண் வர்க்கத் திமிர்!

ஏகத்திற்கும் தன்னொளியின் அர்ச்சனைகள் தறிகெட்டுப் பறந்தன!

சில நிமிட ஆசுவாசத்திற்குப் பின்னரே, சில பல விஷயங்கள் மண்டையில் உரைத்தது

''அழைத்தது ஆணா? பெண்ணா? என்று அவனுக்கு எப்படித் தெரியும்? லூசா நீ? ஓவர் கற்பனை உடம்புக்கு ஆகாது தங்கச்சி!'' என்று மூளை ஓங்கிக் கொட்டும்போதே, கைப்பேசி அலறியது.

வேகமாய் எடுத்துப் பார்த்தால், அவள் அழைத்த அதே எண்! ச்சே! அதாவது அவன்! இளம்பரிதி!

உடனே எடுத்தால், அலைகிறாள் என்று நினைப்பானோ?

பல ரிங் போன பிறகும் எடுக்காமல் போனால், அலட்சியப் படுத்துகிறாள் என்று எண்ணுவானோ?

அந்த முப்பது விநாடி நேரத்திற்குள், அதீத எண்ணங்களில் சிக்குண்டுத் தவித்தது மனம்!



ஒரு நிலைக்கு மேல், இப்போது அழைப்பை எடுக்கவில்லை என்றால், ''தான் எடுக்காததற்கு பழி வாங்கத் தான் அவளும் எடுக்கவில்லை'' என்று அவன் எண்ணி விடும் அபாயம் இருப்பது புரிய, வேகமாய் அழைப்பை எடுத்து, ''ஹலோ!'' என்றாள் அதை விட வேகமாய்!

''ஹலோ! இந்த நம்பர்ல இருந்து எனக்கு ஒரு கால் வந்திருந்தது!'' என்றது ஓர் கம்பீரக் குரல்.

தன்னொளி உதடு பிரித்துப் பெயர் சொல்லும் முன்னர், ''சாரி, வண்டி ஓட்டிட்டு இருந்ததால எடுக்க முடியலை! யார் பேசுறீங்க?'' என்றது அக்குரல்.

தன்னொளி அதிலேயே விழுந்து விட்டாள்!

சே, இப்படி யோசிக்கவில்லையே! செல்போன் பேசிக் கொண்டே வண்டி ஓட்டக் கூடாது என்ற விதியை எத்தனை முறை படித்திருப்போம்! அதை இம்மி பிசகாமல் பின்பற்றுபவனை... சை... சை...

அதுவும், மறுமுனையில் யார் இருக்கிறார்கள் என்றே தெரியாமல் ''சாரி'' கேட்கிறானே?! நல்லவன்தானோ?

அவனை மனதாரப் பாராட்டிக் கொண்டிருந்த வேளையில் ''ஹலோ... ஹலோ'' என்று அவன் மூன்று முறைக்கு மேல், கூப்பிட்டு விட்டான்.

''ப்ச்...'' என்ற சலிப்பு அந்தப் பக்கமிருந்து வரவும், அவன் வைக்கப் போகிறான் என்பது உரைக்க,

''ஹலோ, ஹலோ! வச்சுடாதீங்க! நான் தன்னொளி பேசுறேன்!'' என்றாள் தனு வேகமாக.

''தன்னொளி!'' என்று ஒரு நிமிடம் யோசித்தவன்,

''ஹலோ! நீங்களா?'' என்றான் ஆச்சரியமாக.

அந்த ஆச்சரியம் ஏதோ செய்ய, ''என்ன இவ்வளவு ஆச்சரியம்? அம்மா உங்க நம்பர் கொடுத்துப் பேசச் சொன்னாங்க. பேசினேன். அவ்வளவுதான்! வேறொண்ணும் இல்லை!'' என்றாள் தன்னொளி, சிறு கோபம் தெளித்தக் குரலில்.

''ஹய்யோ! நான் தப்பா சொல்லலைங்க! சாரி!''

''இவன் என்ன எதற்கெடுத்தாலும் சாரி சொல்கிறான்'' எனத் தோன்றியது தன்னொளிக்கு. அதுவும், அவளுக்குப் பிடித்தே இருந்தது என்பது அவள் மனம் மட்டும் அறிந்த விஷயம்!

அவனே விஷயத்திற்கு வந்தான் ''எங்க மீட் பண்ணலாம்? உங்க ஹாஸ்டல் எங்க இருக்குன்னு சொல்லுங்க... அதுக்கு பக்கமான இடமா பார்த்துக்கலாம். உங்களுக்கு ரிடர்ன் ஆகுறதுக்கு ஈஸியா இருக்கும்'' என்றான்.

அவள் இடத்தைச் சொன்னதும், ''ஹ்ம்ம். போரூரா? அங்க எங்க?'' என்று அவன் யோசிக்கும்போதே,

''நீங்க எங்க இருக்கீங்க?'' என்றாள் தன்னொளி.

''நா மத்யகைலாஷ் பக்கத்தில் இருக்கேன்.''

''சரி. நான் பெசன்ட் நகர் பீச் வந்துடுறேன். அங்க மீட் பண்ணலாமா?''

''ரொம்ப தூரமாச்சே?''

''பரவாயில்லை. நான் வந்துடுறேன்.''

''எதில் வருவீங்க? வண்டியா?''

''இல்ல பஸ் தான்! கிண்டி வரைக்கும் ஷேர் ஆட்டோல வந்துட்டு, அங்க இருந்து பஸ் பிடிக்கணும்.''

''வேணாம். வேணாம். கிண்டில ஒரு சாய்பாபா கோவில் இருக்கில்லையா? அங்க வந்திருங்க. நானும் வந்திடுறேன்'' என்றான் வேகமாய்.



''சரி. வந்துடுறேன். ஆறு மணில இருந்து ஆறே கால்குள்ள அங்க இருப்பேன்'' என்றாள் தன்னொளி.

''ஓகே! நான் வர எப்படியும் ஆறரை ஆகிடும். டிராபிக்கைப் பொறுத்து வந்துடுறேன்.''

''மெதுவாவே வாங்க! வண்டில வேகம் வேண்டாம்!'' என்றுவிட்டு, கைப்பேசியை வைத்த தன்னொளிக்கு, ''அவன் வேகமாய் வந்தால் உனக்கென்ன? மெதுவாய் வந்தால் உனக்கென்ன? இப்பவேவா?'' என்று மனம் கண் சிமிட்டிக் கேலி செய்வது போல் தோன்றியது!

நாண மலர்கள் மெல்ல மொட்டுவிட, மகரந்தமாய் பரவிய சிவப்புடன், அவளுக்குப் பிடித்த ஆரஞ்சு வண்ண உடையை அணிந்து கொண்டு, மெல்லிய ஒப்பனையுடன், கிண்டியில் இறங்கி, சாய் பாபா கோவில் எங்கிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு, அங்கு வந்து சேர்ந்தாள்.

அவளும், கிட்டத்தட்ட ஒரு வருடமாய் போரூரில் இருக்கிறாள். இந்த கிண்டியை ஆயிரம் முறையாவது கடந்து சென்றிருப்பாள். ஆனால், இப்படியொரு கோவில் இருப்பதை அவள் அறியவில்லை!

அவளும் சாய் பக்தை தான்! அவள் பார்த்த பாபாவின் திரு உருவங்கள் அனைத்தும், வட இந்திய பாணியில் பளிங்குக் கல்லில் செதுக்கப் பட்டிருக்கும்!

ஆனால், இக்கோவிலின் பாபா கருநிறக் கல்லில் இருந்தார்! சின்ன உருவமாய் இருந்தாலும், ஏதோ ஒரு ஈர்ப்பு அவரிடம் இருந்தது!

எந்தப் பக்கமிருந்து பார்த்தாலும், பக்தனின் கண்களில் ஊடுருவி விடும் பார்வை!

சாந்தமான முகம்!

அருகே வா என்று அழைப்பது போன்ற தோற்றம்!

கூடுதலாய், ஓர் உரிமை உணர்வு! தென்னக தெய்வங் களைப் போல், அவர் கருஞ்சிலையில் வடிக்கப் பட் டிருந்ததாலோ என்னவோ, அந்த உணர்வு மேலோங்கி நின்றது!

மெய் மறந்து, எவ்வளவு நேரம் பாபாவையே பார்த் திருந்தாளோ அவள் அறியாள்!?

ஆலயத்திலிருந்த மணியை யாரோ அடிக்கவும், திடுக் கிட்டு தன்னுணர்வு பெற்றவள், தன்னருகே ஏக உயரத் தில் ஓர் ஆண் மகன் நிற்கவும் ஒரு கணம் தடுமாறிப் போனாள்!

சட்டென ஒரு புறம் சாய்ந்து, அண்ணந்து பார்க்கும் உயரத்தில் இருந்தவனை, விழி விரித்துப் பார்த்தவளை, கண் மூடி நின்ற அவனது தோற்றமும், அதில் அழுத்த மாய் படிந்திருந்த வேதனை ரேகைகளும், கூடவே உருக்கமாய் தாங்கி நின்ற பிரார்த்தனையும் ஏதோ செய்ய, ஒரு பக்கமாய் தடுமாறி விழப் போனாள், தன்னொளி.

பக்கத்தில் அரவம் கேட்டு சட்டென திரும்பிய இளம் பரிதி, கரையோர நாணல் போல் தடுமாறிக் கொண் டிருந்த தன்னொளியை ஒரு கையால் பிடித்து நிறுத்தி,

''பார்த்து... பார்த்து!'' என்று பதறியவன்,

''சாரி, திடீர்னு பக்கத்தில் வந்து நின்னு பயமுறுத் திட்டேனா?'' என்றான் சங்கடத்துடன்.

''இல்லையில்லை! சட்டுன்னு... பக்கத்தில்... பெரு...'' என்று தொடங்கிய தன்னொளி, சட்டென உதட்டைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள்.



''பூதம் மாதிரி பெருசா இருந்தேனா? நான் என்னங்க பண்ணறது? இறைவனோட படைப்பு... ஏகத்திற்கும் வளர்ந்துட்டேன்!'' என்றான் அவன்.

அக்குரலில் இருந்தது வருத்தமா? சிரிப்பா? கிண்டலா? கோபமா? - எதுவென்று தன்னொளியால் வரையறுக்க முடியவில்லை.

ஆனால், அவனது வருத்தத்தையோ கோபத்தையோ தாங்க முடியாது என்று தோன்றிவிட,

''சாரி! நா அப்படி நினைக்கலை... தப்பா எடுத்துக்கா தீங்க!'' என்றாள் தனு, வேகமாய்.

''தட்ஸ் ஓகே! சந்நிதில நின்னு பேச வேண்டாம்... இங்க நிறைய மரம் இருக்கும். ஏதாவது ஒரு மரத்தடில உட்கார்ந்து பேசலாம்'' என்றான் அவன்.

சம்மதமாய் தலையசைத்து அவள் முன்னே நடக்க, இளம்பரிதி பாபாவின் அருகே சென்று, கை கூப்பி ஏதோ வேண்டுவது அவளது ஓர விழிப் பார்வையில் விழுந்தது.

வாயிலில் நின்று, அவனது வருகைக்காகக் காத்திருந் தவள், அவன் தலை தாழ்த்தி வாயிலைக் கடந்ததும் ''அம்மாக்கு சீக்கிரம் குணமாகிடும். கவலைப்படாதீங்க!'' என்றாள் நிஜமான அக்கறையுடன்.

சட்டென முகம் மலர்ந்தவன் ''தேங்க்ஸ்!'' என்றான் வேகமாய்.

மரத்தின் புறமாய் கை காட்டியவன், அவளுடன் நடந்த படியே ''நான் அம்மாவுக்கு குணமாகணும்ன்னு வேண்டிக் கலை'' என்றான், சிறு விரக்தியுடன்.

அவள் அதிர்ச்சிப் பார்வை பார்க்கவும் ''அவங்க இருக் கப் போற நாளை டாக்டர் குறிச்சிட்டார். எத்தனையோ

ஹாஸ்பிடல்ஸ், நூறுக்கும் மேல மாத்திரை மருந்து, ஆயிரக் கணக்கில ஊசி, அப்பப்பா! அவங்க படற வேதனையை என்னால பார்க்க முடியலை! இருக்கிற கொஞ்ச நாளாவது, அவங்க நிம்மதியா இருக்கணும்ன்னு தான் வேண்டிக்கிட்டேன்!'' என்றான் அவன் வருத்தம் மிகவுற.

என்ன சொல்வதென்று தெரியாமல் தன்னொளி பேசாதிருக்கவும் ''உடம்பு வலியா... இல்ல மாத்திரை யோட தாக்கமான்னு தெரியல... ஆனா, நைட்ல அவங்க முனங்கும்போது, ரொம்பவும் கஷ்டமா இருக்கு! சூது வாது தெரியாம... வெள்ளந்தியா... எங்க குடும்பம் தான் உலகம்ன்னு சிட்டுக் குருவி மாதிரி இருந்தவங்களுக்கா இப்படின்னு இருக்கு!'' என்றான் தன் வேதனையைப் பகிரும் நோக்கில்.

தன்னொளிக்கும், அவனது துயர் போக்க முடியவில் லையே என்று ஏனோ சங்கடமாய் இருந்தது! அவன் சொல் வது போல், இருக்கும் நாட்களையாவது அப்பெண்மணி நிம்மதியாய் கழிக்கட்டும் என்று வேண்டினாள் அவள்.

அவளது அமைதியை வேறு விதமாய் புரிந்து கொண்ட இளம்பரிதி ''சாரி, என்னோட வேதனையை உங்க மேலேயும் திணிச்சுட்டேன்'' என்றான்.

சிறிதாய் கோபப் பூக்கள் பூக்க, ''என்கிட்டே நீங்க அதி கமா பேசினது என்ன தெரியுமா?'' என்றாள் கேள்வியாக.

அவன் புரியாமல் விழிக்கவும் ''சாரி!'' என்றுவிட்டு, ''இந்த 'சாரி'யைத் தான் அடிக்கடி உபயோகப்படுத்து நீங்க. இதையே பேசுறதுக்கு ஒரு சாரியை வாங்கி இருந்தாலும் உபயோகமா போயிருக்கும்!'' என்றாள், தன்னொளி சிரிப்புடன்.



சட்டென சிரித்தவன் ''சாரி...'' என்று தொடங்கிவிட்டு, கைகளை மேலே உயர்த்தி ''என்ன சொல்றதுன்னு தெரியலை. அதான் கையைத் தூக்கிட்டேன்'' என்றான்.

''கையைத் தூக்கினதுக்கு பதிலா பெஞ்சு மேல எழுந்திருச்சு நின்னு இருக்கலாம்'' என்றாள் தனு, சிரிப்பு மேலிட.

''சும்மா நின்னாலே தலை... மரத்துக் கிளையில தட்டி நிக்கும். பெஞ்சு மேல வேறயா? மரத்துக்குள்ளேயே தலை மறஞ்சு போய்டும்!'' என்றான் அவனும் சிரிப்புடன்.

சற்று நேரம், அங்கே ஓர் அமைதி நிலவியது! ஆனால், அந்த அமைதி இருவருள்ளும் ஓர் நிறைவைக் கொடுத்தது!

சில பல நிமிடங்கள் கழித்து, தனுவே மௌனத்தைக் களைத்தாள்.

''உங்க ஆபீஸ் எங்க இருக்கு?''

''ஓ.எம்.ஆர்ல! நீங்க?''

''நான் டி.எல்.எஃப்ல வொர்க் பண்றேன்.''

''ஹோ. அதான் போரூர்ல இருக்கீங்களா?'' என்றவன், ''ஹ்ம்ம். அடையார்ல இருந்து ரொம்ப தூரமா இருக்கும். ப்ச்... அதுவும், சாயந்திர நேரம், மத்ய கைலாஷ் தாண்டி வரதே பெரும்பாடு! பக்கத்தில ஏதாவது வீடு கிடைக் குதா பார்ப்போம்!'' என்றான் தன் போக்கில்.

''ஆஹா! திருமணம் என்று முடிவே பண்ணிவிட் டானா?'' என்று தன்னொளி, திகைத்து நோக்கவும்,

''சாரி சாரி! எனக்கு என்னமோ மனசில நமக்குக் கல்யாணம் நடக்கப் போற மாதிரியே ஒரு எண்ணம். உன்னோட பாயிண்ட்ல இருந்து யோசிக்கவே இல்லை. உனக்கு இந்தக் கல்யாணத்தில இஷ்டமில்லலைன்னா

தாராளமா சொல்லிடலாம். பரவாயில்லை'' என்றான் வேகமாக.

இதற்கு என்ன பதில் சொல்வது!?

''இஷ்டமில்லை'' என்று சொல்லவும் மனம் வரவில்லை.

''இஷ்டம்'' என்று ஒத்துக் கொள்ளவும் நாணம் இடம் தரவில்லை.

ஆதலால், ''உங்க அம்மாவோட ஹெல்த் கண்டிஷனை மனசில வச்சு, ஏதோ ஒரு பொண்ணு கிடைச்சா போதும்ன்னு சரி சொல்லிட்டீங்களா?'' என்றாள் அவள், வேறு விதமாய்.

''ஹ்ம்ம்.. அம்மாவோட நிலைமை இந்தக் கல்யாணத்துக்கு அடித்தளமே. இல்லைன்னா இன்னும் ஒரு வருஷம் கழிச்சுத்தான் கல்யாணம்ன்னு நினைச்சிருந்தேன்'' என்று ஒத்துக் கொண்டவன்,

''ஆனா, என் மனசுக்குப் பிடிக்காத பொண்ணை, ஒரு நிர்பந்தத்துக்காக கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு... நான் தியாகியில்ல. அதே சமயம், எங்க அம்மாவும் அப்பாவும் அதை விரும்பவும் மாட்டாங்க'' என்றான் தெளிவாக.

''உன்னைப் பிடித்திருக்கிறது'' என்று நேரடியாகச் சொல்லாமல், ஏன் சுத்தி வளைக்கிறான் என்று தன்னொளிக்கு எரிச்சலாக வந்தது.

''நீ சொல்வியா? பொண்ணுகளுக்கு வெட்கம் இருக்க மாதிரி... பசங்களுக்குத் தயக்கம் இருக்காதா?'' என்று கேட்ட மூளையை, ஒரு குட்டு வைத்து அடக்கியவள்,

''வேறென்ன?'' என்றாள் வெட்டேறியாக.



ஒரு நிமிடத்திற்கும் அதிகமாக அவளைப் பார்த்திருந்தவன், ''வேற எதுவுமில்லை. உங்களுக்கும் லேட் ஆச்சு... கிளம்பலாம்'' என்றவாறே எழுந்து விட்டான்.

கோவிலை விட்டு வெளியே வந்ததும், ''எப்படிப் போவீங்க? இங்க இருந்து ஷேர் ஆட்டோ இருக்குமா?'' என்றான்.

அவன் என்னமோ அக்கறையாகத் தான் கேட்டான். ஆனால், தன்னொளிக்குத் தான் ரசிக்கவில்லை.

''ஏன் தொர... வீடு மாத்துற அளவுக்கு யோசிக்கிறீங்க! பைக்ல கொண்டு போய் விட மாட்டீங்களோ?'' என்று உள்ளுக்குள் கறுவியவளுக்கு,

''ஹோ, திருமணத்திற்கு முன்னர், ஒரே பைக்கில் ஏறி வருவதை உலகமகா தப்பு என்று எண்ணும் அளவுக்கு, என்னை என்ன கட்டுப்பெட்டினு நினைத்தானா?'' என்ற எண்ணமும் கூடவே வந்தது.

சண்டைக் கோழியாய் சிலிர்த்து ''நான் பஸ்ல போய்ப்பேன். பக்கத்தில தான் பஸ் ஸ்டாப்'' என்று விட்டு, விடுவிடுவென நடந்தாள் அவள்.

''நான் பஸ் ஸ்டாப் வரைக்கும் வரவா?'' என அவன் தயங்க,

''ஒண்ணும் வேண்டாம். இது நாள் வரைக்கும், இந்தச் சென்னையில நான் தனியா தான் வந்திருக்கேன்... போயிருக்கேன். நான் பார்த்துக்கிறேன்'' என்று வேகமாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

''ஹே, எதுக்கு இவ்வளவு கோபம்?'' என்று அவன் தணியவும்,

''கோபமா? எனக்கா? உங்க மேலயா? எதுக்கு? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? கோபம் வரதுக்கு?''

என்றுவிட்டு, செருப்பை மாட்டிக் கொண்டு விரைந்தாள், தன்னொளி.

"அம்மாவுக்காக தான் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னது, கோபமா? அது தான் பேசிக் ரீசன். அதான்..." என்ற அவனுக்கு, இவளிடம் ஏன் இவ்வளவு விளக்கம் சொல்கிறோம் என்பது புரியவில்லை.

தன்னொளிக்குமே, "என்ன உரிமையில் அவனிடம் கோபம் கொள்கிறோம்" என்பது விளங்கவில்லை.

"உன்னோட போட்டோவைப் பார்த்ததும் எனக்குப் பிடிச்சிருந்தது" என்ற ஒரு வாக்கியத்தை அவளது மனம் எதிர்பார்த்திருக்க, அவன் அதைச் சொல்லாமல் போனது, அவளுக்குக் கடுப்பை உண்டு பண்ணியது.

பார்த்து ஒரு மணி நேரம் கூட ஆகாத ஓர் ஆணுடன் கோபித்துக் கொண்டு வருவது, சிறு பிள்ளைத் தனமாய்ப் பட்டபோதும், தன்னொளியால் இயல்பு நிலைக்கு வர முடியவில்லை.

வேக எட்டுக்கள் வைத்து, கிண்டி பிரதான சாலையில் நடந்தவள், தன்னைக் கடந்து இளம்பரிதி வண்டியில் விரைவதைக் காணவும், மேலும் எரிச்சலுற்றாள்.

திரும்பிப் பார்ப்பான்... திரும்பிப் பார்ப்பான் என்று அவள் எதிர்பார்த்திருக்க, ம்ஹூம்... அவனோ மின்னல் வேகத்தில் கண்ணை விட்டு மறைந்தே போனான்.

அப்போது பார்த்து, அவளது இடது கை பக்கத்தில் ஓர் உயர்தர சைவ உணவகம் தெரிய, "ஹாஸ்டல்ல இருக்காளே... சாப்பாடு எப்படி இருக்குமோ? நைட்டுக்கு இங்கேயே சாப்பிட்டுப் போகலாமான்னு கேட்டானா? நான் என்ன கும்பகர்ணியா? அவனோட பர்ஸை காலி



பண்ணிடுவேனா? என்ன?" என்று அதற்கும் அவன் மேல் கோபம் வந்தது!

ஆனால், ஏகப்பட்ட கோப மூட்டைகளுடன் வந்தபோது, இந்திரா போன் பண்ணி "மாப்பிள்ளையை பிடிச்சிருக்கா, தனுமா?" என்று கேட்டபோது,

"ம்ஹூம். பிடிக்கலை" என்று சொல்ல முடியவில்லை, தன்னொளியால்.

"ம்ம்.. ம்ம்..." என்று அவள் முனங்க,

"கல்யாணத்துக்கு சம்மதம். நாள் பாருங்கன்னு சொல்லிடவா?" என்றார் இந்திரா, சந்தோஷமாக!

# 4

மகளின் மௌனம், அன்னைக்கு இரு உண்மைகளை உணர்த்தின.

ஒன்று - அவளுக்கு இளம்பரிதியைப் பிடித்திருக்கிறது. இரண்டு - ஆனால் உடனே ஒத்துக் கொள்ளவும் தயக்கமாய் இருக்கிறது.

வேறெதும் பேசி, மகளின் மௌனத்தை... அதாகப்பட்டது சம்மதத்தைக் கெடுத்துவிடக் கூடாது என்பதால், "சரிடா, நீ தூங்கு. நா நாளைக்கு மாப்பிள்ளை வீட்டில பேசிட்டு உனக்குச் சொல்றேன்" என்றாள் தாய்.

"ம்ம். அம்மா ஒரு நிமிஷம்!" என தன்னொளி நிறுத்தவும்,

''என்ன பூதமோ?'' என்று இந்திரா பயந்ததற்கு மாறாக,

''ஒரு மணி நேரம் பார்த்ததை வச்சு, என்னால எதுவும் சொல்ல முடியாது...'' என்று தன்னொளி இழுக்க,

''உடனே வாடா கல்யாணம் வைக்கப் போறோம். கல்யாணத்துக்கு எப்படியும் ஒரு மாசத்துக்கும் மேலே டைம் இருக்கும். அப்போ... பேசிக்கோங்க... புரிஞ்சுக்கோங்க'' என்றவர்,

''எனக்குத் தெரியும்டா... இது அந்தக் காலம் மாறி இல்லை. உங்களுக்கும் கல்யாணத்துக்கு முன்னாடி டைம் வேணும்... அதைத் தாராளமா எடுத்துக்கோங்க. ஆனா... லிமிட் தாண்டாம பார்த்துக்கோங்க. அவ்வளவு தான் இந்த அம்மாவோட கோரிக்கை!'' என்றார் வேண்டுதலாக.

''என்ன என்னம்மா நினைச்சீங்க?'' என்று தனு சீறவும்,

''உன்னைக் குறை சொல்லலை தனு! என்னோட ஆதங்கம்... விருப்பம்... பயம்... ஏதோ ஒண்ணு... அதைச் சொன்னேன்! கோபப்படாதேடா'' என்று தாயார் தணிந்தார்.

ஒரு வழியாக, தாயுடன் பேசிவிட்டு அறைக்குள் வந்தால்,

''ஹே தண்ணி, இன்னைக்கு ஈவினிங் மேடம் எங்கே போனீங்க?'' என்றாள் அபர்ணா.

''ஹான். குரங்கு பிடிக்கப் போனேன்.''

''ஆஹா! ஒரு குரங்கே குரங்கு பிடிக்கப் போயிருக்கிறதே! மூணு புள்ளி! ஒரு ஆச்சரியக் குறி!'' - அருளைப் போலவே பேசிய ரேகாவின் கழுத்தை நெரிக்க வேண்டும் போல வந்தது தனுவிற்கு.



''வேணாம்...'' என அவள் ஒரு விரல் நீட்ட,

''என்ன வேணாம்? அழுதுருவியோ? அழு... அழு பார்ப்போம்! அழுடின்னா!'' என்று எகிறியது அடுத்த வானரம்.

''உங்களுக்காக எல்லாம் நான் ஏன்டி அழணும்!? நானே செம கடுப்பில இருக்கேன்... வேணாம்! சொல்லிட்டேன்!'' என்ற தனுவிற்கு, குரல் நடுங்கியது.

ஏதோ பேசத் தொடங்கிய ரேகாவைக் கையமர்த்தி விட்டு ''ஹே தனு என்னப்பா? என்ன மூட் அவுட்? வீட்டில கல்யாணப் பேச்சு எடுத்துட்டாங்களா?'' என்றாள், அக்கூட்டத்தில் கொஞ்சம் அறிவாளியான சம்யுக்தா.

இந்த வயதில், பெண்களுக்கு வரும் முக்கியமான பிரச்னைகளுள் ஒன்று காதல், மற்றொன்று கல்யாணம் அல்லவா!

தோழி, தன்னிடம் வேகமாய் மறுத்துப் பேசாமல், கட்டிலில் சுருண்டு படுக்கவும்,

''ஹே என்ன தனு? உனக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கலையா?'' என்றாள் நிஷா.

அடுத்தவளோ ''எங்க வீடு மாதிரியில்லையே உங்க வீடு. உனக்குப் பிடிக்கலைன்னா உங்கம்மா கட்டாயப் படுத்த மாட்டாங்களே! அப்புறம் எதுக்குடி மூஞ்சைத் தூக்கி வச்சுட்டு இருக்கே?'' என்றாள்.

''போட்டோ தானேடி காட்டினாங்க. அதிலேயே, அவரைப் பிடிக்கலைன்னு எப்படி சொல்வே? நேர்ல போய்ப் பாருடி. அப்புறமா அம்மாகிட்ட வேண்டாம்ன்னு சொல்லலாம். பாவம்... அவங்களுக்கு வருத்தமா இருக்கும்ல'' என்றாள் சம்யுக்தா, விவேகமாய்.

ஆளாளுக்கு ஒவ்வொன்றாய் பேசவும், ''நான் அவரை நேர்ல பார்த்திட்டேன்'' என்று அவர்கள் வாயை அடைத்தவள்.

''அவரை எனக்குப் பிடிச்சிருக்கு... ஆனா...'' என்று இழுத்ததில், தோழிகள் மூவரும் வாயைப் பிளந்து நின்றனர்.

''என்னது?'' என மூவரும் ஒரு சேர அதிர,

''ஆனா... அவரைப் பிடிச்சிருக்கான்னு தெரியல... பிடிக்கலை... ம்ஹூம்... ஆனா பிடிச்சிருக்கு...'' என்று தன்னொளி முனங்க,

''செருப்பு வராது.. ஆனா வந்திரும்! எருமைமாடே!'' என்று ஒரேடியாக மூவரும் தன்னொளி மீது பாய்ந்து விட்டார்கள்!

''குரங்காம் குரங்கு! கல்யாணத்துக்கு முன்னாடியே அவரைக் குரங்காக்கிட்டா பாரேன்... எடுடி... அந்த போனை... அவருக்கு ஒரு போனைப் போடுவோம்...''

''ஏய் வேணாம்!''

''பெரிய அதட்டல் தான்! இதையெல்லாம் குரங்கு கிட்ட வச்சுக்கோ!'

''வேணாம்! அவரைக் குரங்கு சொல்லாதே!''

''அப்ப பேரைச் சொல்லு...''

''இளா... இளம்பரிதி!''

''இளாவாம்... பாருடி...''

''அங்க பாக்கிறதை விடு... நீ முதல்ல இந்த போனைப் பாரு... அவரோட போன் நம்பர் தானேடி, தனு இது? 'சாரி மன்னன்'ன்னு போட்டிருக்காடி!''

''ஆஹா... அவ்வளவு சாரி சொன்னாரா? அதுவும், மொத நாளே? சூப்பர்டி தண்ணி!''



''சும்மா இருங்கடி குரங்குகளா! எனக்கே ஒரே குழப்பமா இருக்கு!''

''என்ன குழப்பம்?'' என்று ஒருத்தி கேட்கும் போதே,

''குரங்குகளா? ஹோ... இப்பவே அவரு என்னோட ஆளு, நீங்கெல்லாம் அவரைப் பார்க்கக் கூடாதுன்னு எங்களையெல்லாம் அவருக்குத் தங்கச்சி ஆக்கிட்டியா?'' என்றாள் சம்யுக்தா கேலியாக.

''இந்தப் பன மரத்துக்காரர் தான்... நம்ம பாசமலரா?'' என்று பாசம் பாராட்டினாள் அபர்ணா.

''அவருக்குத் தங்கச்சியா!!!?? எப்ப 'தங்கச்சி'ன்னு சொன்னா? எனக்குக் கேட்கவே இல்லையே! ஒரு நல்ல டாக்டரா பார்க்கணும் போலவே... அய்யோ மாசக் கடைசி ஆச்சே... காசு வேற இல்லைடி!'' என்று ரேகா மரமண்டையைத் தட்டும்போதே,

''லூசு லூசு!'' என்று ரேகாவை அடித்தத் தனு,

''குரங்குக்குத் தங்கச்சி... அதாவது தங்கச்சிகள் குரங்குகள் தானே?'' என்றாள் சிரிப்புடன்.

''அடிப்பாவி! சிரிப்பு வருதா? சிரிப்பு!? பிச்சு! பிச்சு!'' என்று கோரசாக பாடியவர்கள், அன்று இரவு முழுதும் தன்னொளியை ஒரு வழி பண்ணி விட்டார்கள்.

மகளின் சிரிப்பை அறியாத போதும், இந்திரா அன்றிரவு நிம்மதியாகவே உறங்கினார்.

அடுத்த நாள் காலை, வங்கிக்குச் சென்றதுமே, மாப்பிள்ளை வீட்டினருக்கு போன் செய்யத் துடித்த மனதை, இளம்பரிதியின் தாய்க்கு நடக்கவிருக்கும் பரிசோதனையை முன்னிறுத்தி அடக்கி வைத்தார்.

மாலை ஐந்து மணி அளவில், அவர்கள் வீட்டு எண்ணிற்கு அழைக்கலாம் என்று அவர் எண்ணும்போது, அவருக்கு ஓர் அழைப்பு வந்தது.

''ஆஹா! இந்த எண்! நேற்று தனுவிற்குக் கொடுத்தோமே? மாப்பிள்ளையா?'' என ஆவலும் ஆச்சரியமுமாய் காதில் வைத்தார் இந்திரா.

''ஹலோ, மிசஸ். இந்திரா?'' என்றது அக்குரல், மிக சம்பிரதாயமாக.

ஏதோ அபாயம் என்பது புரிந்தது, இந்திராவிற்கு.

''ஆமா. இந்திரா தான் பேசுறேன். சொல்லுங்க...'' என்றார் அவரும், எதையும் வெளிக்காட்டாமல்.

''நான் இளம்பரிதி பேசுறேன், மேடம்.''

''சொல்லுங்க. அம்மா எப்படி இருக்காங்க? டெஸ்ட் எடுத்தாச்சா? நானே உங்களுக்கு போன் பண்ணலாம்ன்னு இருந்தேன்'' - அவனை ''மாப்பிள்ளை'' என்று அழைக்க விடாமல், அவனது ''மேடம்'' ஏதோ செய்தது.

''ஹ்ம்ம். அம்மா!'' என்று ஒரு நிமிடம் தயங்கிவன்,

''டெஸ்ட் எடுத்ததில, அவங்களோட ரெண்டாவது கிட்னியும் செயலிழந்து போச்சுன்னு சொல்லிட்டாங்க'' என்றான் ஒரு மரத்தக் குரலில்.

''ஐயோ!'' என்பதைத் தவிர, இந்திராவால் எதையும் சொல்ல முடியவில்லை.

ஆனால், அதைச் சொல்பவன் எத்தனை வேதனைப் படுவான் என்பது புரிய,

''மருத்துவத்தில் எத்தனையோ முன்னேற்றங்கள் வந்துடுச்சு. அவங்களைக் காப்பாத்திடலாம். நம்பிக்கையா இருங்க'' என்றார் தைரியம் கொடுக்கும் தொனியில்.



''ஹ்ம்ம். அந்தக் கட்டமெல்லாம் தாண்டிடுச்சு. டையலசிஸ்... கிட்னி ட்ரான்ஸ்பிளான்டேஷன் எதுக்கும் அவங்களோட உடல்நிலை தாங்காதுன்னு சொல்லிட்டாங்க. நுரையீரல், சிறு குடல், பெருங்குடல்ன்னு எல்லாமே பாதிக்கப்பட்டிருக்காம்'' என்றவன்,

தானே தொடர்ந்தான். ''இன்னும் ரெண்டு நாளோ, மூணு நாளோ... அதான் டாக்டர்ஸ் கொடுத்திருக்க கெடு!'' என்று பெரிய குண்டை தூக்கிப் போட்டான்.

கூடவே, அடுத்த அணுகுண்டாய் ''இப்படி ஒரு இக்கட்டான நிலைமையில இந்தக் கல்யாணத்தை நடத்த முடியும்ன்னு எனக்குத் தோணலை. அதான், நீங்க வேற நல்ல இடமா பார்த்துக்கோங்கன்னு சொல்றதுக்குக் கூப்பிட்டேன். உங்களைத் தேவையில்லாம தொந்தரவு பண்ணினதுக்கு மன்னிச்சுக்கோங்க'' என்றான், எந்தவிதமான உணர்ச்சியும் காட்டாத குரலில்.

இந்திராவிற்கு சற்று நேரம் ஒன்றுமே புரியவில்லை.

அவரது அமைதியைக் களைப்பவனாய், ''சாரி மேடம்! எனக்கு வேற வழி தெரியல! தனு... ப்ச்... உங்க பொண்ணு கிட்ட பக்குவமா சொல்லுங்க. நானே சொல்லியிருப்பேன். ஆனா அது முறையா இருக்காதில்லையா? அதான்!'' என்றான் சிறு வருத்தத்துடன்.

இந்திராவிடம் அப்போதும் பதிலேதும் வரவில்லை என்றதும்,

''சரி மேடம். நான் வைக்கிறேன்'' என்றான் இளம்பரிதி.

''ஹலோ! ஹலோ! ஒரு நிமிஷம்! வச்சிடாதீங்க!'' என்று பரபரத்த இந்திரா.

''இது உங்க முடிவா? இல்ல குடும்பத்தில எல்லாரையும் கலந்து எடுத்த முடிவா?'' என்றார்.

கேள்வியின் நோக்கம் புரியாமல், ''அம்மாவோட ரிசல்ட் வந்ததும், நான் தான் இந்த நிலைமையில கல்யாணம் வேணாம்ன்னு முடிவு பண்ணினேன். உங்களுக்குமே, ஒரு துக்கக் காரியம் நடக்கவிருக்க வீட்டில சம்பந்தம் பண்றது கஷ்டமான காரியம் இல்லையா?'' என்றான் அவன், விளக்கமாக.

''தம்பி! நான் கொஞ்சம் பேசலாமா?'' என்று அனுமதி கேட்டார் இந்திரா.

''ஹ்ம்ம்'' என அவன் தயக்கமாய் இழுக்கவும்.

''உங்க அம்மாவுக்கு உங்க கலயாணத்தைப் பார்க்கணும்ன்னு எவ்வளவோ ஆசை இருந்திருக்கும்.''

''ஆசை இல்லை... கிட்டத்தட்டப் பைத்தியம் மாதிரி ஆகிட்டாங்க... அவங்க மனசு முழுசும் என்னோட கல்யாணத்தில தான் இருக்கு'' என்றான் விரக்தியாக.

''பூ தான் சின்னப் பொண்ணு, உனக்காவது என் கண்ணோட கல்யாணம் நடக்கும்ன்னு பார்த்தேன். அதைக் கூடப் பார்க்காம போகப் போறேனே!'' என்று தாய் புலம்புவதும், அரற்றுவதும் மனதினுள் படமாய் ஓடியது.

அவனது கவனத்தைக் கலைப்பது போல், ''அவங்களோட மனநிலை எனக்குப் புரியுது, தம்பி!'' என்ற இந்திரா,

''என்னோட கணவர் இறக்குற தருவாயில, தனுவோட கல்யாணத்தைக் கூட பார்க்காம போறேனேன்னு தவிச்சது, என் கண்ணு முன்னே நிக்குது!'' என்றார் கரகரப்பான குரலில்.

ஓர் சங்கடமான அமைதி அங்கே நிலவ ''இன்னொரு உயிரும் அந்த மாதிரி போக வேணாம் தம்பி.



அவங்களோட ஆசையை நிறைவேத்தி வைப்போம். நிம்மதியா போகட்டும்'' என்றார் இந்திரா.

''என்ன சொல்றீங்க நீங்க?'' என்று இளம்பரிதி அதிர,

''ஆமா! இந்த ரெண்டு நாளுக்குள்ள உங்க கல்யாணத்தை நடத்திடலாம். உங்க அம்மா கண் குளிரப் பார்க்கட்டும்!''

''வாட்!''

''என்ன தம்பி இவ்வளவு அதிர்ச்சி? நடக்காத காரியம்ன்னு இந்த உலகத்தில எதுவுமே இல்லை!''

''ஆனா... தன்னொளி!''

''உங்களுக்குச் சம்மதமா? அதை முதல்ல சொல்லுங்க!''

''எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. அம்மாவை நினைச்சா சரின்னு தோணுது. தன்னொளியை நினைச்சா பாவம்ன்னு தோணுது.''

''எல்லாம் சரிதான்! நான் தனுகிட்ட பேசுறேன்! உங்களுக்கு அவளைப் பிடிச்சிருக்குத் தானே?''

''பிடிச்சிருக்கு பிடிக்கலைன்னு பகுத்தறிய என்னால முடியல... சரியா சொல்லப் போனா நான் அந்த நிலைமையில இல்லை... அம்மாவை நினைச்சாலே மனசு கலங்கிப் போகுது!''

''எந்த நிமிஷம், அவ என்ன நினைப்பாளோ... அவ பாவம்ன்னு நீங்க நினைச்சீங்களோ, அதுவே போதும்! இந்த அக்கறையே வாழ்க்கையை நல்லபடியா கொண்டு போகும்'' என்ற இந்திரா,

''அது இப்போ முக்கியமில்லை! அம்மாவோட நிம்மதி தான் முக்கியம்! அதுக்கு, நம்மளால முடிஞ்சதைச் செய்றோம்ன்னு நினைச்சுக்கோங்க'' என்றார் பெரியவராக.

''ம்ம். ஆனா... தன்னொளி...'' என அவன் மீண்டும் இழுக்க,

''அதை விடுங்கன்னு சொன்னேனே! நான் பக்கத்துக்குக் கோவிலுக்குப் போய், இன்னும் ரெண்டு மூணு நாளில எது நல்ல நாள்ன்னு பார்த்திட்டு... உங்களுக்குக் கூப்பிடுறேன்.''

''நீங்க எதுக்கும் தன்னொளிகிட்ட ஒரு வார்த்தை சொல்லிடுங்க.''

''சரிங்க தம்பி! நான் பார்த்துக்கிறேன்னு சொல்லிட்டேனே! நீங்க போய், அம்மாகிட்ட விஷயத்தைச் சொல்லுங்க... கொஞ்சமாவது நிம்மதியா இருக்கட்டும்!'' எனக் கூறி, அழைப்பை வைத்து விட்டார்.

அடுத்த அரை மணி நேரத்தில், அவனுக்கு அழைத்தவர் ''நாளைக்குத் தான் ஓரளவு நல்ல நாளாம். அதுவும், உங்க ரெண்டு பேர் நட்சத்திரத்துக்கும் பொருந்தி வரலை போல... ஆனா பரவாயில்லை. நாளைக்கு விட்டா... அடுத்து ரெண்டு நாளும் அஷ்டமி நவமியாம். அதுக்கு மேல, நமக்குப் பொறுக்க முடியுமா?'' என்றார் வேகமாய்.

''இப்பவே, அம்மாவோட கால் வீங்க ஆரம்பிச்சிடுச்சு!'' என்றபோது, இளம்பரிதிக்கு நா தழுதழுத்தது!

''கவலைப்படாதீங்க மாப்பிள்ளை!'' என்ற இந்திரா, ''விதி இதுதான் முடிவாகிடுச்சு. அதை அவங்க சந்தோஷமா எதிர்கொள்ளட்டுமே?'' என்றார் கனிவுடன்.

அவருடைய இயல்பான பேச்சு, அவனைக் கவர்ந்தது! ஓர் திடமான உறவு கிடைத்தது போன்ற தெம்பு அவனுள் விதைந்தது!

''ஒண்ணும் பிரச்சனையில்லை. நாளைக்கே கல்யாணத்தை வச்சுக்கலாம். காலையில ஆறு மணில



இருந்து ஏழரை மணி வரைக்கும் நல்ல நேரமாம். அப்பவே கல்யாணத்தை வச்சுக்கலாம்.''

''காலையிலையா?'' என்று அதிர்ந்தவன்,

''ஆமா... அப்புறம்ன்னா அம்மாவையும் வெயில இழுத்தடிக்க முடியாது இல்லையா?'' என்று இந்திரா கூறியபோது, அவனுக்கு நெஞ்சம் கனிந்தது.

''அங்க பக்கத்திலேயே ஏதாவது ஒரு கோவில்ல கல்யாணத்தை வச்சுக்கலாம்.''

''இங்க அஷ்டலஷ்மி கோவில் இருக்கு. அங்க ஓகேவா?''

''ம்ம். சரி. கோவில ஏதாவது முன் ஏற்பாடு பண்ணனும்ன்னா அதை மட்டும் நீங்க பார்த்துக்கோங்க'' என்றவர்,

''ஆனா... சில பெரிய கோவில்ல, முறையா கல்யாணத்தைப் பதிவு பண்ணினா தான் ஒத்துப்பாங்க. அதுக்கு, ஒரு மாசம் முன்னாடியே எழுதி வைக்கணும். அதனால, விசாரிச்சுக்கோங்க'' என்றார்.

வீடே உலகமென்று வாழும் தாய்க்கும், இவருக்கும் தான் எத்தனை வித்தியாசம்!? எல்லா விஷயத்தையும் அலசி ஆராய்ந்து, இந்திரா எடுக்கும் முடிவுகளுக்கு அவன் அடிமையாகிப் போனான்!

''சரி'' என அவன் மொழியவும்,

''மத்த ஏற்பாடு எல்லாம் நான் பார்த்துக்கிறேன். சாப்பாடு பக்கத்து ஹோட்டல் எதிலையாவது பார்த்துக்கலாம். அம்மாவைக் கூட்டிட்டு வரதுக்கு நீங்க ஏற்பாடு பண்ணிடுவீங்கதானே?'' என வேகமாய் திட்டமிட்டார் இந்திரா.

"நீங்க எப்படி திருவண்ணாமலையில இருந்து வருவீங்க?"

"இங்க ஒரு தெரிஞ்ச டாக்ஸி டிரைவர் இருக்கார். அவரைக் கூட்டிட்டு, மூணு மணி... மூணரை மணிக்குக் கிளம்பினா, அங்க வந்திடுவோம். நானும் அருளும் தானே!" என்றவர், அழைப்பை வைக்க முற்படவும்,

"தனு..." எனத் தயக்கமாய் இழுத்தான், இளம்பரிதி.

"ஹ்ம்ம்.. அவளை நினைச்சா தான் எனக்குக் கொஞ்சம் பயமா இருக்கு. திடீர்னு கல்யாணம்ன்னா அவளுக்கும் ஒரு மாதிரி தானே இருக்கும். அதிலையும் தனு ஒரு மாதிரி பிடிவாதம் வேற... வேண்டாம்ன்னா மாத்தவும் முடியா... மீறி செஞ்சா வேணும்ன்னே வெறுக்கடிப்பா" என்றார் தன்னை மீறி, கவலையைப் பகிர்ந்தவர்.

இந்திராவின் அந்த வார்த்தைகள், இளம்பரிதியின் நெஞ்சில் ஆழமாய் பதிந்து போயின!

அவன் பேச்சற்று இருப்பது புரியாமல், "சரி தம்பி! நான் வைக்கிறேன்!" என அவர் அழைப்பை வைத்த பிறகும், இளம்பரிதி அந்த இடத்தை விட்டு அகலவில்லை.

நேற்று அவள் முகத்தில் தெரிந்த விருப்பம், அவசரமாய் அள்ளித் தெளித்த இந்தக் கல்யாணத்தால், வெறுப்பாய் மாறி விடுமோ என்று நெஞ்சம் படபடத்தது!

ஆனால், அவனை அதற்கு மேல் யோசிக்க விடாமல் "அண்ணா... அம்மா..." என்று அழுது கொண்டு, அவனது சின்னத் தங்கை வந்து விட்டாள்.

போகும் உயிரைப் பார்ப்பதை விடவும், இடிந்து போயிருந்த தந்தையையும் தங்கையையும் தேற்றுவதே பெரும்பாடாய் இருக்க, தன்னொளியை மறந்தே போனான் அவன்!



## 5

அடுத்த நாள் காலை திருமணம் என்று இந்திராவும் இளம்பரிதியும் முடிவு செய்யும்போது, மணி ஏழு!

என்ன தான் இளம்பரிதியிடம் தைரியமாய் பேசிவிட்ட போதும், இந்திராவிற்கு மகளை நினைத்தால் கதிகலங்கியது!

அதைத் தற்காலிகமாய் ஒத்தி வைக்கவென, அடுத்த நாள் திருமணத்திற்குத் தேவையான ஏற்பாடுகளை முடித்துவிட்டு, மகளிடம் பேசுவதை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தார், இந்திரா.

அதன்படி, அடுத்த நாள் செல்ல வேண்டிய டாக்ஸிக்கு அழைப்பு விடுத்தார்.

பின்னர், தனக்கும் அருளுக்கும் கூடவே தனுவுக்கும் தேவையான உடைகளைப் பெட்டியில் அடுக்கினார்.

தனுவிற்கு வாங்கி வைத்திருந்த நகைகளை எடுத்து வைத்தார்.

தேவையானவற்றை எடுத்து வைத்ததும், மகளிடம் பேசும் முக்கியமான வேலை மட்டுமே எஞ்சி நின்றது!

தான் வணங்கும் முருகனிடம் சென்று, கை கூப்பி நின்றவர்,

"நா எடுத்த முடிவு சரியா தப்பான்னு தெரியல. ஒரு பொண்ணோட வாழ்க்கையில கல்யாணம்ங்கிறது ஒரு முக்கியமான கட்டம்... அதை இவ்வளவு அவசரமா

நடத்தணுமான்னு தோணுது... ஆனா... மாப்பிள்ளை யோட அம்மாவை நினைச்சா மனசு தவிச்சுப் போகுது! என்னோட ஜெகன்... உயிரை விடுறதுக்கு ரெண்டு நிமிஷம் முன்னாடி என் கையைப் பிடிச்சுக்கிட்டு ''தனு வோட கல்யாணத்தை மட்டுமாவது நான் பார்த்திட்டுப் போயிருக்கலாம்... இந்து! அதுக்குக் கூட கொடுத்து வைக்கலை பாரேன்!''ன்னு இன்னொரு உயிரும் போக வேணாமேன்னு நினைக்கிறேன்... தப்பா என்ன? ஒரு சக மனுஷப் பரிவு... இது தப்பா?'' என்று கடவுளிடம் மனு வைத்தார்.

அடுத்த ஐந்து நிமிடங்கள், முருகனுக்கும் அவருக்கு மான தனிமை நேரமாய் கழிய, ''சரியோ... தப்போ... ஒரு முடிவை எடுத்திட்டேன். அந்த முடிவு, நல்ல முடிவா அமையணும், முருகா! நீதான்... என் மகளுக்கும் என் மாப்பிள்ளைக்கும் துணையா இருக்கணும்! என் பொண் ணோட வாழ்க்கை நல்லபடியா அமையணும்!'' என்று முருகனிடம் வேண்டுதல் வைத்தவர்.

''தனுவை சமாதானப்படுத்துற தெம்பை எனக்குக் கொடு, முருகா!'' என வேண்டினார் முடிவாக.

நெஞ்சம் கொஞ்சம் சமன்பட்டது போலிருந்தது இந்திராவிற்கு.

கைப்பேசியை எடுத்து மகளின் எண்ணை அழுத்தி யவர், மணி பார்த்தார். மணி எட்டாகி இருந்தது! தனுவின் இரவு சாப்பாட்டு நேரம் இது!

தான் விஷயத்தைக் கூறியதும், தனுவின் முதல் கோபம் சாப்பாட்டின் மீது தான் செல்லும். அதனால், இப்போது பேச வேண்டாம் என்ற எண்ணம் மேலெழும்ப, அடுத்த அரை மணி நேரத்தை நெட்டித் தள்ளியவர், எட்டரை மணி அளவில் பெண்ணிற்கு அழைத்தார்.



தாயின் எண்ணைப் பார்த்ததும், அரை வினாடியி லேயே அழைப்பை எடுத்து மகள், ''அம்மா...'' என்றாள் ஆசையாக.

''தனுக்குட்டி!'' என்று தாயும் வாஞ்சையாய் அழைப்பு விடுக்க,

''என்னம்மா? சொல்லுங்க! அருள் காலேஜ்ல இன் னைக்கு ஏதோ சிம்போஸியம்ன்னு சொன்னாளே? அது முடிஞ்சு வந்துட்டாளா?'' என்றாள் தனு, சாதாரணமாக.

''ஹ்ம்ம்... அவ இன்னும் வரலை...'' என இந்திரா இழுத்தத் தொனியிலேயே,

''என்னம்மா ஒரு மாதிரி பேசுறீங்க? ஏதாவது பிரச் சனையா?'' என்றாள் மகள், அவசரம் நிறைந்த குரலில்.

''பிரச்சனைன்னு இல்லை... ஆனா...''

''என்னம்மா... சொல்லுங்க...''

''உன்கிட்ட எப்படி சொல்றதுன்னு யோசனையா இருக்கு...''

''என்கிட்டயா?'' - திகைத்து விழுந்த கேள்வியின் முடிவில், தன்னொளிக்குள் ஆயிரமாயிரம் கற்பனைகள்.

ஒருவேளை, மாப்பிள்ளை வீட்டிலிருந்து அவளை வேண்டாம் என்று விட்டார்களோ? அதைத் தான் அம்மா எப்படிச் சொல்வது என்று தயங்குகிறார்களோ?

இதிலென்ன சந்தேகம்? அப்படித் தான் இருக்கும்! இந்தக் கல்யாண விஷயத்தைத் தவிர, அம்மா தன்னிடம் தயங்க வேறென்ன விஷயம் இருக்க முடியும்?

அந்த எண்ணம் கொடுத்தக் கோபமோ வேகமோ, தாயிடம் வேகமாய் பொரிந்தாள் மகள். ''மாப்பிள்ளை.. சை... மாப்பிள்ளை என்ன மாப்பிள்ளை... அந்த

இளம்பரிதி வீட்டில இருந்து என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்களா? அதைச் சொல்லத் தான் யோசிக்கிறீங்களா? பிடிக்கலைன்னா போட்டுமே? அந்தாளு பெரிய மன்மதன்! அவனை விட்டா எனக்கு வேற மாப்பிள்ளையே கிடைக்காதாக்கும்? இதுக்குப் போய்... நீங்க ஏன்மா வருத்தப்படுறீங்க!'' என்றவளின் தலை வேகமாய் சிலும்பியபோதும், மனதின் ஓரத்தில் ஓர் ஏமாற்றம் பரவுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

என்னிடம் என்ன குறை கண்டு பிடித்தான்? என்னை ஏன் வேண்டாம் என்று சொன்னான்? என்று எண்ணற்ற கேள்விகள் மனதைச் சூறையாட, தாயின் எதிர்த் தாக்குதலில் சகலமும் ஸ்தம்பித்துப் போனாள் தன்னொளி.

''ஷ்! என்ன தனு இது... தரமில்லாத பேச்சு? அவன்... இவன்-ன்னு? எங்க படிச்சே இதெல்லாம்? நான் கொஞ்சம் தயங்கினதுக்குக் காரணம்... அவங்க இல்லை... நீ! ஏன் தெரியுமா? நாளைக்குக் காலையில உனக்கும் இளம்பரிதிக்கும் கல்யாணம்ங்கிற விஷயத்தை உன்கிட்ட எப்படிச் சொல்றதுன்னு யோசிச்சிட்டு இருந்தேன்! அவ்வளவு தான்! அதுக்குப் போய்... என்ன பேச்செல்லாம் பேசுறே?''

தாய் கூறிய ''நாளைக் காலை கல்யாணம்'' என்பது மட்டுமே மனதிற்குள் ரீங்காரமிட, அரை நிமிடத்திற்கும் மேலாய் செயலிழந்து நின்றாள் தன்னொளி.

''தனு... தனு...'' என்று இந்திரா கத்தியது எதுவும் அவள் காதில் விழவே இல்லை. மூச்சுக் கூட விட மறந்தவளாய், அவள் சமைந்திருக்க, அந்தப் பக்கமாய் போன சம்யுக்தா, ''ஏய், என்னடி வாட்டர் ஃபால்ஸை ஓபன்லேயே வச்சிருக்கே? என்ன சாரி மன்னனோட



ரொமான்ஸா?'' எனத் தோள் தொடவும் தான், தன்னொளி நினைவு பெற்றாள்.

அருகிருந்த தோழியை பலமாய் முறைத்துவிட்டு ''என்னம்மா சொல்றீங்க? நாளைக்குக் கல்யாணமா? காலையிலேயா? விளையாடுறீங்களா?'' எனப் பொரிந்தாள்.

''விளையாட்டில்ல தனு. சத்தியமா சொல்றேன்... நாளைக்குக் காலையில ஏழரை மணிக்கு, உனக்கும் மாப்பிள்ளைக்கும் சென்னை பெசன்ட் நகர், அஷ்ட லஷ்மி கோவில கல்யாணம். முடிவு பண்ணியாச்சு!''

''அம்மா...'' என தனு ஆரம்பிக்கும் முன்னர்,

''நான் பேசி முடிச்சிடுறேன். இவ்வளவு அவசரமா கல்யாண ஏற்பாடு ஏன் பண்ணினீங்கன்னு தானே கேட்கிறே? மாப்பிள்ளையோட அம்மாவுக்கு உடம்பு ரொம்பவும் முடியலை... அடுத்து வர ரெண்டோ மூணோ நாள் தான்... அவங்களோட கடைசி நாளா இருக்கப் போகுதுன்னு டாக்டர் சொல்லிட்டாங்க. அதனாலதான், அவங்க உயிரோட இருக்கும்போதே, மாப்பிள்ளையோட கல்யாணத்தை முடிச்சிடலாம்ன்னு...'' என்று நடந்ததைச் சுருக்கமாய் விளக்கி முடித்தார் இந்திரா.

இளாவின் தாய் மீது பரிதாபம் தோன்றியபோதும், தனுவால் இந்தத் திடீர் கல்யாணத்தை ஒத்துக் கொள்ள முடியவில்லை.

''அதுக்காக? என்னம்மா இது?'' - அழுகை வரும் போலிருந்தது அவளுக்கு.

''ஒரு அம்மாவோட கடைசி கால சந்தோஷத்துக்காக... தனு! ப்ளீஸ்!''

''எப்படிம்மா திடீர்னு கல்யாணம் பண்ண முடியும்? பத்திரிகை அடிக்கலை... யாரையும் இன்வைட் பண்ணலை... சாரீ வாங்கலை... மண்டபம் இல்ல... இதெல்லாத்தையும் விடுங்க! நானே இன்னும் ப்ரிப்பேர் ஆகலையே?''

''எனக்குப் புரியுது தனு! கஷ்டமா தான் இருக்கும்! இல்லைன்னு சொல்லலை... ஆனா... கொஞ்சம் உன்னைத் தாண்டி யோசிச்சுப் பாரு தனு! அவங்கம்மாவோட கடைசி ஆசையே... மகனைக் கல்யாணக் கோலத்தில பார்க்கணும்ங்கிறது தான்... அதை நாம நிறைவேத்தலாமே?''

''நாம ஏன்மா நிறைவேத்தணும்? வேற யாரையாவது கல்யாணம் பண்ணிக்கச் சொல்லுங்க...'' என்று விட்டேறியாய் பேசியபோதும், அந்த வார்த்தைகள் ஏற்படுத்திய சுணக்கம், குரலிலும் லேசாய் வெளிப்பட்டதோ என்னவோ?

''சும்மா மறுக்கணும்ன்னே மறுக்கக் கூடாது, தனு! உன் மனசைத் தொட்டுச் சொல்லு... உனக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கலையா?''

''அய்யோ... என்னம்மா? பார்த்த ஒரே நாளில் எதுவும் சொல்ல முடியாதுன்னு... நான் ஏற்கனவே சொன்னேனே? இப்ப என்னடான்னா உடனே கல்யாணம்ன்னு சொல்றீங்க? என்னால முடியாதும்மா!''

''தனும்மா... ப்ளீஸ்டா புரிஞ்சுக்கோ! இன்னும் ஒரு மாசம் கழிச்சுன்னாலும், இவரோட தான் உன்னோட கல்யாணம் நடக்கப் போகுது!''

''அம்மா...''

''தனு... ப்ளீஸ்... நான் பேசி முடிச்சிடுறேன்... உனக்கு அவரைப் பிடிச்சிருக்கு! அது... எனக்குத் தெரியும்! நான் உன்னோட அம்மாடி... சும்மா என்கிட்டே போக்குக்



காட்டுற வேலையெல்லாம் வேணாம்... அதனால, நான் என்ன சொல்ல வரேன்னா.. ஒரு மாசம் கழிச்சு நடக்கப் போற கல்யாணத்தை நாளைக்கே நடத்தினா, அவங்கம்மாவும் சந்தோஷப்படுவாங்க! அவங்களுக்கு நீ கொடுக்கப் போற நிம்மதி, அவங்களோட ஆசீர்வாதத்தை வாங்கித் தரும்! அந்த ஆசீர்வாதம்... நூறு சொந்தபந்தம் வந்து அட்சதை போட்டாலும் கிடைக்காது!'' - உள்ளார்ந்து வெளிப்பட்ட அக்குரலில் தனுவின் இதயம் அசையவே செய்தது!

ஆனாலும்...

ஆமோதித்து ஏதும் பேசவில்லை என்றாலும், தன்னொளி மறுத்தும் ஏதும் பேசவில்லை என்பதே இந்திராவிற்கு சாதகமாய் தோன்றியது போலும்!

''அவங்க யாரோ... அவங்களுக்காக நான் ஏன் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைக்கிறியா தங்கம்? அவங்களுக்காக வேணாம்டா... அம்மாக்காக... தனுவோட அம்மா சாகக் கிடக்கும்போது, இப்படிக் கேட்டா செஞ்சிருக்க மாட்டியா?'' என அவர் தணிவாகப் பேசியதைப் பாதியிலேயே இடைவெட்டிய தன்னொளி,

''தனுவோட அம்மாக்கு எதுவும் ஆகாது! ஆகக்கூடாது! தனுக்கும், அருளுக்கும் அப்பா தான் இல்லை... அம்மாவாவது வேணும்! கண்டிப்பா வேணும்!'' என்று தேம்பலின் ஊடே திக்கினாள்.

கூடவே, ''இ... இ.. இப்படியெல்லாம் பேசாதீங்கம்மா...'' என மகள் அழுகவும்,

''சரிடா பேசலை... தனுவோட அம்மாக்காக வேணாம்... அப்பா செல்லம் தானே? அப்பாக்காக செய்வியா? தனு... அப்பா... இ... இற... நம்மளை விட்டுப் போகும்போது,

''தனுவோட கல்யாணத்தைப் பார்க்க முடியலையே''ன்னு வருத்தப்பட்டுட்டே தான் குட்டி போனாங்க... அந்த அப்பா இப்ப வந்து கேட்டா நீ செய்ய மாட்டியா? அப்படி நினைச்சுக்கக் கூடாதா?'' என்றார் இந்திரா வேண்டுத லாக.

''அப்பா'' என்ற மந்திரச் சொல்லை விடவும், ''இறந்தார்'' என்று சொல்ல முடியாமல், ''நம்மளை விட்டுப் பிரிந்து போனார்'' என்று கூறிய தாயின் துக்கம், அச்சிறு பெண்ணை வெகுவாய் தாக்கியது போலும், தன்னொளியின் உதடு கள் ''சரிம்மா... நீங்க சொல்றபடியே செய்றேன்'' என்ற வார்த்தைகளை உதிர்த்தன.

''என் கண்ணம்மா!'' என்று அன்பார்ந்து வெளிப்பட்ட தாயின் குரலில் அப்படியொரு நிறைவு!

அதன் பின்னர், ''நாளைக்குக் காலையில ஆறு மணிக் குக் கல்யாணம். நானும் அருளும் அஞ்சு மணிக்கு அங்க வந்துடுறோம். உனக்கு வேண்டிய சேலை... நகை எல் லாம் அம்மா எடுத்திட்டு வரேன்... என்னடா சரியா?'' என அவர் வேகமாய் திட்டமிட,

''என்னம்மா இது? ஆறு மணிக்கேவா? இப்ப மணி என்ன தெரியுமா? மணி ஒன்பதரை... இன்னும் முழுசா பண்ணெண்டு மணி நேரம்கூட இல்லை... விளையாடா தீங்க!''

''எனக்கும் கணக்கு தெரியும் தனு! ஆனா... நாளைக் கடத்தக் கூடிய சூழ்நிலையில நாம இல்லை. நீ குளிச் சிட்டு ரெடியா இரு... நாங்க வந்ததும் சேலையை மாத்திக்கிட்டு கிளம்பணும்'' என்றார் இந்திரா, காலத்தின் அவசியம் உணர்ந்து.



''உலகத்திலே எனக்குத்தான் இப்படியொரு கல் யாணம் நடந்திருக்கும்ன்னு நினைக்கிறேன்... நாளைக் குக் கல்யாணம்ன்னு இன்னைக்கு... அதுவும் நைட் பத்து மணிக்குச் சொல்றீங்க...'' என தனு அலுத்துக் கொள்ள,

''சும்மா... சும்மா திரும்பத் திரும்ப இதையே பேசிட்டு இருக்கிறதால எந்தப் புண்ணியமும் இல்லை, தனு! எல்லாரையும் விட, நாம தனிச்சுத் தெரியணும்ங்கிறதுக் காக கடவுள் இப்படியொரு கல்யாணத்தை ஏற்பாடு பண்ணியிருக்கார்ன்னு நினைச்சுக்கோ. எல்லாம் சரியா போய்டும்!'' என்றார் இந்திரா, கண்டிப்பாக.

கூடவே, ''உன்னோட பிரண்ட்ஸ் யாராவது இருந்தா கொடு. நான் பேசணும்'' என்றார்.

''எதுக்கு? அவங்ககிட்ட எல்லாம் ஒண்ணும் சொல்ல வேண்டாம்!'' என்று தனு வேகமாய் மறுக்க,

''ஏய், என்ன தனும்மா இது? நாம என்ன திருட்டுக் கல்யாணமா பண்றோம்? அவசரக் கல்யாணம்! அவ்வளவு தான்! சும்மா கண்டதையும் கற்பனை பண்ணாம, அவங்க யார்கிட்டையாவது கொடு...'' என்று அதட்டினார் தாயார்.

தன்னொளி கைப்பேசியில் அழுததைக் கவனித்த சம்யுக்தா, சற்று தொலைவிலிருந்து தோழியைக் கவ னித்தவாறே நின்றிருந்தத்ள.

முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு, தன்னொளி சுற்றும் முற்றும் தேடவும், அவளருகே வந்தவள் ''என்னடி'' என வினவ,

"அம்... அம்மா பேசணுமாம்..." என அவளிடம் கைப் பேசியை நீட்டிய தனுவின் குரல், அழுகையை அழையா விருந்தாளியாய் குடி வைத்திருந்தது.

"என்னாச்சு?" என்ற கேள்வியை முகத்தில் தேக்கிய வாறே, கைப்பேசிய வாங்கிய சம்யுக்தா, அதன் பின்னர் பேசிய வார்த்தைகள் மிகக் குறைவே.

"சொல்லுங்க ஆன்ட்டி!"

"........"

"ஹோ! அப்படியா???!"

"......."

"நாளைக்கா? எப்போ?"

"......"

"ஹோ!!!!"

"....."

"சரி ஆன்ட்டி. நான் பார்த்துக்கிறேன். நீங்க கவலைப் படாதீங்க!"

"....."

"எனக்கு எதுக்கு ஆன்ட்டி தேங்க்ஸ்? தனு என்னோட க்ளோஸ் பிரண்ட் ஆன்ட்டி... அவளுக்காக கண்டிப்பா செய்வேன்.

அதைவிடவும், உங்களுக்காக... உங்களோட மனிதாபிமானத்துக்காக இந்தச் சின்ன உதவி கூட செய்ய மாட்டேனா என்ன?" என்றதோடு அழைப்பை வைத்தவள்,

"என்னம்மா கல்யாணப் பொண்ணு!" என்று தோழியின் தாடை பற்றியது தான் தாமதம், தனுவிற்கு வெடித்துக் கொண்டு வந்து விட்டது அழுகை!



# 6

அடுத்த நாள் காலை 5.00 மணி.

சென்னை வந்திறங்கிய இந்திராவும் அருள்மொழியும், தன்னொளி தங்கியிருந்த விடுதியின் காப்பாளரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, அவளது அறைக்குள் நுழைந்தனர்.

"ஹே ஒளியும்.. ஒலியும், ஒரு வழியா நீ ஒழிஞ்சு போற நாள் வந்துடுச்சு போல!" என்ற குதூகலக் கூவலுடன் அருள்மொழி தமக்கையை நோக்கி விரையவும்,

"அவளே ஏகக் கடுப்புல இருக்கா... நீ வேற ஏன்மா சுடு தண்ணிய ஊத்துறே?" என்று அவளை அறையை விட்டு வெளியே தள்ளிக் கொண்டு போனாள் அபர்ணா.

ஏற்கனவே பீதியில் இருந்த இந்திரா, அபர்ணாவின் இந்த வார்த்தையில் வெகுவாக பயந்து போனார் என்று தான் சொல்ல வேண்டும்.

பதட்டத்தில் தடதடத்த மனதுடன் கட்டிலில் அமர்ந்திருந்த மகளிடம் சென்றார் தாயார்.

தாய் வந்ததை உணர்ந்திருந்த போதும், வெளிப்பக்கமாய் தலையைத் திருப்பிக் கொண்டு அமர்ந்திருந்த மகளின் முகத்தை, அவளது தாடைத் தொட்டுத் திருப்பினார் இந்திரா.

கண் இரண்டும் இரண்டு பலூன்களாய் வீங்கியிருக்க, தன்னொளியின் "தக்காளி" முகம், அருள்மொழியின் "பூசணிக்காய்" முகம் போல் ஊதிப் போயிருந்தது!

''என்ன தனு இது? இப்படி அழுது வச்சிருக்கே? மாப்பிள்ளை பார்த்தா என்ன நினைப்பார்?'' என இந்திரா ஆரம்பிக்க,

''ஹய்யகோ!???!'' என்று தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டனர், ரேகாவும் சம்யுக்தாவும்.

அவர்களது வார்த்தையிலும், பாவனையிலும் முற்றிலும் குழம்பி, ''என்னம்மா? என்னாச்சு?'' என்று இந்திரா வினவுவதற்குள்,

''நேத்து வந்தாரா அந்த மாப்பிள்ளை? அவருக்கு இவ்வளவு பார்க்கிறீங்க? பெத்து... வளர்த்து... இவ்வளவு நாளா கூட இருக்க மகளோட மனசைப் பார்க்க மாட் நீங்க!'' என்று பொரிந்து தள்ளியது, அவரது மூத்த மகவு.

''இதுக்குத்தான் சொன்னோம்!'' என்பது போல் ரேகாவும், சம்யுக்தாவும் பார்த்திருக்க,

மகளிடம் திரும்பிய இந்திராவின் முகம் அழுத்தத்தில் இறுகியது! மகளின் தாடை பற்றி தன்னை நேராய் நோக்க வைத்தவர், ''சும்மா... வார்த்தையாடாத தனு! விதண்டாவாதம் செய்ய இது நேரமில்லை... இந்தா... இந்தச் சேலையைக் கட்டிக்கிட்டு ரெடியா வா!'' என்றார் மாறுபட்டக் குரலில்! அக்குரலில் இருந்தது, கோபமா? கண்டிப்பா? கட்டளையா? - எதுவென்று யாராலும் பகுத்தறிய முடியாவிட்டாலும், இந்திரா கொடுத்த சேலையைக் கையில் எடுத்துக் கொண்டு, தனு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

''சான்ஸ்லெஸ் ஆன்ட்டி! நாங்களும், நைட் முழுசும் விதவிதமா பேசிப் பார்த்தோம்... கெஞ்சிப் பார்த்தோம்... காலில் கூட விழுந்துப் பார்த்தோம்! அப்ப அடங்காத



அழுகையை... டமால்ன்னு ஒரே வார்த்தையில அடக் கிட்டீங்களே! சூப்பர்! சூப்பர்!'' என்று குதூகலித்தாள் ரேகா! அவ்வளவு சந்தோசம் அவளுக்கு! பின்னே, இரவு முழுதும் தன்னொளி வாசித்த சோக வயலினைக் கேட்டவள் அவள் அல்லவோ!

மெல்லிய சிரிப்பு இழையோட, தனுவின் தோழி களிடம் திரும்பிய இந்திரா ''இன்னைக்கு ஒரு நாள்... ஆபீஸ்க்கு லீவு போட முடியுமாப்பா? நீங்க வந்தா... தனு கொஞ்சம் பரவாயில்லாம இருப்பா... ப்ளீஸ்ப்பா... எனக்காக!'' என்றார் கெஞ்சுதலாக.

''என்ன ஆன்ட்டி நீங்க? ப்ளீஸ் எல்லாம் போட்டுக் கிட்டு!? கண்டிப்பா வரோம்... அஞ்சே நிமிஷம்!'' என்று கோரஸ் பாடிய அனைவரும், வார்த்தையில் சொன்ன ''அஞ்சு நிமிஷத்தை'' வேகத்தில் காட்டவில்லை.

கல்யாணப் பெண்ணான தன்னொளியே, உடை மாற்றி, தலை பின்னி, பூச்சூடி, தாய் கொண்டு வந்த நகைகளை அணிந்து கிளம்பிவிட்டாள். ஆனால், அவர் கள் நால்வரும் கிளம்பி வர, முக்கால் மணி நேரத்திற்கும் மேலானது!

ஒரு வழியாக, அவர்களைக் கிளப்பிக் கொண்டு, காரில் ஏறிய இந்திரா, இளம்பரிதியைக் கைப்பேசியில் அழைத்தார்.

''தம்பி... நா இந்திரா பேசுறேன்!'' என்று அவர் ஆரம்பிக்கும்போதே, தனுவிற்கு யாரிடம் பேசுகிறார் என்று புரிந்துவிட்டது!

வேண்டுமென்றே கழுத்தை ஒடித்துக் கொண்டு, ஜன்னல் புறமாய் தலையைத் திருப்பியபோதும், கவனம் முழுதும் தாயின் பேச்சிலேயே இருந்தது.

''அம்மா எப்படி இருக்காங்க தம்பி?''

''.....''

''ஹோ! ரொம்ப சந்தோஷம்! அவங்களோட மன நிம்மதி தான் நமக்கு இப்ப முக்கியம்!''

''.....''

''ஐயோ! நமக்குள்ள என்ன தேங்க்ஸ் எல்லாம்... விடுங்க அதை! நாங்க தனுவோட ஹாஸ்டல்ல இருந்து கிளம்பிட்டோம். நீங்க எங்க இருக்கீங்க?''

''......''

''ஹோ! கோவிலுக்கு வந்தாச்சா? நாங்க இன்னும்... பத்து பதினைஞ்சு நிமிஷத்துல வந்திடுவோம்...'' என போனில் சொன்னவர், ''பத்து நிமிஷத்தில போய்டுவோம்ல ராமக்கிருஷ்ணன்?'' எனக் கேட்டார் ஓட்டுனரிடம்.

ஓட்டுனரின் ஆமோதிப்பான பதிலைப் பெற்றுக் கொண்டதும், ''பத்து நிமிஷத்தில அங்க இருப்போம்... நீங்க ஐயர்கிட்ட சொல்லி, மித்த ஏற்பாடெல்லாம் பண்ணுங்க!'' என்றார்.

''.....''

''தனு தானே? அவ நல்லா தான் இருக்கா... ஒண்ணும் பிரச்சனையில்லை! நீங்க அவளைப் பத்தி கவலைப் படறதை விடுங்க!'' என்றார் மகளின் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

தான் கண்டித்துப் பேசிய வார்த்தைக்குப் பின்னர், ஒப்புக்கு ஒரு வார்த்தை கூட பேசாமல் வரும் மகளைப் பார்க்கையில், அவருக்கு ஏனோ மகளின் சிறு வயது ஞாபகம் வந்தது! அவள் கேட்ட கலர்பென்சிலை வாங்கிக் கொடுக்காததற்கு, தன் துக்கிளியூண்டு முகத்தை மூன்று



நாட்களுக்குத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த, ஒன்றாம் வகுப்பு தன்னொளியாகவே தெரிந்தாள் அவள்!

மனதிற்குள் மகளைச் சீராட்டிக் கொண்ட அதே வேளையில், மாமியார் இல்லாத வீட்டிற்கு மருமகளாய் செல்பவள், இப்படி அசட்டுத்தனமாய் இருக்கிறாளே என்று சிறு வருத்தமாகவும் இருந்தது, இந்திராவிற்கு!

தாய் மகளைப் பற்றிய ஆராய்ச்சியில் இருக்க, மகளோ மணாளனைப் பற்றிய ஆராய்ச்சியில் இருந்தாள்!

''என்னைப் பற்றி என்ன கேட்டிருப்பான்? தனு என்ன பண்றான்னு கேட்டிருப்பானோ? கோபமா இருக்காளான்னு கேட்டிருப்பானா இருக்கும்! ச்சே... அம்மாக்கு முடியா தப்போ கூட என்னைக் கேட்டிருக்கான்... நல்லவன் தான்!'' என்று நிகழ்காலக் கணவனாகப் போகின்ற வனைப் பற்றியே சிந்தித்தது மனம்!

அவளது சிந்தனையைக் கலைக்கவென்றே, ''என் னால இனிமேல் பேசாம இருக்க முடியாது! வாய் வலிக்குது தெரியுமா? விடுங்க... ரேகா அக்கா!'' என்று ரேகாவின் பிடியிலிருந்து தன் கையை உருவிக் கொண்ட அருள்மொழி.

''ஏய், முருங்கக்கா... ஏன்டி முருங்க மரத்தில ஏறினவ மாதிரி இருக்கே? யாருக்குமே கிடைக்காத ஒரு சூப்பர் த்ரில்லிங் கல்யாணம் உனக்கு நடக்கப் போகுது! சும்மா... அதை என்ஜாய் பண்ணுவியா? அதை விட்டுட்டு!'' என்று தமக்கையிடம் பொரிந்தாள்.

அதன் தொடர்ச்சியாக, ''ஹே! முருங்கைக்காயா? - தோழிகளில் ஒருத்திப் புருவம் உயர்த்த, அந்தத் தொனி யிலேயே மற்றவர்கட்கு விஷயம் புரிந்துவிட்டது!

ஆனாலும், தங்களுக்குப் புரிந்ததை.. வெளியே பகிராமல்... பகிர முடியாமல், அவர்கள் உட்கார்ந்திருக்க, அங்கிருந்தவர்களிலேயே சற்றே ஓட்டை வாயான ரேகா, தன் திருவாயை இனிதே திறந்து, அடுத்த (முக்கியமான) கேள்வியை உதிர்த்தாள்.

''ஏய் சம்யு... இன்னைக்கு நைட் தானேடி முருங்கைக் காய் சாப்பிடணும்? இவ என்ன... தனுவையே முருங்கக் கான்னு சொல்றா?''

அவளது விஞ்ஞானத்தனமான கேள்வியில் தன்னொளியின் முகம் பவளவாய் மொழியாய் சிவந்து போக, அதை ஓரக் கண்ணால் ரசித்துக் கொண்டே, ''அவரு ரெண்டு முருங்கக்காவாயும் சாப்பிடுவார் போலடி ரேக்ஸ்! உனக்கென்ன வந்துச்சு?'' என்றாள் சம்யுக்தா சிரிப்புடன்.

சிறுசுகளின் உரையாடலில் லேசாய் சிரிப்பு வந்த போதும், அதைக் காட்டிக் கொள்ளாமல், வெளிப்புறம் திரும்பி வேடிக்கை பார்ப்பது போல் பாவனை செய்த இந்திரா, மகளின் பதிலுக்காகக் காதைத் தீட்டி வைத்தார்.

தாயின் கவனம் தன்னிடம் இருக்கிறது என்ற எண்ணம் துளியுமில்லாமல், ''கொஞ்சம் கூட அறிவே இல்லடி உங்களுக்கு எல்லாம்? சை... அத்தை உயிருக்குப் போராடிட்டு இருக்க நேரத்தில... இது ஒண்ணு தான் குறைச்சலா இருக்காக்கும்! பேச்சைப் பாரு... பேச்சை! அங்க வந்து... இப்படி எதுவும் உளறி வைக்காதீங்க! கேட்கிறவங்க... என்னைத் தான் தப்பா நினைப்பாங்க!'' என்றாள் தன்னொளி, தன் போக்கில்.

வார்த்தையில் பொதிந்திருந்த அக்கறையும், அதை உதிர்த்த குரலில் தூக்கலாய்த் தெரிந்த கோபமும், ''மகள் வளர்ந்து விட்டாள்!'' என்ற உண்மையை அத்தாய்க்கு எடுத்துரைத்தது!



சற்று முன், அவளைச் சிறு பெண்ணாய் எண்ணிய தன்னையே நொந்துகொண்ட இந்திராவின் மனம், மகளை ஆரத் தழுவிக் கொள்ளத் தவித்தது!

அந்த நேரம் பார்த்து, ''ரெண்டு முருங்கக்காவா? எதுக்கு? ஐயோ... எனக்கு ஒண்ணுமே புரியலையே! எதுக்கு... இன்னைக்கு நைட் முருங்கக்கா சாப்பிடணும்? முருங்கக்கா சாப்பிட்டா என்ன ஆகும்?'' என்று அருள், ஏகத்திற்கும் குழம்பவும்,

''இவ ஒருத்தி! அவளே ஒரு அரை வேக்காடு... இதில நீங்க வேற! ஏன்டி... எல்லாரும் என்னைப் போட்டுப் படுத்தி வைக்கிறீங்க?'' என்று தலையில் கை வைத்துக் கொண்டாள் தன்னொளி.

''ஓகே! ஓகே! முருங்கக்கா... சாரி சாரி... தண்ணி... ஐயோ.. சாரி... சாரி... ஒலியும் ஒளியும்... திரும்ப சாரி சாரி... தன்னொளி! கோபப்படாத... நாங்க இனிமேல், கொட்டாவி விடக் கூட வாயைத் திறக்க மாட்டோம்!'' என்று ரேகா, வேண்டுமென்றே வம்பிழுக்க,

''ஹே... இப்படியெல்லாம் ஸ்டேட்மெண்ட் விடாதடி! நாம வாயைத் திறக்காம இருந்தா... ஆன்ட்டி ஆர்டர் பண்ண சாப்பாடு எல்லாம் வீணா போய்டும் இல்ல! கொஞ்சம் யோசிச்சுப் பேசு, ரேக்ஸ்!'' என்றாள் சம்யுக்தா அவசரமாக.

அபர்ணாவோ ''என்ன மெனு ஆன்ட்டி? நான்வெஜ்ஜா? வெஜ்ஜா?'' என்றாள் அது தான், முக்கியம் போல.

இந்திரா பதில் சொல்வதற்குத் திரும்புவதற்குள், ''வேணாம்... வெறி ஆகிடுவேன்! மரியாதையா வாயை மூடிட்டு வரதுன்னா வாங்க... இல்ல... இப்படியே இறங்கி

ஓடிப்போய்டுங்க!'' என்றாள் தன்னொளி, எரிச்சல் குரலில்.

''என்ன தனு இது? கல்யாணத்துக்கு வரவங்ககிட்ட இப்படியா பேசுறது?'' என்று இந்திரா கண்டிக்கையிலேயே,

''ச்சே... ச்சே! நீங்க இதுக்கெல்லாம் ஃபீல் பண்ணாதீங்க ஆன்ட்டி! நாங்க கண்டிப்பா கல்யாணத்துக்கு வருவோம்... வந்து ரெண்டு முருங்கக்கா கிப்ட் கொடுப்போம்! அதுவும், இளாகிட்ட... சாரி சாரி இளம்பரிதிகிட்ட மட்டும்தான் கொடுப்போம்!'' என்று சம்யுக்தா, தன்னொளியைப் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டே ராகமிழுக்கவும்,

''அடி வாங்காம போக மாட்டீங்க போல!'' என்றாள் தன்னொளி அவளது முதுகில் சுள்ளென்று ஓர் அடி வைத்து.

அவர்களது அடிதடி ரகளையை மேலே தொடர விடாமல், வண்டி அஷ்டலஷ்மி கோவில் முன்னே நின்றது.

''ஷ்! கோவில் வந்தாச்சு... தனு! கொஞ்சம் பேசாம... அடக்க ஒடுக்கமா இறங்கி வா!'' என்று இந்திரா அதட்ட, தன்னொளி உட்பட அனைத்துப் பெண்களும் பேச்சின்றி கீழே இறங்கினர்.

கோவிலை விட்டுச் சற்றே தள்ளி நின்று போன் பேசிக் கொண்டிருந்த இளம்பரிதி, வண்டி வந்த சத்தம் கேட்டு, அங்கே விரைய, கோவிலின் உள்ளிருந்து இளாவின் தங்கையும் தந்தையும் விரைந்து வந்தனர்.

''வாங்க... வாங்க...'' என அவர்கள் வரவேற்கவும், இளா கூறிய ''வாங்க''வை ஒதுக்கிவிட்டு, அவனது தங்கை பூங்குழலி கூறிய ''அண்ணி... வாங்க!''



என்பதற்கு வேகமாய்த் தலையசைத்து, அவளுடன் நின்று கொண்டாள், தன்னொளி.

இளாவின் பார்வை தன்னைத் தொடர்வதை, உள்ளுணர்வு உணர்த்தியபோதும், ஏனோ தனுவிற்கு அவன் பக்கம் திரும்ப முடியவில்லை! கோபமா? தாபமா? சிறுபிள்ளைத்தனமா? - எதுவோ ஒன்று அவளை வீம்பு பிடித்து, அவனைப் பார்க்க விடாமல் செய்தது!

இளாவிற்கும், தன்னை அவள் வேண்டுமென்றே தவிக்கிறாள் என்பதை ஊகிக்க முடிந்தது! மேலும், அவளது சிவந்த கண்களும், வீங்கிய முகமும், கண்ணைப் பார்த்துப் பேசாத முறைப்பும், உள்ளுக்குள் எதையோ அழுத்திவிட, பார்வையால் அவளையே தொடர்ந்தான் அவன்.

ஆனால், இவர்கள் இருவரும் மௌனத்தை மொழியாக்கி, வேண்டாத அனைத்தையும் யோசித்துக் கொண்டிருப்பதால், மற்றவர்கள் பேசாமல் இருப்பார்களா என்ன?

இளாவின் தந்தை கட்டபொம்மன், ''சம்மந்தியம்மா... உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல... தங்கம் (இளாவின் தாய்) மொகத்தில என்ன ஒரு சந்தோசம் தெரியுமா? நான் ஆயிரம் சேலை வாங்கிக் கொடுத்திருந்தாலும், நூறு பவுன் தங்கம் வாங்கிப் போட்டிருந்தாலும், இப்படியொரு சந்தோசத்தை அவ மொகத்தில பார்த்திருக்க முடியாது!'' என்றார், உண்மை வெளிப்பட்டக் குரலில்.

''எத்தனை வாட்டி அண்ணே, நன்றி சொல்வீங்க? இன்னொரு வாட்டி... விடுங்கன்னு சொல்லிட்டேனே?! இன்னொரு வாட்டி... நன்றிங்கிற வார்த்தை உங்க வாயில இருந்து வரக்

கூடாது! வந்துச்சு... அப்புறம் இந்த இந்திரா சும்மா இருக்கமாட்டேன்!'' என இந்திரா சுட்டு விரல் நீட்டி மிரட்ட,

''சரிங்க சம்மந்தியம்மா!' என உடனே பணிந்தார். அப்பெரிய மனிதர்.

''ம்ஹூம்! இதுவும் சரியில்லை... நான் எவ்வளவு உரிமையா 'அண்ணே'ன்னு கூப்பிட்டேன்... நீங்க சம்மந்தின்னு என்னை ஒதுக்கி வைக்கிறீங்களே?!'' என இந்திரா, சற்றே வருத்தம் கொள்ள,

''சரிம்மா தங்கச்சி!'' என்றார் அவர் சிறு சிரிப்புடன்.

இந்திராவும் பதிலுக்குப் புன்னகைக்கவும், அருளும் தனுவின் தோழிகளும் ''மலர்ந்தும் மலராத பாதி மலர் போல...'' என்று பாசமலர் ராகத்தை எடுத்து விட்டனர்.

''ஷ்... சும்மா இருங்க!'' என்று இந்திரா அதட்டும் போதே,

''அடக்காதம்மா! நாங்க இப்படி வாய்விட்டுச் சிரிச்சு ரொம்ப நாளாச்சு... பையன் கல்யாணத்தன்னைக்காவது சிரிச்சுட்டுப் போறோம்!'' என அவர் கூற, அங்கே ஓர் நீண்ட மௌனம் நிலவியது.

பூவின் முகம் ஏகத்திற்கும் வாடுவதைக் கண்ட இந்திரா, ''அண்ணி... எங்கண்ணே இருக்காங்க? வாங்க... உள்ள போய் பார்க்கலாம்!'' என அனைவரையும் உள்ளே இட்டுச் சென்றார்.

அனைவரும் ஓர் ஆர்வத்துடனும், அதே சமயம் ஓர் வருத்தத்துடனும் உள்ளே செல்ல, அங்கே ஆவலே வடிவாய், சக்கரநாற்காலியில் வீற்றிருந்தார் ஓர் பெண்மணி.



மெலிந்த தேகம் - ஆனால் இயற்கையிலேயே மெலிந்த தேகமல்ல! திடகாத்திரமாய் இருந்து, நோயினால் மெலிந்த தேகம் என்பது அப்பட்டமாய் தெரிந்தது!

அவர் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தது கூட இரண்டு பருத்தி சேலைகளை ஒன்றாய் சுருட்டி, பொம்மை போல் நாற்காலியில் அமர வைத்தது போலிருந்தது!

கையும் காலும் இரண்டு குச்சிகள் தாம்! முகம் சுருங்கி, கன்னத்தில் டொக்கு விழுந்து, கண்ணே வெளிவந்து விடும் போல் கருவளையம் சூழ, பார்த்த நொடியே எதிரே இருப்பவரின் பரிதாபத்திற்கு ஆளாகக் கூடியவராய் தெரிந்தார் அவர்!

அவர்கள் வருவதைக் கண்டதும், சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டு அவர் நகர முற்பட,

தனுவின் குடும்பத்தை முன்னே விட்டு, பின்னால் வந்து கொண்டிருந்த இளம்பரிதி

''அம்மா... அம்மா... என்ன பண்றீங்க? கை மாட்டிக் கும்மா... தள்ளாதீங்க...'' என்ற கூவலுடன், முன்னே ஓடி வந்தான்.

அவன் வந்த வேகத்தில், இடப்பக்கமாய் நடந்து கொண்டிருந்த தன்னொளி மேல் பலமாய் மோதிவிட்டான்.

அவனது ஆஜானுபாகு தேகம் மோதியதில், ஒரு முறை விதிர்விதிர்த்து நின்றாள் தன்னொளி! உடன் நடந்த அருளும் அதிர்ந்து நிற்க, அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் அவனில்லை!

இமைக்கும் நேரத்தில் தாயின் அருகே சென்றிருந்தவன், ''என்னம்மா இது? அங்கேயே இருங்கன்னு

எத்தனை வாட்டிச் சொன்னேன்!'' என்றவாறே தாயின் கையை எடுத்து, லேசாய் நீவிவிட்டான்.

''ப்ச்... பாருங்க... லேசா ரத்தம் கட்டிடுச்சு!'' என அவன் வருத்தம் கொண்டதெல்லாம், அத்தாயின் மனதில் பதியவே இல்லை.

''தனு...வைப் பாக்கணும்... போல இ... இ.. இருந் துச்சு...'' - நாலு வார்த்தை பேசுவதற்குள், அவர்க்கு ஏகத் திற்கும் மூச்சு வாங்கியது! ஆனால், மிகுந்த சிரமத்திற்கு இடையே வெளிப்பட்ட அக்குரலிலும் ஓர் வாஞ்சை இருந்ததை, இந்திரா மட்டுமல்ல தன்னொளியும் கவனித் தாள்!

''தனு தான் வந்துட்டாளே.. தனு இங்க வா... வந்து உங்க அத்தையைப் பாரு... நேத்துல இருந்து... எப்ப தனுவைப் பார்க்கலாம்ன்னு ஒரே நச்சரிப்பு... விட்டா நேத்தே உன் ஹாஸ்டலுக்கு வந்திருப்பாங்க... நான்தான் நீ என்ன மூட்ல இருப்பியோன்னு...'' - ஒரு வேகத்தில் சொல்லிக் கொண்டே சென்றவன், தனது கடைசி வார்த்தையை நிறைவு செய்ய முடியாமல், அப்படியே நிறுத்தினான்.

அவனது வேகத்தில் தடுமாறி நின்ற தன்னொளி, வெகு இயல்பாய் வந்த அவனது வார்த்தைகளில் அயர்ந்து நின்று, அவன் பேச முடியாமல் நிறுத்திய வாக்கியத்தில், அவனைக் கண்ணோடு கண் நோக்கிக், கண்களால் கொக்கிப் போட்டாள்!

ஒற்றைப் புருவம் உயர்த்தி, இடக்கண்ணின் கரு விழியை மட்டும் லேசாய் உருட்டி, ''என்ன''வென்று அவள் வினவிய அழகில், இளம்பரிதியும் ஓர் நிமிடம் அசந்து நிற்க, அவர்களது கவனத்தைக் களைக்கும்



வண்ணம், ''என்னம்மா.. கல்யாணம் இவ்வ....வு அவ சரமா... நடக்குதேன்னு வருத்தப்பட்டியா? எல்லாம்ம்ம.. இந்தப் பாழாப்போன... உடம்பால...'' - என்றார் இளாவின் தாயார் தங்கம், வருத்தம் மேலிட்டக் குரலில்.

மகள் என்ன பதில் சொல்லப் போகிறாளோ என்ற பயத்தில், இந்திரா ''அப்படியெல்லாம் இல்ல அண்ணி...'' எனத் தொடங்க,

அவரது வார்த்தையை மிஞ்சும் வேகத்தில், தங்கத்தை நெருங்கிய தன்னொளி, ''எனக்கு எந்த வருத்தமும் இல்லை அத்தை! என்னை நினைச்சுக் கவலைப்படறதை விட்டுட்டு, உங்க பையன் கல்யாணத்தைக் கண் குளிர பாருங்க...'' என்றாள் அவரது கையைப் பிடித்து, லேசாய் நீவி விட்டுக் கொண்டே.

அப்போது தான் கவனித்தாள், மணிக்கட்டில் லேசாய் ரத்தம் தடைப்பட்டு, இரத்தக்கட்டு போல் தேங்கி இருந்தது!

தன்னிச்சை செயலாக, தனுவின் கண்கள் இளாவைப் பார்க்க, அவனும் தன்னியல்பாய் ''அம்மாக்கு... கை - கால் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா செயலிழக்க ஆரம் பிச்சிடுச்சு... இந்தக் கை மட்டும் தான் கொஞ்சம் ஆக்டிவா இருக்கு... அதிலையும் ஏதாவது வேலை பார்த்தா, அப் படியே ரத்தம் உறைஞ்சு போய்டும்! அப்புறம்... கையை அசைக்கவே முடியாது!'' என்றான் உணர்ச்சிகள், ஏதும் தென்படாத குரலில்.

சுற்றியிருந்தவர்கள் அனைவருக்கும் மனம் கனத்துப் போய்விட, தன்னொளிக்கு அவனது மிதமிஞ்சிய வேகத் தின் காரணம் புரிந்தது!

தாயிடம் இவ்வளவு அக்கறை கொண்டிருப்பவன், தன்னையும் நன்றாய் வைத்துக் கொள்வான் என்ற

எண்ணம் ஒருபுறம் எழ, இந்த நேரத்தில் இந்த எண்ணம் சுயநலமிக்கது என்ற மாற்றெண்ணமும் தோன்றி, அவளை அமைதி காக்க வைத்தது!

மற்றொரு முறையாக, நிலவிய மௌனத்தைக் களைப்பதும், இந்திராவின் வேலையாகவே போனது.

"அண்ணி! நல்ல நேரம் முடியறதுக்கு முன்னாடி... சடங்கெல்லாம் முடிச்சிடலாமா?" என அவர் தொடங்க,

"ஆமா... ஆமா... வாங்க..." என்று ஆர்வத்துடன், முன்னே நகர்ந்தார் தங்கம்.

"அம்மா..." என்று இளாவும்,

"என்ன அத்தை... இப்போ தானே அவர் சொன்னார்..." என்று தனுவும் தொடங்க, அந்த இறுக்கமான சூழ் நிலையை இலகுவாக்கும் வண்ணம், "ஓஹோ!" என்று கத்தினர் தனுவின் தோழிகள்!

"ச்சு!" என்று தன்னொளி அடக்க,

இளாவோ லேசாய் வெட்கம் கொள்ள,

தங்கமோ "இப்பவே.... ஒத்...'த... மனமா... இருக் காங்கல இல்ல..." என்றார் பெருமையாக.

அதற்கும் ஓர் "ஓஹோ!" என்று ஓர் கோரஸ் எழவும், "அம்மா!" என்று அடக்குவது இளாவின் முறையாகிற்று!

அதன் பின், எல்லா வேலைகளும் மின்னல் வேகத்தில் மட்டுமல்ல, ஓர் இலகு மனநிலையுடனே சென்றது என்றாலும்,

பொன்மஞ்சள் தாலியில் நடுநாயகமாய் வீற்றிருக்கும் அம்மையும் அப்பனும், எட்டு வகை செல்வங்களையும், தனி பெருமை கொண்ட தாய்மையையும், இல்லத்தரசி என்ற பட்டத்தையும் - அணிந்து கொள்ளும் மங்கைக்கு,



வாரி வழங்க வேண்டும் என்று பெற்றோர் வாழ்த்த, மகாலஷ்மி - மகாதேவன் முன்னிலையில், இளம்பரிதி, தன்னொளியைத் தன் துணைவியாய் ஏற்றுக் கொண்ட போது, தன்னொளியின் ஒரு சொட்டுக் கண்ணீர், தாலியில் அவன் வைத்தக் குங்குமத்தின் மீது தெறித்து விழுந்தது!

அவளது கண்ணீரின் அத்துளி, அவர்களது வாழ்க்கை யின் ஓட்டத்தைத் தீர்மானிக்கப் போகிறது என்பதை அறிந்திருந்தால், தன்னொளி அக்கணம் அழுதிருக்க மாட்டாளோ!?

## 7

திருமாங்கல்ய தாரணம் முடிந்ததும், பெரியவர் களின் காலில் விழுந்து ஆசி பெற்றனர் மணமக்கள்.

தன்னைப் பணிந்து எழுந்த மருமகளின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்ட தங்கம், "தீர்க்க... சுமங்கலியா.. தீர்க்....க ஆயுசோட சந்தோஷமா இரு...க்கணும்மா!" என்றார் கண்ணில் தழும்பி வழிந்த கண்ணீருடன். கண் கள் சுரந்த கண்ணீருக்கு மாறாய், முகம் ஆயிரம் மின்னல் கள் ஒன்றாய் வெட்டிய ஒளிப்பிழம்பென மின்னியது!

மகனின் கரங்கள் தனது கண்ணீரைத் துடைப்பதை உணர்ந்ததும், "இனிமேலாவது... நீ... நிம்மதியா இரு...க் கணும் ராஜா!.... நாம பட்ட கஷ்டமெல்லாம்... என் னோட... போகட்டு...ம்!" என்றார் குனிந்திருந்த அவனது சிகை கோதி.

''ஷ்! தங்கம்... என்னம்மா இது?'' என அவரது கணவர் அதட்டியதெல்லாம், எமன் வீட்டு வாசற்படி நோக்கி விரைந்து கொண்டிருந்ததற்குப் புரியவேயில்லை! தன்னை நோக்கி நீண்ட கணவனின் கைகளைப் பற்றி, ஓர் குழந்தையின் எதிர்பார்ப்புடன் அவர் முகம் பார்த்தார் தங்கம்.

மனைவியின் மனம் புரிந்த மகிமை மிக்க கணவனாய், தோளில் மாட்டியிருந்த பையிலிருந்து, ஓர் பெட்டியை எடுத்துக் கொடுத்தார் கட்டபொம்மன்.

செயலிழக்காமல் இருந்த வலக்கையால் அதை வாங்கியவர், ''இந்தாம்மா.. வாங்கிக்கோ...'' எனக் கூறி, மருமகளிடம் நீட்டினார்.

தனு லேசாய் தயங்க, அதைத் திறந்து, ''சும்மா... வாங்கி... கோ...'' என்று வற்புறுத்தி அவள் கையில் கொடுத்தவர்.

''இதெல்லாம் என்னோட... நகை! உனக்கு பாதி.. பூவுக்கு...ப்... ப்... பாதின்னு பிரிச்சு... உனக்குள்ளதை... அஹ... அஹ... அஹ உன்கிட்ட கொடுத்திட்டேன்'' என அவர் கூற,

''பார்த்தும்மா... இருமுது பாருங்க! மெதுவா!'' என்று நெஞ்சை நீவிவிட்டான், இளம்பரிதி.

ஆனால் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் தனு இருக்கவில்லை! தங்கம் நீட்டிய நகைகளின் அளவிலேயே, பிரமித்துப் போயிருந்தாள், அவள்! ''எவ்ளோ நகை!!!'' என வாய்விட்டே சொல்லியவள்,

''எனக்கெதுக்கு அத்தை... இவ்வளவும்? பூவுக்கு இருக்கட்டும்!'' என மீண்டும் அவர் கையில் கொடுக்க,



''எனக்கு... நீ வேற... பூ வேற இல்லைம்மா! ராஜாவோட பாட்டி இருக்காங்களே... அதான் என்னோட மாமியார்... அஹ... அஹ... ரொம்பக் கடுசு! அவங்க பொண்ணுங்க தான் அவங்களுக்கு ஒருத்தி... மருமக மகா மட்டம்... அஹ... ஹ... அப்படி வாழ்ந்தவம்மா நானு! என் மருமகளும்.. அப்படி வாழ்ந்திடக்... ஹக்.. ஹக்.. கூடாதுன்னுதான்... மொதல்லயே இதைப் பிரிச்சுக் கொடுத்திட்டேன்...'' என்று தன் நிலைப்பாட்டைத் தங்கம் வலியுறுத்த,

''இந்த நகை பிரிக்கிற விஷயம்.. இப்பப் பண்ணியிருக்கவே கூடாது! நீ தான் பூவை இனிமேல் பார்த்துக்கப் போறே... அப்படியிருக்கும்போது, முழுசையும் உன் கிட்ட தான் கொடுத்திருக்கணும்... நீயா பார்த்து அவளுக்குக் கொடுத்திருக்கணும்.... நானும் அத்தையும் அப்படித்தான் சொன்னோம்! இளா தான் 'வேணாம்.... நீங்களே ரெண்டு பேருக்கும் சரிசமமா பிரிச்சிடுங்க... பின்னாடி எதுவும் பிரச்சனை வந்திடக் கூடாது'ன்னு இப்பவே கொடுத்திடச் சொல்லிட்டான்!'' எனக் கூறி, கட்டபொம்மன் அவரது துணைக்கு வந்தார்.

அந்த வாக்கியத்தின் முடிவில், தன்னொளி நிமிர்ந்து இளம்பரிதியை ஓர் பார்வை பார்த்தாள். வெளியிலிருந்து பார்ப்பவர்கட்கு, தன்னொளி நிமிர்ந்து இளாவின் புறம் கண்ணைத் திருப்பினாள் என்று மட்டுமே பட, ஆனால் இளாவிற்கு மட்டுமே அப்பார்வையில் பொதிந்திருந்தக் கனலும் ஆத்திரமும் புரிந்தது!

''நீங்க நல்ல பேர் வாங்குறதுக்காக, என்னைப் பலிகடா ஆக்கிட்டீங்களே அப்பா! ஆக்கிட்டீங்களே!'' என்று சொல்லத் துடித்த நாவை அடக்கிக் கொண்டு,

பார்வையை வேண்டுமென்றே தனுவிடமிருந்து தாயிடம் திரும்பினான், இளம்பரிதி!

தனுவிற்கு, அவனது அச்செயல் மேலும் ஆத்திரத்தையே கிளப்பியது! 'என்னை என்னன்னு நினைச்சான்? இந்த நகைக்காக பூவோட சண்டை போடுவேன்னு நினைச்சானா? நா என்ன நகைக்கும் பணத்துக்கும் அலையறவளா? மூஞ்சைப் பாரு... மூஞ்சியை!' என்று உள்ளூரக் கறுவிக் கொண்டு நின்றவளை, ஓரக்கண்ணால் அளந்தான் இளம்பரிதி.

இளா மற்றும் தனுவின் உணர்ச்சி ஆயுதங்களை மேலும் பிரவேசிக்க விடாமல், ''பூ... இங்க வா... ஹ.. ஹக்.. குட்டி...'' என மகளைக் கை நீட்டி அழைத்தார், தங்கம்.

கண்ணில் இருந்த கண்ணீர், விழவா வேண்டாமா என்று ஆயத்தப்பட்டிருக்க, ''அம்மா...'' என்று ஓடி வந்தது, அக்குழந்தை! ஆம், ஒன்பதாம் வகுப்பு படித்த போதும், பூங்குழலி ஓர் குழந்தையே! மனதாலும் உடலாலும்!

மகள் வந்ததும் ''அம்மா... தன்னொளி!'' என்று தங்கம் அழைக்க, தனுவின் கையிலிருந்த நகைப் பெட்டியைத் தான் வாங்கிக் கொண்ட இந்திரா, ''போ'' என்று கண்ணால் செய்கை செய்தார்.

தனு அருகே வந்ததும், நடுங்கும் விரல்களால் அவளை இறுகப் பற்றிக் கொண்டவர், ''அஹ... அஹ... அஹக்... அஹக்ம்... கடவுளே, முடியலையே! என்னைய சீக்கிரம் கூட்டிக்கோப்பா! ஹ்ம்ம்... நா சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிச்சிடுறேன்... விடுங்க...'' என்றுவிட்டு, தன்னொளியின் முகம் பார்த்தார்.



''இனிமேல்.. இந்தக் குடும்பம் உன்னுதும்மா! அதிலையும், பூ!! அவ.. ஹ... ஹ... ஹக்... அவளுக்கு ஒன்னுமே தெரியாதும்மா... குழந்தம்மா... இந்தச் சின்ன வயசில... இப்படியொரு.... பொறுப்பை உன்கிட்ட... ம்.. ஹ்ம்ம்.. ஹ்ம்ம்... கொடுக்கிறேன்னு நினைக்காத தனு! ஆனா... எனக்கு வேற... வழியில்லை. என் பொண்ணுக்கு... அம்மாவா இருப்பியாம்மா?'' என்றார் கெஞ்சும் குரலில்.

தனு, இக்கேள்வியை எதிர்பார்க்கவில்லை! ''தாயில்லா பொண்ணும்மா... அவளை நல்லா பார்த்துக்கோ!'' என்று சொல்லுவார் என்று நினைத்தாள்.

அப்படியே இல்லையென்றாலும், ''அவளோட வாழ்க்கை உன்னோட பொறுப்பு!'' எனக் கூறுவார் என்றெண்ணினாள். ஆனால், அவரோ ''அம்மாவா இருப்பியா?'' என்று கேட்டதும், அப்படியே உறைந்து விட்டாள் தன்னொளி!

உள்ளுணர்வின் உந்துதலால், தனுவின் தலை தானாக பூவின் பக்கம் திரும்ப, விம்மலும் விக்கலுமாய் ''அம்மா...'' என்று கதறிக் கொண்டு, தாயின் மடியை நனைத்துக் கொண்டிருந்த அச்சிறு பெண் மீது, தனுவிற்கு அந்த நிமிடமே ஓர் பாசம் உண்டாகிப் போனது!

இவ்வளவு நேரமும், அவள் பூங்குழலியைக் கூர்ந்து கவனித்தாளில்லை! கணவனின் தங்கை, தாயைக் கூடிய சீக்கிரம் இழக்கப் போகிறவள் என்ற நிலையிலேயே, அவளைப் பார்த்திருந்தவளுக்கு, இப்போதையபூவின் தோற்றம் மனதைப் பிசைந்தது!

குறிப்பாகச் சொல்லப் போனால், ''அம்மாவா இருப்பியா?'' என்ற மாமியாரின் வார்த்தைக்குப் பின்னர், அவளது கண்களில் தென்பட்ட ஆழ்ந்த சோகமும்,

மெலிந்த தேகமும், ஏக்கம் படிந்த முகமும், சோகமே உருவாய் மருகி நின்ற நிலையும் கண்ணை மட்டுமில்லாமல் கருத்தையும் உலுக்கிப் போட,

"எல்லாருக்கும், கல்யாணமாகி... குறைஞ்சது பத்து மாசம் கழிச்சுத் தான் அம்மாவாகிற பாக்கியம் கிடைக்கும். எனக்கு, கல்யாணம் முடிஞ்சு பத்து நிமிஷத்திலேயே கிடைச்சிடுச்சு! அவளை நான் நல்லபடியா பார்த்துக்கிறேன்... அத்தை! யாராலையும் அம்மாவோட இடத்தை நிரப்ப முடியாது... ஆனா... அந்த ஏக்கம் அவளோட வாழ்க்கையைப் பாதிக்காம நான் பார்த்துக்கிறேன், அத்தை!'' என்றாள் தனு, உறுதியும் உருக்கமும் மேலோங்கிய குரலில்.

அதற்கு வார்த்தைகளைப் பதிலாக்காமல், மருமகளின் கைகளை இறுகப் பற்றி, உணர்ச்சிகளின் கலவையைப் பதிலாக்கினார், தங்கம்!

அங்கே, மீண்டும் ஓர் அமைதி நிலவ, அதில் பொதிந்திருந்த உணர்ச்சியின் பெயரைத் தான் பகுத்தறிய முடியவில்லை. ஆனால், அதில் நிம்மதி என்ற உணர்வின் சிறு துளிகள் நிச்சயமாய் கலந்திருந்தன!

ரம்மியம் என்றும் சொல்ல முடியாமல் வருத்தம் என்றும் முத்திரையிட முடியாமல், தவித்து நின்ற அந்த நேரத்தை, தன் வார்த்தைகளால் பூர்த்தி செய்தாள் தன்னாளி.

"பூ... இங்க வாடா! ஏற்கனவே அத்தை அழறாங்க... நீயும் அழுதா எப்படி? அதான்... பூவைச் சின்னப் பொண்ணுன்னு சொல்றாங்க... வா... வா.. வந்து, அம்மாவோட கண்ணைத் துடைச்சு விட்டுட்டு...'' அண்ணி என்னம்மா என்னைப் பார்த்துக்கிறது? நா



அண்ணியைப் பார்த்துக்கிறேன்''ன்னு சொல்லு!'' என்றாள் பூவை நோக்கித் தன் கரங்களை நீட்டி.

அழுகையும் சிரிப்புமாய் பூ வந்து, தன்னொளியை அணைத்துக் கொள்ள, தன்னை விடவும் பெரிய மனுஷியாய் மகளை உணர்ந்தார் இந்திரா!

முகத்தில் பெருமிதம் பொங்க, மகளையும், மகளுக்கு மகளாகிப் போன மகளது நாத்தனாரையும் பார்த்திருந்த வரை, தங்கத்தின் அதீத இருமல் நிகழ் உலகிற்கு மீட்டு வந்தது!

"என்னாச்சு... என்னாச்சு...'' என்று அனைவரும் பதற,

"ஹாஸ்பிடல் போய்டலாமா?'' என்று முன்னே வந்தார் இந்திரா.

"இல்ல... அஹ... அஹா... அஹக்... வேணாம்...'' என்று தங்கம் மறுத்தபோதும், அவரது உடலசைவுகள் மருத்துரின் தேவையை உணர்த்தின.

"ஹாஸ்பிடல் போய்டலாம்... அவங்க ரொம்ப சிரமப் படுறாங்க!'' என்ற இந்திராவே, பின்னே வந்த அவரது சக்கர நாற்காலியை நகர்த்தவும்,

"தாலி மட்டும் தானே கட்டியிருக்கு... இன்னும் நிறைய சடங்கு இருக்கேமா... முக்கியமா அம்மி மிதிச்சு, மெட்டியாவது மாட்டிடணும்!'' என்று அர்ச்சகர் வலியுறுத்தினார்.

இளம்பரிதியும் கட்டபொம்மனும் சற்று தயங்கி விட்டு, இந்திராவை ஓர் சங்கடப் பார்வை பார்த்தனர்.

"என்ன தம்பி யோசிக்கிறீங்க? கிளம்புங்க!'' என்று உந்திய இந்திரா, இளாவின் பார்வை தனுவிடம் செல்லவும் "என்ன தனு பார்த்திட்டு நிக்கிறே? வா... வந்து

அத்தையை மெதுவா தள்ளிக் கூட்டிட்டு வா... நா அம்புலன்ஸ்ல போய் அவங்களை ஏத்த ஏற்பாடு பண்றேன்'' என்று மகளை விரட்டினார்.

கல்யாணம் அவசரக் கோலமாய் நடந்து விட்டது சரி... ஆனால் அதுவும் முழுமையாய் முடியவில்லையே என்ற வருத்தம் இருந்தபோதும், அதை வெளிக்காட்டாமல் மாமியாரின் சக்கரநாற்காலியை மறுபேச்சின்றி, தள்ளிச் சென்றாள் தன்னொளி.

''நீ... விடு தனு! நா தள்றேன்...'' என்று வந்த இளம்பரிதியை நிமிர்ந்து கூடப் பாரக்காமல், அவள் நடக்க, அதைக் கவனித்து இந்திரா, ''தம்பி... நீங்க ஆம்புலன்ஸ் காரங்க வெளிய தான் இருக்காங்களான்னு பாருங்க... நா இந்தச் சாமானை எல்லாம் எடுத்திட்டு வரேன்'' என்று அவனை வெளியே அனுப்பி வைத்தார்.

தான் எடுத்து வந்த பொருட்கள், இளாவின் வீட்டார் கொண்டு வந்த பொருட்கள் என்று தனுவின் தோழியரது துணையுடன் சேகரித்தவர், ''இன்னைக்கு... சாப்பாட்டுக்கு அரேன்ஜ் பண்ண முடியுமான்னு தெரியலைம்மா... தனுவோட வீட்டு நிலைமை சரியானதும், உங்க எல்லாருக்கும் விருந்துக்கு ஏற்பாடு பண்றேன். மன்னிச்சுக்கோங்கம்மா!'' என்றார் அப்பெண்களிடம்.

''ஹய்யோ! என்ன ஆன்ட்டி இது? நாங்களும் உங்க பொண்ணு வயசு தான்... அவளுக்கு இருக்க மெச்சூரிட்டில பாதியாவது எங்களுக்கு இருக்காதா? இந்த அல்ப விஷயத்தைப் பத்திக் கவலைப்படாம, தனுவோட அத்தையைப் போய்ப் பாருங்க...'' என்ற சம்யுக்தா,

''நாங்க இப்படியே ஹாஸ்டல் கிளம்பட்டுமா ஆன்ட்டி... இல்ல ஹாஸ்பிடல் வரவா'' என்றாள் பொறுப்பாக.



''இல்லம்மா... நாங்க பார்த்துக்கிறோம். உங்களை இப்படிச் சாப்பாடு கூடப் போடாம அனுப்புறோமேன்னு தான் வருத்தமா இருக்கு...'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

பூவிற்குத் துணையாக நடந்து சென்ற அருள்மொழி ''அம்மா... அத்தான் உங்களைக் கூப்பிடுறாங்க...'' என்று வந்து விட்டாள்.

''சரிம்மா வரேன்!'' என்று வெளியே விரைந்தவர், தான் வந்த வண்டியில் ஏறப் போகவும்,

''அத்தை... நீங்க ஆம்புலன்ஸ்ல ஏறிக்கிறீங்களா? தனுக்கு... முதல் தடவை இல்லையா... அதான்...'' என்று இழுத்தான் இளம்பரிதி.

மறு வார்த்தையின்றி, ஆம்புலன்ஸில் ஏறியவரிடம் ''சம்யு எல்லாம்... எங்கம்மா?'' என்றாள் தன்னொளி.

''அவங்க ஹாஸ்டல் போறதா சொல்லிட்டாங்க தனு... நீ போய்... அந்தக் கார்ல ஏறு... சீக்கிரம் கிளம்பணும்'' என்று கீழே இறக்கி விட்டார் இந்திரா.

கொஞ்சம் சுணங்கித் தான் போனது தனுவின் முகம்! தனக்கென்று வந்த தோழிகளை, அம்போவென்று விட்டு வந்தது போல் மனம் சோர்ந்து போனது! என்னதான், உடம்பு முடியாத மாமியாருக்காக என்றாலும், இவ்வளவு நாள் பழகிய தோழிகளை, இப்போது தான் பார்த்த மாமியாருக்காகத் தூக்கி எறிந்தது போல் உணர்ந்தாள், தன்னொளி!

ஆனால், அந்த சூழ்நிலையில், மாமியாரை விட்டும் செல்ல முடியாது என்ற நிதர்சனம் புரிய, தன்னொளி வண்டியில் ஏறி அமரவும், முன்னே சென்ற ஆம்புலன்ஸை பின்பற்றியது அவர்களது வண்டி.

அடையாரில் உள்ள தனியார் மருத்துவமனை என்பதால், விரைவிலேயே அங்கே சென்று விட்டனர் அனைவரும்.

தங்கம் அவசரச் சிகிச்சைப் பிரிவிற்குள் இட்டுச் செல்லப்பட, அனைவரும் ஓர் பதட்டத்துடனே வெளியே காத்திருந்தனர்.

''ஷீ இஸ் ஸ்டேபிள்!'' என்ற வார்த்தையை உதிர்க்க மருத்துவர்கள் எடுத்துக்கொண்ட இரண்டு மணி நேரமும், தனுவிற்கு முள் மேல் நிற்பது போலிருந்தது.

அவரது உயிருக்கு எந்த ஆபத்தும் நிகழ்ந்து விடக் கூடாது என்ற வேண்டுதல் ஒரு பக்கமென்றால், திருமணம் முடிந்த அன்றே அசம்பாவிதமாய் ஏதும் நடந்து விடக் கூடாதே என்ற பதைப்பு ஒரு புறம் அவளை உலுக்கியது!

ஏனோ, அன்று அவரது மரணம் நிகழ்ந்துவிடின், ''அவசரமாய் நடந்த இக்கல்யாணத்தால் தான்... அதைவிடவும் வந்த மருமகளால் தான் தங்கத்தின் உயிர் பிரிந்துவிட்டது!'' என்று ஊர் பேசுமே என்று மறுகிப் போனாள் தன்னொளி. ஊர் பேசுவது இருக்கட்டும், பிற்காலத்தில் கணவனோ... அவனது வீட்டாரோ ஒரு வார்த்தை இப்படிக் கூறிவிட்டால், தன்னால் அங்கே இருக்க முடியுமா என்ற கேள்வி வேறு, நெஞ்சைப் போட்டுப் பிசைந்தது!

கிட்டத்தட்ட இரண்டு... இரண்டரை மணி நேரமாய் நிகழ்ந்த இந்த மனப்போராட்டத்தின் பின்னே, அவள் விட்ட நிம்மதிப் பெருமூச்சின் முடிவில் ''தனு... ஏதாவது சாப்பிடுறியா?'' என்று வந்து நின்றான் இளம்பரிதி.

அதுவரையில், அவன் எங்கே இருந்தான் என்பதே தனுவிற்குத் தெரியாது! சட்டென அவனது குரலில்,



திகைத்துத் திரும்பியவள், தன் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த அவனிடமிருந்து பார்வையை விலக்கி, ''இல்ல... வேணாம்.. பசிக்கலை...'' என்றாள் முணுமுணுப்பாக.

''கொஞ்சமாவது சாப்பிடு தனு! ப்ளீஸ்! என் மேல இருக்க கோபத்தை... சாப்பாட்டு மேல காட்டாத!'' என அவன் கூறிவிட,

''உங்க மேல எனக்குக் கோபமா? இது என்ன புது கதை? எனக்கு யாரு மேலேயும் கோபமில்லை.. எனக்குச் சாப்பாடு வேணாம்...'' என்று வேகமாய் வார்த்தைகளைச் சுழல விட்டாள், தன்னொளி.

''ப்ளீஸ்... வா...'' என்று இளம்பரிதி ஆரம்பிக்கும் போதே,

''அண்ணி... சாப்பிட வரீங்களா? எனக்கும் அருள் அக்காவுக்கும் பசிக்குது.. கேண்டீன்ல ஏதாவது சாப்பிட்டு வருவோம்...'' என்று வந்து நின்றாள் பூங்குழலி.

''ம்ம்ம்'' எனக் கூறி, தங்கையுடன் நடந்த மனைவியைப் பார்க்க, இளாவிற்கு லேசான கோபம் கூட வந்தது.

ஆனால், அக்கோபத்தை வெளிக்காட்ட விடாமல் ''இளா... டாக்டர் கூப்பிடுறாருப்பா...'' என்ற தந்தையின் குரல் அவனை இழுத்தது.

நாத்தனார் மற்றும் தங்கையுடன் மருத்துவமனை உணவகத்திற்குச் சென்று விட்ட போதும், அவர்களுக்குத் தேவையானதைக் காசாளரிடம் கூறத் தொடங்கியதும் தான், தன்னிடம் பணமில்லை என்ற விஷயமே அவளுக்கு உரைத்தது.

ஓர் 'சாரி'யை உதிர்த்துவிட்டு, ''அருள்.. நீ பூவோட இங்கேயே இரு... நா அம்மாகிட்ட போய் பர்ஸ்

வாங்கிட்டு வந்துடுறேன். அவசரமா வந்ததில, என்னோட ஹாண்ட் பேக்கை ஹாஸ்டல்லேயே விட்டுட்டு வந்துட்டேன்...'' என்று விரைந்தாள் தன்னொளி.

அங்கே சென்றால், இந்திராவைக் காணவில்லை. கட்டபொம்மன் ஒரு நாற்காலியிலும், இளம்பரிதி மற்றொன்றிலும் சரிந்து அமர்ந்திருக்க, தன்னொளி தயங்கி நின்றாள்.

சற்று முன்னர் முறைத்துக் கொண்டு வந்த கணவனிடமும் கேட்க முடியாமல், சரியாக பேசியே இராத மாமனாரிடமும் போய் நிற்க முடியாமல், அவள் விழித்துக் கொண்டு நின்ற நிமிடங்கள்... ஒன்றல்ல... இரண்டல்ல... பத்து நிமிடங்கள்!

இவளது பொறுமைக்கெல்லாம் அருளின் பசி காத்திருக்குமா என்ன? பதினோராவது நிமிடம், தன்னொளியின் கைப்பேசி கிணுகிணுத்தது!

''அக்கா... என்னக்கா பண்றே? சீக்கிரம் வாயேன்!'' என அவள் எரிச்சல் ராகமிழுக்கவும்,

இளம்பரிதி தன்னொளியின் புறம் பார்வையைத் திருப்பவும் சரியாய் இருந்தது.

''வரேன்டி... இரு!'' என்று முணுமுணுத்துவிட்டு நிமிர்ந்த தனு, ''அம்மா எங்க?'' என்றாள் மெல்ல.

''அத்தை... அம்மாவை ஸ்கேன்னுக்குக் கூட்டிட்டுப் போயிருக்காங்க! என்ன விஷயம் சொல்லு?'' என்றான் அவன்.

அவன் கேட்டக் கேள்விக்குப் பதில் சொல்லாமல், ''எவ்வளவு நேரமாகும்? எப்ப வருவாங்க?'' என்று அவள் மீண்டும் கேட்க,



''தெரியல... ஒரு மணி நேரம் கூட ஆகும்... என்ன விஷயம்ன்னு சொல்லு...'' என்றான் அவன் மீண்டும்.

''ஹோ! ஒரு மணி நேரமா? அம்மாவோட திங்க்ஸ் எல்லாம் எங்க இருக்கு?'' என அப்போதும், அவள் விஷயத்தைச் சொல்லாமல், வேறு கேள்வி கேட்கவும்,

''அப்போ... என்கிட்டே என்ன விஷயம்ன்னு சொல்ல மாட்டே?'' என்றபோது, அவனது குரலில் அப்பட்டமாய் தென்பட்டது கோபம் என்ற உணர்வு மட்டுமே!

எல்லா மனைவிகளையும் போல் கணவனின் கோபத்திற்குக் கட்டுப்படாமல், ''ஆமா... சொல்ல மாட்டேன்!'' என்று தெனாவெட்டாய் வந்தது பதில்.

''கொழுப்பு!'' என்று இளாவும் வாய் விட்டே, தனது கோபத்தை உதிர்க்க,

''கொழுப்பா? எனக்கா? என்ன கொழுப்பா?'' என்று எகிறிக் கொண்டு நின்றாள் தன்னொளி.

அந்த அவசரக் கல்யாணத்தின் காரண கர்த்தா அவனே... அவன் மட்டுமே என்ற லூசுத்தனமான எண்ணத்தின் விளைவால் உண்டான கோபம் அது! அதற்குத் தூபம் போடுவது போல், சில பல நிகழ்வுகள் நடந்தேற, அவன் என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசியே ஆக வேண்டும் என்ற வீம்பு தனுவிற்குள் முளைத்து நின்றது.

இருவரும், இரு வேறு கோபத்தின் பிடியில் சுழன்றிருக்க, தனுவின் கைப்பேசி மீண்டும் கிணுகிணுத்தது!

''இவ ஒருத்தி!'' என்ற முனங்கலோடு அழைப்பை எடுத்தவள்,

''கொஞ்சம் நேரம் இருடி... அம்மா ஸ்கேன் ரூம்க்குப் போயிருக்காங்க... வந்ததும் பணத்தை வாங்கிட்டு

வரேன்!'' என்று வேகமாய் சொல்லி முடித்ததும் தான், தான் இளாவின் முன்னே நின்றிருக்கிறோம் என்பதே தனுவிற்குப் புரிந்தது!

ஓர் சங்கடப்பார்வையை அவனை நோக்கி வீசியவனைப் பார்வையால் கூறு போட்டான் அவன்.

இரண்டடி தள்ளி நின்றவன், அவள் அருகே வந்து, தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்த பர்சை அவளிடம் திணித்து, ''இதுக்கு இவ்வளவு யோசிச்சு இருக்கே!'' என்றான் மட்டுப்படாத கோபத்துடன்.

அதற்குத் தன்னொளி மறுத்துப் பேசத் தொடங்கவும், ''ஷ்ஷ்!'' என்று அவள் வாய் மேல் விரல் வைத்து அடக்கினான் கணவன். கூடவே ''சும்மா... என்னை எதிர்த்துப் பேசியே ஆகணும்ன்னு எந்த சட்டமுமில்ல... போ... போய் முதல்ல சாப்பிடுங்க!'' என்றான், ஓர் மாதிரிக் குரலில்.

அவனது முந்தைய கோபக் குரலுக்கும், இப்போதைய குரலுக்கும் ஏகப்பட்ட வித்தியாசம்! ஏனோ, கோபக் குரலுக்குத் திமிறத் தோன்றிய தனுவிற்கு, இக்குரலுக்கு அடிபணியத் தோன்றியது!

மெல்ல அந்த இடத்தை விட்டு நகர்ந்தவள் (அவனது பர்சுடன் தான்) ஐந்தடி சென்றதும், மெல்ல தலை திருப்பி அவனைப் பார்த்தாள்.

கைகளை மார்பிற்குக் குறுக்கே கட்டிக் கொண்டு, அவளையே பார்த்திருந்தான் அவன்! அவனது கண்களில் தென்பட்ட வலி மட்டுமில்லையெனில், தன்னொளி அதிலேயே மயங்கிப் போயிருப்பாள்! அவன் கண்களில் தெரிந்த வலி, அவர்களது சூழலை எடுத்துரைக்க, உணவகம் நோக்கி விரைந்தாள் அவள்!



உணவகத்திற்குள் செல்லும்போதும் சரி, உணவு வாங்கும் போதும் சரி, அதை உண்ணும் போதும் சரி, ''பாவம்... திருமணம் முடிந்த இன்றாவது அவனுக்கு நிம்மதியைக் கொடு, கடவுளே!'' என்று வேண்டிக் கொண்டே இருந்தாள், ஓர் அன்புள்ள மனையாளின் குணத்துடன்.

ஆனால், என்ன வேண்டி என்ன பயன்? இறைவன் குறித்த நாளை, மானுடன் மாற்ற முடியுமா என்ன? அவனிட்ட ''பிறப்பு - இறப்பு'' கணக்கு, நாழிகை தவறாமல், நடந்து கொண்டே அல்லவோ இருக்கும்! தப்பாத அக்கணக்கிற்கு உதாரணமாய், தங்கத்தின் உயிர், அன்றிரவு ஏழு மணிக்குப் பிரிந்தது!

## 8

தாயை இழந்த சோகத்தை, பூ அழுதே க[illegible]ரக்க, தாரத்தின் இழப்பைக் கட்டபொம்மன் வெறித்த பார்வையும் களையிழந்த முகமுமாய் வெளியிட, தங்கத்தின் மைந்தனோ இரும்பு போன்ற முகத்துடனும் யாருடனும் துக்கத்தைப் பகிராத இறுக்கத்துடனும் வளைய வந்தான்.

''ஒரு மூச்சு அழுதா... நெஞ்சு பாரம் கொஞ்சம் குறையும் தம்பி! அழுதுங்க!'' என்று இந்திரா, கூடச் சொல்லிப் பார்த்தார்!

ம்ஹூம்! அவன் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வரவில்லை!

மாறாக, நெஞ்சு முழுதும் கோபம்! கடவுள் மேல் கோபம்! தன்னைத் தங்கத்திற்கு மகனாக்கியதற்கு ஓர்

கோபமென்றால், அக்கள்ளம் கபடமில்லா தாயைச் சீக்கிரம் கூட்டிக் கொண்டதற்கு ஒரு கோபம்!

உள்ளக்குமுறலையும், மன வேதனையையும் வெளிக் காட்டாமல் வளைய வந்தபோதும், தந்தையையும் தங்கையையும் தேற்றவும் அவன் மறக்கவில்லை!

தங்கத்தின் மரணம், இளம்பரிதியின் குடும்பத்தை எந்தளவிற்குப் பாதித்ததோ, அதே அளவிற்கு மற்றொரு ஜீவனையும் பாதித்தது! அந்த ஜீவன் - தன்னொளி!

தான் பயந்தது போலவே நிகழ்ந்து விட்டதே என்ற பயம் மனதை முழுதையும் ஆக்கிரமிக்க, தங்கத்தின் கடைசி காரியத்திற்கு வந்திருந்த உறவுகள் என்ன பேசப் போகிறார்களோ என்று கலங்கிப் போயிருந்தாள், அவள்!

அவளது பயத்தை உறுதி செய்வது போல் ''நாள் பார்க்காம... நட்சத்திரம் பார்க்காம இப்படியா எடுத்தோம் கவிழ்த்தோம்னு கல்யாணம் பண்றது? என்ன நேரத்தில... இந்தப் பொண்ணு மருமகளா வந்துச்சோ... இன்னும் ஒரு மாசம் இருந்திருக்க வேண்டிய தங்கம், ஒரே நாளில பொட்டுன்னு போய்ட்டா!'' என்று ஓர் பெண்மணி பேச,

வந்தவர்களுக்குக் கொடுக்கவென காப்பி கலந்து கொண்டு வந்த தன்னொளி, அப்படியே அடுக்களை உள்ளேயே உறைந்து நின்று விட்டாள்!

''ஹய்யோ! பயந்தது போலவே நடந்துடுச்சே! ராசி... நாள்... நட்சத்திரம்ன்னு வார்த்தையாலேயே கொன்னுடு வாங்களே!'' என்று தொண்டைக்குழி அடைத்துப் போனது!

மகளிடம் காபியைக் கலந்து கொடுத்து, ''நீதான் தனு... இந்த வீட்டோட பிரதிநிதி! நீ தான் எல்லார்க்



கிட்டையும் கொண்டு போய்க் கொடுக்கணும்... பேச ணும்... கிளம்பறவங்களைப் பதினாறாவது நாள் காரியத் துக்கு வாங்கன்னு சொல்லணும். அம்மாவே எல்லாத் துக்கும் போக முடியாது! அப்படிப் போனா... என்னடா இந்தப் பொண்ணு வெளிய வந்து துக்கம் கூட விசாரிக்க மாட்டேங்குது... அவங்க அம்மாவே வராங்களேன்னு, மாப்பிள்ளை சைடு ஆளுங்க தப்பாப் பேசுவாங்க. போ... போய்... எல்லாருக்கும் இந்தக் காபியைக் கொடுத்திட்டு, அவங்களோட கொஞ்ச நேரம் உட்கார்ந்திரு!'' என்று அனுப்பி வைத்த இந்திராவின் காதிலும், அவர்கள் பேசிய வார்த்தைகள் விழுந்தன.

''கனிந்த மரம் கல்லடி படும்!'' என்று எண்ணம் தான் இந்திராவின் மனதில் முதலில் உதித்தது!

மருத்துவர் குறித்த நாளே இரண்டு நாளோ... மூன்று நாளோ எனும்போது, ஒரு மாதம் உயிரோடு இருந்திருப் பார் என்று பேசும் இவர்களையெல்லாம் என்ன தான் செய்வது என்று ஆற்றாமையே மேலிட, அவர்களது பேச்சை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு, மற்ற வேலைகளைப் பார்க்கத் துவங்கியவர், வாயிலிலேயே உறைந்து நிற்கும் மகளைக் கண்டு திகைத்தார்!

''சின்னப் பெண் அல்லவா? தனக்கிருக்கும் சகிப்புத் தன்மையை அவளிடம் எப்படி எதிர்பார்க்க முடியும்?'' என்ற எண்ணம் தோன்ற மகளை நோக்கி நடந்தவரின் மனதில் மற்றொன்றும் தோன்றியது.

ஜகன் மறைந்த வேளையில், சொந்தங்களின் நக்கல் பேச்சுக்களால் குத்துப்பட்டு, குத்துப்பட்டு, மரத்துப் போயிருந்த தனது நெஞ்சத்திற்கு, இந்தப் பேச்செல்லாம் சாதாரணமாய் படலாம்... ஆனால்... தனு?! திருமண

வாழ்வே அவளுக்குப் புதிது! சொல்லப் போனால் புத்தம் புது! அப்படியிருக்கையில், இந்த ஏச்சையும் பேச்சையும் எப்படி சகித்துக் கொள்ள முடியும்? என்ற எண்ணம் வலுப் பெற, கண்ணீரின் சாயலுடன் நின்றிருந்த மகள் மீது, இறக்கம் ஊற்றாய் சுரந்தது.

''தனு!'' என்று தோள் தொட்ட தாயின் புறம் வேக மாய் திரும்பிய தன்னொளி,

கையிலிருந்த தட்டை அருகிலிருந்த மேஜை மீது வைத்துவிட்டு, தாயைக் கட்டிப் பிடித்து அழத் தொடங்கி விட்டார்.

''ஷ்... தனு! அழக்கூடாதுடா... இதென்ன சின்னப் பிள்ள மாதிரி... தனுக்குட்டி... வேண்டாம்டா... அம்மா சொல்றேன் இல்ல...'' என்று அவர் பேசிய எதுவுமே தனுவின் மனதில் பதியவே இல்லை.

''கல்யாணம்'' என்ற விஷயம் தொடங்கியது முதல், மனதில் நடக்கத் தொடங்கிய போராட்டத்தை, அழுகை யால் கரைத்து விடுபவள் போல், அவள் தேம்பித் தேம்பி அழ, இந்திரா செய்வதறியாமல் தவித்துப் போனார்.

பெண்ணின் முடி கோதி, முதுகு தடவி, ''வேணாம்... குட்டிம்மா!'' என்று ஆறுதல் வார்த்தைக் கூறி, அவளை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தவருக்குக் கை கொடுக்கவென, கட்டபொம்மன் வந்து சேர்ந்தார்.

வெளியே இருந்தவர்கட்குக் குடிக்கக் கொடுக்குமாறு மருமகளிடம் சொல்ல வந்தவர், அவள் அழுது கொண் டிருப்பதைக் கண்டதும் பதறிப் போனார்.

''என்னம்மா? என்னாச்சு?'' என தனது வயதுக்கும் மீறி, அவர் பதட்டப்பட,



''ஒண்ணுமில்லை... அண்ணே!'' என்று இந்திரா மழுப்பத் தொடங்கும் முன்னே,

''அஹ... அஹ... ம்.. ஹ்ம்ம்... என்...ன ஒண்ணு மில்லை... ஹக்.. ஹிக்... ஹிக்... அதெல்லாம் இருக்கு...'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு, கோல் மூட்டத் தயாரானாள் தனு.

''சும்மா இரு, தனு! இதையெல்லாம் பெரிய விஷய மாக்கக் கூடாது... இந்தக் காதில வாங்கி... அந்தக் காதில விட்டுட்டுப் போயிட்டே இருக்கணும். விடு!'' என்று இந் திரா கண்டிக்கவும், தனுவின் முகத்தில் வேகம் குறைந்து தயக்கம் குடியேறியது. கூடவே, ஒரு கோபமும்!

அதைச் சரியாய் படித்த கட்டபொம்மன், ''மனசுக் குள்ளே அடக்கி வச்சிருந்தா, இன்னைக்கு இல்லாட்டியும் இன்னொரு நாள் வெளிய வந்திடும். அப்படி வெளிய வரவரைக்கும், மனசில போட்டு அழுத்திட்டே இருக் கிறதைவிட, இப்பவே சொல்லிடறது நல்லதும்மா தங்கச்சி!'' என்று இந்திராவிடம் கூறிவிட்டு,

''என்ன நடந்ததுன்னு மாமாகிட்ட சொல்லும்மா!'' என்று தனுவை உந்தினர்.

தனு அப்போதும் தாயின் முகம் பார்க்கவும், ''சொல் லும்மா...'' என்றார் அவர் மீண்டும்.

சிறு குரலில், தன்னொளி நடந்ததைச் சொல்லி முடிக் கவும், ''இவங்கெல்லாம் துக்கம் விசாரிக்க வந்தாங்களா? இல்ல துக்கத்தை அதிகமாக்க வந்தாங்களா? சை!'' என்று ஏகக் கோபம் வந்து அப்பெரியவருக்கு.

''இரு... என்னன்னு கேட்கிறேன்...'' என்று அவர் விடு விடுவென நடக்கவும்,

''ஐயோ... இதுக்குத் தான் அண்ணே சொன்னேன்... விடுங்கண்ணே.... அவங்கப் பேசினா பேசிட்டுப் போகட்டும்... நம்ம மேலயா வந்து ஒட்டிக்குது...''

''அப்படியில்லைம்மா... ஏற்கனவே ஒரு நல்ல காரியம் நடந்தன்னிக்கு ஒரு துக்கம் நடந்து போச்சேன்னு தனு சங்கடப்பட்டுக்கிட்டு இருக்கும். இதில் இவங்க வேற...'' என்றவர், இந்திராவின் கெஞ்சலைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

இந்த விஷயத்தில், மாமனார் தனக்காக பேசப் போகிறார் என்று தனுவிற்கு ஏகப் பெருமை! அம்மா ஏன் தடுக்கிறார் என்று இந்திரா மீது சிறு கோபம் கூட வந்தது எனலாம்! சிறு பெண் அல்லவா... தாயின் பக்குவம் அவளிடம் இல்லை!

''நல்லா வேணும்.. என்னைப் பேசினீங்க இல்ல... இப்ப எங்க மாமா வந்து நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி கேள்வி கேட்பார்... அப்ப என்ன பண்றீங்கன்னு பார்க்கலாம்!'' என்று மனதினுள் கறுவிக் கொண்டு நின்றது, மனிதர்களின் நாக்கைப் பற்றி அறியாத சிறு குழந்தை!

அவள் எண்ணியது போல, கட்டபொம்மன் கேள்வி கேட்டார்.

''என்னமோ... தன்னொளி இந்த வீட்டுக்கு வந்ததால தான் தங்கம் இறந்த மாதிரி பேசினீங்களாமே... உங்களுக்கெல்லாம் மனசாட்சியே கிடையாதா? தங்கம் என்ன நிலைமையில இருந்தான்னு உங்களுக்குத் தெரியாது? இந்தக் கல்யாணம் நடந்தாலும்... நடக்காம இருந்தாலும் அவளோட ஆயுசு முடிஞ்சிருக்கும். ஆனா... இந்தக் கல்யாணம் நடந்ததால அவ சந்தோஷமா... சொல்லப் போனா நிறைஞ்ச மனசோட போனா! அதுக்குக்



காரணமான அந்தப் பொண்ணை.. நீங்க கொண்டாட வேண்டாம்.. ஆனா... புரளி பேசாமலாவது இருக்கலாம் இல்லையா?'' என்று அவர் பொரிந்ததும்,

''நல்லா வேணும்! நல்லா வேணும்!'' என்று தனு, பல்லைக் கடித்துக் கொண்டு, கண்ணை உருட்டிக் கொண்டிருக்க,

''போச்சு! இனி... என்னென்னெல்லாம் பேசப் போறாங்களோ...'' என்று தலையில் கை வைத்தார், இந்திரா.

''சும்மா இருங்கம்மா... எல்லாத்துக்கும் பயந்துக்கிட்டு....'' எனத் தன்னொளி அடக்க,

''இதுக்குப் பேரு... பயமில்லை தனு! சாக்கடைன்னு தெரிஞ்சே நாம ஏன் கல் எறியணும்ங்கிற எண்ணம்... கல் எறிய... கல் எறிய... நம்ம மேல தான் நாத்தம் தெளிக்கும்!'' என்று இந்திரா கூறியதுபோலவே, சாக்கடை நாத்தம் அள்ளித் தெளிக்கப்பட்டது!

''அடேங்கப்பா! கூட்டாளி... பங்காளியா பழகின எங்களைவிட, நேத்து வந்த மருமக உனக்கு உசத்தியா போய்ட்டா...''

''பொண்டாட்டி போய்ட்டா இல்ல... இனிமேல் மருமக கிட்ட தான் கஞ்சி வாங்கிக் குடிக்கணும்... அதுக்கு... இப்பவே அடி போட்டு வச்சுக்கிறாரு போல....''

''ஆமா... பையனை அண்டித் தான் இனி வாழ்ந்தாகணும்... வயசுக்கு வராத ஒரு பொண்ணு வேற இருக்கில்ல... அதோட நல்லது கெட்டது எல்லாமே மருமக தான் பார்த்தாகணும்... அதான் ஜால்ரா தட்டுறாரு போல...''

''தங்கம் எவ்வளவு நல்லவ... அவ போயிட்டாளேன்னு துளி வருத்தம் கூட இல்லாம... மருமகளுக்கு சப்போர்ட் பண்ணிக்கிட்டு இருக்கான்...''

''பொண்ணுங்க வந்ததும், புருஷனுக்குத் தான் சொக்குப்பொடி போடுவாங்க... இப்ப எல்லாம்... மாம னாருக்குக் கூடப் போடறாங்க பாரேன்...'' என்று ஆளா ளுக்கு வாய்க்கு வந்ததைப் பேச,

காதுகளை மூடிக் கொண்டாள் தன்னொளி. இதுக்குத் தான் சொன்னேன் என்பது போல் மகளை முறைத்த இந்திரா, ஒன்றும் பேசாது அடுப்பை நோக்கிச் சென்றார். இந்த விஷயத்தில், அவர் ஏதும் பேசப் போனால், மேலும் அசிங்கமய் தான் முடியுமென்று தோன்றிவிட, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றார்.

அவர்கள் பேசியதற்கு மறுபேச்சாய், கட்டபொம்மனும் பேச எத்தனிக்க, இளம்பரிதி அங்கு வந்து சேர்ந்தான்.

''என்னப்பா... என்ன பிரச்சனை? வெளிய வரைக்கும் சத்தம் கேட்குது!'' என்று அவன் வினவ,

நடந்தது முழுதும் அவரவர் கோணத்திலிருந்து, கண் - காது - மூக்கு வைக்கப்பட்டு, அவனிடம் சொல்லப் பட்டது!

கூடவே, ''போதும்பா... போதும்! அல்ப ஆயுசுல போயிட்டாளேங்கிற ஆதங்கத்தில, செஞ்சில இருந்து அடிச்சுப் பிடிச்சு இங்க வந்தா... எங்களுக்கு இந்தப் பேச்சு கேட்கணும்ன்னு இருந்திருக்கு!'' என்று அங்கலாய்த்தப் பெண்மணி,

''நாங்க போறோம்!'' என்று நடையைக் கட்டினார்.

அதுவரை பொறுமையாய் அவர்கள் சொல்வதை, எந்தவித உணர்ச்சியுமில்லாது கேட்டிருந்த இளம்பரிதி, தந்தையை வற்புறுத்தி வெளியே அனுப்பிவிட்டு, ''என்ன அத்த இது? நீங்களே இப்படிப் பேசினா எப்படி?



அப்பாவைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா? கோபம் ரொம்ப வரும்... ஆனா... உடனே போய்டும்... அப்பா பேசினதையெல்லாம் மனசில வச்சுக்காதீங்க அத்த!'' என்றான் அவரது கையைப் பிடித்துக் கொண்டு.

''எப்படி மனசில வச்சுக்காம இருக்க முடியும்? எங் களுக்கு மனசாட்சியே இல்லைன்னு சொல்றான்... உங் கப்பன்! என்னைப் பத்தி ஊர்ல கேட்டுப்பாரு...'' என அவர் குரல் உயர்த்திப் பேச,

''உங்களைப் பத்தித் தெரியாதா என்ன? அவர் ஏதோ புரியாம பேசிட்டார்... எனக்காக விடுங்க அத்தே! ப்ளீஸ்! எனக்காக இல்லைன்னாலும்... அம்மாக்காக விடக் கூடாதா? அம்மா இல்லாத எங்களுக்கு... இனிமேல் நீங்க தானே எல்லாம் பார்க்கணும்...''

''பேச்செல்லாம் நல்லாத்தான் பேசுறே... ஆனா... கல் யாணத்தை எங்களுக்குத் தெரியாம பண்ணிக்கிட்டியே...''

''அது அம்மாக்காக பண்ணினது, அத்தே! இப்ப என்ன... இந்தக் காரியமெல்லாம் முடிஞ்சு, எங்க மனசு கொஞ்சம் சமன்பட்டதும், ஊருக்கு வந்து விருந்து வச்சுடுறேன்... நீங்க சொல்லுங்க, என்ன சடங்கெல்லாம் பண்ணனும்... அதையும் பண்ணிடலாம்'' என அவன் பேச,

''ஆமாமா... சடங்கெல்லாம் பண்ணியே ஆகணும்... நாளும் பார்க்கலை... நேரமும் பார்க்கலை... பொண் ணுக்கும் உனக்கும் உகந்து வர நாளான்னு தெரியல... எப்படித் தான் இப்படிப் பண்ணினீங்களோ...'' என அவர் தலையில் அடித்துக் கொள்ளவும்,

''நடந்தது நடந்து போச்சு! இனி... உங்ககிட்ட கலந் துக்கிட்டுப் பண்றோம்... மன்னிச்சிடுங்க அத்தே! உங்க

மகன் மாதிரி நினைச்சு... என்னை மன்னிக்கக் கூடாதா?'' என அவன் தணிந்து போனான்.

அதில் விழுந்தார் அவர். ''என்னப்பா இது? மன்னிப்பு கேட்டுக்கிட்டு! விடுவிடு! உங்கப்பனுக்காக இல்லைன்னாலும், உனக்காகச் செய்றேன்...'' என்றார் அவர் பெருந்தன்மை வழிந்தோடிய குரலில்.

''தேங்க்ஸ் அத்தே!'' என்று அவர் கைபிடித்து நன்றி கூறிய இளம்பரிதி, ''நீங்களும் தான் பெரியம்மா... சாந்தி மதனி நீங்களும்... அத்தாச்சி... சித்தி... எல்லாருமே'' என்றான் அங்கிருந்து பெண்களைப் பார்த்து.

ஒருங்கே அவனிடம் ''சரி'' என்ற பெண்மணிகள்,

''அப்புறம், ஒரு முக்கியமான விஷயம்! உம் பொண்டாட்டிகிட்ட சொல்லி வை... இப்படிக் கோல் சொல்ற வேலையெல்லாம் குடும்பத்துக்கு ஆகாதுன்னு. அவுக ஆத்தா வீட்டுப் பழக்கத்தையெல்லாம் பொறந்த வீட்டிலேயே மூட்டைக் கட்டிட்டு வரச் சொல்லிடு. இங்க அதெல்லாம் ஆகாது!'' என்றார்கள், ஒரே மனதாய்.

இளம்பரிதி பேசாமல் நிற்கவும், ''என்னப்பா பதிலையே காணோம்? புது பொண்டாட்டிகிட்ட எப்படிச் சொல்றதுன்னு யோசனையா இருக்கா?'' என்றார் ஒருவர் நக்கல் சற்றே கூடுதலாய் தெரிந்த குரலில்.

சட்டென தலையை உலுக்கிக் கொண்டு, ''இல்லைங்க பெரியம்மா! சொல்லி வைக்கறேன்... இனிமேல் இது மாதிரி நடக்காது... நான் பார்த்துக்கிறேன்... நீங்க உட்காருங்க!'' என்றுவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் உள்ளே வந்தது முதல், அதுவரை பேசியது அனைத்தையும் சமையலறையிலிருந்து கேட்டிருந்த



தன்னொளிக்கு, மற்ற எதையும் விட, அவனது கடைசி வாக்கியம், அழியா வடுவாய் நெஞ்சில் பதிந்து போனது!

அவனுமே, ''தன் தாயின் மரணத்திற்கு மனையாளின் வருகையே காரணம்'' என்றெண்ணுகிறான் என்ற எண்ணம் மனதில் வலுப்பெற, சுடுதணல் அடுப்பென கொதித்துப் போனாள் தன்னொளி.

அவள் எதெல்லாம் நடக்கக் கூடாது என்றெண்ணி பயந்தாளோ, அதெல்லாம் ஒவ்வொன்றாய் நடப்பது போலிருந்தது அவளுக்கு!

நின்ற இடத்திலேயே, கால்கள் மடிய அமர்ந்த மகளிடம் வந்த இந்திரா ''இது நமக்குத் தேவையா? அம்மா சொன்னா... அதில ஒரு அர்த்தமிருக்கும்ன்னு யோசிச்சுப் பேசாம இருக்கணும்... அதை விட்டுட்டு, தையா தக்கா தையா தக்கான்னு ஆடினா... இப்படித் தான்!'' என்றார் காரமாக.

கண்ணில் வலியுடன், மகள் தாயின் முகம் பார்க்கவும், அதைச் சகிக்க முடியாமல் ''சரி... சரி... எழுந்திரி... முகத்தைக் கழுவிட்டு வந்து, இந்தக் காயை நறுக்கிக் கொடு... நா இந்தக் காபியை பூகிட்டக் கொடுத்து விடுறேன்... இப்ப நீ போய் நின்னா, வேண்டாத சண்டைக்கு வழி காட்டிடுவே!'' என்றார் தாய், நிதர்சனம் புரிந்தவராய்.

''ஆமா... நான் தான் சண்டைக்கு அழையுறேன்... உங்க மாப்பிள்ளை என்னடான்னா என்னமோ நான் தப்பு பண்ணின மாதிரி... இனிமே நடக்காதுங்கிறார்... நீங்க என்னடான்னா தையாதக்கான்னு ஆடுறேன்னு சொல்றீங்க? என்னைப் பார்த்தா என்னவா தெரியுது உங்களுக்கு?'' என்ற தன்னொளியின் முகம், சுடு தண்ணி

யில் போடப்பட்ட தக்காளிப்பழம் போல், சூடேறி தகித்தது!

''உன்னைப் பார்த்தா எனக்குக் கிறுக்கச்சி மாதிரி தெரியுது! தேவையில்லாம வம்பு வளர்க்காம, காயை வந்து நறுக்கு!'' என்று சுட்டுவிரல் நீட்டி மிரட்டிய இந்திராவின் குரலுக்குப் பின்பாட்டாய்,

''தனு, முன்னாடி இருக்க ஜென்ட்ஸ்க்கு ஜூஸாவது காபியாவது கொண்டு வா!'' என்ற இளம்பரிதியின் குரல், வெளியிலிருந்து ஒலித்தது.

''போ... போ... மாப்பிள்ள கேட்கிறார் பாரு... எழுந்திரு!'' என்று இந்திரா கைப்பிடித்து எழுப்ப,

''நா போக மாட்டேன்... போங்க!'' என்று சிறுபிள்ளை போல், முகத்தைத் திருப்பிக் கொண்டாள் தன்னொளி.

''சின்னப்பிள்ளை மாதிரி நடந்துக்கிறதுக்கும் ஒரு அளவிற்கு தனு! எழுந்திரு! இல்லன்னா... சப்புன்னு ஒரு இழுப்பு இழுத்திடுவேன்!'' என்ற இந்திராவின் கடைசி அஸ்திரம் நன்றாக வேலை செய்ய, குளிர்பானத்தைச் சில கோப்பைகளில் ஊற்றி எடுத்துக் கொண்டு, வெளி வராண்டாவிற்குச் சென்றாள் மகள்.

யாரது முகத்தையும் நிமிர்ந்து பாராமல், பானத்தை நீட்டியவளுக்கு, இளம்பரிதியிடம் நீட்டும்போது மட்டும் கைகள் நடுங்கியது!

அவனுமே, தன் முன்னே தட்டை நீட்டிக் கொண்டு நின்ற மனைவியைக் கண்ணால் அளந்துவிட்டு, முடிந்தளவு மெதுவாய் கோப்பையை எடுத்தான்.

அவன் வேண்டுமென்றே காலம் கடத்துவது புரிய, மெல்ல நிமிர்ந்து ஓர் கோபப் பார்வை பார்த்தாள், தன்னொளி.



ஆனால், அக்கோபப் பார்வை, அவனது கண்களைச் சந்தித்த அடுத்த வினாடி, பரிதாபப் பார்வையாய் மாறி, பார்வையைத் தாங்கி நின்ற கண்களுக்குள், கண்ணீர் எனும் மாய நீரை ஊற்றெனப் பெருக்கி விட்டது!

''இவன் முன்னே அழுவதா?'' என்ற தன்மானமும், ''நான் என்ன தப்பு செய்தேன்... அழுவதற்கு?'' என்ற வீம்பும் ஒருங்கே தலை தூக்க, தலையை வேகமாய் சிலுப்பிக் கொண்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள், தனு!

அவளது முகபாவங்கள் ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டிருந்த இளம்பரிதிக்கு, ''ஹய்யோ!'' என்று வந்தது!

''எப்படி இவளைச் சமாதானப்படுத்தப் போகிறோம்?!' என்ற கேள்வியை மலைப்பை உண்டு பண்ண, அங்கிருந்தோரிடம் ''இப்ப வந்துடுறேன்'' என்று விட்டு உள்ளே வந்தவன், மனைவியைத் தேடி அடுக்களைக்குள் சென்றான்.

அவன் வருகையைக் கவனித்துவிட்டு, இந்திரா அங்கிருந்து வெளியேற, தனுவும் இளாவும் தனித்திருந்தனர்.

ஆனால், தனிமை கிடைத்து என்ன புண்ணியம்? தனுவோ கட்டிய கணவனை விடவும் கனியாகப் போகும் காய் மீதே அதீதக் கவனம் செலுத்துபவளாய் காட்சி தர,

''எப்படி ஆரம்பிப்பது?'' என்ற யோசனையிலேயே பல நிமிடங்களைக் கடத்தி நின்ற இளம்பரிதியை, ''இளா... உன் ஆபீஸ்ல இருந்து வந்திருக்காங்க'' என்று யாரோ அழைத்து விட்டனர்.

பாவம், புது மணமகன் அல்லவா! பொண்டாட்டியிடம் மன்னிப்பு கேட்க யோசிக்கவே கூடாது! யோசிக்காமல் காலில் விழுந்து, சரணாகதி அடைந்து விட வேண்டும் என்ற திருமண மந்திரம் அவனுக்குத் தெரியவில்லை!

## 9

அன்றைய தினம் மட்டுமல்ல, அடுத்து வந்த தினங்களிலும் தனு, இளாவிடம் பேசவில்லை! அவனாகப் பேசவந்தாலும், அதற்கும் இடம் கொடுப்பதில்லை!

பதினாறாம் நாள் காரியம் முடியும் வரையிலும், ஆட்கள் வருவதும் போவதுமாய் இருக்க, ''எல்லா காரியமும் முடிந்து, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிய பின்னர், தனுவிடம் பேசிக் கொள்ளலாம்'' என்ற எண்ணத்தில், இளாவும் ஐந்தாறு தடவைகளுக்கு மேல், மனைவியுடன் பேச முயற்சிக்கவில்லை!

பதினாறாம் நாள் காரியமும் முடிய, அன்றைய தினமே இந்திராவும் கிளம்புவதாய் அறிவித்தார்.

கல்லூரி கெடக்கூடாது என்று அருள், முன்னரே திருவண்ணாமலை சென்று விட்டிருந்தாள்.

பெரிய மகளுக்கு உதவியாய் இருந்த இந்திரா, பதினாறாம் நாள் காரியங்கள் முடிந்து, சொந்தங்கள் யாவரும் கிளம்பிய பின்னர் ''நான் இன்னைக்கு ஊருக்குக் கிளம்பலாம்ன்னு இருக்கேன்... அண்ணே! அருளையும்



எத்தனை நாளுக்குத் தான் பக்கத்து வீட்டில பார்த்துக்கச் சொல்றது... அதுவுமில்லாம பேங்க்லேயும் பிரச்சனையாகுது...'' என்றார் கட்டபொம்மனிடம்.

''போன்னு சொல்லவும் மனசு வர மாட்டேங்குது... இருன்னு சொல்லவும் நட்ப்பு ஒத்துழைக்க மாட்டேங்குது!'' என்று மனசிலிருந்ததை, சரியான வார்த்தைகளில் நிரப்பி, வெளியே விட்ட பெரியவர்,

''தங்கம் போன பிறகு, நானும் எத்தனை நாள் உயிரோட இருப்பேன்னு தெரியலை... என் காலத்துக்கு அப்புறம், இந்தப் புள்ளைங்களுக்கு நீ தான் தங்கச்சி துணையா இருக்கணும்!'' என்றார் இந்திராவின் கரங்களைப் பற்றிக் கெண்டு.

''ஒரு துக்கம் நடந்த வீட்டில்... அடுத்தத் துக்கத்தைப் பத்திப் பேசக் கூடாதுண்ணே! அடுத்ததா ஒரு நல்ல காரியம் தான் நடக்கணும்... அது என்னன்னு பாருங்க...'' என்ற இந்திரா,

''இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு, திருவண்ணாமலையில ஒரு சின்ன ரிசப்ஷன் மாதிரி வைக்கலாம்ன்னு பார்க்கிறேன்... ஆனா.. உடனே வைக்கணும்ன்னு இல்லை... மாப்பிள்ளை ஒரளவுக்கு மனசு திடப்படட்டும்.. மெதுவா பார்த்துக்கலாம்'' என்றார் அந்த நல்ல காரியத்திற்கான பிள்ளையார் சுழியை இட்டு.

அவர் பேசியதைக் கேட்டிருந்த இளம்பரிதிக்கு, ''எப்படி இவரால் அனைவரது மனதையும் படிக்க முடிகிறது?'' என்று வியப்பாய் இருந்தது!

''அப்பாவையும் சமாதானம் செய்து, துயரம் நிரம்பிய தன் மனதையும் கவனித்து, மகளுக்கும் ''நீ மாப்பிள்ளையுடன் சந்தோஷமாய் இருப்பது தான் நல்ல காரியம்''

என்ற செய்தியை மறைமுகமாய் வலியுறுத்தி, அப்பப்பா! ஜகஜாலக்கில்லாடி தான்!'' என்றெண்ணினான், மருமகன்.

சுண்டக்காய் போல் வாடிப்போயிருந்த பெண்ணின் முகத்தை மெல்ல நிமிர்த்தி, ''தனு.. இன்னும் நீ சின்னப் பொண்ணில்லை... சந்தர்ப்பச் சூழ்நிலையால, உன் மேல பெரிய பொறுப்பு வந்திருச்சு. அதை நல்லபடியா பண்ணுவேன்னு அம்மா எதிர்பார்க்கிறேன்... என்னடா குட்டி? அம்மா கிளம்பட்டுமா?'' என்றார் இதமாக.

''ம்ம்... ம்ம்'' என்று முனங்கிய மனைவியைப் பார்க்கையில் இளம்பரிதிக்குச் சிரிப்பாக வந்தது!

''அத்தை சொல்ற மாதிரி... இவ ஒரு குட்டி தான்... சைஸ்லேயும் சரி... மூளையிலேயும் சரி...'' என்றெண்ணியவனுக்கு எதிராய்,

''மவனே! இதை மட்டும் வெளிய சொல்லிப் பாரு... அவ்வளவு தான்!!! இப்பயாவது, பேச மட்டும் தான் மாட்டேங்கிறா... இதைச் சொன்னியோ... சோறே கண்ணில காட்ட மாட்டா! நீ சாப்புடுற சாப்பாட்டுக்கு.. ஹோட்டலுக்கும் கொடுத்து அழ முடியாது! மரியாதையா வாயை மூடிட்டு இரு... சொல்லிட்டேன்!'' எனக் குரல் கொடுத்தது மூளை.

மனதையும் மூளையையும் கயிறு கொண்டு கட்டியவன், இந்திராவின் பேச்சில் கவனம் செலுத்தினான்.

சில பல அறிவுரைகளுடன் இந்திரா கிளம்ப, ''நா அத்தையை பஸ் ஏத்தி விட்டுட்டு வந்துடுறேன்'' என்றுவிட்டுக் கிளம்பினான் இளம்பரிதி.

கோயம்பேடு பேருந்து நிலையத்தில், திருவண்ணாமலை செல்லும் பேருந்து நிற்கும் இடத்திற்குச்



சென்றதும், ''என்கிட்டே ஏதோ சொல்றதுக்காக தானே, என்னோட கோயம்பேடு வந்தீங்க. சொல்லுங்க அத்தே என்ன விஷயம்?'' என்றான் மருமகன், நேரடியாக.

இந்திரா தனது பார்வையில் மெச்சுதலைக் காட்டவும், ''ஆனானப்பட்ட தன்னொளியையே அசால்ட்டா ஹேண்டில் பண்றீங்க... உங்களுக்குக் கோயம்பேடு வரது பெரிய விஷயமா என்ன? என்கிட்டே ஏதோ தனியா சொல்லணும்ன்னு தானே.. மறுத்துப் பேசாம என்னோட வந்தீங்க... இதைக் கூடப் புரிஞ்சுக்க முடியாதா என்ன?'' என அய்யன் சிரித்தான்.

கூடச் சேர்ந்து ஓர் புன்னகையை உதிர்த்துவிட்டு, ''இவ்வளவுக்கு யோசிக்கிற நீங்க.. நா பேசப் போற விஷயத்தையும் ஊகிச்சிருப்பீங்களே!'' என்றார் இந்திரா, கொக்கிப் போட்டு.

''ஹ்ம்ம். லேசா... ஆனா... நீங்களே சொல்லிடுங்க!'' என்றவன், அவரது முகம் பார்த்து நின்றான்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''அது.. வந்து தம்பி... தனு...'' என இழுத்தவர்,

அவன் ஒன்றும் பேசாமல், கையைக் கட்டிக் கொண்டு அவரையே பார்த்திருக்கவும், ஓர் முடிவுக்கு வந்தவராய் ''தனு.. இந்த ஜெனரேஷன் பொண்ணு... கல்யாணம்ன்னா இப்படி நடக்கணும்... இவங்களைக் கூப்பிடணும்.. அவங்களைப் கூப்பிடணும்.. இந்த மாதிரி சேலை வாங்கணும்.. நகை வாங்கணும்ன்னு ஏகப்பட்ட ஆசை இருந்திருக்கும். அதெல்லாம்... இல்லாம.. அவ கல்யாணம் நடந்ததால, அவ கொஞ்சம் கோபப்படுறான்னு நினைக்கிறேன்.. அதுவும், இந்தக் கல்யாணத்துக்கு உங்களை மட்டுமே காரணக்கர்த்தாவாக்கி, உங்கிட்ட ரொம்ப வீம்பு பண்றா...

அதையெல்லாம் மனசில வச்சுக்காதீங்க தம்பி! ப்ளீஸ்! அவளை மாதிரி பாசம் காட்டவும் ஆளில்லை... சண்டை போடவும் ஆளில்லை... உங்ககிட்ட உரிமை இருக்கிறதால தான் சண்டை போடறான்னு எனக்குத் தோணுது.. அதனால... கொஞ்ச நாளைக்கு...'' என அவர் முடிக்காமல் இழுக்கவும்,

''நான் பார்த்துக்கிறேன் அத்தை! எங்க அம்மாவோட கடைசி நிமிஷங்களில, அவங்களைச் சந்தோஷமா வச்சுக்கிட்ட ஒரே காரணத்துக்காக... அவ என்ன செஞ்சாலும் நான் பொறுத்துப்பேன்! கவலைப்படாதீங்க! ஐ வில் ஹேண்டில் ஹெர்!'' என்றான். மருமகன், திடமாக.

ஆனால், இந்தத் திடமெல்லாம் இரவு உணவு பரிமாறிய தனுவின் முகத்தில் தெரிந்த ஒதுக்கத்தைப் பார்த்ததும், பஞ்சாய் பறந்து போனது!

எப்படி ஆரம்பிக்கலாம் என்ற யோசனையிலேயே, இரண்டு சப்பாத்திகளைக் காலி செய்தவன், ''நீயும் சாப்பிடு தனு...'' என்றான் ஒரு வழியாக.

தன் முகம் பார்த்து, சாப்பிட அழைத்தவனை, ''நங்'' கென்று மண்டையில் கொட்ட வேண்டும் போல் வந்தது, தனுவிற்கு.

பின்னே, சற்று நேரம் முன்னர் தான், அவளும் பூவும் சாப்பிட்டு முடித்தனர்.

''அண்ணா... சாப்பிட வாண்ணா...'' என்று பூ அழைத்ததற்கு,

''நீயும் அண்ணியும் சாப்பிடுங்கடா... எனக்கு லேப்டாப்ல கொஞ்சம் வேலையிருக்கு...'' என்று கூறியவன், இவன் தானே! இல்லை இவனுக்குப் பினாமியா? என்று எரிச்சலாய் வந்தது தனுவிற்கு.



அவளது பார்வையின் அர்த்தம் புரியாமல், சில வினாடிகள் விழித்தவன், ''ஹய்யோ! சாரி... நீயும் பூவும் சாப்பிட்டீங்க இல்ல.. உன்கிட்ட எப்படிடா பேச்சை ஆரம்பிக்கிறதுன்னு யோசிச்சிட்டே இருந்தேனா... அதில இதை மறந்துட்டேன்...'' என்றான் தலையில் லேசாய் தட்டிக் கொண்டு.

''வழியுது! துடைச்சுக்கோங்க!'' என்ற தனுவிற்கும், சிரிப்பு மெலிதாய் எட்டிப் பார்த்தது!

அந்த நேரத்தில், வெறும் மிளகாய் தூளைக் குலைத்து, சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்ளக் கொடுத்திருந்தால் கூட, இளம்பரிதி உண்டிருப்பானாய் இருக்கும்! மனம், அவ்வளவு லேசாகிப் போனது!

அதே லேசான மனதுடன், ''தனு... அன்னைக்கு நான்..'' என அவன் தொடங்க, தனுவின் முகம் இறுகிப் போனது.

அவளது முகம் போனப் போக்கில் பேச்சை நிறுத்தியவனை, மீண்டும் பேசவிடவே இல்லை, அவனது மனைவி.

பேச்சு வார்த்தை முற்றிய அன்றைய தினம் மட்டுமல்ல, பதினாறாம் நாளன்றும், இளம்பரிதியின் சொந்தங்கள் சும்மா இருக்கவில்லை.

தாயின் பலவிதமான உருவேற்றலுக்குப் பின்னர், கஷ்டப்பட்டு முகம் மாறாமல் அவர்களிடம் சென்று பேசியவளிடம், ''இந்தாப் பாரும்மா.. என்னைக்கு இளம்பரிதி உன் கழுத்தில தாலி காட்டினானோ... அன்னையில் இருந்து நீ எங்க வீட்டுப் பொண்ணு... புரியுதா? சும்மா.. சும்மா... அம்மா முந்தானையைப் பிடிச்சுக்கிட்டு சுத்தறதை நிறுத்திட்டு, எங்களோட பேசி.. நல்ல இணக்கமா இருந்துக்கோ!''

''அன்னைக்குப் பார்த்தே இல்ல... உம் புருஷனே எங்ககிட்ட எப்படிப் பணிவா பேசினான்னு..''

''அப்புறம் பொண்ணு... நினைவில் வச்சுக்கோ.. மாமி யார் இல்ல... மாமனாரும் நமக்குத் தான் சப்போர்ட் பண்ணாரு... இனி நாம வச்சது தான் சட்டம்ன்னு தெனாவட்டா திரியாத! தங்கம் இல்லாத குறைக்கு, நாங்க இருக்கோம்... இந்த வீட்டோட நல்லது கெட்டது எல்லாமே நாங்க சொல்றபடி தான் நடக்கும்...'' என்று இருப்பதிலேயே பெரியவள் சொல்ல,

''உங்களுக்குள்ள முதலிரவு நடக்கிறதில இருந்து... எல்லாமே நாங்க குறிச்ச நேரப்படி தான் நடக்கும்!'' என்று முந்தையை வாக்கியத்திற்கான ஓர் வரி அர்த்தத்தை அடுத்தவள் உதிர்த்தாள்!

அவர்கள் பேசியதை ஓர் இறுக்கத்துடன் கேட்டிருந்த தன்னொளிக்கு, ''போங்கடி... நீங்களும் உங்க குடும்பமும்!'' என்று தூக்கியெறிந்துவிட்டு வந்துவிடலாமா என்று கூடத் தோன்றியது!

ஆனால், அவர்கள் பேசுவதைக் கண்டுவிட்டு, அவர்கள் கண் மறைவாக... ஆனால் மகள் கண்ணுக்குத் தெரிவது போல் நின்றிருந்த இந்திரா ''ப்ளீஸ் தனு!'' என்று வார்த்தையாலும், சைகையாலும் கெஞ்சியதை மீறி, தனுவால் எதுவும் பேசமுடியவில்லை.

அதுவுமில்லாமல், அவர்கள் சொல்வது போல் அவளது கணவனுமே அவர்கள் சொல்வதற்குப் பணிந்தல்லவோ போகிறான்! இடம் கொடுத்த அவனை விட்டுட்டு, மடத்தைப் பிடிங்கிக் கொண்டு, மங்காத்தா ஆட்டமாடும் இவர்களிடம் பாய்ந்து என்ன புண்ணியம் என்று கணவன் மேல் ஏகக் கடுப்பு உண்டானது!



இப்போதைய இளம்பரிதியின் பேச்சில், அப்போதைய கடுப்பு கடுகடுவென பொரிந்து மேலெழ, ''போதுமான அளவுக்கு... உங்க சொந்தக்காரங்க பேசிட்டாங்க... நீங்களும் பேசி, என்னைத் திரும்ப அழ வைக்காதீங்க!'' என்றாள் தன்னொளி.

மேற்கூறிய வாக்கியத்தை அவள் வெறுமனே உதிர்த்திருந்தாலும் பரவாயில்லை - கண்ணில் சட்டென எட்டிப் பார்த்த கண்ணீருடன், கைகள் இரண்டும் கூப்பிய நிலையில், உதடுகள் நடுங்க, அவள் பேசிய விதத்தில், இளா உருகிப் போனான் என்று சொல்வதை விடவும் பயந்து போனான் என்றே சொல்ல வேண்டும். ''இவ்வளவு சென்ஸிட்டிவா இருக்காளே?'' என்று ஆயாசமாய் வந்தது அவனுக்குமே!

அன்றிரவெல்லாம், தூங்காமல் யோசித்ததில், அவனால் ஓர் முடிவிற்குத் தான் வர முடிந்தது! ''சொந்தக்காரர்கள் விஷயத்தில் அவளைச் சமாதானப்படுத்துவது என்பது முடியாத காரியம்... எனவே, வேறு வகையில் அவளைக் கவர்வோம்!'' என்றெண்ணி, அதற்கான முதல் படியை, அடுத்த நாள் அதிகாலையில் எடுத்து வைத்தான். ஆனால்.. நடந்ததோ?!?!?!

இளம்பரிதிக்கு, அதிகாலை ஐந்து மணிக்கு எழும் பழக்கமுண்டு! கட்டபொம்மன் பழக்கிவிட்டது!

இருபதுகளில் இருந்த அவனும் அழ, அறுபதைத் தாண்டிய கட்டபொம்மனும் எழுந்து வந்தார்.

அடுக்களைக்குள் சென்று அவர் பால் கூடையை எடுத்து வந்த கட்டபொம்மன், ஜாகிங் செல்லத் தயாராகி வந்த மகனிடம் ''தம்பி.. உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்'' என்றார் தயக்கத்துடன்.

"என்னப்பா? இந்த நேரத்திலேயா?" என்ற இளாவின் கண்கள், தன்னியல்பாய் தனுவும் பூவும் படுத்திருந்த அறையின் புறம் சென்றது.

"பயப்படும்படியா எதுவுமில்ல தம்பி... நானும் பூவும் இன்னும் ரெண்டு நாளில ஊருக்குக் கிளம்பலாம்னு பார்த்தேன்..." என அவர் இழுக்க,

"என்ன ஊருக்கா? என்னப்பா விளையாடுறீங்களா? எதுக்கு இப்ப திடீர்ன்னு?" - அத்துடன் இளம்பரிதி நிறுத்தி இருக்கலாம்! ஆனால், சனி யாரை விட்டது?

"தனு எதுவும் சொன்னாளா?" என்று விட்டான், அக்கேள்வியின் முடிவில்.

"அய்யயோ... அந்தப் பொண்ணு என்னப்பா சொல்லப் போகுது? உன் அத்தைக்காரி ஆடின ஆட்டத்துக்கு அப்புறம், அந்தப் புள்ள என்னை நிமிர்ந்து பார்த்துக் கூடப் பேசுறதில்லை..." என்று உண்மையை வேகமாய் பகிர்ந்தவர்,

"உங்கம்மா வைத்தியத்துக்காக வந்த நாங்க.. இன்னும் ஒரு வாட்டி கூட ஊருக்குப் போகலையே.. இங்கேயே சொந்த வீடு இருந்ததால, காரியத்தையும் இங்கேயே முடிச்சிட்டோம். இனிமேலாவது பொழப்பைப் பார்க்க வேணாமா?"

"பூவும்.. ஸ்கூலுக்குப் போய் கிட்டத்தட்ட ஒரு மாசமாச்சு.. அவளோட படிப்பையும் பார்க்கணும்ல?"

"அதுவுமில்லாம, ஊரில வீடும் கடையும் போட்டது போட்டபடி அப்படியே கிடக்கு..." என்று தான் ஊருக்குச் செல்வதற்கானக் காரணங்களை அடுக்கினார்.

அதற்குப் பதிலாய் மகனோ, "பூவோட படிப்பைப் பத்திக் கவலைப்படவே வேணாம்பா.. இங்க ஒரு



ஸ்கூல்ல அவளுக்குச் சீட்டுக்குச் சொல்லியாச்சு. நயன்த்துங்கிறதால, ஈஸியா சீட் கிடைச்சிடும்.. அதுவும் பூவோட மார்க்ஷீட் பார்த்திட்டு, உடனே ஒத்துக்கிட்டாங்க.. ஒண்ணும் பிரச்சனையில்லை.. என்ன நடுல சேருறதால கொஞ்சம் பணம் செலவாகும் பார்த்துக்கலாம்.." எனக் கூறி, தானும் தங்கையின் எதிர்காலத்தைப் பற்றி யோசித்தேன் என்பதைப் பகிர்ந்தான்.

"அப்புறம்.. அந்தக் கடை... போதும்ப்பா.. நீங்க அங்க கஷ்டப்பட்டது! அம்மா இல்லாம... வீட்டையும் பார்த்து, கடையையும் பார்த்து, பூவுக்கும் எல்லாம் பண்ணி... வேணாம்ப்பா! எங்களோடவே இங்கேயே இருந்திடுங்க!" என அவன் வற்புறுத்த,

அதற்கு எதிரொலியாய் "ஆமா... மாமா! நீங்களும் பூவும் எங்கேயும் போகக் கூடாது... இங்கேயே எங்களோட இருந்திடுங்க.. ப்ளீஸ்!" என்ற குரல் கேட்கவும், கட்டபொம்மனும், இளம்பரிதியும் அதிர்ந்து திரும்பினர்.

அறை வாயிலில் நின்றிருந்த தன்னொளி, தொடர்ந்து பேசினாள். "பூ.. இன்னும் சின்னப் பொண்ணு! இனி மேல் தான் அவளுக்கு எந்த நேரத்திலையும் ஒரு பெண் துணை தேவை! அவ இங்க...என்னோட இருக்கிறது தான் நல்லது மாமா! ரொம்ப சென்சிடிவா இருக்கா... சட்டு.. சட்டுன்னு அத்தையை நினைச்சு அழறா... நேத்து நைட் கூட நடுராத்திரி ரெண்டு மணிக்கு எழுந்து உட்கார்ந்து, தேம்பித் தேம்பி ஒரே அழுகை! இப்படி இருக்கும்போது, நீங்க அங்க போறது எனக்கு... சரின்னு படலை... மாமா! இங்கேயே இருந்திடுங்க!" என நாத்தனாரை மனதில் வைத்துப் பேசிய கையோடு,

கணவனிடம் ஓர் கூர்வாள் பார்வையை வீசிவிட்டு, ''எங்களுக்கும் சின்ன வயசு... நல்லதை எடுத்துச் சொல்றதுக்கும், கெட்டதைத் தட்டிக் கேட்கிறதுக்கும் பெரியவங்க ஒருத்தங்க வேணும் மாமா... ப்ளீஸ்!'' என்றாள் அழுத்தமாக.

மனைவியின் பேச்சிலேயே கவனமாய் இருந்த இளம்பரிதி, ''ஆஹா! உனக்குத் தான்டா மறைமுகமா ஆப்பு வைக்கிறா!'' என அவளது பேச்சைச் சரியாக படித்துப் போதும்,

''எதில இருந்து கேட்டான்னு தெரியலையே?'' என்று உள்ளுக்குள் திகில் பிடித்து நின்றிருந்தான்.

மகனது மனப்போராட்டங்களைப் பற்றியெல்லாம் உணராமல், ''இல்லம்மா.. உங்களுக்கு வீண் தொந்தரவு... நாங்க அங்கேயே போய்டுறோம்!'' என்று கட்டபொம்மன் இழுக்க,

''ஏன் மாமா... நா பூவை நல்லா பார்த்துக்க மாட்டேன்னு நினைக்கிறீங்களா? கதையில் வர மாதிரி கொடுமைப் படுத்துவேன்னு பயப்படுறீங்களா? இல்ல... உங்க பையனும் மத்தவங்களும் நினைக்கிற மாதிரி, உங்களை மதிக்க மாட்டேன்னு முடிவே பண்ணிட்டீங்களா?'' - கேள்வியாய் அடுக்கிக் கொண்டே போனவள்,

அப்பேச்சிற்கு சிகரம் வைப்பது போல் ''என்னை எங்கம்மா அப்படி வளர்க்கலை மாமா...'' எனக் கூறுகையில், குரல் அழுகையை இரவலுக்கு வாங்கியிருந்தது!

மருமகளின் குரலில் தென்பட்ட வலி, நெஞ்சை ஊமத்தம் முள்ளாய் நெருட, ''அய்யோ! இல்லம்மா! நாங்க இங்கேயே இருக்கோம் தன்னொளி... இதுக்குப்



போய்... எதுக்கு அழற? அதுவும் காலையில் எழுந்ததும் எழாததுமா? இந்த வீட்டில விழுந்த கண்ணீர் எல்லாம் போதும்... இனியாவது நிம்மதியா இருப்போம்!'' என்றார், கட்டபொம்மன் வேகமும், ஆற்றாமையுமாய்!

கூடவே, ''போ... போய் முகத்தைக் கழுவிட்டு வா... மாமா போய் பால் வாங்கிட்டு வரேன்... இன்னைக்கு ஆபீஸ் போறீங்க இல்ல...'' என்று மருமகளை இயல்பு நிலைக்கு மீட்டுக் கொண்டு வர முயன்றார்.

''இல்ல... மாமா! இன்னைக்குப் போகலை... பூக்கு ஸ்கூல் செட் ஆகட்டும்... அப்புறம் பார்த்துக்கலாம்...''

''அதான் தம்பி ஸ்கூல் அட்மிஷன் கிடைச்சிடும்ன்னு சொல்லிட்டானே... அது வரைக்கும் அவ வீட்டில இருப்பா... நீ ஆபீஸ்க்குக் கிளம்பு! ஊரில போய் டி.சி. வாங்கிட்டு வந்ததும் அவ ஸ்கூலுக்குப் போகட்டும்!'' என்ற கட்டபொம்மன்,

''வர திங்கட்கிழமை ஸ்கூல்ல சேர்ந்துடலாம் இல்லையா தம்பி? நா போய்... டி.சி. வாங்கிட்டு, சாமானை எல்லாம் ஒழிச்சுப் போட்டுட்டு வந்துடுறேன்'' என்றார் மகனிடம் திரும்பி.

''ஹான்... என்னப்பா சொன்னீங்க?!'' - அப்போது தான் நினைவே பெற்றான், இளம்பரிதி!

''உங்க பையனும் மத்தவங்களும் நினைக்கிற மாதிரி, உங்களை மதிக்க மாட்டேன்னு முடிவே பண்ணிட்டீங்களா?'' - என்ற தனுவின் குமுறலே மீண்டும் மீண்டும் ஒலிக்க,

''ஏன்? ஏன் அப்படிச் சொன்னாள்?'' என்ற யோசனையும், கடைசியில் ''தனு எதுவும் சொன்னாளா?''

என்ற தன் வாக்கியமும் விடையாக, ''எரிஞ்சிட்டு இருக்கிற தீயில... ஒன்றரைக் கிலோ நெய்யை ஊத்திட்டேன் போலவே!'' என்று அயர்ந்து போனான், இளம்பரிதி.

கூடவே, ''ஒரு ஒரு வார்த்தையும் யோசிச்சு யோசிச்சுப் பேசணுமா? சை! தெரியாம... ஒரு ஃப்ளோல வந்த ஒரு வார்த்தைக்காக... இந்தப் பேச்சா?'' என்று கோபமும் வந்தது. அப்புது மணமகனுக்கு!

## 10

**யோ**சனையில் தோய்ந்திருந்த மகனின் தோள் தொட்ட கட்டபொம்மன், ''என்ன தம்பி... இந்தத் திங்கட் கிழமை பூவை ஸ்கூல்ல சேர்த்திடலாமான்னு கேட்டேன்... எந்த உலகத்தில இருக்கே நீ?'' என்றார், லேசாய் குரல் உயர்த்தி.

''ஆமாமா... சேர்த்திடலாம்.. இன்னைக்குப் பேசிடுறேன்...'' என்றான் இளா, சுதாரித்துக் கொண்டு.

கட்டபொம்மனும், பூங்குழலியும் சென்னையிலேயே தங்குவதென்று முடிவாக, ''நான் பால் வாங்கிட்டு வந்துடுறேன் தன்னொளி... சமையலுக்கு ஏதாவது காய் வேணுமா?'' என்றார் கட்டபொம்மன், வாயிலை நோக்கி நடந்தவாறே.

''இல்ல மாமா... அம்மா நிறைய காய் வாங்கி வச்சிட்டுப் போயிருக்காங்க... அதெல்லாம் காலியானதும் வாங்கிக்கலாம்'' என்ற தன்னொளி, ஹாலிலிருந்த குளியலறைக்குள் நுழைந்து கொண்டாள்.



அடைக்கப்பட்ட குளியலறைக் கதவைப் பார்த்தவனுக்கு, ''போயேன்... சும்மா சும்மா.. மரத்து மேல ஏறி நின்னுக்கிட்டா நான் என்ன செய்றதாம்? போ!'' என்று ஆண் வர்க்கக் கோபம், சடாரென தலை தூக்க, விருட்டென வீட்டை விட்டுத் தன் நடையைக் கட்டினான்.

இதுவே தனது அவள் தாயிடம் ''நீங்க இங்க தங்குறதுக்கு... இளா எதுவும் சொன்னாரா?'' என்று கேட்டிருந்தால், தான் எவ்வளவு கோபப்பட்டிருப்போம் என்ற கோணத்தில் அவன் யோசிக்கவே இல்லை.

''நான் ஏதோ பேச்சு வாக்கில் சொன்னதற்கு... இவ்வளவு கோபம் ஏன்? கோபப்பட்டாலும் பரவாயில்லை... எதுக்கு அழணும்? என்னமோ, ஓங்கி அறைஞ்ச மாதிரி... ஓ...ன்னு அழ வேண்டியது... இந்தப் பொம்பளைங்களே இப்படித்தான்...'' என்று எல்லா ஆண்களையும் போல், அழுகையைப் பெண்களின் ஆயுதமாய் எண்ணி, அவளிடம் விளக்கம் சொல்ல அவன் எத்தனிக்கவே இல்லை!

அவனுக்கு நிகரான கோபத்துடன் தான் தன்னொளியும் இருந்தாள்! ஆனால், அந்தக் கோபம் நிலைத்திருந்தது இளா ஜாகிங் முடிந்து வரும் வரை மட்டுமே என்றால் அது பொய்யல்ல! அப்பட்டமான உண்மையே!!

மாமனார் வாங்கி வந்த பாலைக் காய்ச்சி, அவருக்கான காபியைக் கொடுத்துவிட்டு, அன்றைய சமையலுக்கான காய்களை நறுக்கிக் கொண்டிருக்கையில், அழைப்பு மணியின் சத்தம் கேட்டது.

இரண்டு முறைக்கு மேலாகியும், மாமனார் வராமல் போகவே, ''ப்ச்...'' என்ற சலிப்புடன், கையிலிருந்த வெண்டைக்காயைக் கீழே போட்டுவிட்டு, வாயில் நோக்கிச் சென்றாள் தன்னொளி.

அவர்கள் வீட்டில், இரண்டு வாயிற்கதவுகள் உண்டு - இரும்பினாலான கதவைத் தாண்டி மரத்தினாலான ஓர் கதவிருக்கும்.

தனு, மரக்கதவின் மேல் கொக்கியை எடுத்துவிட்டு, கதவைத் திறக்கையில், இரும்புக் கதவுக்குப் பின்னே நின்றிருந்த இளம்பரிதி, காலில் மாட்டியிருந்த ஷூவைக் குனிந்து கழட்டியவாறே ''அம்மா... உங்களுக்குப் பிடிச்சப் பசலைக் கீரை வாங்கிட்டு வந்திருக்கேன்... அப்புறம்... ஃபிரஷா பட்டாணி கிடைச்சது... இன்னைக்கு மசாலா போடலாமா? நீங்க போடற மசாலா மாதிரி இல்லைன்னாலும்... ஓரளவுக்கு ட்ரை பண்ணலாம்.. சரியா?'' எனக் கூறவும்,

வீட்டினுள் நின்றிருந்த தன்னொளிக்கு, தாயிறக்கம் சுரந்துவிட்டது!

''ஐயோ... பாவம்.. அத்தை இறந்ததை மறந்துட்டான் போலவே... இப்போ என்னைப் பார்த்ததும்... எல்லாம் ஞாபகம் வந்திடுமே... ஒடிஞ்சு போயிடுவானோ...'' என்று அவள் உருகிப் போக,

அவளது எண்ணத்தை மெய்ப்பிப்பது போல், கால்களைக் களைந்து விட்டு நிமிர்ந்தவன், தன்னொளியை வாயிலில் காணவும், ஓர் வினாடி திகைத்து நின்றுவிட்டான்.

ஆனால், மறுநிமிடமே தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ஓர் ''சாரி''யுடன் உள்ளே வந்தவனின் முகத்திலேயே தன்னொளியின் பார்வை படிந்திருந்தது!

கண்கள் பளபளத்தனவோ!? உதடு துடித்ததோ!? நாசிகள் இறுகினவோ?! கைகள் விறைத்தனவோ!? -



கணவனின் அங்கத்தை வேகமாய் வலம் வந்த மனைவியின் கண்கள், பாசத்தை ஊற்றாய் சுரந்தன.

மனைவியின் பார்வை தன்னைத் தொடர்கிறது என்ற உணர்வே, அவனைத் தலை நிமிர விடாமல் செய்ய, வாங்கி வந்த பொருட்களை, டீப்பாயின் மீது வைத்தவன், நெற்றியை அழுத்தமாய் நீவிவிட்டுக் கொண்டு, அவன் உபயோகிக்கும் அறைக்குள் சென்று மறைந்தான்.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த தன்னொளி, தானும் தொடர்ந்து அவனது அறைக்குள் செல்லவில்லை. மாறாக, அவன் வாங்கி வந்த காய்கறிகளை எடுத்துக் கொண்டு, சமையலறைக்குள் சென்றாள்.

வெண்டைக்காய் பொரியலும், சௌ சௌ சாம்பாரும் வைக்கலாம் என்ற திட்டமிடலுடன் நறுக்கி வைத்திருந்த காய்களை, ஒருமுறை பார்த்தவள், அனைத்தையும் காய்-கனிக்கான டப்பர்வேர் டப்பாவில் இட்டு மூடினாள். அவற்றை ஃப்ரிட்ஜில் வைத்தக் கையோடு, பாலை எடுத்து வந்து டீ போட்டவள், கொஞ்சம் இஞ்சியும் ஏலக்காயும் தட்டிப் போட்டு, கப்பில் ஊற்றிக் கொண்டு, கணவனின் அறைக்குள் சென்றாள்.

திறந்திருந்த கதவு என்பதால், தட்டாமல் உள்ளே சென்றவளின் மனதை, இளா அமர்ந்திருந்த தோற்றம், மேலும் இளக்கியது!

கட்டிலில் சரிந்து அமர்ந்து, கைகள் இரண்டாலும் முகத்தை மூடி, ஓரோர் உடலசைவிலும் வேதனையைக் காட்டி, அவன் அமர்ந்திருந்த நிலையே, அவன் எவ்வளவு வருந்துகிறான் என்பதை எடுத்துரைக்க,

மெல்ல அவனருகே சென்றவள், எப்படி ஆரம்பிப்பது என்று புரியாமல், சற்று நேரம் அமைதியாய் நின்றாள்.

தொடலாமா? வேண்டாமா? என்று நெஞ்சமும் நாணமும் நடத்திய போராட்டத்தைப் பாசம் வெல்ல, மெல்ல அவன் சிகை வருடியவள், ''டீ...'' என்றாள் மெதுவாய்.

"ஹான்!" என்ற திடுக்கிடலுடன் நிமிர்ந்த இளம்பரிதி, அங்கே தன்னொளியை சற்றும் எதிர்பார்க்கவில்லை!

"தனு!??!!" என்ற கேள்வியே அவனது அதிர்ச்சியைக் கொடுக்க,

அதை ஒதுக்கிவிட்டு, "ஹ்ம்ம் குடிங்க! ஜாகிங் போயிட்டு வந்தது... பசிக்கும் இல்லையா?" என்றாள் அவள்.

அவன் தேநீர் கோப்பையை வாங்கிக் கொள்ளவும், "இன்னைக்கு மதியத்துக்கு... கீரை பருப்பு மசியலும், பட்டாணி மசாலாவும் பண்றேன்... நீங்க ஆபீஸ் எடுத்திட்டுப் போறீங்களா? இல்ல, இன்னைக்கு லீவா?" என அவள் வினவ, அதற்கு மேல் இளாவால் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

கையிலிருந்த கோப்பையை டீப்பாய் மேல் வைத்துவிட்டு, ''தனு!!'' என்ற சிறு கூவலோடு, மனைவியின் கைப்பற்றினான் இளம்பரிதி!

அதைக் கூவல் என்பதா? கதறல் என்பதா? அடைத்து வைத்த அழுகையின் வெளிப்பாடு என்பதா? - எதுவென்று உணர முடியாவிட்டாலும், அவன் ஆழ்ந்த துயரில் சிக்குண்டு இருப்பது தன்னொளிக்குப் புரிந்தது!

தானும் அவன் கைப்பற்றி, மெல்ல அழுத்திக் கொடுத்தவள், அவன் அக்கைகளை இழுத்துத் தன் கழுத்தைச் சுற்றி இட்டுக் கொள்வான் என்றோ, அவனது தலையைத் தன் மார்போடு அழுத்திக் கொள்வான் என்றோ சற்றும் எதிர்பார்க்கவில்லை.



அவளுளிருந்த பெண்மை எழுப்பிய நாண மணி ஒங்கி ஒலிக்க, பெண்ணவளின் தேகம் ஒரு முறை சிலிர்த்து அடங்கியது!

ஆனால், தாயை இழந்த சோகம் முழுதையும் தாரத்திடம் தாரை வார்ப்பவனைப் போல், அவன் குலுங்கி அழவும், தன்னொளியின் தாய்மை மேழும்பி வந்தது!

"என்ன இளா இது... பூ மாதிரி நீங்களும் அழறீங்க? நீங்க ரொம்ப ஸ்ட்ராங்கன்னு நினைச்சேனே!?" என அவள் முடி கோத,

"ஹ...ஹன்...ஹன்...எ..ன்...னால முடியல... தனு..."

''இளா...''

அவன் பதிலேதும் பேசவில்லை. இதுநாள் வரை அடக்கி வைத்திருந்த சோகம் முழுதையும் அழுகையாய் வெளியிட்டான்!

''தான் ஒரு ஆண்பிள்ளை'' என்ற கர்வமோ... தயக்கமோ இல்லாமல், தன் துயர் துடைக்கும் ஆயுதமாய் அவளை எண்ணி, கணவன் அழுவது தன்னொளிக்கு வித்தியாசமாய்ப் பட்டது!

என்ன சொல்லி அவனைத் தேற்றலாம் என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கும் போதே, அவன் தன்னை சமன் செய்து கொண்டு, பேசினான்.

"நா ஜாகிங் முடிச்சு வரும் போது... அம்மா எவ்வளவு ஆசையோட கதவைத் திறப்பாங்க தெரியுமா?"

''ம்ம்... சொல்லுங்க...''

''அந்த சில நிமிஷ சந்தோஷத்துக்காகவே நான் ஜாகிங் போவேன்... போயிட்டு வரும்போது அம்மாக்குப் பிடிச்சதுன்னு ஏதாவது வாங்கிட்டு வருவேன்...''

"ம்ம்..."

"பையன் அவங்களுக்காகன்னு.. அதுவும் அவங்க ளோட பிடிச்சது பிடிக்காது தெரிஞ்சு வாங்கிட்டு வந்திருக் கான்னு.. அவ்வளவு சந்தோஷப்படுவாங்க! ஒரு குழந்தை மாதிரி... தனு அவங்க!"

"ஹ்ம்ம்.. ஆமா..."

"அவங்களுக்குப் போய்.. ஏன் இப்படி ஒரு வியாதி.. இவ்வளவு கஷ்டம்..."

"ம்ம்ம்..."

"என்னோட கல்யாணம்.. பேரன் பேத்தி... பூவோட கல்யாணம்ன்னு எவ்வளவு கனவு கண்டாங்க தெரியுமா?"

"ம்ம்ம்..."

"என் கல்யாணத்துக்கு... உனக்கு எந்தக் கலர்ல புடவை எடுக்கணும்... அவங்களுக்கு எப்படி புடவை வாங்கணும்... காலையில் என்ன மெனு... மதியம் என்ன மெனுங்கிற அளவுக்கு... அதே சிந்தனை தான்! கடைசில... நம்ம கல்யாணத்தில ஒரு வாய் சாப்பாடு கூட சாப் பிடாம போயிட்டாங்களே... சே... இந்தக் கடவுளுக்கு அறிவே இல்ல தனு..."

வழக்கம் போல் "ம்ம்" கொட்டாமல், "உங்க அறிவில பாதியை அவருக்குக் கடனா கொடுத்திடலாமா?" என் றாள் தனு, தீவிரமாக!

வேதனையும் வேகமுமாக பேசிக் கொண்டே சென்ற இளம்பரிதி, தனுவின் இக்கேள்வியில்... அதுவும் சூழ் நிலைக்கு சம்பந்தமே இல்லாத இக்கேள்வியில், பேச்சைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்க்க,

தனுவின் கைகள், தானாகவே அவனது நெற்றி முடி வருடின.



"இல்ல... ரொம்ப எமோஷனலா பேசிட்டே இருந்தீங்க... கொஞ்சம் டைவர்ட் பண்ணலாமேன்னு தான் அப்படிச் சொன்னேன்... நா பேசினது உங்களை இன்சல்ட் பண்ற மாதிரி இருந்தா.. ஐ அம் ரியல்லி சாரி!" என்றாள் மனைவி, அவன் தவறாய் எண்ணிவிட்டானோ என்ற எண்ணத்தில்.

சிறு திகைப்பும், புன்னகையுமாக "ஹோ..! தட்ஸ் ஓகே!" என்ற இளம்பரிதிக்கு, தாங்க முடியா துக்கம் போலிருந்த தாயின் இழப்பு, கொஞ்சம் மட்டுப்பட்டத போலிருந்தது.

அதையே, தனுவும் எதிரொலித்தாள்.

"பெத்தவங்களோட மறைவு.. பிள்ளைங்களுக்கு எவ்வளவு வருத்தம் தரும்ன்னு எனக்குத் தெரியும்... இளா! நானும் அப்பாவை... இழந்தவ தானே..." என்றவளின் குரலிலும் வருத்தம்!

ஓர் குழந்தைப் போல், தன் முகம் பார்த்திருந்த கணவ னின் நெற்றியில் முத்தம் வைக்கத் துடித்த உதடுகளை அடக்கி, மேலும் பேசினாள் அப்புது தாய்!

"ஆனா.. இந்த உலகத்தில பிறந்த எல்லாருமே ஒரு நாள் இறக்கணும்ங்கிறது நியதி... என்ன நம்ம பெத்த வங்களுக்கு அந்த நாள் சீக்கிரமே வந்திடுச்சு..."

"போனவங்களை எண்ணி வருத்தப்பட்டுட்டே இருந்தா.. இருக்கிறவங்க நம்ம மனசை விட்டுத் தூரமா போய்டு வாங்க... இளா!"

"பூவையும் மாமாவையும் மனசில வச்சு, நீங்க தான் உங்க மனசைத் தேத்திக்கணும்..."

தேர்ந்த மனோத்தத்துவ நிபுணர் போல் அவள் பேச, ஹிப்னாடிசம் செய்யப்பட்டது போல், அவள் பேச்சிற்குக் கட்டுண்டு இருந்தான் இளம்பரிதி.

தவறு செய்துவிட்டு, அதை உணர்ந்தும்விட்டு, தாய் சொல்லும் அறிவுரையை செவிமடித்துக் கேட்கும் சிறுவனாய் தென்பட்ட கணவனைக் காணக் காண, தனுவால் தன்னை அடக்கவே முடியவில்லை.

நாணம் கட்டிப் போட்டிருந்த உதடுகளுக்கு, அன்பு அனுமதி கொடுக்க, கணவனின் அகன்ற நெற்றியில், சன்னமாய் ஓர் முத்தம் வைத்து நிமிர்ந்தாள் தன்னொளி.

புது ரத்தம் பாய்ந்தது போல் நிமிர்ந்த இளம்பரிதிக்கும், அது அன்பின் வெளிப்பாடாய் மட்டுமே பட்டது!

காதலோ... காமமோ... தாபமோ... கோபமோ இல்லாமல் வெறும் அன்பும்... பாசமும் மட்டுமே நிறைந்திருந்த அந்த நிமிடங்கள், அவர்கள் வாழ்வின் முக்கிய நிகழ்வாகிப் போயின!

இருவருக்கும் நடுவே இருந்த கருத்து மோதல்களும், கோப தாபங்களும் கிணற்றில் போட்டக் கல்லென, மனதின் ஆழத்திற்குச் சென்றுவிட, அன்பும் அரவணைப்பும் பாசமும் மட்டுமே பூப்போல் மேலே எழும்பி வந்து, இரு இள நெஞ்சங்களையும் ஆதரித்துச் சென்றது!

சில நிமிட மௌனத்திற்குப் பின், ''என்ன இளா... இவெல்லாம் அட்வைஸ் பண்ற அளவுக்குப் போய்ட்டோமேன்னு இருக்கா...'' என தனு, சிரிக்க,

''ச்சே... ச்சே... கண்டிப்பா இல்ல! ஐ ஃபீல் சோ.. ரிலாக்ஸ்ட்!'' என்று உணர்ந்து பதில் கூறியவன்,

''பூக்குட்டிக்காக... அப்பாவுக்காகன்னு அடக்கி அடக்கி வச்சு... இன்னைக்கு என்னையும் அறியாமலே வெளி வந்திடுச்சு...''



''அந்தக் கடையில கீரையையும் காயையும் பார்த்ததும்... அம்மா சட்டுன்னு ஞாபகம் வந்துட்டாங்க... அவங்க இல்லங்கிற எண்ணமே இல்லாம... இதை வாங்கிட்டுப் போனா, அம்மா சந்தோஷப்படுவாங்கிற சிந்தனையிலேயே வந்திருக்கேன்... ப்ச்!''

''அதுவும் ஒரு வகையில் நல்லது தான்.. உன்கிட்ட பேசினதுக்கு அப்புறம், மனசு அலைபாய்றது குறைஞ்ச மாதிரி இருக்கு...''

அவன் சொல்வதற்கு எல்லாம் ''ம்ம்.... ம்ம்..'' என்று ஆமோதித்துக் கொண்டே வந்த தன்னொளி,

''நானே கொஞ்சம் சுமாரா தான் டீ போடுவேன்... அதை நீங்க ஆற வச்சு... வேற குடிச்சா... கர்ணக் கொடூரமா இருக்கும்.. ப்ளீஸ் குடிச்சிருங்களேன்!'' என்றாள் சிறு கெஞ்சலுடன்.

சட்டென சிரித்தவன், தனுவிடமிருந்து விலகி, தேநீர் கோப்பையைக் கையிலெடுத்தான்.

ஆனால்... அந்த விலகல், அத்தம்பதியருள் ஓர் இனம்புரியா உணர்வை விட்டுச் சென்றது!

கூடல் உண்டு பண்ணா காதல் உணர்வை, அந்த விலகல் உண்டு பண்ண, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தப்படி சற்று நேரம் அப்படியே நின்றிருந்தனர்.

கணவனின் பார்வையில் உண்டான மாறுதலை, தன்னொளியின் பெண்மை உணர்ந்துவிட, ''நா.. நா.. போய்... சமையலைப் பார்க்கிறேன்...'' என்ற முணுமுணுப்புடன், அங்கிருந்து நகன்றாள்.

அவள் விலகி, இரண்டடி எடுத்து வைக்கும் வரையிலும் கூட, இளம்பரிதி தன்னுணர்வு பெறவில்லை.

அவள் செல்வதையே இமைக்காமல் பார்த்திருந்தவன், அவள் வாயிலை அடையவும் தான், தலையை உலுக்கி நிஜம் உணர்ந்தான்.

வேகமாய் எழுந்து, இரண்டெட்டில் அவளை அடைந்து, அவளது கைப்பற்றி நிறுத்தியவன், அவளது வியந்தப் பார்வைக்கு விடையாய் ''தேங்க்ஸ்!'' என்றான் ஆத்மார்த்தமாய்!

அக்குரல், தன்னொளியின் செவி நுழைந்து, செம்மொழி பேசும் உதடு தொட்டு, செம்பருத்தி மலர் போன்ற இதயத்தை வருடி, அவளது செம்பாவை மேனியை ஒருமுறை சிலிர்க்கச் செய்தது!!

## 11

தங்கம் இருந்து உண்டு பண்ணியிருக்க வேண்டிய நெருக்கத்தை, இறந்து உண்டு பண்ண, தனுவுக்கும் இளாவுக்கும் நடுவே ஓர் நல்ல நட்பு உருவானது!

அதற்காக, தனுவின் கோபம் மறைந்துவிட்டதா என்று கேட்டால், ''இல்லை'' என்பாள் அவள் அழுத்தம் திருத்தமாய்!

கோபம் மாறாது மனதின் ஒருபுறம் இருக்க, அவன் தாயை இழந்து வாடுவது அந்தத் தாரத்திற்குள் ஓர் பாச உணர்வை விதைத்து, அவனிடம் நட்புடன் பேச வைத்தது.

அடுத்து வந்த வாரங்களில், வாழ்க்கை இயல்பாய் செல்லத் தொடங்கியது.



பூங்குழலிக்கு திருவான்மியூரில் இருக்கும் ஓர் பள்ளியில் இடம் கிடைத்துவிட, அவள் பள்ளி சென்று வந்தாள்.

கட்டபொம்மன் ஊருக்குச் செல்வதாய் சொன்ன தினம் மட்டுமே, தன்னொளி ஐந்து மணிக்கு எழுந்தாள். அதன் பின்னர் வந்த நாட்கள் எல்லாம், ஆறரை மணிக்குத் தான் துயில் களைவதே!

எப்போதும் போல் ஐந்து மணிக்கு எழும் இளம்பரிதி, ''நம்ம நேரம் போல! அன்னைக்குன்னு பார்த்து அஞ்சு மணிக்கு எழுந்திருக்கா.. இப்பப் பாரு... கும்பகர்ணனோட உடன்பிறப்பு மாதிரி தூங்குறதை!'' என்றெண்ணும் அளவிற்கு, தன்னொளியும் பூங்குழலியும் நன்றாகத் தூங்கினர்.

பெண்கள் முன் எழ, ஆண்கள் பின் எழும் பெரும்பான்மை வீடுகளுக்கு மாறாய், ஆண்கள் முன் எழுந்து, பெண்கள் எழுந்து சமையல் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்தனர்.

மாமனார் என்ற கர்வம் துளியுமில்லாமல், வேலைக்குச் சென்று வரும் மருமகளுக்கு உதவியாய், பால் வாங்குவது முதல் காய் வெட்டுவதை வரை செய்துவைப்பார் கட்டபொம்மன்.

''ஹய்யோ.. நீங்க ஏன் மாமா இதெல்லாம் செய்றீங்க? எனக்கு ரொம்ப கில்ட்டியா இருக்கு மாமா...'' என்று தன்னொளி சங்கடப்பட்டால்,

''நம்ம வீட்டு வேலை! யாரு செஞ்சா என்னம்மா?'' என்பவர்,

சில சமயங்களில், ''நாங்க இளாவையும் பூவையும் எவ்வளவு செல்லமா வளர்த்தோமோ அதே மாதிரி

தானே உன்னையும் உங்கம்மா-அப்பா வளர்த்திருப் பாங்க... அப்படியிருக்கும் போது, உன்னை என் பிள்ளைங் களுக்கு வேலை பார்க்கச் சொல்றது... தப்பில்லையா?'' என்பார் பெரியவர்.

கூடவே, ''உங்க அத்தையை எங்கம்மா பண்ணாத கொடுமையில்லை... எனக்கும் அம்மாவை எதிர்த்துப் பேசத் தைரியமில்லை... மாடு மாதிரி உழைச்சிட்டு வரவ... இதையே தான் திரும்பத் திரும்பச் சொல்லுவா! அதுவும் முதல் குழந்தை பையனா பிறந்ததும் போதும், அவன் பிறந்த அன்னையில இருந்து... என்னோட மருமகளை மக மாதிரி பார்த்துக்கணும்ங்கன்னு அப்பவே உன் புராணம் தான் படிப்ப! ப்ச்... அவளுக்குத் தான் உன்னோட இருக்கக் கொடுத்து வைக்கலை.. நானாவது செய்றேனே!'' என அவர் கண்ணைத் துடைத்துக் கொள்ளும்போது, தனுவால் மறுக்க முடிவதில்லை!

வீட்டில், சமைப்பது மட்டுமே அவளது வேலையாகிப் போனபோதும், தனுவால் நேரத்திற்கு அலுவலகம் செல்ல முடியவில்லை.

முன்னர், போரூரிலேயே ஹாஸ்டல் இருக்க, டி.எம்.ஃப்-பில் இருக்கும் அலுவலகத்திற்கு இருபது நிமிட நேரத் தில் சென்றுவிடுபவள், இப்போது அடையாரிலிருந்து கிண்டி வருவதற்கே முக்கால் மணி நேரம் பிடித்தது! காலையிலாவது பரவாயில்லை... மாலையில்?? ஒன்றரை மணி நேரம் பிடித்தது!

அசந்து போய் வீடு வருபவளை, ''அண்ணி!'' என்று ஆசையுடன் வரவேற்று, கையில் சூடான காபியைக் கொடுக்கும் பூங்குழலியை, இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் போல் வரும், தனுவிற்கு.



''தேங்க்ஸ்டா... பூ!'' என உளமார நன்றி சொன்னால்,

''ஹோ... நோ தேங்க்ஸ் அண்ணி.. ப்ளீஸ்! நீங்க எனக் காக எவ்ளோ செய்றீங்க... சும்மா ஒரு கப் காபி தானே...'' என்று தனுவின் கன்னம் பிடித்துச் செல்லம் கொஞ்சு வாள், சின்னவள்.

அதன் பின்னர், இரு பெண்களும் ஒரே அரட்டை தான்.

அடுக்களையில் உட்கார்ந்து கொண்டே, தனு காய் நறுக்கினால், பூவும் வீட்டுப்பாடத்துடன் அங்கேயே இருப்பாள்.

பாடத்தில் வரும் ஆயிரத்தெட்டு சந்தேகங்கள்.. அன்றைய நிகழ்வுகள்.. பக்கத்து வீட்டு நகுல் செய்யும் குறும்புகள் என்று பேச்சுப் பேச்சாய் இருக்க, வேலையும் வேகமாய் நடக்கும்.

அன்றும் அப்படித்தான், தன் வகுப்பில் நடந்த ஓர் விஷயத்தை, ஏற்ற இறக்கத்துடன் கூறிக் கொண்டிருந் தாள் பூங்குழலி.

''அண்ணி... இன்னைக்கு எங்க கிளாஸ்ல என்னாச்சு தெரியுமா?''

''ஹே! என்னை என்ன நினைச்சே! ஒன்பதாம் கிளாஸ் படிக்கிற சில்வண்டுன்னா... உங்க கிளாஸ்ல வந்து உட் கார்ந்துக்க? உங்க கிளாஸ்ல நடந்த விஷயம் உனக்குத் தான் தெரியும்... எனக்கு எப்படித் தெரியும்?''

''அய்யே! மொக்கை! போங்கண்ணி!''

''சரிங்க அம்மணி... விஷயத்தைச் சொல்லுங்க...''

''ஹான்.. அதா.. எங்க கிளாஸ்ல நிர்மல்னு ஒரு பையன் இருக்கான்னு சொல்லியிருக்கேன்ல...''

''ஆமா... ரொம்ப துடுக்குத் தனமா பேசுவான்னு சொன்னியே...''

''ஹான்... அவன் தான்! இன்னைக்கு.. ஹிஸ்ட்ரி கிளாஸ்ல மாம் ஒரு கேள்வி கேட்டாங்க...''

''ம்ம்...''

''நெப்போலியன் எந்த யுத்தத்தில இறந்தார்ன்னு கேட்டாங்க...''

அந்த நேரம் பார்த்து, ''ரெண்டு மகாராணிமாரும் எந்தக் கோட்டையைப் பிடிக்க பேச்சு வார்த்தை நடத்து றீங்க?'' என்றபடியே வந்தான், அலுவலகம் முடிந்து வந்த இளம்பரிதி.

''ஹே... பாரு பூ! உங்க அண்ணனும் மகாராணி... கோட்டைன்னு ஹிஸ்ட்ரி ரிலேட்டடாவே பேசுறாங்க...'' என்று தனு சிரிக்கவும்,

''ஹை... அப்போ அண்ணாகிட்ட இந்தக் கேள்வியைக் கேட்போமா?'' எனக் கேட்டாள் பூ, குதூகலத்துடன்.

''ஹான்.. கேளு.. கேளு.. பதில் தெரியுதா பார்ப்போம்..'' என்று ஏத்திவிட்டாள், தன்னொளி.

''ஹிஸ்டரி கேள்வியா? நானெல்லாம்.. டென்த்ல ஹிஸ்ட்ரில ஸ்டேட் ரேன்க்காக்கும்.. கேளுங்க.. கேளுங்க...'' என்றான் அவனோ, எதிரே இருக்கும் குழியின் ஆழம் தெரியாமல், சட்டையை ஏற்றிவிட்டுக் கொண்டு.

''பெரிய ஹிஸ்ட்ரி ஹீரோ! கேளு.. பூ!'' என்று உதடு பிதுக்கினாள், தன்னொளி.

பலமாய் சிரித்தப் பூங்குழலி, ''நெப்போலியன் எந்த யுத்தத்தில் இறந்து போனார்?'' என்றாள் அண்ணனிடம்.



''திக்'' என்று தோன்றிய அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு,

''ஹம்ம்...'' என்று யோசிப்பது போல், பாவனை செய்தான் இளம்பரிதி.

''ம்ம்... சொல்லுங்க மிஸ்டர். ஹீரோ!'' என்று பூரிக் கட்டையை அவன் பக்கமாய் ஆட்டிக் கொண்டே, தன்னொளி வினவ,

''அண்ணா... சொல்லிடுண்ணா.. இல்லைன்னா அண்ணி மூணு நாளுக்குக் கிண்டல் பண்ணுவாங்க...'' என்று மூக்கால் அழுதாள், பூ.

''இரு குட்டி! அண்ணா யோசிக்கிறேன் இல்ல...''

''யோசிக்கிறாராம்...'' என்றாள் தனு மீண்டும், கிண்டல் மேலோங்க.

''ஷ்! டோன்ட் டிஸ்டர்ப்...''

''ஷ்ஷ்ஷ்ஷ்!!!!!!!!!''- பூவும் தனுவும் சேர்ந்து வேக ராகம் இழுத்தனர்.

''ஹான்! ஆன்சர் கண்டுபிடிச்சிட்டேன்...!!!!'' - இளம்பரிதி கூவ,

''சூப்பர்ண்ணா!'' என்று பூவும்,

''கண்டுபிடிச்ச ஆன்சரை சொல்றது... அதென்ன விளம்பரம் வேண்டிக்கிடக்கு!?'' என்று தனுவும் ஆவலுடன் பார்க்க,

''நெப்போலியன் அவரோட கடைசி யுத்தத்தில இறந்தார்!'' என்றான் இளம்பரிதி, கண்களைச் சிமிட்டி!

''அய்யோ.. நிர்மலும் இப்படித் தான் சொன்னான்...'' என்று பூ, ஏகத்துக்கும் வியக்க, காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான் இளம்பரிதி.

ஆனானப்பட்ட இந்த அழகு விடைக்கு, அண்ணனும் தங்கச்சியும் ஹை-பை வேறு கொடுத்துக் கொள்ள,

''அய்யே! போதும்... உங்க பாசமலர் கொண்டாட்டம்...'' என்று நொடித்துக் கொண்ட தன்னொளி,

''பதில் தெரியலைன்னா... தெரியலைன்னு சொல் லணும்... இதென்ன சாமர்த்தியம்?'' என்று தன்னொளி, ஸ்ட்ரிக்ட் ஆசிரியை போல் ஆமோதிக்க,

''நா சொன்னது ஒண்ணும் தப்பில்லையே!'' என்று தோள்களைக் குலுக்கிய இளா,

''என்னடா குட்டி... அண்ணா சொன்னது கரெக்ட் தானே?'' என்றான் தங்கையிடம் திரும்பி.

அண்ணன் கோண்டான அக்குட்டிக் கழுதையும், ''கரெக்ட்...'' என்று இழுத்துவிட்டு, அண்ணியின் முறைப்பில் ''ஆனா.. தப்பு மாதிரி தெரியுது!'' என்றது, முகத்தை அஷ்டக்கோணலாய் வைத்துக் கொண்டு!

''தப்பு மாதிரி என்ன தப்பு மாதிரி... தப்பு தான்! நிர்மல் இப்படி பதில் சொன்னதுக்கு.. உங்க மாம் என்ன சொன் னாங்க...'' என்று இடுப்பில் கை வைத்துக் கொண்டு, தன்னொளி கேட்கவும்,

''வெரி ஸ்மார்ட்ன்னு சொன்னாங்க...'' என்று உற்சாக மாய்த் தொடங்கி, அண்ணனை காலரைத் தூக்கிவிட வைத்தக் கையுடன்,

''ஆனா.. இந்த ஸ்டார்ட்நஸ் எல்லாம் எக்ஸாம்ல செல்லு படியாகாது... போ.. போய் ஒழுங்கா படிச்சுட்டு, அப்புறம் கிளாஸ்க்கு வான்னு வெளிய அனுப்பிட்டாங்க...'' என் றாள் பூ, தொங்கிய முகமும், வருத்தப் புன்னகையு மாய்.



அண்ணனும் தங்கையின் வருத்தத்தை முகத்திற்கு இடமாற்ற, அதைக் கண்டு கை கொட்டிச் சிரித்த தன் னொளி, ''அதானே பார்த்தேன்.. எக்ஸாம்ல இப்படிப் போய் எழுதினா... யாரும் ஸ்மார்ட்ன்னு பாராட்டி மார்க் போட மாட்டாங்க.. முட்டை மார்க் தான் வாங்கணும்!'' எனக் கூறவும்,

''ச்சே.. ச்சே! இந்த இந்தியன் எக்ஸாம் சிஸ்டமே மோசம்பா... இதுவே அமெரிக்காவா இருந்தா என்னை ஓஹோன்னு கொண்டாடி இருப்பாங்க...'' என்று போலி யாய் வருத்தம் கொண்டான், இளம்பரிதி.

''ஆஹாஹா! ஹீரோவுக்கு இந்த விஷயத்தில மட்டும் அமெரிக்கன் சிஸ்டம்க்கு மாறணும் போல... ஆனா... மித்த விஷயமெல்லாம் இந்த இந்தியன் குட்டைல ஊறின மட்டை தான் வேணும் போல..'' என்று தன் னொளி, குத்தலைக் குரலில் ஏற்றிவர,

''ஹே! நா எந்த விஷயத்தில அப்படிச் சொன்னேன்...'' என்றான் இளம்பரிதி, யோசனையாக.

''பெரிய ஸ்மார்ட்ன்னு பீத்திக்கிறீங்க.. கண்டுபிடிங்க!'' எனப் பதில் கூறியவள்,

அண்ணனும் அண்ணியும் பேசுவது புரியாமல் நின்று கொண்டிருந்த பூவின் கன்னம் தட்டி, ''என்ன பூ... உங்க அண்ணாவை வெளிய நிக்க வச்சுடுவோமா?'' என்றாள்.

''ஹய்யோ! வேணாம்ண்ணி! அண்ணா பாவம்ல.. அண்ணாக்காக நா வேணும்னா பதில் சொல்லிடவா?'' என்று பறந்த பூ, ''பேட்டில் ஆப் வாட்டர்லூ!'' என்றாள் வேகமாக.

''ஹே இது கல்லாட்டம்.. ஆனா... போனா போகட்டும்... இந்தவொரு வாட்டி மன்னிச்சுவிடுறேன்...'' என்று தன்னொளி, பெருந்தன்மை திலகமாய் மாறி பதில் கூறியதில், சிரிப்பு வந்த போதும், அவளது ''குட்டையில் ஊறின மட்டை'' என்ற மட்டம் தட்டலே நினைவில் ஓடிக் கொண்டிருந்தது!

கொஞ்சம் மண்டையைக் கசக்கி, விடை கண்டுபிடித்திருந்தால், அன்றே விடிவுகாலம் பிறந்திருக்கும்! ஆனால், மனைவி தன்னிடம் சகஜமாய் பழகுவதால், பழைய கோபங்களை எல்லாம் மறந்துவிட்டாள் என்றெண்ணியிருந்தவனுக்கு, அந்த நினைப்பே வரவில்லை! மேலும், பெண்கள் போல்... பத்து வருடங்கள் முன்னர் நடந்ததைக் கூட நினைவு வைத்திருக்கும் திறமையோ அறிவோ ஆண் பிள்ளையான அவனிடம் இல்லை! என்ன செய்வது?

சில பல சிரிப்புகளும், அதனூடே சிற்சில குத்தல் பேச்சுக்களுமாய் காலம் வேகமாய் நகர்வது போலிருந்தது! தன்னொளியின் ப்ராஜெக்ட்டில் ரிலீஸ் டேட் நெருங்கும் வரை!

பெரும்பான்மையான மென்பொருள் நிறுவனங்களைப் போல், தன்னொளி வேலை பார்க்கும் நிறுவனத்தாரும், ப்ராஜெக்ட்டின் ஆரம்பக்கட்டத்தில் கோட்டை விட்டு விட்டு, விட்டக் கோட்டையை கடைசி நிமிடங்களில் பிடிக்கப் பிரம்மப்பிரயத்தனம் பட்டுக் கொண்டிருந்தனர். அதன்படி எழுதப்படாத விதியாக, பணியாளர்கள் இரவு வெகு நேரம் உழைக்க வேண்டியிருந்தது!

இரவு ஏழு மணி... ஏழரை மணிக்கு வீடு வந்து கொண்டிருந்த தன்னொளி, இப்போதெல்லாம் ஒன்பது



மணி தாண்டி வந்தாள். சில சமயங்களில், பதினோரு மணி கூட ஆனது!

அவள் ஒன்பது மணிக்கு, பஸ்ஸில் அடிப்பட்டு வருவதற்கு, பதினோரு மணியளவில் நிறுவனம் ஏற்பாடு செய்யும் டாக்ஸியிலேயே வரலாம் என்றெண்ணினான் இளம்பரிதி! அந்தளவிற்கு, ஒன்பது... ஒன்பதரைக்கு வருபவள் ஓய்ந்து போய் வருவாள்!

ஒரு வாரம் பார்த்தவன், ஓர் நாள் இரவு அவள் உண்ணாமலே படுக்கிறேன் என்று கூறவும்,

''பேசாம காப்-லேயே வாயேன் தனு! ஆபீஸ் கான்டீன்லேயே நிம்மதியா சாப்பிட்டு, டென்ஷன் இல்லாம காப்-ல வரலாம் இல்லையா?'' என்றான் அக்கறையாக.

''ஹ்ம்ம்...ஆனா.. நா சாப்பிடுடுவேன்... நீங்கெல்லாம்?''

''நாங்க வெளிய சாப்பிட்டுக்கிறோம்... உன்னோட ப்ராஜெக்ட் முடியுற வரைக்கும் தானே... பரவாயில்லை தனு!''

''எத்தனை நாளைக்கு வெளிய சாப்பிட முடியும்? பூ... இப்பவே டல் ஆகிட்டா! நேத்து நீங்க வாங்கிட்டு வந்த பரோட்டா... பூக்கு சுத்தமா பிடிக்கலை போல.. இன்னைக்கு என்கிட்டே மட்டும் மெதுவா சொல்றா.. பாவம்!''

''அடக்கழுதையே! என்கிட்டே சொல்லியிருக்க வேண்டியது தானே? இப்பெல்லாம் அவங்க... ''அண்ணி'' செல்லமாகிட்டாங்க போல!'' என்று இளம்பரிதி உதடு பிதுக்கிய அழகில்,

''பொறாம!'' என்று வாய் விட்டுச் சிரித்தாள், தன்னொளி.

தானும் சிரித்தப் போதும், ''ஆமா... பொறாம தான்!'' என்று உண்மையை மறையாது ஒப்புக் கொண்டான்.

அவன் ஒப்புக் கொண்ட தினுசும் சிரிப்பை உண்டு பண்ண, மனம் விட்டுச் சிரித்தத் தன்னொளி, ''தோசை மாவு வச்சிட்டுப் போங்கண்ணி... நான் எல்லாருக்கும் ஊத்திக் கொடுக்கிறேன்னு அவ சொல்லும்போது கஷ்டமா இருக்கு! அதான்... அடிச்சுப் பிடிச்சு ஒன்பது மணிக்கு வந்துடுறேன்...'' என்றுவிட்டு, தானும் பூவும் உபயோகிக்கும் அறைக்குள் நுழையப் போனவள்,

''தங்கச்சிக்காக மட்டும் வராளேன்னு பாசமலர் பொறாமையில் பொங்கி எழுந்திட வேண்டாம்! உங்களுக்காகவும் தான்! முந்தா நாள்... வயிறு சரியில்லாம, ஹீரோ சார்... நடுராத்திரி ஒரு மணிக்கு எழுந்து, எலி மாதிரி மாத்திரை டப்பாவை உருட்டி, டைஜீன் மாத்திரை போட்டீங்களே... நான் பார்த்துட்டேன்! அதுக்காகவும் தான் வர்றேன்... புரியுதா? அதனால... எங்க மேல பொறாமை படாதீங்க மிஸ்டர்!'' என்றாள் கணவனின் புறம் திரும்பி.

கண்களைச் சிமிட்டி, அவள் கூறிய அழகில் சிரித்தப் போதும், ''ஆனாலும், இவ்வளவு ஓவர் கான்ஃபிடன்ஸ் ஆகாது தனு! நா ஒண்ணும்... ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு டைஜீன் மாத்திரை சாப்பிடலை!'' என்று கிண்டலாய் ஆரம்பித்தவன்,

தன்னொளி ''அப்புறம்?'' என்று இடுப்பில் கை வைத்துக் கேட்ட அழகில்,

''நீ நேத்து மதியம் கொடுத்துவிட்டியே வெண்டைக்காய் பச்சடி சாதம்... அந்த அறுசுவைக் கொடுமையை நைட்டும் கொஞ்சம் எடுத்து வாயில போட்டேனா...



அதான் டைஜீனைத் தேட வேண்டியதா போச்சு!'' என்றான், அவளுக்குச் சளைத்தவன் அல்ல என்று நிரூபிக்கும் வகையில்!

''அடிங்க!'' - அடிக்கக் கை ஓங்கிக் கொண்டு, அவள் துரத்த, அந்த இரவு நேரத்தில் இருவரும் வீட்டைச் சுற்றிக் கபடி ஆடிக் கொண்டிருந்தனர்!

இந்தக் கபடியை, வீட்டிலிருக்கும் கட்டிலில் ஆடியிருந்தால் பரவாயில்லை! வீட்டு முற்றத்தில் ஆடி என்ன பயன்?

## 12

தன்னொளியின் வேலைப் பளு, கடுமையாக அதிகரித்தது!

இன்னமும், ஒரு நாளில் வேலை முடிய வேண்டும் என்றிருந்த நிலையில், அன்று காலை பதினோரு மணிக்கே கணவனை அழைத்து விவரம் கூறினாள், ஓர் பொறுப்பான குடும்பத்தலைவியாய்!

''இளா.. நா இன்னைக்கு நைட் லேட்டா தான் வருவேன். மாமாகிட்ட சொல்லிடுங்க. அப்புறம்... பூவை ஹோட்டலுக்குக் கூட்டிட்டுப் போய்... அவளுக்குப் பிடிச்சதா வாங்கிக் கொடுங்க! வீட்டுக்குச் சாப்பாடு வாங்கிட்டு வர வேண்டாம்! அவளுக்குப் பிடிக்கலை!'' என்றவளிடம்,

''சரி தனு! நா பார்த்துக்கிறேன்... நீ பத்திரமா வா!'' எனப் பதில் கூறியவன், ஓர் பெருமிதப் புன்னகையை

உதிர்த்தக் கையோடு, ''இன்னைக்குக் குட்டியை ஏதாவது நான்-வெஜ் ரெஸ்டாரண்டுக்குக் கூட்டிட்டுப் போணும்!'' என்று மனதில் குறித்துக் கொண்டான்.

ஆனால், அவன் ஏழு மணிக்கு வீடு வந்து சேர்ந்த போது, வெளிவாசலிலேயே நின்றிருந்த கட்டபொம்மனின் முகத்தில், பெரும் பதட்டம்!

அவர்கள் வீடிருக்கும் (ஃப்ளாட்) இரண்டாம் மாடிக்குப் படி வழியே ஏறி வந்த இளா, லிஃப்ட்டையும் மாடிப் படியையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றிருந்த தந்தையைக் கண்டதுமே, ஏதோ விபரீதம் என்பதை உணர்ந்தான்! தாய் உயிரோடு இருக்கும் போது, தினம் தினம் பார்க்கும் தோற்றம் தானே!? ஆனால்... இப்போது என்ன? என்ற யோசனையுடனே, அவரை நெருங்கினான் மைந்தன்.

மகனைக் கண்டதும், ''தம்பி... வந்துட்டியா.. வா.. வா..'' என்று அவனை இழுக்காதக் குறையாக, வீட்டினுள் அழைத்துச் சென்ற கட்டபொம்மன், அவன் உள்ளே நுழைந்ததும் கதவை அடைத்துத் தாழ் போட்டார்.

''ஏன்ப்பா? என்னாச்சு? எதுக்கு இவ்வளவு பதட்டமா இருக்கீங்க?'' என்றான் இளம்பரிதி, தன்னைப் பிடித்திருந்த அவரது கைகளை அழுத்தி விட்டவாறே.

ஏகத்திற்கும் சில்லிட்டிருந்தன அவரது கைகள்!

''அப்பா.. ரிலாக்ஸ்!'' - தந்தையின் பதட்டத்தில் பயந்து, இளம்பரிதி பதற,

''எனக்கு ஒண்ணுமில்லைடா! பூ...'' என்று இழுத்தவர், பூவின் அறையை ஒரு முறை பார்த்தார்.

''பூவா? ஸ்கூல்ல இருந்து வந்துட்டா இல்ல? இல்ல... ஸ்கூல்ல எதுவும் பிரச்சனையா? இல்ல... வர வழியில



யாராவது கிண்டல் பண்ணிட்டாங்களா?'' - ஓர் அண்ணனின் பொறுப்புடனும், பதட்டத்துடனும் மகன் அவசரம் கொள்ளவும்,

''ஸ்கூல்ல எதுவும் பிரச்சனையில்லை...ஆனா... அவளுக்குத்தான்...''

''என்னப்பா... சொல்றீங்க? தெளிவா சொல்லுங்கப்பா...'' என்ற இளம்பரிதிக்கு, லேசாய் கோபம் வந்தது! இயலாமையால் உண்டான கோபம்!

''எனக்கே தெளிவாத் தெரியலையேடா!'' என்றார் அவரோ அவனை விடவும் மேலோங்கிய இயலாமையுடன்!

''ஸ்கூல் முடிஞ்சு வரும்போதே அவ சரியில்லை! முகம் வேர்த்துப் போய்... அப்படியொரு பயம்! டிரஸ்ஸை வேற ஒரு மாதிரி பிடிச்சுக்கிட்டு வந்தா...'' என்று விஷயத்தை (தனக்குத் தெரிந்த மட்டிலுமான விஷயத்தை) மகனிடம் பகிர ஆரம்பித்தார்.

''என்னன்னு கேட்டதுக்கு ஒண்ணும் பதிலே சொல்லாம, பாத்ரூம்குள்ள போய்ட்டா...''

''சரின்னுட்டு.. நான் போய் பூஸ்ட் கலந்துட்டு வரேன்... ரூம்குள்ளப் போய்க் கதவை அடைச்சவ தான்... இன்னும் வெளிய வரலை!''

''நானும் கத்திப் பார்த்துட்டேன்... திட்டிப் பார்த்துட்டேன்... கெஞ்சிப் பார்த்துட்டேன்... அழுது கூடப் பார்த்துட்டேன்... வெளிய வர மாட்டேங்கிறா!'' என அவர் கூறி முடித்தப்போது, இளம்பரிதிக்கும் பதட்டம் தொற்றிக் கொண்டது!

''ஹய்யோ! என்னப்பா நீங்க? அவ வரலைன்னா அப்படியே விட்டுடுறதா? அவ பாட்டுக்கு... ஏடாகூடமா

ஏதாவது பண்ணி வைக்கப் போறா?'' என்று பதறியவன்,

''பூக்குட்டி! அண்ணா வந்திருக்கேன் பாரு... கதவைத் திற...'' என்றான் தங்கையின் அறைக்கதவைத் தட்டியவாறே.

''ச்சே... நீ நினைக்கிற மாதிரி இல்ல தம்பி! நா கேட்கிறதுக்குப் பதில் சொல்றாளே... வெளிய தான் வர மாட்டேங்கிறா...'' என்று கட்டபொம்மன் சமாதானம் செய்ததற்கு மாறாய், இளாவின் கேள்விக்குப் பூவிடமிருந்து எந்தப் பதிலும் வராமல் போயிற்று!!

தந்தையைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தவன், மீண்டும் ''பூ... பூக்குட்டி... கதவைத் திறடா!'' என்றான் தங்கையின் அறை நோக்கி!

ம்ஹூம்! சிறு அரவம் கூட இல்லை!

மேலும், சில தடவைகள் அவன் அழைத்ததெல்லாம் காற்றுக்கு இரையாக, கட்டபொம்மனுமே பதறிப் போனார்!

''அப்பவே பேசினாளேடா தம்பி! நா வெளிய வர மாட்டேன்னு அழுதாளே...'' என்று பதறியவரின் குரலில், ஏகப்பட்ட நடுக்கம்!

''பூ.. பூம்மா...'' என்று அவரும் கூவ, கதவை உடைத்து விடலாம் என்ற எண்ணத்துடன், இளா கதவை இடிக்கவும் ''மம்...ம்ம்...என்னப்பா...'' என்று பூங்குழலி, சன்னமாய் முழங்குவது கேட்டது!

பெரும் நிம்மதி நெஞ்சினுள் குடியேற, ''குட்டிம்மா! குட்டிம்மா! அண்ணா பேசுறது கேட்குதா? கதவைத் திறடா... குட்டி ப்ளீஸ்!'' என்று அவசரப்பட்டான், தமையன்.



கூடவே, கட்டபொம்மனும் கெஞ்ச, பூ பேசினாள்.

''நா வர மாட்டேன்!'' என்று அழுகையாய் வெளி வந்த பூவின் குரல், ''அண்ணி எப்ப வருவாங்க?'' என்று சிணுங்கியது!

''அண்ணி... வர லேட்டாகும் குட்டி! உன்னை ஹோட்டல் கூட்டிப்போய், டின்னர் வாங்கிக் கொடுக்கச் சொல்லியிருக்காங்க, உன்னோட அண்ணி! வா.. வா.. உனக்குப் பிடிச்ச ஹோட்டல்ல போய் சாப்பிட்டு வருவோம்!'' என்றான் இளம்பரிதி, சிறு குழந்தைக்கு ஆசை காட்டும் குரலில்.

''ம்ஹூம்! அண்ணி... வரட்டும்! நா வரமாட்டேன்!''

''ஏன் வர மாட்டே? அதையாவது சொல்லு...''

''ம்ஹூம்! ம்ஹூம்! ம்ஹூம்!''

அதன் பின், எல்லா கேள்விக்கும் ''ம்ஹூம்''மே பலவித ஏற்ற இறக்கங்களுடன் வெளிவர, இரு ஆண்களும் செய்வதறியாது திகைத்துப் போயினர்!

அரை மணி நேரத்திற்கு மேல், அவளது சிணுங்கலைப் பொறுக்க முடியாமல், ''நா போய்.. தனுவை ஆபீஸ்ல இருந்து கூட்டிட்டு வந்துடுறேன்'' என்க் கிளம்பினான் இளா.

''வேலை இருக்கிறதா சொல்லியிருக்காளேபா... இப்பப் போய் எப்படிக் கூப்பிடுவே?'' என்று கட்டபொம்மன் தயங்க,

''எப்படியும் பதினோரு மணி காப்-ல வந்துடுவேன்னு சொன்னா... காப்-ல வரதுன்னா ஒன்பதரை... பத்துக்கு ஆபீஸ்ல இருந்து கிளம்பிடுவான்னு தான் அர்த்தம்! இப்ப நான் போனா, கொஞ்சம் சீக்கிரம் கூட்டிட்டு

வந்துடலாம்!'' என்றபடியே, வீட்டை விட்டு வெளியேறி யவன்,

''அப்பா... பயப்படாதீங்க! ஒண்ணும் பிரச்சனையிருக் காது! ஸ்கூல்ல யாராவது கிண்டல் பண்ணியிருப் பாங்க.. அதை நம்மகிட்ட சொல்லத் தயங்கிக்கிட்டு, தனுவை எதிர்பார்க்கிறா போல! விடுங்க.. பார்த்துக் கலாம்!'' என்று தந்தைக்குத் தைரியம் சொல்லவும் மறக்கவில்லை!

தனுவின் அலுவலகமிருக்கும் வளாகத்திற்கு வரும் வரையிலும் கூட, தான் அவளைக் கூட்டிப் போக வருவதாக, இளா தனுவிடம் சொல்லவில்லை!

என்னவோ... ஏதோவென்று அவள் பதறக் கூடாதே என்ற எண்ணத்தில் சொல்லாமல் இருந்தவன், அலு வலக வாயிலில் நின்று கொண்டு, அவளுக்கு அழைத் தான்.

இரண்டாவது மணியிலேயே அழைப்பை எடுத்த தன்னொளி, ''என்ன இளா?'' என்றாள் வேகமாய்.

''தனு! நான் டி.எல்.எஃப்க்கு வெளிய வெயிட் பண் றேன்...'' என்று தொடங்கிவிட்டு, என்ன சொல்லி அந்த வாக்கியத்தை நிரப்புவது என்று தெரியாமல் நிறுத்த,

''இங்கயா? எதுவும் பிரச்சனையா?'' - முடிக்காமல் விட்ட வாக்கியத்திற்கான அர்த்தத்தைச் சரியாகப் படித்த மனைவி, நேரடியாக விஷயத்திற்கு வந்தாள்.

''ஹ்ம்ம்! அப்படித்தான் நினைக்கிறேன்... ஆனா.. நீ வேலையை அப்படியே விட்டுட்டு வர வேணாம்... வேலை முடிஞ்சதும் காப்-ல போக வேணாம்... என் னோட வா... கொஞ்சம் சீக்கிரம் வீட்டுக்குப்



போய்டுவோம்!'' என்றான் கணவன், நாலும் உணர்ந்தவ னாய்.

''என்ன பிரச்சனை? சொல்லுங்க!'' என்று பறந்தவ ளிடம்,

''போற வழியில சொல்றேன்.. தனு! நீ வா! வேலை எப்ப முடியும்? இன்னும் நேரமாகுமா?'' என்றான் இளா.

''வேலை ஆல்மோஸ்ட் முடிஞ்சது... கிளம்ப வேண் டியது தான்! நா ஆபீஸ் உள்ள இருந்து வெளிய நடந்து வரதுக்கு... ஃபிஃப்டீன் மினிட்ஸ் பிடிக்கும்! அதுக்குப் பதிலா நீங்களே உள்ள வந்திடுங்க! என்னோட கம்பெனி... டென்த் பிளாக்ல இருக்கு. கீழ வெயிட் பண்ணுங்க... நான் வந்துடுறேன்!'' என்றவள், தன் பொருட்களைச் சேகரித்துக் கொண்டு, மேலாளரிடம் கூறிவிட்டு, லிஃப்ட் நோக்கி ஓடினாள்.

''ஐயோ! என்ன பிரச்சனைன்னு தெரியலையே... கட வுளே!'' என்று நெஞ்சம் வேகமாய் அடித்துக் கொண்டது!

கண்டதையும் கற்பனை செய்த மனதை அடக்கிக் கொண்டு, அவள் கீழ விரைய, இளா அவளுக்காகக் காத் திருந்தான்.

''என்ன பிரச்சனை? என்ன பிரச்சனை?'' என்பதே மனதில் ஓடிக் கொண்டிருக்க, பைக்கின் பின் சீட்டில் வேகம் கொண்டு ஏறியவள், அவனது தோளில் தட்டி, ''ஹ்ம்ம்... போலாம்!'' என்றாள்.

மற்ற எதையும் யோசிக்கும் நிலையில் அவனுமே இல்லை. வண்டியை அங்கிருந்து எடுத்தவனை, ''என்ன? என்ன?'' என்று குடைந்துவிட்டாள் தன்னொளி.

நடந்தது அனைத்தையும் ஒரே மூச்சாக சொல்லி முடித்தவன், ''என்ன கேட்டாலும்... ம்ம்... ம்ஹூம்...

இல்லைன்னா அழுகை! அறைக் கதவைத் திறந்துக்கிட்டாவது செய்யலாம் இல்ல... கதவை அடைச்சு வச்சிட்டு, இப்படிப் பண்ணினா, நானும் அப்பாவும் என்ன பண்றது?'' என்றான் ஆற்றாமையுடன்.

''ஒரு மண்ணும் பண்றதில்லை... எனக்கு போன் பண்றது!! என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க... ரெண்டு பேரும்?'' என்று ஏகத்திற்கும் எரிந்து விழுந்தாள், தன்னொளி.

''நீ வேலையா இருப்பேன்னு...''

''என்ன வேலையா இருந்தா என்ன? அவ ரூமைப் பூட்டிட்டு அரை நாள் உட்கார்ந்திருக்கா... நீங்க ரெண்டு பேரும் மீனம் மேட்சம் பார்த்திட்டு இருந்திருக்கீங்க.. ஐயோ!'' என்று தலையில் அடித்துக் கொண்ட தன்னொளிக்கு, ஏகப்பட்டக் கோபம்!

''ஏன்...எனக்கு போன் பண்ணலை?'' என அவள் அதிலேயே நிற்க,

''நீ.. வேலை அதிகம்ன்னு காலையில சொன்னே இல்ல... அதான்! உன்னைத் தொந்தரவு செய்யணும்ன்னே யோசிச்சுக்கிட்டு...'' என்று அவனும் அதையே திரும்பத் திரும்பக் கூறினான்.

ஒரு நிலைக்கு மேல் கோபம் தாங்க முடியாதவளாய், ''என்னை ஒரு வாட்டி கூடப் பார்க்காத அத்தைக்கு இருந்த நம்பிக்கையில் ஒரு சதவீதம் கூட... உங்களுக்கு என் மேல இல்லை! அப்படித்தானே!?'' என்றாள் சுள்ளென.

சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்த கோபமோ என்னமோ ''லூசு மாதிரி பேசாத தனு!



இங்க நம்பிக்கைங்கிற பேச்சுக்கே இடமில்லை... உன்னோட வேலையை மனசில வச்சுத் தான் நான் கூப்பிடலை!'' என்றான் அவன் சூடாக!

''லூசா? நானா? உங்க சொந்தக்காரங்க மாதிரி சிந்திக்கிற உங்களுக்கு... என்னைப் பார்த்தா லூசாத் தான் தெரியும்!''

''ஹே! தனு! எங்க இருந்து எங்க போயிட்டே? இப்ப எங்க சொந்தக்காரங்க எதுக்கு வந்தாங்க?''

''அடேங்கப்பா! உங்க எருமை... அத்தையை... அருமை அத்தையை...'' - என அவள் தொடங்க,

''தனு! யாரா இருந்தாலும் மரியாதை வேணும்! இதென்ன அதிகப்பிரசங்கித்தனமா!'' என்றான் இளம்பரிதி, கண்டிப்புடன்.

அக்குரல்!! இந்திரா தனுவை அடக்க உபயோகிக்கும் அதே குரல்! இந்திராவின் கண்டிப்பு குரலையும் மிஞ்சிய அழுத்தத்துடனும், மித மிஞ்சிய இரைச்சலாய் இல்லாமல் சன்னமான சத்தத்துடன் வர, தனுவின் குரல் அப்படியே தேய்ந்து மறைந்தது!

பல நிமிடங்கள் கடந்த பின்னரும், மனைவியிடம் இருந்து எந்தப் பதிலும் வராமல் போகவே, ''தனு... அன்னைக்கு நானும் உன்னை சப்போர்ட் பண்ணிப் பேசியிருக்கலாம்... ஆனா... அப்படிப் பேசியிருந்தா...'' என அவன் தொடங்க,

''இதைப் பத்திப் பேசாதீங்கன்னு.. நான் அன்னைக்கே சொன்னேன்ல்ல! வேணாம்... விட்டுடுங்க!''

''விட முடியாது, தனு! நீ என்னைப் பத்தி நினைக்கிறது... தப்புன்னு எடுத்துச் சொல்ல எனக்கொரு சான்ஸ் கொடுக்கக் கூடாதா?''

''உங்களோட எந்த விளக்கமும் எனக்குத் தேவையில்லை..'' என்று அழுத்தம் திருத்தமாய் மறுத்த மனைவி,

''ப்ளீஸ் தனு! கொஞ்சம் கூடப் புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பிடிச்சா எப்படி? அன்னைக்கு... அவங்களை நான் சப்போர்ட் பண்ணலைன்னா...'' என்று ஆரம்பிக்க,

''இன்னும் ஒரு வார்த்தை பேசினீங்க... நான் வண்டியை விட்டுக் குதிச்சிடுவேன்!'' என்ற தனு, இரு பக்கமும் கால் போட்டு அமர்ந்திருந்த நிலையிலிருந்து, தன் வலக்காலை லேசாய் தூக்கினாள்.

அந்த சாகசத்தை அவள் நிகழ்த்திய இடம், அண்ணா பல்கலைக்கழகம் தாண்டி, மத்தியக் கைலாஷ் செல்வதற்காக அமைப்பட்டிருந்த பாலத்தில்!!

மனைவியின் லூசுத்தனமான சாகசத்தில், வண்டி ஒரு விநாடி நிலை தடுமாற, இளம்பரிதி விதிர்விதிர்த்துப் போனான்!

''ஹேய்ய்ய்! என்ன பண்றே நீ?'' என்று அவன் கூவியக் கூவலுடன் சேர்த்து, வண்டியும் ஆட, தனுவும் பயந்துவிட்டாள்!!

சாகசம்.. கோபம்.. எரிச்சல் என்று எல்லா மண்ணாங்கட்டியையும் கைவிட்டு, அப்படியே வண்டியில் அமர்ந்தவள், கணவனின் இடுப்பில் கையிட்டு, அவன் முதுகோடு இறுக ஒண்டினாள்.

''முருகா... முருகா.. முருகா...'' என அவள் உதடுகள் முணுமுணுக்க,

அதற்குள் வண்டியின் தடுமாற்றத்தைச் சரி செய்த இளா, ''எதுக்கு முருகனைக் கூப்பிடுறே? எமனைக்



கூப்பிட்டிருக்க வேண்டியது தானே?'' என்றான் நக்கலாக.

''அய்யோ! அபசகுனமா பேசாதீங்க! அய்யோ! முருகா! முருகா! முருகா!'' என்ற தன்னொளி, பாலத்தின் சுவர் வழியே கீழிருக்கும் ரோட்டைப் பார்த்துவிட்டு, ''முருகா! முருகா! முருகா!'' என்றாள் வேகமாய்!!

ஏனோ கோபத்திற்குப் பதிலாய், சிரிப்பே வந்தது இளாவிற்கு!

யோசிக்காமல் பேசிவிடுவது! பின்னர், ''முருகா... கந்தா'' என்று அடித்துக் கொண்டு, அலற வேண்டியது! பப்பா! - என்று மனதிற்குள் சீராட்டியவன்,

''தனு.. அன்னைக்கு நடந்ததுக்கு விளக்கம் சொல்லத் தான் நீ விடலை! ஜஸ்ட் ஒரு சாரியாவது சொல்லிக்கிறேனே? ப்ளீஸ்! இனிமேல் என்னால.. இப்படி நடு பிரிட்ஜ்ல.. பைக் ரேஸ் சாம்பியன் மாதிரி ஸ்கிட் எல்லாம் பண்ண முடியாது! ப்ளீஸ் மா! நா என்ன சொல்லியிருந்தாலும்.. அதுக்கு சாரி! நீயா எப்போ விளக்கம் கேட்கிறியோ... அப்போ என்னோட பாய்ண்ட் ஆஃப் வியூவை நான் சொல்றேன்... அதை அக்சப்ட் பண்ணிக்கிறதும் பண்ணிக்காததும் உன்னோட இஷ்டம்!'' என்றான் அவன்.

ஆனால், இளா பேசியதெல்லாம் தனுவின் மனதில் பதியவே இல்லை!

பைக் ஆடிய ஆட்டமும், அதைக் கணவன் சமாளித்த விதமும், பாலம் இருந்த உயரமும், கீழே சர்... சர் என்று பறந்து கொண்டிருந்த வாகனங்களுமே ஒரு கிலியை உண்டு பண்ணியிருக்க, அவன் முதுகோடு முகம் வைத்து, மெல்ல ''ம்ம்'' என்றாள் அவள், ஏதோ நினைவாக!

அவன் ஏதோ நீளமாய் பேசியிருக்கிறான்... சும்மா ஒரு

"ம்ம்"மைப் போட்டு வைப்போம் என்றெண்ணினாள் போலும்!

இதை உணராத இளம்பரிதியோ, தான் சொன்னதற்குத் தான் "ம்ம்" என்கிறாள் என்றெண்ணி, பிரச்சனையை ஒத்தி வைததான்!

மீதமிருந்த தூரத்தை, இருவரும் ஓரோர் எண்ணத்துடன் பயணித்தப் போதும், வீடு நெருங்க நெருங்க "பூ என்ன செய்கிறாளோ?" என்ற பதட்டமே மேலோங்கி நின்றது!

வண்டி நின்றதும், நிற்காததுமாய் தன்னொளி இறங்கி வீட்டினுள் ஓடவும், கட்டபொம்மன் "பூ... அண்ணி வந்துட்டா..." என்று குரல் கொடுக்கவும் சரியாக இருந்தது!

கட்டபொம்மனின் குரலுடன் சேர்த்து "பூ...என்னடா? ஏன் இப்படிப் பயமுறுத்தறே!" என்ற தனுவின் குரலும் கேட்க, அக்குரலுக்கு எதிரொலி போல், பூவின் அறைக்கதவு திறந்தது!

தனு கதவருகே வந்திருக்க, "அண்ணி... உள்ள வாங்க..." என்று தனுவை உள்ளே இழுத்தப் பூவின் அழுகை, வெளியிருந்த ஆண்களின் நெஞ்சில் வேண்டாத பல கற்பனைகளை உண்டு பண்ண,

ஐந்து நிமிட நேரத்தில் வெளியே வந்த தன்னொளியின் முகத்தில் கவலைக்குப் பதிலாய் சந்தோஷமே பூத்திருந்ததைக் கண்டதும், புரியாமல் பார்த்தனர் இருவரும்!

அடுக்களைக்குள் சென்று சக்கரையை ஓர் கிண்ணத்தில் போட்டு எடுத்து வந்த அந்த வீட்டு மருமகள், "பூ... பெரிய மனுஷி ஆகிட்டா, மாமா!" என்றாள் ஓர் தாயின் பூரிப்புடன்!



## 13

தன்னொளியின் சந்தோஷத்திற்கு மாறாய், கண்ணீர் உகுத்தார் கட்டபொம்மன்!

"எம் புள்ள அம்மா இல்லாம... என்ன கஷ்டம் பட்டுடுச்சு! எங்களை இப்படித் தவிக்க விட்டுட்டுப் போயிட்டியே தங்கம்!" என்று ஆரம்பித்தவர், தொடர்ந்து பத்து நிமிடங்களுக்கு மனைவியை இழந்தத் துக்கத்தை அரற்றித் தீர்த்தார்.

ஓர் நிலையில், "என்ன மாமா இது? எந்தவொரு பொண்ணுக்குமே... இந்த விஷயம் முதல் தடவையா நடக்கும் போது, ஒரு பயம் இருக்கத் தான் செய்யும்! அதுக்குப் போய்... அழுவாங்களா?" என்று எடுத்துக் கூறிய மருமகள்,

"நீங்க அழுதா... பூக்கும் கஷ்டமா இருக்கும்! நமக்கு அம்மா இல்லையேங்கிற ஏக்கம்... அவளோட மனசையும் சரி.. உடம்பையும் சரி பாதிக்கும்! ப்ளீஸ் மாமா!" என்றாள், தன்மையாய்.

கூடவே, "அத்தை இல்லாத குறை தெரியாம நான் அவளைப் பார்த்துக்கிறேன் மாமா! நம்புங்க!" என்றாள் அவர் கையைப் பிடித்துக் கொண்டு.

"எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை... நன்றின்னு சொல்லி உன்னை அந்நியப்படுத்த விரும்பல..." என்றவர், அவள் பிடியிலிருந்தத் தன் கையை எடுத்து, அவள்

தலை மீது வைத்து, "நீ நல்லா இருக்கணும்ம்மா" என்றார் ஆசீர்வதமாய்!

இமைகளின் கரை தொட்டக் கண்ணீரை அடக்கிக் கொண்டு, தாய்க்கு அழைப்பு விடுத்த தன்னொளி, பூப்படைந்த ஓர் பெண்ணின் வீட்டில் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதைக் கேட்டறிந்து கொண்டு, அதை இம்மி பிசகாமல் செய்தாள்.

மகளின் சந்தேகங்கள் அனைத்திற்கும் பதில் கூறிய போதும், "எதுக்கும்... உங்க வீட்டுப் பக்கம் எப்படி செய்வாங்கன்னு, மாப்பிள்ளையோட பெரியம்மா... அத்தை யார்கிட்டயாவது கேட்டுக்கோ, தனு!" எனக் கூறவும் மறக்கவில்லை, இந்திரா.

மகள், ருத்ரதாண்டவம் ஆடப் போகிறாள் என்று இந்திரா எதிர்பார்த்தற்கு மாறாக, "சரிம்மா! கேட்டுக் கிறேன்... ராத்திரி நேரத்தில வேணாம்... காலையில கூப்பிட்டுக் கேட்டுக்கிறேன்!" என்ற மகளைக் கன்னம் வழித்துத் திருஷ்டிக் கழிக்க வேண்டும் போலிருந்தது, தாய்க்கு!

தாயிடம் கூறியது போலவே, அடுத்த நாள் காலை, இளாவின் உறவினர்களுக்கு அழைத்து, விவரம் கூறினாள் தன்னொளி!

அவர்களது தொலைப்பேசி எண்களை மனைவி கேட்ட போது, இளாவுக்கு இருந்த பதட்டம், அவள் தன்மையாய் அவர்களிடம் பேசியபோது, வியப்பாய் மாறிப் போனது!!

அதுவும், அந்த எருமை அத்தையை... ச்சே.. ச்சே... அருமை அத்தையை அழைத்து, "பெரியம்மா... நான் தன்னொளி பேசுறேன்! செஞ்சில தங்கம் அத்தையோட



மருமக!" என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்ட தினுசில்,

"அடடா! மழைடா... ஐஸ் மழைடா!" என்று பாடத் தோன்றியது, இளாவிற்கு!

இதற்கே வியந்தவன்,

"பச்சை முட்டையைக் குடிச்சதும்... அதிலேயே நல்லெண்ணெய் ஊத்திக் குடிக்கச் சொல்லணுமா?!"

"சரி பெரியம்மா.. நீங்க சொல்றபடியே செஞ்சுடுறேன்!"

"இப்ப... பூக்கு லீவ் கிடைக்குமா தெரியல? ஹாஃப் - ஏர்லி லீவ்ல சடங்கு வச்சுக்கலாம்!"

"கண்டிப்பா பெரியம்மா! எல்லாரையும் கூப்பிடுவோம்! எனக்கு... யாரையும் தெரியாது.. நீங்க சொல்லுங்க.. நா வந்து கூப்பிடுறேன்!"

"நீங்க.. இந்த வார ஞாயிற்றுக்கிழமை வந்துட்டுப் போங்க, பெரியம்மா!"

"ஹோ... அப்படியா? சரி பரவாயில்லை! உங்களால எப்ப முடியுதோ... வாங்க!" என்று மனைவி, தேனொழுகப் பேசவும், கிறுகிறுத்துப் போய்விட்டான்!!

அவள் அலைப்பேசியை வைத்ததும், மயக்கம் போடுவது போல் பாவனை செய்தவன், "ஆனாலும்... இவ்வளவு ஐஸ் ஆகாது தனு! என்ன ஐஸ்.... என்ன ஐஸ்!" என்று கேலி செய்ய,

"ஐஸ் ஒண்ணுமில்லை!" என்று நொடித்தவளைத் தடுத்து,

"நேத்து... என்ன சொன்னே? எருமை அத்தையா? அதை அவங்ககிட்ட சொல்லியிருக்கணும்.." என்றான் சுண்டு விரல் நீட்டி.

"பெரிய இது? போங்களேன்... போய்ச் சொல்லுங்க! ஆனா... நீங்க சொல்ல மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும்! ஏன்னா... நீங்க ஒரு பயந்தாங்கோலி!" என்று குத்தியவள், "நா பேசினது.. பூக்காக! இதுவே... எனக்காகன்னா... அவங்க பக்கம் தலை வச்சுக் கூடப் படுத்திருக்க மாட்டேன்!" என்றாள் பட்டென.

மேலும், "என்னைக்காவது ஒரு நாளைக்கு... அம்மா இருந்திருந்தா நல்லா செஞ்சிருப்பாங்களேங்கிற எண்ணம் அவளுக்குள்ள வந்திடக் கூடாதில்ல... அதான்!" என்றாள் தன் பேச்சுக்கான விளக்கமாய்.

"ஹ்ம்ம்!" - பெருமூச்சு ஒன்றை வெளியேற்றிவிட்டு, நகர்ந்தான் கணவன்!

அடுத்து வந்த இரண்டு நாட்களும், விடுமுறை எடுத்துக் கொண்டு, நாத்தனாரைப் பார்த்துக் கொண்டவள், ஓர் நாள் இரவு, பூ உறங்கியதும் இளம்பரிதியின் அறைக்கதவைத் தட்டிவிட்டு வெளியே காத்திருந்தாள்.

குளித்துவிட்டு உடை மாற்றுவதற்காக அறைக் கதவைச் சாற்றியிருந்த இளம்பரிதி, வேகமாய் வந்து கதவைத் திறக்கையில், தன்னொளியின் பார்வை வரவேற்பறையில் பாய் விரித்துப் படுத்திருந்த கட்டபொம்மன் மீதே படிந்திருந்தது!

அவளது பார்வையைப் பின்பற்றிய இளா, "என்ன தனு? அப்பாவையே ஏன் அப்படிப் பார்க்கிறே?" என்றான் கதவு நிலையில் கை வைத்திருந்த அவளது கரம் தொட்டு. "ஹான்..." - ஜில்லென்றிருந்த அவனது கைகளில் ஸ்பரிசத்தில் சிலிர்த்து, விழித்தாள் தன்னொளி!

அவள் புரியாமல் விழிப்பதை ஓர் சுவாரஸ்யத்துடன் பார்த்திருந்த கணவன், புருவம் உயர்த்தவும்,



"ஹான்... மாமா ஏன் இங்க படுத்திருக்காங்க... தொரை... அவர் ரூம்ல படுக்க விடமாட்டீங்களோ?" என்றாள் சிறு நக்கலும், சிரிப்புமாய்.

"தொரையா? ஆனாலும் உனக்கு கொழுப்பு அதிகமா தான் போச்சு!"

"பேச்சை மாத்தாதீங்க மிஸ்டர்.தொர! இந்த ரூம் என்ன உங்க ராஜ்ஜியமா? நீங்க மட்டும் தான் அங்க படுப்பீங்களோ? பாவம்... மாமா... தனியா படுத்திருக்காங்க!"

"அடடா! என்ன ஒரு கரிசனம்! நானும் தான் தாயே... தனியா படுத்திருக்கேன்..."

"அதான்... ஏன்ங்கிறேன்?? அப்பாவும் பையனுமா ரூம்ல படுக்க வேண்டியது தானே?" என அதிகாரமாய் கேட்ட மனைவியின் தலையில், "நங்"கென்று கொட்ட வேண்டும் போலிருந்தது, இளம்பரிதிக்கு!

சில வினாடிகள் பதில் சொல்லாமல் இருந்தவனை, அவள் ஒற்றைப் புருவம் உயர்த்தி, "ம்ம்ம்!!" என்று மிரட்ட,

கீழ் கண்ணால் அவளை ஓர் பார்வை பார்த்தவன், தன் பார்வையை அவளிடமிருந்து அங்கே இங்கே விலக்காமல் "அப்பாவும் பையனுமா படுக்கிற வயசு தான்! ஆனா... என் அப்பாவோட இல்லை! என் பையனோட!" என்றான் ஓரோர் வார்த்தைக்கும், போதுமான இடை வெளி விட்டு. அதே சமயம், அழுத்தம் திருத்தமாய்!!

அவன் கூறியதன் அர்த்தம் புரிய, தன்னொளிக்கு அரை நிமிடம் பிடித்தது!

புரிந்தபின்னரோ, அவனை நிமிர்ந்துப் பார்க்கவே முடியவில்லை! வெட்கம் ஒரு புறமென்றால், கோபம்

மறுபுறம்! ''முதலிரவு கூட எங்களைக் கேட்டுத் தான் நடக்கும்... எனக் கூறிய உறவுகளிடம் அனுமதி வாங்கிட்டாரா தொர?'' என்று அவன் மீது ஏகக்கடுப்பு வந்தது!

''ச்சே! உனக்குத் தேவையா தனு இது?'' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டு,

''பூவோட சடங்கு விஷயமா பேசணும்!'' என்றாள் அவள், மரத்த முகத்துடன்!

அவளது பேச்சில் குறுகிய முகத்தைச் சமன்செய்துக் கொண்டு, ''ம்ம்... பேசலாம்...'' என்றுவிட்டு, அறைக்குள் பிரவேசித்தான்.

அவன் உடன் நடந்தவள், அவன் கட்டிலில் அமரவும், எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

சில பல நிமிடங்கள் அமைதியாய் கழிந்தன!

''என்கென்னமோ சடங்குல எல்லாம்...'' என இளாவும்,

''உங்க அத்தைக்கிட்டப் பேசினேன்...'' என தனுவும ஒருங்கே தொடங்கி, ஒருவர் மற்றவருக்காக பேச்சை நிறுத்தி என்று இருவரும் மீண்டும் மௌனம் காத்தனர்.

''நீ சொல்லு... தனு!'' என மனைவியை ஊக்கினான் கணவன்.

''ஹ்ம்ம் சரி! உங்க அத்தைகிட்டப் பேசினேன்... துக்கக் காரியம் நடந்த வீட்டில... அடுத்ததா ஒரு நல்லதை நடத்திடணும்ன்னு ஃபீல் பண்றாங்க... அதுவும் டிசம்பர் வரைக்கும் தள்ளிப் போடாம... சீக்கிரமே நடத்திட்டா பரவாயிலலைன்னு நினைக்கிறாங்க...''

''அம்மாகிட்டயும் பேசினேன்... அம்மாவுக்கும் அதே எண்ணம் தான்!''



''நீங்க என்ன சொல்றீங்க? இந்த சன்டே போக அடுத்த சன்டே... நம்ம வீட்டிலேயே ஒரு சின்ன ஃபங்ஷன் மாதிரி வச்சுக்கலாமா?'' என்றாள் தனு, தன் கோரிக்கையாக.

''ஹ்ம்ம்... ஆனா... தனு! எனக்கென்னமோ... இந்த சடங்குல எல்லாம் ஒரு ஈடுபாடே இல்லை! சுத்த மூடப் பழக்க வழக்கமில்லையா? ஒரு பொண்ணு... பெரிய மனுஷி ஆகுறதை விசேஷம் மாதிரி கொண்டாடுறது தப்பில்லையா? அவளுக்கு... எம்பராசிங்-கா (சங்கடமா) இருக்காதா?'' என்றான் அவன், இக்கால இளைஞனாய்!

பொறியியல் பட்டம் பெற்று, ஓர் மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்யும் மனைவிக்கும் இதே எண்ணம் தான் இருக்கும் என்பது அவன் எண்ணம்!

ஆனால் அவளோ!?

''என்ன பேசறீங்க நீங்க? சடங்குங்கிறது ஒரு சம்பிரதாயம் மட்டுமில்லை... அது ஒரு விதமான எடுத்துக் காட்டு!'' - திடமான குரலில் ஆரம்பித்தத் தன்னொளியின் பேச்சு, நீண்டு கொண்டே சென்றது!

''ஏன்... கல்யாணத்தை ஊரைக் கூட்டி... நாலு பேருக்குத் தெரியற மாதிரி பண்றாங்க? சம்பந்தப்பட்ட பொண்ணும்... பையனும் இனிமேல் கணவன் - மனைவி! அதனால இந்தப் பொண்ணை வேற யாரும் தப்பான கண்ணோட்டத்தோட பார்க்கக் கூடாது... அதே மாதிரி அந்தப் பையன் குடும்பஸ்தன் ஆகிட்டான்... அவனுக்குப் பொண்ணு கொடுக்கிறேன்ன்னு யாரும் வரக்கூடாதுன்னு அறிவிக்கத் தான் ஊரைக் கூட்டிக் கல்யாணம் பண்றாங்க!''

''அதே மாதிரி தான், சடங்கும்! எங்க வீட்டில்... கல்யாண வயசில ஒரு பொண்ணு இருக்கான்னு எல்லாருக்கும்

சொல்றோம்! முக்கியமா அவளுக்குத் தாய் ஆகக் கூடிய தகுதி இருக்குன்னு... சொல்றோம்! அதுக்குத் தான் சடங்கு வைக்கிறது!'' - தனுவின் இந்த வாக்கியத்தில், இளம்பரிதிக்கு சுத்தமாக உடன்பாடில்லை!

''என்ன தனு பேசுற நீ? நாமளே... நம்ம பொண்ணை ஒரு காட்சிப் பொருளா ஆக்கி... கண்ட கண்ட விஷயத்துக்கும்வழி வகுக்கிற மாதிரி இல்லை... ஸ்டுபிட்!''

ஆனால், தனு அதற்கும் விடை வைத்திருந்தாள்!

''ஆஹா! அப்போ... மாட்ரிமோனி சைட்ல மாப்பிள்ளை வேணும்ன்னு ஆட் கொடுக்கறீங்களே... அது என்னவாம்?'' என அவனைத் தாக்கியவள்,

''மாட்ரிமோனி சைட்ல போடறதை... உலகமே பார்க்கும்! ஆனா... இது நம்ம உறவுக்குள்ள மட்டும் தான்... ஒருத்தர் மூலமா ஒருத்தருக்கும் விஷயம் பரவி... பூக்கு மாப்பிள்ளை பார்க்கும் போது, வரன் தானா தேடி வரும்!'' என்றாள் உறுதியாக.

ஒன்றும் பேசாமல் தன்னையே பார்த்திருந்த கணவனைத் தீர்க்கமாய் பார்த்தவள், ''கல்யாணத்துக்காக மட்டுமில்ல, இளா! பூவோட மனசிலயும் ஒரு மெச்சூரிட்டி வரும்... நாம பெரியவளா ஆகிட்டோம்... இனிமேல் நமக்குன்னு சில லிமிட்ஸ் இருக்கு! அதை மீறிக் கூடாதுங்கிற எண்ணம் மனசில பதியும்!'' என்றவள்,

''ஏகப்பட்ட ஜன்க்ஃபூட்... கண்ட்ரோல் இல்லா சாப்பாடுன்னு. இப்போ... சில குழந்தைங்க... எட்டு வயசு... ஒன்பது வயசுலேயே ஏஜ் அட்டெண்ட் பண்ணிடறாங்க... அவங்களுக்கு இப்படியொரு சடங்கு வைக்கிறது சங்கடம் தான்... நான் ஒத்துக்கிறேன்! ஆனா.... பூ... சரிபான



வயசில தானே பெரிய மனுஷி ஆகியிருக்கா! அப்புறம் என்ன?'' என்றாள் கேள்வியாக.

''நீங்க நினைக்கலாம்... ட்வென்டிஃபர்ஸ்ட் செஞ்சுரில இப்படி பேசுறாளே! ஆனா... இந்த ட்வென்டிஃபர்ஸ்ட் செஞ்சுரில தான், பெண்களுக்கு எதிரா நிறைய வன்முறைகள் நடக்குது! அதுக்கு... எத்தனையோ காரணங்கள் இருக்கலாம்... ஆனா என்னைப் பொருத்தவரைக்கும், எதிராளியைத் திருத்த முடியாது... அதுக்கு நிறைய காலமாகும்! நாம நம்ம சைடுல இருந்து, பாதுகாப்பா இருந்துக்கிறது நல்லதில்லையா? அந்தப் பாதுகாப்பு உணர்வு உண்டாக... ஒரு மெச்சூரிட்டி வேணும்! அதுக்கு... இந்த சடங்கு ஒரு நல்ல ஸ்டார்ட்டா இருக்கும்!'' என்றாள் ஆணித்தரமாய்!

கைகளை மார்பிற்கு குறுக்கே கட்டிக் கெண்டு, தன் பார்வையை சுவாரஸ்யப் பார்வையாய் மாற்றியிருந்த கணவனைப் பார்த்து லேசாய் புன்னகைத்தவள், ''நம்ம பெரியவங்க... இந்த சடங்கு... சம்பிரதாயம்... எல்லாத்தையும் ஒரு காரணத்தோட தான் இளா வச்சிருக்காங்க! அதை ஏன்... நாம எம்பராஸ்மெண்ட்... நாகரீகம்... அது இதுன்னு ஒத்தி வைக்கணும்?'' என்றாள் கேள்வியாக.

''ம்ம்ம்...'' என அவன் இழுக்க,

''எங்க அம்மாவோட வொர்க் பண்ண ஆன்ட்டியோட பொண்ணு... பதினெட்டு வயசு வரைக்கும் பெரிய மனுஷி ஆகலை! எத்தனை டாக்டர்கிட்டப் போனாங்க தெரியுமா? லாட்ஸ் ஆப் மெடிசின்ஸ்... ஊசி! கடைசியா... நிறைய பணம் செலவழிச்சு ட்ரீட்மெண்ட் பண்ணி, அவ பெரிய மனுஷியானா! இவ்வளவு கஷ்டப்பட்டு கிடைச்சா... அது அச்சீவ்மென்ட்! இயற்கையா நடந்தா... எம்பராஸ்மென்ட்டா?'' என்றாள் கேள்வியாக!

இதற்கு என்ன பதில் சொல்வது? சரணடைவதைத் தவிர!

''ஓகே! ஓகே! நீ இவ்வளவு தூரம் சொன்னதுக்கு அப்புறம்... மறுக்கிறது என்ன இருக்கு? உன்னோட விருப்பப்படியே நல்லாப் பண்ணிடலாம்! என்றான் அவள் கணவனாக.

''என்னோட விருப்பத்துக்கா... ஒண்ணும் பண்ண வேணாம்!'' என அவள் லேசாய் முறுக்கிக் கொள்ள,

கட்டிலிலிருந்து எழுந்து வந்து, அவளது கைகளைப் பிடித்துக் கொண்டவன், ''இந்த ஃபன்க்ஷனுக்கு இப்படியொரு பாயிண்ட் ஆஃப் வியூ இருக்கும்ன்னு நான் நினைக்கவே இல்லை... தனு! பட்... நீ சொன்னதும் தான் புரியுது! உனக்காக பண்ணலாம்ன்னு இல்லை... நம்ம பெரியவங்களுக்காகப் பண்ணலாம்'' என்றான் அவனும், உணர்ந்த குரலில்.

''தேங்க்ஸ் இளா!'' எனத் தன் முகத்தை அண்ணாந்து பார்த்துச் சொன்ன மனைவியின் முகத்தைக் கையிலேந்திக் கொள்ள வேண்டும் போலிருந்தது, இளாவிற்கு!

''உன்கிட்ட இருந்து இப்படியொரு தாக்குதலை நான் எதிர்பார்க்கவே இல்லை... தனு! இந்தக் காலத்துப் பொண்ணு... அதுவும் வேலைக்குப் போய் சம்பாதிக்கிற பொண்ணு...'' என அவன் வியக்க,

''எந்தக் காலம்னாலும் பொண்ணுங்க... பொண்ணுங்க தான், இளா!'' - பட்டெனப் பதில் கூறியவள்,

''பொண்ணுங்க இந்தக் காலத்தில எவ்வளவோ முன்னேறியிருக்காங்க தான்! ஆனா... அதுக்காக... நம் முன்னோர்கள் சொன்ன எல்லாமே தப்பு... மூடநம்பிக்கைன்னு பெண்ணியம் பேசினா... அதை விட முட்டாள்தனம் எதுவுமே இல்லை!''



''என்னோட பிரண்ட்ஸ் சில பேர்... பீரியட்ஸ் டைம்ல, தரையில படுக்க வைக்கிறாங்க... கிச்சன்குள்ள விட மாட்டறாங்க... அப்படி இப்படின்னு கம்ளைன்ட் பண்ணுவாங்க!''

''ஆனா... அதுக்கெல்லாம் ஒரு ரீசன் இருக்கு! பெண்களோட அந்த நாட்களில் நிறைய ப்ளட் லாஸ் இருக்கும்... அதனால நிறைய கிருமிகள் அவங்க உடம்பில இருக்கும்! அந்தக் கிருமிகளோட கிச்சன்குள்ளப் போய்... மத்தவங்களுக்குச் சமைச்சுப் போட்டா... எல்லாரோட உடல்நிலையும் பாதிக்கும்! சேம்வே... சின்னக் குழந்தைகளைக் தூக்கக் கூடாது... பச்சை மரத்தைப் பார்க்கக் கூடாதுன்னு சொல்றதெல்லாம்... இதனா தான்!''

''அப்புறம்... அந்தப் பாய்ல படுக்கிற மேட்டர்! ஃபோர்ம் பெட்ல படுக்கிறதை விடவும்... தரையில் பாய் விரிச்சுப் படுத்துப் பாருங்க... காலையில் எழுந்துக்கும் போது, உடம்பு வலியெல்லாம் பறந்து போயிடும்! சாதாரணமாகவே இப்படின்னா... லேடீஸ்க்கு அந்த டைம்ல அப்படியொரு உடம்பு வலி இருக்கும்... அதையெல்லாம் மனசில வச்சுத்தான்... தரையில படுக்கணும்ன்னு பெரியவங்க சொன்னாங்க!'' என்றாள் மிக நீளமாய்.

அவள் பேசி முடித்து, ஆசுவாச மூச்சு விட்டுக் கொள்ளவும், சடசடவென கை தட்டிய இளா ''நீ பேசாம... பட்டிமன்றத்துக்குப் போகலாம், தனு! சூப்பர்ப் ஆர்குமென்ட்ஸ்!'' என்றான் பெருமிதமாய்!!

இதுவரை, கண்ணில் தீவிரத்துடன் பேசிக் கொண்டிருந்த ''ஹே இளா! போங்கப்பா!'' என்றாள் வெட்கத்துடன்!

அவளுடன் கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, ''இதெல்லாம்... அத்தையோட ட்ரைனிங்கா?'' என்றான் அவன், அவளது கன்னம் தட்டி.

''ஹ்ம்ம்... கொஞ்சம்! அம்மாவும் சொல்வாங்க... ஆனா... எனக்கே நம்ம கல்ச்சர் மேலே ஒரு ஈடுபாடு உண்டு... பெரியவங்க ஒரு விஷயம் சொல்லியிருக்காங்கன்னா அதுக்கு நிச்சயம் ஒரு காரணம் இருக்கும்ன்னு நம்புவேன்...''

''ஹ்ம்ம்! அப்போ... சடங்கு விஷயத்தில மட்டுமில்ல... வேற நிறைய விஷயம் இருக்குப் போலவே?'' - புருவம் உயர்த்தினான் கணவன்!

''ஹ்ம்ம்... யா! எனக்கு... என்னோட கல்யாணம்... முன்னாடி காலம் மாதிரி மூணு நாளைக்கு நடக்கணும்ன்னு ஆசை!'' என்றபோது அவள் முகத்தில் அப்படியொரு ஏக்கம்!

கணவன் முகத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியை உணராமல், அவள் போக்கில் பேசிக் கொண்டே சென்றாள் தன்னொளி!

''மூணு நாள் கல்யாணம்ங்கிறது... இப்ப இருக்க அவசர யுகத்தில சாத்தியமில்லை தான்... ஆனா... ரெண்டு நாள் கல்யாணம்ன்னாலும்... ஒரொரு சடங்கையும் பார்த்துப் பார்த்துச் செய்யணும்ன்னு ஆசை!''

''முதல் நாள்... மாப்பிள்ளை அழைப்பு! ஆரத்தி! நலங்குன்னு ஆரம்பிச்சு... அடுத்த நாள் நடக்கிற ஒரொரு சடங்கு மேலையும் எனக்கு அப்படியொரு கிரேஸ்! நம்ம சைடு கல்யாணத்தில்... அம்மி மிதிச்சதும்... அருந்ததி பார்த்திட்டு... குலம் வாழும் பிள்ளை வச்சு ஒரு சடங்கு செய்வாங்களே! ச்சே! என்னமா யோசிச்சிருக்காங்க இல்ல...! அவங்களோட குலம் தழைக்க... வர மருமக



ஒரு பிள்ளையைப் பெத்துக் கொடுக்கணும்ன்னு... கல்யாண நேரத்திலேயே எல்லாரும் ஆசீர்வாதம் பண்ற மாதிரி என்ன திங்கிங் இல்லையா? ஐ ஜஸ்ட் லவ் ஆல் தட்!'' என்றாள் மிகுந்த ஆசையுடன்!!

பின்னர் அவளே, ''நாம் எவ்வளவுக்கு எவ்வளவு ஆசைப்பட்டேனோ... அதுக்கு நேர்மாறா நம்ம கல்யாணம் நடந்துடுச்சு! ப்ச்! என்ன பண்றது?'' என்று உதடு பிதுக்கிக் கொண்டு,

''ஓவரா எதிர்ப்பார்த்தா... இப்படித் தான் பெரிய ஆப்பா வரும் போல...'' என்றாள் வருத்தம் மேலோங்க!

கூடவே, ''இப்பெல்லாம்... நான் எதிர்பார்க்கிறதையே விட்டுட்டேன்! எதுக்கு எதிர்பார்க்கணும்? அது நடக்கலைன்னதும்... எதுக்குத் துவண்டு போகணும் இல்லையா? சிம்பிள்!'' என்றாள் சிரிப்புடன்!!

சொல்லியவளுக்கு ''சிம்பிளாக'' இருந்ததோ என்னவோ, கேட்டிருந்த அவனுக்கு ''சிம்பிளாக'' இல்லை அவளது வருத்தம்!

''ஓகே.. லேட் ஆகிடுச்சு! குட் நைட்!'' என்றவாறே அறையை விட்டு வெளியேறியவளையே பார்த்திருந்த இளம்பரிதியின் முகத்தில், வருத்தக்கோடுகளின் ஊடே யோசனையின் சாயல்!

## 14

தன்னொளியின் விருப்பப்படியே பூவின் பூப்புனித நீராட்டு விழா, சிறப்பாக நடைபெற்றது.

நெருங்கிய சொந்தங்களை மட்டுமே அழைத்திருந்த போதும், ஒருவரது நெஞ்சம் கூட வாடாமல் பின்முறை செய்து அனுப்பினாள் தன்னொளி!

முகத்தையும் நீட்டாமல், அதே நேரம் அதிகமாகவும் ஒட்டாமல், தேவைக்கேற்ப அவர்களிடம் பேசிய மகளைப் பார்க்க, இந்திராவிற்கே பெருமை பெருமை தாங்க முடியவில்லை!

அதுவும், முந்தையச் சந்திப்பில் மகளைக் குற்றம் சொல்லிய பெரிய உறவுகளில் ஒருத்தி, ''தங்கம்... தங்கம்போல மருமக கூட்டியிருக்கா!'' என்று கூறியதில், இந்திராவின் கண்கள் ஆனந்தமாய் நிரம்பியே விட்டன!

இதற்கே இப்படியென்றால், அந்தப் பெரியம்மா... அது தான்... அந்த எருமை... ச்சே... அருமை அத்தை... ''தீர்க்க சுமங்கலியா... நூறு வயசுக்கு இருக்கணும்... தன்னொளி! அடுத்த வருஷம்... எங்க தங்கம் மாதிரி ஒரு பிள்ளையைப் பெத்து எடுத்திடணும்!'' என்றார், தன்னொளி கொடுத்த செய்முறையை வாங்கியபடியே!

தன் தலை மீது கை வைத்த ஆசீர்வாதம் செய்தவரிடம் ஏதும் மறுத்துப் பேசாவிட்டாலும் தன்னொளியின் முகம் இறுகுவதும்... இலகுத்தன்மையை இழப்பதுமாய் இருப்பதை அவளது கணவன் மட்டுமல்ல, மற்றொரு ஜீவனும் கணக்கிலெடுத்தது! நோ... நோ... ஸ்டாப் தி கற்பனை... அந்த ஜீவன்... வில்லியல்ல! நம் கதையின் கரு... இந்திரா!!

''என்ன செய்து... மகளைச் சரிசெய்யலாம்?'' என்ற உலகளாவிய திட்டம் தீட்டுதலிலேயே, இந்திரா உழன்று கொண்டிருக்க,

அவளது ரெண்டாவது மகள் வாயிலாக, அந்தத் திட்டம் நிறைவேற ஒரு முனைப்புக் கிடைத்தது!



விழா முடிந்து அனைவரும் கிளம்பிவிட, வீட்டினர் மட்டுமே தனித்திருந்த வேளையில்,

''அத்தான்... ஒரு ட்ரீட்க்கு ஏற்பாடு பண்றது!'' என்றாள் அருள், இளம்பரிதியிடம்!

''எதுக்கு ட்ரீட்?'' என்று தனுவும்,

''ஏற்பாடு பண்ணிட்டாப் போச்சு!'' என்று இளாவும் ஒருங்கே கூற,

''ஹே தண்ணி! சும்மா இரு... அத்தான் தான் தரேன்னு சொல்றாங்க இல்ல... அப்புறம் என்ன நீ நடுல!'' என்றாள் அருள், தமக்கையிடம்.

''தண்ணியா? எங்க அண்ணியைத் தண்ணி சொல்லாதீங்க... நல்ல இல்ல!'' என்றாள் பூ, தனுவிடம் ஒண்டிக் கொண்டு.

''ஏய்... கனகாம்பரம்!! மீ டாக்... அத்தான் டாக்... ஒய் யூ அண்ட் யுவர் தண்ணி... ச்சே அண்ணி மிடில் மிடில் டாக்?? டோன்ட் டாக்!'' என்றாள் அருள், சின்னவளிடம் அதிகாரமாய்!

''கனகாம்பரமா? இதென்ன புது பேரு?'' என்று தனு, தங்கையை அதட்டினால்,

''அண்ணி... தண்ணி! தண்ணி... அண்ணி! செம ரைமிங்கா இருக்கில்ல... அருள்!'' எனக் கூறி மைத்துனிக்கு ஆதரவு கொடுத்தான், இளா!!

''வேணாம்... அவளோட சேர்ந்துக்கிட்டு... என்கிட்டே அடி வாங்காதீங்க!'' என்று தனு மிரட்ட,

சோபாவிலிருந்து எழுந்து, இடை வரைக் குனிந்து, வாய் மேல் கை வைத்து, ''உங்கள் சொல்படியே ஆகட்டும், மகாராணி!'' என்று இளா கூற, அனைவரும் நகைத்தனர்.

"பெரிய பயந்தவர்!" என்று உதடுப் பிதுக்கி, அவனுக்கு அழகு காண்பித்தவள்,

"மேட்டருக்கு வருவோம்... அதென்னடி பூவைக் கனகாம்பரம்ன்னு சொல்றே?" என்றாள் தங்கையிடம்.

"ம்ம். சொல்லிட்டா போச்சு!" என்று அருள், தன் சுடிதாரில் இல்லாத நீளக் கையை மடக்கிவிட்டபடியே, சற்று முன்னே நகர்ந்து உட்கார்ந்தாள்.

அனைவரின் முகத்திலும் படர்ந்திருந்த சிரிப்பின் மத்தியில், தன் விளக்கத்தைக் கூற ஆரம்பித்தாள்.

"உன்னோட நாத்தனார் பேர் என்ன?"

"பூங்குழலி! அழகான பேர்... பொன்னியின் செல்வன்ல வர சூப்பர்ப் கேரக்டர்! மாமா... கல்கியோட விசிறியாம்.. சோ... பூங்குழலி!"

"காரணமெல்லாம் கேட்டேனா? கேட்டதுக்கு மட்டும் பதில் சொன்ன போதும்... நொய்... நொய்ன்னு பேசாத!"

"இதை சொல்ற மூஞ்சியைப் பாரு!"

"ஏன்.... என் மூஞ்சிக்கு என்ன குறைச்சல்?" என்று அக்காவிடம் பழிப்புக் காட்டியவளிடம், "உன் அழகு புராணத்தைக் கேட்க... இங்க யாரும் காத்துக்கிட்டு இருக்கல... நீ முதல பேர் விளக்கத்தைச் சொல்லு!" என்றாள் அக்கா, அதிகாரமாய்!

"சரியான பொறாமைப்பிடிச்சவ! போடி!" என்று கழுத்தை நொடித்தத் தங்கையோ, அதற்கு மேல் வம்பு பண்ணாமல்,

"அவளை வீட்டில் எப்படி கூப்புடுவீங்க?" என்றாள் மீண்டும் ஐன்ஸ்டீன் பாணியில்.

"பூ..."



"ஒரு படத்தில் வருமே... பூவை பூன்னும் சொல்லலாம்... புய்பம்ன்னும் சொல்லலாம்... புஷ்பம்ன்னும் சொல்லலாம்..." என்று அருள் தொடங்க,

"அண்ணா... ஹான்..." என்று பூ, சிணுங்க,

"முதல்ல... புய்பம்ன்னு தான் கூப்பிடலாம்ன்னு நினைச்சேன்... ஆனா... இந்தப் புள்ள முகத்தைப் பாரேன்... அப்படியே கீரணிப்பழத்தைக் கட் பண்ணி வச்ச மாதிரி... ஆரஞ்சு கலர்ல ஜோரா இல்ல! அதான்... ஆரஞ்சு கலர்ல என்ன பூ இருக்குன்னு யோசிச்சு, மண்டையைப் பிச்சுக்கிட்டு... கனகாம்பரத்தைக் கண்டுபிடிச்சேன்! எப்படி!?" என்றாள் அருள் நீளமாக!!

"சகிக்கலை!" என்று தனு, எரிச்சல் கொள்ள,

"பேசாம நீ... ஒரு சயின்ஸ்டிட்டா போலாம் அருள்! எப்படியெல்லாம் கண்டுப்பிடிக்கற??! இந்தக் கனகாம்பரத்தை விடவும்... எனக்கு தண்ணியும்... ஒலியும் ஒளியும் தான் ரொம்ப பிடிச்சிருக்கு!" என்றாள் இளா, மனைவியின் முகம் பார்த்துக் கொண்டே.

"ச்சே! உங்க ஒராளுக்குத் தான் அத்தான்... என்னோட அருமை பெருமையெல்லாம் தெரியுது!" என்று அத்தானிடம் ஹை-பை கொடுத்தவள்,

"ஒலியும் ஒளியும்... செம பேர் இல்ல அத்தான்!" என்றாள் அக்காவைப் பார்த்து நக்கலாய் சிரித்தாள்.

"வேணாம்... அண்ணி... கோபமா இருக்காங்க... ரெண்டு பேரும் திட்டு வாங்கப் போறீங்க..." என்று பூ, எச்சரிக்க,

"உங்க அண்ணி... என்ன தெலுங்குப்பட வில்லனா? அவங்க வரதுக்கு முன்னாடியே... நீ தூபம் போடுறே?" என்றாள் அருள், சிரிப்புடன்.

அதற்கும் ஓர் ஹை-பை பரிமாறப்பட,

''நிஜமாவே அருள்... உங்கக்கா கோபமா பேசும் போது பார்க்கணுமே... கண்ணில இருந்துத் தீப்பொறி பறக்க, பத்து வீட்டுக்கும் சத்தம் கேட்கிற மாதிரி... ஒரு ஒளியும்... ஒலியும் நாடகம் தான்!'' என்றான் இளம்பரிதி.

''ஹஹ்ஹா! நல்லவேளை... இந்த ஒலியும் ஒளியும் எங்க வீட்டில இருந்து ஒழிஞ்சுப் போச்சு... நீங்க மாட்டிக் கிட்டீங்க!'' என்று அருள் கைகொட்டிச் சிரிக்கவும்,

''அருள்! பேச்சைக் குறை!'' என்று இந்திரா அடக் கவும்,

சோபாவிலிருந்து விருட்டென எழுந்து, தன்னொளி உள்ளே செல்லவும்,

''ஹே! சாரி தனு... சும்மா விளையாட்டுக்குடா!'' என்று இளா உடன் எழவும் சரியாக இருந்தது!

கணவன் பேசியதை மதிக்காமல், அவள் அறைக்கதவை அடைக்க முயல, தன் பலம் கொண்டு தள்ளியன், ''சாரி தனு!'' என்றவாறே உள்ளே நுழைந்தான்.

கதவு அடைந்த மறுவினாடி, ''நீங்க எதுக்கு இப்ப வந்தீங்க?'' என்றாள் கடுப்புடன்!

''அதுவா... என் பொண்டாட்டியைச் சமாதானம் செய்ய வந்தேன்...''

''ஒரு மண்ணும் தேவையில்லை... போங்க... போய்... உங்க மச்சினியோட சேர்ந்துக்கிட்டு என்னைக் கிண்டல் பண்ணுங்க!''

''உனக்கு... அருளோட நான் பேசுறது கோபமா? இல்ல... உன்னைக் கிண்டல் பண்றது கோபமா?'' என் அவன் புருவம் உயர்த்திச் சிரிக்க,



''ஒரு மண்ணுக்கும் கோபமில்ல... போங்க நீங்க!''

''நீ மட்டும் பூவோட சேர்ந்துகிட்டு... என்னைக் கிண்டல் பண்றே? நான் பண்ணா மட்டும் தப்பா?'' என்றான் அவன், மீண்டும் சிரிப்பாகவே!

''...''

''சரி விடு! இப்ப என்ன... நான் அருளைக் கேலி பண்ணனும் அவ்வளவு தானே? விடு... வெளுத்து வாங்கிட லாம்!'' என்றவன்,

''என்னோட வா!'' என அவளை இழுத்துக் கொண்டே, வெளியே சென்றான்.

''விடுங்க... விடுங்க...'' என்று சிணுங்கியபோதும், சிறு குழந்தையின் ஆவலுடன் சென்றாள் மனையாள்!

அறையை விட்டு வெளியே வந்ததும், அருளைப் பார்த்து,''ஹே... மிஸ்.லேடி அப்துல் கலாம்! இங்க வா!'' எனற் ஆரவாரத்துடன் ஆரம்பித்தவன்,

''ஆஹா... இப்படி கவுந்துட்டீங்களே... மச்சான்... கவுந்துட்டீங்களே!'' என்று அருள் கூறியதில், மற்றவர் களைச் சிரிக்க வைத்தான்.

''ஷ்! பேச்சை மாத்தாதே! ஆமா... என் பொண்டாட் டியை ஒலியும் ஒளியும் பேர் வச்ச சரி... அதுக்கு என்ன லூசுத் தனமா விளக்கம் சொல்றே?''

''நானு? விளக்கம் சொன்னேன்? அதுவும் லூசுத் தனமா? ஹ்ம்ம்!!'' - அருள் கேட்டத் தினுசில், தன் னொளிக்கே சிரிப்புப் பீறிட்டது!

''ஆமா... என் வைஃப்பை... தெலுங்குப்பட வில்லன்னு நீ எப்படிச் சொல்லப் போச்சு? கன்னடப்படத்தில் வர ஹீரோ மாதிரி இருந்துக்கிட்டு... என்ன பேச்சுங்கிறேன்!''

''ஹஹ்ஹஹா!'' - இந்தச் சிரிப்பு யாரதாய் இருந்திருக்கும்? பூ? ம்ஹூம்! இந்திரா? இல்லை! கட்டபொம்மன்? ப்ச்! அசிங்கப்பட்ட அருள்? நோ வே! பின்னர், தன்னொளியே தான்!!

''வேணாம்... உங்க பொண்டாட்டியோட சேர்ந்துக்கிட்டு... என்னைக் கிண்டல் பண்ணாதீங்க?'' என அருள் எச்சரிக்க,

''அப்புறம்... என் பொண்டாட்டியோட நான் சேராம யார் சேருவா? நானும் என் பொண்டாட்டியும் ஒரே கட்சியாக்கும்!'' என்ற இளம்பரிதி, மனைவியின் தோள் சுற்றிக் கைப் போட்டுக் கொண்டான்!

''அப்படியா சார்? ஒரே கட்சில இருக்கவங்க... எதுக்கு வேற வேற ரூம்ல தூங்கறீங்க? வெளிய போனா... ஏன் நீங்க வண்டில போறீங்க... அவ நடந்து போறா? நீங்க எங்க போயிருக்கீங்கன்னு கேட்டா... அவளுக்குத் தெரியலை! அவ எங்க போயிருக்கான்னு கேட்டா... உங்களுக்குத் தெரியல! சரி... அதை விடுங்க... அவளுக்கு என்ன கலர் பிடிக்கும்ன்னு உங்களுக்கு தெரியுமா? ஹே தண்ணி... ஓவரா சிரிக்காத... உன் அருமை புருஷனுக்கு என்ன டிஷ் பிடிக்கும்ன்னு சொல்லுப் பார்ப்போம்!'' என்று சவால்விட,

இளாவும், தனுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதோடு சரி! பதிலேதும் பேசாமல் இருந்தனர்!

அதுவே, சாக்காய் அமைந்ததில், அருள் மீண்டும் வாய் திறக்கும் முன்னர், பூ முந்திக் கொண்டாள்!

''அண்ணி! நீங்க இனிமேல்... அண்ணா ரூம்ல படுத்துக்கோங்க! எனக்காக... இங்க படுக்க வேணாம்! நான் தான்... பெரிய பொண்ணு ஆகிட்டேன் இல்ல... எனக்கொண்ணும் பயமில்லை!'' என்று அறிவித்தாள் பூ.



கூடவே, ''அண்ணா... இனிமேல்... வேலைக்குப் போகும்போது, அண்ணியை ஆபீஸ்ல கொண்டுபோய் விட்டுட்டுப் போங்க!'' என்றாள் அண்ணனிடம்.

அடுத்ததாய், ''அண்ணிக்கு... லாவெண்டர் கலர் ரொம்ப பிடிக்கும்! அதுவும் லாவெண்டர்ல வைட் டிசைன் வர எல்லா ட்ரஸ்ஸும் அவங்களுக்குப் பிடிக்கும்!'' என்றாள் அண்ணனுக்கு உதவியாய்.

பின்னர், ''அண்ணாவுக்கு... மட்டன் உப்புக் கறி தான் ரொம்பப் பிடிக்கும்! சரியா அண்ணி!'' என்றாள் அண்ணியிடம்.

அச்சிறுபெண்ணின், கோபம் மற்றும் ஆற்றாமையில் அனைவரும் சிறு வியப்பும் மகிழ்ச்சியுமாய் பார்த்திருக்க, ''இனிமேல்... அருள் அக்கா... இப்படிப் பேசுற மாதிரி நீங்க நடுந்துக்கக் கூடாது சொல்லிட்டேன்! அப்படி நடந்தா... நா உங்க ரெண்டு பேரோடையும் பேச மாட்டேன்!'' என்றாள் ஓர் குழந்தையின் பிடிவாதத்துடன்.

இளாவும் தனுவும் கண்ணில் சிரிப்புடன் சின்னவளையே பார்த்திருக்க, ''என்ன பார்க்கறீங்க? நான் சொன்னதெல்லாம் மண்டையில ஏறுச்சா இல்லையா? இனிமேல்... அருள் அக்கா உங்களைக் கிண்டல் பண்ணக் கூடாது! சூப்பர் ஜோடின்னு ப்ரைஸ் தான் செய்யணும்! புரியுதா? ஹ்ம்ம்... சத்தியம் பண்ணுங்க!'' என்றாள் இருவர் புறமும் கை நீட்டி!

இருவரும், மற்றவர் முகத்தைப் பார்த்துவிட்டு, லேசாய்த் தயங்க, ''ஹ்ம்ம்...'' என்று பூ உந்தியதற்கு மாறாய், ''ஹுக்கும்! ஹுக்கும்! ஒரே கட்சியாம்!?'' என செரும்மினாள் அருள்!

அடுத்ததாய், பூ சிணுங்கவில்லை! ''ம்ம் செய்ங்க!'' என்றாள் அதிகாரமாய்!

கணவனும் மனைவியும் கண்ணோடு கண் நோக்கி, காதல் மொழிக்கு அச்சாரமிட்டு, மனம் முழுதும் சின்ன சங்கீதம் படிக்க, ''சரிங்க சின்ன மேடம்!'' என்றனர் இருவரும், ஒருங்கே!

ஆனால், பூ வாய் வார்த்தையோடு நிறுத்திக் கொள்ளவில்லை! அன்றிரவு, தன்னொளி தன் அறைக்குள் வரவும், ''எனக்கு செஞ்ச சத்தியம் மறந்து போச்சா? ஓடுங்க... எங்க அண்ணா ரூம்க்குப் போங்க!'' என அவளை விரட்டிக் கொண்டு போய், அண்ணனின் அறையில் தள்ளிக் கதவைச் சாற்றிவிட்டே வந்தாள், அந்தப் பொறுப்புள்ள நாத்தனார்!!

''அருளுக்கும் பூவுக்குமான ரிவன்ஜ்! என்னால ஒண்ணும் பண்ண முடியல!'' என உதடு பிதுக்கிய மனைவியைப் பார்த்துச் சிரித்தான், இளம்பரிதி!

''ஹ்ம்ம்...'' - சுவாரஸ்யம் ததும்பக் கட்டிலில் தள்ளி அமர்ந்து, ஓர் தலையணையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டான் இளம்பரிதி!

தனு, அறையை ஒரு முறை கண்ணால் வலம் வரவும்,

''காய்ஞ்ச மாடு கம்புல பாய்ஞ்ச மாதிரி பாய்ஞ்சுட்டா என்ன பண்றதுன்னு பார்க்கறியா? இங்க என்னை அடிக்கிற மாதிரி எதுவுமில்லை... ஆனா... நான் பாய மாட்டேன்... பயப்படாதே!'' என்றான் கணவன், சிரிப்புடன்.

''நீங்க காய்ஞ்ச மாடுமில்லை! நாம் கம்புமில்லை!'' எனப் பதிலுக்குச் சிரித்தாள் மனையாள்!

''மாடில்லை... ஆனா... எருமைங்கிறியா?''



''அதை... என் வாயால சொல்லணுமாக்கும்!''

''அடிங்க!!'' என அவன் நீட்டிய ஒற்றை விரலுடன், தன் விரலைக் கொண்டு, கத்திச் சண்டை போட்டவாறே, ''அடிச்சிடுவீங்க? அடிச்சுத் தான் பாருங்களேன்... என் நாத்தனார் கிட்ட சொல்லிக் கொடுத்திடுவேன்... ஆமா!'' என்றாள் தன்னொளி, தெனாவட்டாக!

''வேணாம்... தாயே! வேணாம்! அப்புறம்... உங்க நாத்தனார்... எனக்கு அடுத்த மாசமே ஒரு மருமகனோ... மருமகளோ வேணும்ன்னு சத்தியம் கேட்டாலும் கேட்டுடுவா!'' என்றான் அவன் பயந்தவன் போல்!

''ஆஹா... இது... நிறைவேத்த முடியாத சத்தியமா இருக்கே!'' என தனு சிரிக்க,

''அப்போ... ஒரு வருஷத்தில மருமகனோ... மருமகளோ வரது நிறைவேத்த முடியுற சத்தியமா இருக்குமா?'' என இளம்பரிதி இழுக்க, அங்கே அமைதி நிலவியது!!

மனைவியின் முகத்தில் நிலவிய உணர்ச்சியை... வருத்தம் என்றும் வரையறுக்க முடியாமல், கோபம் என்றும் பயப்பட முடியாமல், நாணம் என்றும் நிம்மதி கொள்ள முடியாமல், குழம்பிப் போனாள் இளம்பரிதி!

என்னவாக இருந்தாலும், அவளுள் ஓர் தயக்கம் இருப்பது அவனுக்குப் புரிந்தது!

''ஓகே தனு! அருள் சொன்ன மாதிரி... உன்னைப் பத்தி எனக்கு எதுவுமே தெரியலையே... அதில இருந்து ஆரம்பிக்கலாமா?'' என்றான் இளா, பெரிய மனிதத் தோரணையில்!

ஆனால், தனுவோ ''என்னத்தை?'' என்றாள் முகத்தை ஒரு மாதிரி சுளித்துக் கொண்டு!

''என்னத்தையா? அதான்... நம்ம ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் தெரிஞ்சுக்கிறத!''

''நாம ஏன் தெரிஞ்சுக்கணும்?''

''ஏன் தெரிஞ்சுக்கணுமா? நாம ரெண்டு பேரும் கணவன் - மனைவி, தனு!''

''அதனால?!!!''

''நீ... எங்க வரேன்னு எனக்குப் புரியுது! ஆனா... நீ இப்படி முகத்தைச் சுளிக்கிற அளவுக்கு... அது ஒண்ணும் மோசமானது இல்ல...''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எல்லாம் அனுபவம் தான்!''

''வாட்!!! அனுபவமா?!!!'' - இளா வைத்திருந்த தலையணையை எடுத்து அவனையே ரெண்டடி வைத்தாள், தன்னொளி!!

''ஆ.. ஆ... அனுபவம்ன்னா... சொந்த அனுபவம் இல்ல! எல்லாரையும் பார்த்து வளர்ந்த அனுபவம்! அதாவதும்... நம்ம அப்பா-அம்மாவைப் பார்த்த அனுபவம்!''

''அதுக்குப் பேரு... அனுபவம் இல்லை! தமிழ் தெரியலைன்னா பேசாம இருங்க... கண்டதையும் உளறாம!'' - பலமான எரிச்சல் கோடுகளுடன், முகத்தைத் திருப்பிக் கொண்டாள், அவனது அருமை மனைவி!

''சரி... சரி... உளறலை! மேட்டருக்கு வருவோம்!''

''என்னது மேட்டரா?''

''அடக்கடவுளே! எல்லாத்துக்கும்... இப்படியே ஹெவி ரியாக்சன் கொடுத்துக்கிட்டு இருந்தினா... சரியா வராது சொல்லிட்டேன்!''

''எது... சரியா வராது?''



''நீ... சரியா வரமாட்டே!''

''ஏன் சரியா வரமாட்டேன்?''

''தனு!!!''

''சரி... இந்தக் கேள்வி வேணாம்... எனக்கே ரொம்ப காம்ப்ளிகேட்டா இருக்கு... முந்தினக் கேள்விக்குப் போவோம்... எது சரியா வராது? ஹ்ம்ம் சொல்லுங்க!''

''ஹ்ம்ம்!!!'' என்று ஆழ மூச்செடுத்து விட்டவன், ''நம்ம காதல்!'' என்றான் தெளிவாக!!

## 15

''காதலா?'' என்றாள் தனு, புருவம் இரண்டையும் வில்லென வளைத்து, அதில் திமிரெனும் அம்பைச் செலுத்தி!

கணவன் என்ன சளைத்தவனா?''

வீசப்பட்ட அம்பினை, அழுத்தம் எனும் கதாயுதத்தால் மறித்தவன், ''ஆமா!!'' என்றான் உறுதியாக.

அவள் முகத்தில் கேள்வி மட்டுமே உணர்வாகிப் போயிருக்க, ''ஹல்லே மேடம்! எதுக்கு இப்படி தெலுங்குப்பட வில்லி லுக்கு விடுறீங்க? நம்ம ரெண்டு பேருக்கு நடுல.. இப்ப இருக்கிறது நட்பு! இனிமேல் வரப் போறது... காதல்! லவ் தானே... ஒரு நல்ல மேரேஜ்க்கு அடித்தளம்?'' என்றான் அவன், பதிலைக் கேள்வியாக்கி!

''ம்ம்...'' என்றும் சொல்ல முடியாமல், ''ம்ஹூம்...'' என்று மறுக்க முடியாமல், ஒரு மாதிரி மையமாய் தலையை ஆட்டினாள், தன்னொளி!

''இப்ப என்ன சொல்ல வரே? ம்ம்-மா? ம்ஹூம்-மா? தலையை ஒரு பக்கமா ஆட்டு!'' என்றவன், வலக்கையை உச்சந்தலையில் வைத்து, இடக்கையை தாடையில் வைத்து, ''ஆம்'' என்பது போல் ஆட்ட வைத்தான்.

''ஹய்யோ... எ... என்ன... பண்றீங்க... பே... பேச முடியல...'' என்றவாறே அவனது கையைத் தட்டிவிட்டவள், தட்டிவிடுகிறேன் என்ற சாக்கில், தன் கையை வேகமாய் வீசி, அவனது மார்பில் ''நச்சென்று'' ஓர் அடி வைத்தாள்!

''அடிப்பாவி! காதலிக்கலாம்ன்னு சொன்னேன் தான்... அதுக்காக... அடுத்த நிமிஷமேவா அடிக்கிறது?'' என அவன் வருத்தம் கொள்ள,

''ஹை... அப்போ... லவ் பண்ணினா... தினம் தினம் உங்களை அடிக்கலாம்ன்னு சொல்றீங்க? அப்போ... எனக்கு லவ் பண்ண டபுள் ஓகே!'' என்றாள் தன்னொளி, சிரிப்புடன்!

''என்ன ஒரு வில்லத்னம்!??'' - கைகள் இரண்டையும் நம்பியார் போல் பிசைந்து கொண்டே, அவன் சிரிக்க,

''உங்க ஒரிஜினல் கெட்டப்பை விட... இந்த நம்பியார் லுக் சூப்பரா இருக்கு, இளா!'' என்று கிண்டல் செய்தாள், தனு!

''இருக்கும்... இருக்கும்... ஏன் இருக்காது? நம்பியார் மாதிரி வேலை பண்ணினா மட்டும் நல்லா இருக்காது?'' என்றான் அவனும் கேலியாகவே!



கூடச் சேர்ந்து சிரித்தவள், ''தூங்கலாமா?'' என்றாள் சுற்றும் முற்றும் பார்த்தவாறே.

''ஏன் தனு? கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாமா? கல்யாணம் முடிஞ்சு... இவ்வளவு நாள் கழிச்சு... இப்போ தான் ரிலாக்ஸ்டா பேச டைம் கிடைச்சிருக்கு. உனக்குப் பிடிச்சது... பிடிக்காது எல்லாம் தெரிஞ்சுக்கணும் போல ஆசையா இருக்கு!'' என்றான் அவன் வெளிப்படையாகவே!

''அப்படிங்கிறீங்க!??'' என்று ஒரு வினாடி யோசித்தவள்,

''சரி... பேசலாம்! ஆனா... நா முழிச்சிருக்க ஒவ்வொரு மணி நேரத்துக்கும்... நாளைக்கு எனக்கு ஒரு ரசமலாய் வாங்கித் தந்திடணும்! அதுக்கு ஓகேன்னா... பேசலாம்!'' என்றாள் பேரம் போல.

''ஹோ... உனக்கு ரசமலாய் ரொம்பப் பிடிக்குமா?'' என்று கேட்டவனின் மனதில், ''இப்ப ஓகே... ஆனா... அப்புறம்? ஒரு நாளைக்கு எத்தனை வாங்குறது?'' என்ற கணக்கே, பிரதானமாய் ஓடியது!

''அடியேன்னு கூப்பிடுறதுக்கு ஆம்படையானே இல்லையாம்... ஒருத்தி... அரச மரத்தை நூறு வாட்டி சுத்தி வந்தாளாம்!'' - அந்தக் கதையாக இருந்தாலும், கணக்கு என்ற பெயரிலாவது அவன் சந்தோஷமாய் இருந்துவிட்டுப் போகட்டுமே!? பாவம், பச்சப்புள்ள!!

அடுத்த நாள், வேலை முடிந்து வரும்போது, இளம் பரிதியின் கையில் நான்கு ரசமலாய் இருந்தது! அப்பாவுக்கும் தங்கைக்கும் ஒன்று என்ற கணக்குப் போக, மீதம் தனுவிற்கே!! அப்படியிருக்கையில், எத்தனை மணி நேரம் பேசினார்கள் என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்!

அதற்கு அடுத்த நாள், ஐந்து இருந்தது! (இரண்டு சைடு கணக்கு உட்பட)

அடுத்த நாள், ஆறு!

அடுத்த நாள், ''இளா... என்னால முடியல... போதும் ரசமலாய்!'' என்று கெஞ்சும் அளவிற்கு, ஏழு இருந்தது!

''அதெல்லாம் முடியாது! நான் சொன்ன சொல் மாற மாட்டேன்! சாப்பிடு! சாப்பிடு!'' என அவன் ஊட்ட,

''பெரிய நாட்டாமை பரம்பரை! சைடுல ஒரு கொண்டையை போட்டீங்கன்னா... அப்படியே நாட்டாமை தான்! அதுவும், மேல் சட்டை போடாம... ஒரு துண்டைப் போட்டு நடந்தீங்கன்னு வைங்க... கண்ணு பட்டுப் போகும்மையா சின்னக்கவுண்டரேன்னு நான் எட்டுக் கட்டிப் பாட வேண்டியது தான்!'' என சிரித்தத் தன்னொளி,

''நா மட்டும் இந்தக் கொடுமையை வாரம் முழுசும் அனுபவிக்கணுமா... நீங்களும் சாப்பிடுங்க... சாப்பிடுங்க...'' என அவன் வாயில் திணித்தாள்!

ஒருவர் மற்றவருக்கு உணவைத் திணித்த வேகத்தில். அடுத்த நாள் எட்டு ரசமலாய் பார்சல் செய்யப்பட்டது!!

நாட்கள் இப்படியே சுவாரஸ்யத்துடன் வேகமாய் கழிய, காதல் வேராகிக் கல்யாணம் கனியாகும் காதல்களைப் போலல்லாமல், கல்யாணம் வேராகி காதல் கனியாகக் காய்க்கத் தொடங்கியது!

அந்த நேரத்தில், பூவின் அரையாண்டு தேர்வுகள் நிறைவடைய, ''இந்திராம்மா வரச் சொல்லிட்டே இருக்காங்க... நா போய்... அருள் அக்காவோடவும் இந்திராம்மாவோடவும் லீவ்க்கு இருந்திட்டு வரவா?'' என்று வந்து நின்றாள், பூங்குழலி!



அனைவரும் ''சரி'' என்று ஒப்ப, ''எனக்கும் ஊர்ல கொஞ்சம் வேலையிருக்கு! பூவைத் திருவண்ணாமலைல விட்டுட்டு... அப்படியே நான் ஊருக்குப் போறேன்...'' என்றார் கட்டபொம்மன்.

வீட்டிலிருந்த இரு உறவுகளும் கிளம்பிவிட, தம்பதிகள் இருவரும் மட்டும் தனித்திருந்தனர்.

தனித்திருக்கும் வாழ்க்கை ஒன்றும் அவ்வளவு எளிதல்ல என்பது மறுநாளே புரிந்தது, தனுவிற்கு!

கட்டபொம்மன் இருந்தால், அவள் எழுவதற்குள் பால் வாங்கி, அதைக் காய்ச்சி, டிக்காஷன் போட்டு, முதல் நாள் முடிவு பண்ணும் மெனுவிற்கான காய்கறிகளை நறுக்கி, நல்ல தண்ணீர் பிடித்து வைத்து என்று ஏகப்பட்ட வேலைகள் பார்த்துவிடுவார்! தன்னொளி சமையல் முடிந்ததும், மக்கள் மூவருக்கும் சாப்பாடு கட்டி, மீதமிருக்கும் பாத்திரங்களை ஒழித்து வைத்து என்று அவரது வேலை நீளும்! ஆதலால், சமைப்பது மட்டுமே, தனுவின் வேலையாகிப் போகும்!

அவரது துணையுடனே வேலைப் பார்த்தவளுக்கு, சமைப்பது ஒரு பாரமாகவே இருந்ததில்லை! ஆனால், இப்போது?!!

தொரை எழுவது என்னமோ ஐந்து மணிக்கு என்றாலும், எழுந்ததும் ஜாகிங். ஜாகிங் முடிந்ததும் ''தனு... டீ தாயேன்!'' என்ற அசதிக் குரல். அடுத்த அரை மணி நேரத்தில் ''தனு... டிபன் ரெடியா? லேட் ஆகிடுச்சு... நீயும் கிளம்பு!'' என்ற அவசரப்படுத்தலுடன், ஓர் சின்னக் கரிசனம்!

ஒரு நாளுக்கு மேல் தனுவால், தாக்குப் பிடிக்கமுடியவில்லை!

காலைத் தேநீரிலேயே தொடங்கியது ருத்ரத்தாண்டவம்!

''இந்தாங்க...'' என அவள், டீக்கப்பை வைத்த தினுசில், பாதி தேநீர் கீழே சிந்தியதோ இல்லையோ, இளாவின் கருமணி வெளிவே விழுந்துவிடும் போல் நர்த்தனம் ஆடியது!

''என்ன தனு??''

''என்ன நொண்ண தனு? நா... இன்னும் ஒரு வாய் காபிக் குடிக்கலை... உங்களுக்கு டீ வேணுமாக்கும்!''

''ஏன்... ஏன்டா காபிக் குடிக்கலை? என்னாச்சு?''

''ஆமா... ஆச்சு... ஒபாமாவுக்கும் பின்லேடனுக்கும் சமரசம் ஆச்சு! கண்ணை நோண்டிடுவேன்...'' என அவன் மீது, பாய்ந்தே விட்டாள் தன்னொளி.

''ஹா... தனு... விடு... விடு! ஏன் இவ்வளவு கோபம்?''

''பின்னே... காலையில நானே பால் வாங்கணும்... அதைக் காய்ச்சணும்... காய் வெட்டணும்... சமையல் பண்ணனும்... இன்னைக்குன்னு பார்த்து... நல்ல தண்ணி வேற வருது... அதையும் பிடிச்சு வைக்கணும்! தொர... பெரிய அதிகாரமா வந்து... டீ தாதாதா தனுன்னு நீட்டி முழக்குவீங்க!''

''ஓகே! ஓகே! கூல் இட்! இப்ப என்ன... நம்ம ரெண்டு பேரும் தானே? ஹோட்டல்ல சாப்பிட்டுக்கலாம்...'' என்றான் அவன் சுலபமாக.

''இப்பக் கூட... ஹெல்ப் பண்றேன்னு வாய் வருதா பாருங்க... ஹோட்டல்ல சாப்பிட்டுக்கலாமாம்! அடிங்க!''

''என்ன தான்... தனு பண்ணனும்ங்கிற...''



''வாங்க... வந்து... எனக்கு சமையல்ல ஹெல்ப் பண்ணுங்க...'' என அவனது கைப் பிடித்து, தரதரவென இழுத்துக் கொண்டு சென்றாள் தனு!

''மிளகா பொடி... மல்லிப் பொடின்னு ரெண்டு இருக்கிறது தெரிஞ்சிருக்கே... அதுவே போதும்!'' என்ற மனைவி, அவிய வைத்த உருளைக்கிழங்கை அவன் கையில் கொடுத்து, ''இதை தோல் உரிச்சு வைங்க... ரொம்ப சிம்பிளான டாஸ்க் தான்!'' என்றாள்.

ஐந்தே நிமிடத்தில், ''தனு! டன்!! முடிச்சிட்டேன்!'' என்று அவன், சந்தோஷிக்க,

அவன் செய்த வேலையைத் திருப்பிப் பார்த்தவள், ''அடக்கொடுமையே! இதென்ன... பாதிப் பாதி உருளைக்கிழங்கு தான் இருக்கு! அய்யோ... இப்படியா தோல் உரிப்பாங்க? முக்கால் வாசி உருளைக்கிழங்கு... தோலோடவே போச்சே! இருக்கா வேலைக்கு... இருக்கா வேலையே வைப்பீங்களே!'' என்றாள், தலையில் அடித்துக்கொண்டு!

பாவம் போல் விழித்துக்கொண்டு நின்றாள், இளம் பரிதி!

''போங்க... போயி... உங்களோட ரெண்டாவது பொண்டாட்டியையே கட்டிப்பிடிச்சுக்கிட்டு அழுங்க! என அவள் வரவேற்பறைப் பக்கம் கை காட்ட,

''அது யாரு... எனக்குத் தெரியாம... முக்கியமா உனக்குத் தெரியாம... என்னைக் கட்டிப்பிடிக்க வந்தது?'' என வாயில் புறம் பார்த்தக் கணவனின் முதுகில், தோசைக் கரண்டியால் ஓர் அடி வைத்தாள், தன்னொளி!

''ஆசையைப் பாரு! நா... உங்க லாப்டாப்பைச் சொன்னேன்... போங்க... அதோடவே குடும்பம் நடத்துங்க!''

"எனக்கு... உன்னோட குடுத்தனமும்... அதோட சண் டையும் போடத் தான் ஆசை! நீ தான்... மாத்திப் பண்ண வைக்கிறே!" என்று சலிப்புக் குரலில், அவன் சொல்ல "போதுமே... போங்க!" எனப் பிடித்துத் தள்ளிவிட்டாள் மனையாள்.

"வேலை செஞ்சாலும் திட்டுறே... வேலை செய்யலைன் னாலும் திட்டுறே..." என்றபடியே குளிக்கச் சென்ற இளம் பரிதி, அன்று மாலையே திட்டுக்கள் எல்லாம் மாயமாய் போகும் என்பதை அறியவில்லை!

மாலை ஏழு மணி இருக்கும்!

இளா அலுவலகத்திலிருந்து கிளம்பும் போது, தனுவிட மிருந்து அழைப்பு வந்தது!

"என்ன தனு?" என அவன் வினவி முடிப்பதற்கு முன்பே,

"இளா... எங்க இருக்கீங்க?" என்றாள் அவனது இக் காலக்காதலி!

"ஆபீஸ்ல..."

"கிளம்பியாச்சா?"

"ஹ்ம்ம்... இதோ கிளம்பிட்டேன்! என்ன விஷயம் சொல்லு!?"

'என்னை வந்து பிக்-கப் பண்ணிக்கிறீங்களா? ப்ளீஸ்!" என அவள் இழுக்க,

"ஹ்ம்ம்... டி.எல்.ஃப்-க்கா? நா துரைப்பாக்கத்தில் இருந்து அடையார் வரவே ஒரு மணிநேரம் பிடிக்கும்... அப்புறம் டி.எல்.எஃப் வரதா? என்னால முடியாது... தனு! ப்ளீஸ்டா... ஒரு ஆட்டோ பிடிச்சு வந்துடுறியா?"



"டொக்!" - அழைப்பு வைக்கப்பட்டுவிட்டதன் அறி குறியாய், அந்த ஒலி மட்டுமே கேட்டது!

அதன் பின்னர், அவன் அழைத்த அழைப்புக்கள் அனைத்தும் செல்பேசியின் திரையில் மின்னினவே ஒழிய, எடுக்கப்படவில்லை!

"ப்ச்..." என்ற சலிப்புடன், வீடு வந்து சேர்ந்தவன், இப்போது வந்துவிடுவாள்... அப்போது வந்துவிடுவாள்... என்று காத்துக்கொண்டே இருக்க, மணி ஒன்பது... ஒன்பதரை என்று கடந்து கொண்டே இருந்ததே ஒழிய, அவள் வந்தபாடாய் இல்லை!

மணி பத்தானதும், இளம்பரிதி பயந்துவிட்டான்! எங்கே, தன் மேலிருக்கும் கோபத்தில் ஏதேனும் ஆபத்தில் தெரியாமல் சிக்கிக் கொண்டாளா என்ற பயம் மனதைக் கவ்வ, நெஞ்சம் பதறிப் போனது!

"ஹய்யோ! லூசுத் தனம் பண்ணிட்டேனே! என்னாச்சோ... கடவுளே!" என்று அரற்றிய மனம்,

"அம்மாவைத் தான் சீக்கிரமே கூட்டிக்கிட்டே! தனுவை எதுவும் செஞ்சுடாதே!" என்று கடவுளிடம், அதிகார மாய்க் கோரிக்கை வைத்தது!

வண்டிச்சாவியை எடுத்துக்கொண்டு, எப்போதும் போல் படி வழியே கீழிறங்கி, அவன் வண்டி நிற்கும் இடத்திற்குச் செல்ல, தனுவோ தன் வழக்கப்படி லிஃப்ட் வழியே மேலேறி, வீடு வந்து சேர்ந்தாள்!!

பூட்டியிருந்த வீட்டைக் கண்டதும், "இன்னும் தொர வரலை போல... எங்க ஊர் சுத்தப் போனாரு? என்னைக் கூப்பிட வர முடியாது... ஆனா... ஊர் மட்டும் சுத்த முடியும்! இந்த ஆம்பிளைங்களே இப்படித் தான்! ச்சே!"

என்ற எரிச்சல் மேலோங்க, தனது சாவியைக் கொண்டு கதவைத் திறந்து, உள்ளே சென்றாள்.

குளித்து, உடை மாற்றி, மீதமிருந்த தோசை மாவில் இரண்டு தோசை வார்த்து, சோபாவில் அம்மாடி என்று அமர்ந்து, உண்ணவும் தொடங்கி விட்டாள், தன்னொளி.

பாதி வயிறு நிரம்பியதும், "எங்க போனான்? மெசேஜ் எதுவும் அனுப்பி இருப்பானா?" என்ற ஐயம் தோன்ற,

கைப்பையைக் குடைந்து, எங்கே சிக்கியிருந்த கைப் பேசியைத் தேடி எடுத்தாள், அவள்!

எடுத்துப் பார்த்தவள், அதிர்ந்து போனாள்! முப்பத்தி யாறு தவறிய அழைப்புகள்!

அன்றைய தினம், அரசியல் தலைவர் ஒருவர் ஸ்ரீபெரும் புதூர் செல்வதால், போரூர் முழுக்க பொதுஜன நடமாட்டம் வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. அவர் ஸ்ரீபெரும் புதூர் சென்று திரும்பிய பின்னரே, மற்ற வாகனங்கள் விடப்பட, ஏற்கனவே டிராபிக் ஜாம் அதிகமாய் இருக்கும் அந்தச் சாலையில், அன்றைய தினம், வாகனங்கள் இன்ச் பை இன்ச்சாக நகர்ந்தது! அந்த நெருக்கடியில், கைப் பேசியை அவள் கவனிக்கவே இல்லை!

"அய்யயோ! இவ்வளவு தடவை கூப்பிட்டிருக்கிறானே!?" என்ற பதட்டம் மேலோங்க, கணவனின் எண்ணை வேகமாய் அழைத்தாள், மனையாள்!

அங்கே கணவனோ, பைக்கில் சென்றபோதும், மாட்டு வண்டியின் மிதமான வேகத்துடன் ஊர்ந்து சென்றவன், வழியில் வரும் ஒவ்வொரு பெண்ணையும் உற்று... உற்று நோக்கிக் கொண்டே சென்றான்.

அவள் பேருந்து ஏறும் பேருந்து நிறுத்தம் தொடங்கி, ஒரோர் அடியாய் அலசியவன்,



வந்து சென்ற ஒரோர் ஷேர் ஆட்டோவின் உள்ளேயும் மனையாளைத் தேடினான்! ஒருவரும், அவனது தனு வின் உருவம் பெறாமல் போக, நெஞ்சம் உருக்குலைந்து நடுங்கத் தொடங்கியது!

சிலர் பார்த்த அருவெறுப்புப் பார்வைகள் எதையும் சட்டைச் செய்யத் தோன்றாமல், "என்னாச்சு? என்னாச்சு?" என்ற பதைப்பிலேயே, வண்டியை நகர்த்தினான்.

"ச்சே... அவ டீம்ல இருக்க ஒருத்தரோட நம்பர் கூட வாங்கி வச்சுக்கலையே... கிளம்பிட்டாளா... இல்ல கிளம் பலையா?" என்று தன்னைத் தானே நொந்து கொண்ட வாறே, மீண்டும் கைப்பேசியை எடுத்தவனின் தலை யில் ஐஸ்கட்டி மழை பொழிந்தது போல், தனுவின் அழைப்பு மின்னியது!

ஒரே மணியில் எடுத்தவன், "தனு..." என்றான் வேக மாய்!

அக்குரலில் தென்பட்ட அக்கறையும், பதட்டமும், இனம் புரியா தேடுதலும் நெஞ்சைக் கலங்கடிக்க, "இளா... எங்க இருக்கீங்க? நா வீட்டுக்கு வந்துட்டேன்!" என்றாள் அவளும், அன்பை மொழியாக்கி!

"வாட்! வீட்டிலேயா? நா அங்கிருந்து தானே தனு வரேன்..."

"அப்படியா? நா வரும்போது... வீடு பூட்டியிருந்துச்சே!!!"

"ஹய்யோ கடவுளே! சரி... வை... நா வரேன்!" என்றவன், அடுத்தப் பதினைந்தாவது நிமிடம் வீட்டினுள் இருந்தான்!

அவன் நுழைந்த வினாடியும், தனு அவனது மார்பில் தஞ்சம் புகுந்த வினாடியும் ஒரே வினாடியாய் அமைந்து போக,

"என்னைக் காணோம்ன்னு தவிச்சுப் போயிட்டீங்களா!?" என்று தனுவும்,

"எங்க நீயும் என்னை விட்டுப் போயடுவியோன்னு... பயந்துப் போயிட்டேன்... தனு!" என்று இளாவும் பேசிய வினாடிகள், அடுத்தடுத்ததாய் மாறிப்போயின!!

## 16

"தனு... தனு..." என்றதற்கு மேலாய், இளம்பரிதியால் எதுவுமே பேசமுடியவில்லை!

அவனை அணைத்திருந்தத் தனுவுக்கும், அவனது நடுக்கம் புரிந்தது!

நெஞ்சுத் துடிப்பு வெளியே கேட்க, முதுகு நடுக்கத்தில் ஏறி இறங்க, அவனது ஒரோர் அணுவும் தன்னைத் தேடியிருக்கிறது என்பதை அவளுக்கு எடுத்துரைத்தது!

எப்போதுமே, தனக்காக... தன் நலத்துக்காக ஒரு ஜீவன் துடித்திருக்கிறது என்பது ஒரோர் உயிருக்கும் ஓர் உவகை தானே! அந்த உவகையும்... கூடவே கணவன் எனும் கடமையும் நெஞ்சை நெகிழ வைக்க, "இளா... ரிலாக்ஸ்... எனக்கு எதுவும் இல்லை!" என்றாள் அவனது முதுகு வருடி!

ஆனால், அவன் ஆசுவாசமடைய பல நிமிடங்கள் பிடித்தன!

ஒருவாராய், தன்னிலை பெற்றவன், "என் மேல என்ன கோபம்னாலும்... இப்படியா தனு பயமுறுத்தறது?"



என்றான், தன்னிடமிருந்து அவளைப் பிரித்து, தன் முகம் பார்க்க வைத்து!

"என்ன பயமுறுத்தினாங்க?!" என்று கேள்வியுடன் சேர்த்துத், தான் தாமதமாய் வந்ததற்கான காரணத்தைக் கூறினாள், மனைவி!

"ஹே! என்கிட்டே முன்னமே சொல்லியிருக்க வேண்டியது தானே? நா... சும்மா தான் என்னை வரச் சொல்றேன்னு நினைச்சுட்டேன்..."

"எங்க சொல்றது? நா ரீசன் சொல்றதுக்கு முன்னாடியே... நீங்க வர முடியாதுன்னு சொல்லிட்டீங்க! அதுக்கு அப்புறம்... என்ன சொல்லச் சொல்றீங்க?" என்றாள், தனு சிறு கோபத்துடன்.

"நா சொன்னா என்ன தனு? இல்லப்பா... இதான் ரீசன்ன்னு சொல்ல வேண்டியது தானே? உங்களைத் தொந்தரவு செய்யணும்ன்னு..." என்றபோது, தனுவின் முகத்தில் ஓர் தயக்கம் தெரிந்தது!

"அப்போ... கொஞ்ச நேரம் முன்னாடி ஓடி வந்துக் கட்டிப்பிடிச்சதெல்லாம் சும்மா... அப்படித்தானே? இன்னும் என்னை நீ... ஒரு பிரண்டா கூடப் பார்க்கலை! அப்புறம் எங்க இருந்து லவ்வரா பார்க்கிறது?"

"ஷ்... அப்படியெல்லாம் இல்ல..."

"அப்புறம் எப்படி?"

"விடுங்க இளா! எனக்குச் சட்டுன்னு கோபம் வந்துடுச்சு... அதான்..."

"எனக்கும் தான்... நீ பண்ற நிறைய விஷயங்களில கோபம்... ஆனா... நா உரிமையா பேசலையா?"

லூசுப்பையன்! தனு, கட்டிப்பிடித்த வேகத்திற்கு இந்நேரம் முதலிரவின் முக்கால் வாசித் தூரத்திற்குச் சென்றிருக்க வேண்டாமோ! நட்பு... காதல்... நம்பிக்கை என்று என்ன பினாத்தல் வேண்டிக்கிடக்கிறது!?

''கோபமா? உங்களுக்கா? நீங்க கோபப்படற அளவுக்கு நான் என்ன பண்ணினேன்?''- இப்போது தனுவின் குரலிலும் கோபம் தூக்கலாய் எட்டிப் பார்த்தது!

வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டியது தானே? ஒரு வேகத்தில், ''எத்தனையோ இருக்கு! முதல... நான் சொல்ல வரதை... நீ காது கொடுத்துக் கேட்கக் கூடத் தயாரா இல்லை...'' அவன் வாக்கியத்தை முடிக்கவே இல்லை!

''எதுக்குக் கேட்கணும்? இல்ல எதுக்குக் கேட்கணும்?'' - அதில் தொடங்கியது தனுவின் ஆற்றாமையும், கோபமும்.

வெள்ளமென அவள் பொங்கிவிட, அதில் துடுப்பின்றி தத்தளித்துப் போனான் இளம்பரிதி!

''மொதல்ல... ஒரு இக்கட்டான சூழ்நிலையில கல்யாணம் பண்ணிக்கிறது ஒரு பொண்ணுக்கு எவ்வளவு கஷ்டம் தெரியுமா?''

''கல்யாணம்ங்கிறது... வாழ்க்கையில ஒரு வாட்டி நடக்கிறது! அப்படியிருக்கும் போது... எனக்கு எவ்வளவு எதிர்பார்ப்பு இருந்திருக்கும்!?''

''எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சிட்டு... உங்களுக்காக... அத்தைக்காக தானே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்...''

''ஆனா... நீங்க!!???''

''என்னை ஒரு வாட்டி கூடப் பார்க்காத அத்தையும் மாமாவும், நகையை முழுசா என்கிட்டக் கொடுத்திட



லாம்ன்னு சொன்னதுக்கு... இல்ல... பின்னாடி பிரச்சனை வரும்ன்னு சொல்லி, சரிசமமா பிரிக்கச் சொல்லியிருக்கீங்க?''

''நா நகைக்கோ... பணத்துக்கோ ஆசைப்பட்டு இப்படி பேசுறேன்னு... உடனே முடிவு பண்ணிடாதீங்க!''

''நம்பிக்கை! உங்களுக்கு... என் மேல நம்பிக்கை இல்லை! எங்க உங்க தங்கச்சிக்கு... நா எதுவும் கொடுக்காமப் போய்டுவேனோன்னு பயம்! அதான் அப்படிப் பேசியிருக்கீங்க!''

''சரி... ஏதோ ஒரு பயத்தில் சொல்லிட்டீங்கன்னே ஒதுக்கி வச்சுட்டாலும்... அப்புறம்... உங்க சொந்தக்காரங்ககிட்ட எப்படிப் பேசினீங்க? நா பண்ணினது தான் தப்புங்கிற மாதிரி... ச்சே!''

''நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க... அத்தையோட சாவுக்கு நான் காரணமா?''

''அவங்க... வாய் கூசாம அப்படிப் பேசுறாங்க... நீங்களும் அதைக் கேட்டுட்டு... என்னைப் பார்த்து நடந்துக்கச் சொல்றீங்க!''

''அவங்க என்னடான்னா... நம்ம ஃபர்ஸ்ட் நைட் வரைக்கும் அவங்க நினைச்சப்படி தான் நடக்கும்ன்னு சொல்றாங்க! நா என்ன அவங்க வீட்டு அடிமையா?''

''சரின்னு அதையும் விட்டுட்டேன்! சரி... என்னமோ சொந்தக்காரங்களும் முக்கியம்ன்னு நினைக்கிறார் போலன்னு மனசைத் தேத்திக்கிட்டா... அன்னைக்குப் பேசினீங்களே... ஒரு வார்த்தை! ஹப்பப்பா! என்னமோ... உங்க அப்பாவையும் பூவையும் நான் என்னமோ சொல்லிட்ட மாதிரியும்... அதனால தான் அவங்க கிளம்புற மாதிரியும்!!!''

"ஹய்யையோ! என் மேல தான் உங்களுக்கு எப்பேர்ப் பட்ட நல்லெண்ணம்!?!!!"

"இவ்வளவு பண்ணியிருந்தும்... நான் அதையெல் லாம் ஓரமா ஒதுக்கி வச்சிட்டு... உங்களோட சகஜமா பேசினா... நீங்க இதுவும் பேசுவீங்க! இன்னமும் பேசு வீங்க! ச்சே!!"

"உங்க போட்டோவைப் பார்த்ததும்... எங்கப்பா மாதிரி இருந்துச்சு... அந்த ஒரு காரணத்துக்காகத் தான்... நான் சரின்னு சொன்னேனே! ஆனா... உங்ககிட்ட எங்க அப்பாவோட ஒரு நல்ல குணம் கூட இல்லை!"

"ஐ ஹேட் யூ!!!" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

ஆனால், குரலில் தோன்றிய உறுதிக்கு மாறாய் கண்கள் கண்ணீரின் ஊற்றாகிப் போயின!!

அவளைக் காணவில்லையே என்ற தவிப்பில், கொஞ் சம் கோபமாய் பேசியதற்கு, அவள் இவ்வளவு தூரம் உணர்ச்சி வசப்படுவாள் என்று இளா எண்ணவே இல்லை!

அவளது கோபத்தின் வேகத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல், இளா தடுமாறிப் போனான் என்றே சொல்ல வேண்டும்.

நடுநடுவே, அவன் சொல்ல வந்த எதையும் அவள் கேட்பதாய் இல்லை!

ஒரே மூச்சாக, தன் நெஞ்சில் உள்ளதை எல்லாம் கொட்டிவிட்டு, சோபாவில் தொப்பென்று விழுந்தவள், முகத்தை மூடிக் கொண்டு அழுதுவிட்டாள்!

இத்தனை நாட்கள், அவனுடன் பேசும் போதெல்லாம்... சுருக் சுருக்கென்று நெஞ்சின் ஓரத்தில் தோன்றும் கோபத்தைக் கயிறு கொண்டு கட்டி வைத்திருந்தவளுக்கு,



அவனது இன்றைய குற்றச்சாட்டு மிக அநியாயமாய் பட்டது!

அவன் கோபப்படும் அளவிற்குத் தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்பது ஒரு புறம் என்றால், தப்பெல் லாம் இவன் செய்துவிட்டு என்னைக் குற்றம் சொல்ல இவனுக்கு என்ன தைரியம் என்ற திமிர் மறு புறம்!!

"நியாயம் என் பக்கம் இருக்கையில், என்னை நீ எப்படி குற்றம் சொல்லலாம்!" என்ற கொதிப்பில், வார்த்தையைக் கொட்டியவளால், தன் உணர்வுகளின் வேகத்தையே தாங்க முடியவில்லை!

உடம்பும் உள்ளமும் ஒருங்கே நடுங்க, கண்கள் நிற் காமல் கண்ணீர் உகுக்க, அதிக நேரம் அவன் முன்னே அமர்ந்திருக்க முடியும் என்று தோன்றவில்லை அவ ளுக்கு! விருட்டென எழுந்து, தானும் பூவும் உபயோகிக் கும் அறைக்குள் சென்று,கதவை அடைத்துக்கொண் டாள்!

"டக்!!" - கதவு அடைபடும் சத்தத்தில் தான், இளா வின் முழு உணர்வும் மீட்டெடுக்கப் பட்டது!

ஒரு முறை தலையைக் குலுக்கி, நிஜத்துக்கு மீண் டவன், அடைக்கப்பட்டக் கதவையே வெறித்திருந்தான்!

சிறிது நேரம், கண் மூடி, சோபாவின் திண்டில் தலை சாய்த்துப் படுத்திருந்தவன், ஓர் முடிவுக்கு வந்தவன் போல் எழுந்தான்.

தனுவின் அறைக்கதவின் அருகே சென்றவன், கதவைத் தட்டக் கையைக் கொண்டு போய்விட்டு, சிறு யோசனைக்குப் பின்னர் அதைப் பின்னே இழுத்துக் கொண்டான்!

பின்னர், மனம் என்ன சொன்னதோ, ''ஹ்ம்ம்...'' என ஆழ மூச்செடுத்துவிட்டு, கதவை மெல்ல தட்டினான்!

ம்ஹூம்! பதிலேதும் இல்லை!

வராது என்று அவனுக்கும் தெரியும்! அதனால், இந்த முறை கதவைத் தட்டியக் கையுடன் 'தனு...'' என்றழைத் தான் மெல்ல.

ம்ஹூம்! இப்போதும் பதிலொன்றும் வரவில்லை!

பலமாய் ஓர் தட்டலும், சன்னமாய் ''தனு...'வும் வெளியேற,

''ஹக்... ஹக்...'' என இப்போது, அழுகை சத்தம் சன்னமாய் கேட்டது!

''ஹே... தனு குட்டி! சாரிடா! என்னால உன்னைப் புரிஞ்சுக்க முடியுது!''

அந்தப் பக்கமிருந்து எந்தச் சத்தமும் வராமல் போகவே, ''கொஞ்சம் கதவைத் திற... தனு! ப்ளீஸ்!'' என்றான் கெஞ்சுதலாக.

ஆள் அரவமே இல்லை!

''நா பண்ணினதை நான் நியாயப்படுத்த விரும்பலை, தனு! ஆனா... ஒரு சாரி சொல்லிக்கிறேன்! அன்னைக்கு சாரி சொல்லிட்டேன் தான்... பட்... திரும்ப சாரி சொல்றதில எந்தத் தப்பும் இல்லை தானே? அதுவும், உன்கிட்ட என்ன ஈகோ வேண்டிக்கிடக்கு! சோ... சாரி, தனு! உன்னை ஹர்ட் பண்ற மாதிரி... நா பேசின எல்லாத் துக்கும் சாரி... இனிமேல் இது மாதிரி நடக்காது!''

''பட்!!'' - கதவு திறக்கப்பட்டது!

முகம் மலர, ''கோபம் போயிடுச்சா, தனு?'' என்று சிரிப்புடன் இளா நின்றிருக்க,



''ஏற்கனவே சாரி சொன்னீங்களா? எப்போ? தூக்கத் திலையா? இல்ல கனவுலையா? இல்ல... வேற யார் கிட்டயாவது சாரி சொன்னீங்களா?'' என்றாள் தனு, ஆக் ரோஷமாய்!

''ஹே! நீ... இதுவரைக்கும் சொன்னதில எல்லாம், என்னோட தப்பு ஒரு சதவீதமாவது இருந்துச்சு! ஆனா... இது அபாண்டமான குற்றச்சாட்டு!!''

''என்ன அபாண்டம்? சொல்லாததை சொன்னேன்னு சொல்றீங்க... இது தப்பில்லையா?''

''ஹே! நா சொன்னேன் தனு! அன்னைக்கு... பைக்ல சர்க்கஸ் பண்ணியே... ஞாபகம் இருக்கா... அன்னைக்குச் சொன்னேன்ல?'' சாரி தனு... நீ எப்பா விளக்கம் கேட் கிறியோ அப்போ சொல்றேன்''ன்னு சொன்னேன்ல?''

''ஹ்ம்ம்! எனக்குக் கேட்கலையே!''

''என்ன தனு... நீ கூட... ம்ம்ன்னு சொன்னியே...''

''சொன்னேனா???''

''சத்தியம்! எங்கம்மா மேல சத்தியமா!''

''ஹ்ம்ம்...'' - அவள் புருவத்தை ஏற்றி இறக்க,

''நிஜம்!'' என்றான் அவன், சிறு பையன் போல்!

லேசாய் சிரிப்பு வந்தபோதும், ''சும்மா... சும்மா... தப்பு பண்ணிட்டு... சாரி சொன்னா ஒத்துக்க முடியாது! எனக்கு இன்னும் கோபம் போகலை!'' என்றுவிட்டு, கதவை மீண்டும் அடைக்கப் போனாள், தன்னொளி!

''ஹே ஹே! ப்ளீஸ்டா! எனக்கு ஹஸ்பண்ட் ரோல் புது சில்ல... அதான் நிறைய சொதப்பல்கள்! அடுத்த அட்டெம்ப்ட்ல சரியாகிடும், தனு! ஐ வில் நாட் ரிபீட் திஸ்!''

''வாட்!!!'' - அவள் முகத்தில் காண்பித்த அதிர்ச்சியில், இளா குழம்பிப் போயிருக்க,

''ஹோ... அப்போ... தொரைக்கு... இன்னொரு வாட்டி ஹஸ்பண்ட் ரோல் ப்ளே பண்ணு ஐடியா வேற இருக்கா? பிச்சுருவேன் பிச்சு!!!'' என்ற தனு, வேகமாய் அவனது தோளில் ஓர் அடி வைத்தாள்!!

''ஆ... ஆ... நா அந்த அர்த்தத்தில் சொல்லலை தனு!''

''சும்மா பேசாதீங்க! அப்புறம்... என்ன அர்த்தமாம் அதுக்கு?''

அவளது கேள்விக்குப் பதில் தெரியாமல், ''ச்சே! இளா... பேசாம... மனைவியிடம் பேசுவது எப்படின்னு ஒரு லெட்ச்சர் கிளாஸ்க்குப் போடா! சரியான வோர்ட்ஸ் தெரியாம... இப்படி சொதப்பு... சொதப்புன்னு சொதப்பி எடுக்கிறியே?'' என்றான் இளா, தனக்குத் தானே!!

தனுவால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை!

அடக்கிப் பார்த்தும் முடியாமல், புன்முறுவலாய் அவள் வசீகரிக்க ''இப்ப நீயே பார்த்த இல்ல... நான் சொல்ல வந்த விஷயம் வேற... ஆனா... நீ புரிஞ்சுக்கிட்ட விஷயம் வேற! அது மாதிரி தனு, முன்னாடியும் ஆகிடுச்சு!'' என்றான் வேகமாய்.

அவள் ஏதும் பேசும் முன்னர், அவனே முந்திக் கொண்டான்.

''அந்த நகை...!! நா உன்னை மனசில வச்சுப் பிரச்சனை வரும்ன்னு சொல்லலை, தனு! பின்னாடி... பூக்கு வர மாப்பிள்ளை வீடு எப்படியிருக்குமோ... ஏன் எங்க பக்கம் ஆளுங்களே என்ன பேசுவாங்களோ தெரியாது! அவங்க எதுவும் குட்டிக் கலகம் பண்ணி...



உங்களுக்குள்ள பிரச்சனை வந்திடக் கூடாதுன்னு தான் சொன்னேன்! ஆனா... நீ வேற மாதிரி புரிஞ்சுக்கிட்டே!''

''சொந்தக்காரங்க மேட்டர்...!! எல்லாரையும் எதிர்த்துக்கிட்டு இந்த உலகத்தில வாழ்ந்திட முடியாதும்மா! சில விஷயங்களில் அட்ஜஸ்ட் பண்ணித் தான் ஆகணும்! அவங்களை சப்போர்ட் பண்ணிப் பேசினதால... உன் மேல எனக்கு அக்கறை இல்லைன்னு நினைக்காத! உன் மேல இருக்கிற அக்கறையில தான் அப்படிப் பேசினேன்!''

''தென்... பூ! ஐ அக்ரீ... அது என்னோட தப்பு தான்! ஏதோ ஒரு வேகத்தில் கேட்டுட்டேன்! ஐ அம் ரியலி சாரி!'' என்றவன், அவளது கைகளைப் பிடித்தபடியே!

''பாவம்... நிறைய சாரி சொல்றானே!?'' என்று தான் இருந்தது, தனுவிற்கு!

அவளது முகப்பாவத்தைப் படித்தவனாய், ''ஐ ஹேட் யூ-வை வாபஸ் வாங்கிக்கலாமா?'' என்றான், அவன் கண்ணில் சிறு கெஞ்சலுடன்!

''ஹ்ம்ம்!!'' என்று முகத்தைச் சுருக்கி, நாக்கைத் துருத்தி, அவனுக்கு அழகு காண்பித்தவள்,

''ஆனாலும்... ரொம்பக் கெஞ்சுறீங்களே! சரி... போங்க! ஐ ஹேட் யூ... வாபஸ் பெறப்படுகிறது!'' என்றாள் அலட்டலாக!

''சூப்பர்! அதான் தனு! வாபஸ் வாங்கிட்டே ஓகே! ஆனா... பதிலுக்கு வேற ஒரு மனுவைத் தாக்கல் செய்யலாமே... ஐ லவ் யூ ஓகேவா?'' என்றான் அவன். அவளது அலட்டலுக்கு மாறான குறும்புடன்.

''ஐ லவ் யூவா? டபால்ன்னு அங்க தாவிட்டீங்களே! நோ... நோ... ஐ லைக் யூ... முதல்ல வச்சுக்கலாம்!

அப்புறம்... பார்ப்போம்!'' என்றாள் மனையாள், போனால் போகிறது என்ற பாவனையில்!

''ஹ்ம்ம்... சரி!'' என்று சோர்வது போல் நடித்தாலும்,

''லைக்-கை லவ்-வா மாத்தலை... நா இளா இல்லை!'' என்றான் அவன் சூளுரை போல்!

''அப்போ... இளம்பரிதியாக்கும்! போங்க... சார்... போங்க! போய்... புள்ளக்குட்டிங்களைப் படிக்க வைங்க!'' என்று ஒரு ஃப்ளோவில் வார்த்தைகளை விட்டப்பின்னர் தான், தனுவே அதன் அர்த்தத்தை உணர்ந்தாள்!

உணர்ந்த வினாடி, அவளது நாக்கு அவளது பற்களுக்கு இடையே கடிப்பட்டது!

லேசாய், அவளது உதட்டில் சுண்டி, அகப்பட்ட நாக்கை விடுவித்தவன், ''அதுக்குத் தான் மேடம்... வழி பண்றேன்!'' என்றான் அவன், குறும்பு கவிழ்ந்த முகத்துடன்!!

வழி பண்ணுகிறேன் பேர்வழி என்று தனக்குத் தானே குழி தோண்டிக் கொண்டது தான் மிச்சமாய் போனது! அதுவும், ஆழமாய்!

## 17

அடுத்து வந்த இரண்டு நாட்களும், சிறு சிறு சண்டைகளும், சில பல சமாதானங்களுமாய் செல்ல, வெள்ளிக்கிழமை காலை உணவு வேளையில்,

''இளா... இன்னைக்கு நீங்க ஃப்ரீயா?'' என்றாள் தனு, இட்லியை அவன் தட்டில் வைத்தவாறே.



''விஷயத்தைக் கேட்காம என்னால எதையும் கமிட் பண்ண முடியாதும்மா! நா பாட்டுக்கு... வேலையிருக்குன்னு சொல்லப் போக, மேடம் விஷயத்தை அப்படியே முழுங்கிட்டு, இன்னொருநாள் என்னைப் போட்டுத் தாக்கிடுவீங்க! வேணாம் தாயே, வேணாம்! நீ விஷயத்தைச் சொல்லு... நா அப்புறமா உன்னோட கேள்விக்குப் பதில் சொல்றேன்!!'' என்று நீளமாய் பேசியதோடு நில்லாமல், கைகளை வேறு மேலே தூக்கி, மனைவியைப் பார்த்துக் கண்ணடித்தான்!

''பரவாயில்லை! உஷாரா தான் இருக்கீங்க!'' என்ற தனு, சமையலறைப்பக்கம் நுழையவும்,

''எங்க போறே? உட்காரு... சாப்பிடலாம்!'' என்றான் கணவன், அவளது கைப்பிடித்து.

''விடுங்க! மண் சோறு மாதிரி... நா டேபிள் இட்லி சாப்பிட முடியாது... தட்டு எடுத்திட்டு வரணும்!'' என அவள் நக்கல் செய்ய,

''அருளை விட உனக்குத் தான் வாய் ஜாஸ்தி! எப்படித் தான்... ரெண்டு பேரையும் வச்சு அத்தை சமாளிச்சாங்களோ!'' என அவன் அங்கலாய்த்தான்!

அத்தோடு விட்டுவிடாமல், ''தட்டு இல்லன்னா என்ன... தனு? என்னோட தட்டு இருக்கே... இதில சாப்பிடலாம் வா!'' என அவன் அழைக்க,

''அய்யே! ரொமான்ஸ் பண்றோம்ன்னு உங்களுக்கு நினைப்பாக்கும்... சகிக்கலை!'' என மனையாள் கழுத்தை நொடித்து, அவனை உசுப்பேத்திவிட்டாள்!

''வேணாம்! ரொம்ப நக்கல் பண்ணாத! அப்புறம்... நடக்கிறதே வேற!'' என அவன் எச்சரித்ததை, ஓர் அலட்

சியப் பார்வையும், அலட்டல் தலை சிலுப்பலுமாய் அவள் உதாசீனப்படுத்தவும், ஓர் முடிவுக்கு வந்தவனாய் இருக்கையை விட்டு எழுந்தான், இளம்பரிதி!

பாத்திரக்கூடையில் கழுவி வைக்கப் பட்டிருந்த தட்டை எடுப்பதற்காக, சமையற்கட்டுக்குள் சென்றவள், கூடையிலிருந்த பாத்திரங்களை ஒதுக்கிவிட்டு, அடியிலிருந்தத் தட்டை எடுக்கும் மும்முரத்தில் இருந்த வேளையில், இளாவின் கரங்கள் அவளது இடுப்பை வளைத்து, ஒரே வினாடியில் அவளைத் தூக்கி, எதிர்ப்பக்கமாய் நிற்க வைத்தது!

என்ன நடந்தது என அவள் யோசிக்க அவகாசம் கொடுக்காமல், மன்னவனின் காந்தக்கண்கள் தலைவியின் உணர்வுகளைக் கட்டிப் போட, அவனது அதரங்கள் பெண்ணவளின் முகத்தை ஓவியமாக்கித், தூரிகையாய் வளம் வரத் தொடங்கின!

இருவரும் தத்தம் உணர்வு மறந்து, மற்றவரின் அருகாமையில் தங்களைத் தொலைத்திருக்க, முதலில் தன்னுணர்வு பெற்றவன் இளம்பரிதியே!

''மேடம்... இதை ரொமான்ஸ்ன்னு ஒத்துப்பீங்க தானே!'' என்றான், கண் மூடி நின்ற மனைவியின் இமைகளில் ஓர் முத்தம் வைத்து!

அந்த முத்தம், உள்ளுக்குள் ஓர் சிலிர்ப்பை ஓட வைக்க, கிறங்கி நின்ற தனுவின் அதரம் ''ம்ம்'' என்றது தானாய்!

''ம்ஹூம்! இது சரி வராது! இன்னைக்கு... எனக்கு ஆபீஸ்ல நிறைய வேலையிருக்கு... போகணுமே!'' என அவன் உதடு பிதுக்க,



''ஹோ... வேலையிருக்கா? இன்னைக்கு சினிமா போலாம்ன்னு நினைச்சேன்...'' என்றாள் தனு, ஏமாற்றத்தோடு.

''ஆஹா! இதான் விஷயமா? அதைக் கேட்காமலே... வேலையிருக்குன்னு சொல்லி, சிக்கிட்டேன் போலவே!'' என அதிர்ந்தவன்,

தனு சிரிக்கவும், ''தட்ஸ் ஓகே! நைட் ஷோ... போலாம்! ஓகேவாடா?'' என்றான் மனைவியின் கன்னம் தட்டி.

''நைட் ஷோவா? லேட் ஆகாது?'' என்று யோசித்தப் போதும், அவளது முகத்தில் ஆசை இருப்பது மணம் புரிந்தவனுக்குப் புரிந்தது!

''நம்ம ரெண்டு பேரும் தானே? வண்டில போயிட்டு வண்டில வரப் போறோம்! போலாம் தனு!'' என அவன் உந்த,

''சரி... நா எங்க டிக்கெட் இருக்குன்னு பார்த்துப் புக் பண்ணிட்டு, உங்களுக்குச் சொல்றேன்!'' என்றாள் தன்னொளி, முடிவாக.

சொன்ன சொல்படி, மாயாஜாலில் புதிதாய் வெளி வந்த ஒரு திரைப்படத்திற்கு, இரவு ஒன்பதரை மணி ஷோவிற்கு டிக்கெட் புக் செய்தவள், கணவனை அழைத்து விவரம் கூறினாள்!

''ஒன்பதரை ஷோ... தானே? போய்டலாம்!'' என அசால்ட்டாக பேசியவன்,

இரவு எட்டு மணிக்கு, தன்னொளி அழைத்தப்போது ''சாரி தனு! செம வேலை! ஆபீஸ்ல இருந்து கிளம்ப... இன்னும் அரை மணி நேரமாகும் போல!'' என்றான் சோர்வாக.

''ஹோ... அப்போ டிக்கெட் கான்செல் பண்ணிடவா?'' என்றாள் மனைவியும், அவன் சோர்வு உணர்ந்தவளாய்.

ஆனால், ''இப்பெல்லாம்... நான் எதிர்பார்க்கிறதையே விட்டுட்டேன்! எதுக்கு எதிர்பார்க்கணும்? அது நடக் கலைன்னதும்... எதுக்கு துவண்டு போகணும் இல்லையா? சிம்பிள்!'' என அவள் முன்பொரு நாள் கூறியது நினைவு வர,

''இல்ல தனு! மாயாஜால் தானே போகணும்... நீ கிளம்பி, சோழிங்கநல்லூர் வந்திடு. நானும் அங்க வந் துடறேன். அங்க இருந்து, மாயாஜால் போய்டலாம்!'' என்றான் இளம்பரிதி, தீர்வாக.

''ஹ்ம்ம்...'' என அவள் தயங்க,

''யோசிக்காத தனு! நம்ப வீட்டில இருந்து, ஒரு ஆட்டோ பிடிச்சு... ம்ஹூம்... ஆட்டோ வேணாம்... இந்த நேரத்தில தனியா வரது ரிஸ்க். பேசாம ஷேர் ஆட்டோ பிடிச்சு, சோழிங்கநல்லூர் வந்திடு! நா வந்துடுறேன்... ஓகே?'' என்றான் அவன், மீண்டும்.

''ஹ்ம்ம்... வேலை முடிஞ்சு உங்களுக்கு டயர்ட்டா இருக்காதா?'' என அவள் மேலும் மேலும் தயங்க,

''எனக்கொண்ணும் இல்லை. முதல் முதல, வெளியே போலாம்ன்னு முடிவு பண்ணிட்டு... .அதை கான்செல் பண்ண வேண்டாம்... வாடா...!'' என்றான் அவனும் வற் புறுத்தலாய்!

''ம்ம் சரி!'' என ஒப்பியவள்,

''உங்க ஆபீஸ்... துரைப்பாக்கம் தானே? நா அங் கேயே வந்திடவா?''

''வேணாம் தனு! இங்க வந்தா... ஒண்ணு நீ வெளிய நிக்கணும்... இல்லை நா வந்த உள்ள கூட்டிட்டுப்



போகணும்! இந்த ஏரியா கொஞ்சம் இருட்டா இருக்கும்... நைட் தனியா நிக்கிறது, சேஃப் இல்லைம்மா! அப்படி யில்லைன்னா... நா வந்து, விசிட்டர் பாஸ் போட்டு உன்னை உள்ள கூட்டிட்டு போணும்... அந்த நேரத்துக்கு, வேலையை முடிச்சிட்டு வந்துடுவேன்! சோழிங்கநல் லூர்... ஒரு பெரிய ஜங்ஷன்மா... எந்த நேரமும் பிஸியா இருக்கும்... அதான் அங்க வரச் சொல்றேன்! என்னடா... முடியாதா?'' என அவன் விரிவாய் காரணம் கூறியதில், தனுவும் ஷேர் ஆட்டோ பிடித்து, சோழிங்கநல்லூர் வந்து சேர்ந்தாள்.

அவள் வந்தது என்னமோ எட்டே முக்காலுக்கு வந்துவிட்டாள்! தொரையைத் தான் காணவில்லை!

ஒன்பது மணிவரையிலும் பொறுத்தவள், கணவனின் கைப்பேசியை அழைத்தாள்.

முழு ரிங்கும் போய் எடுக்காமல் போக, ''ப்ச்'' என்ற சலிப்பை அவள் உதிர்க்கும் போதே, அவன் அழைத்தான்.

''எங்க இருக்கீங்க இளா...'' என்பதே அவளது முதல் வார்த்தையாக,

''சாரி தனு! இப்போ தான் கிளம்புறேன்...'' என்றான் அவன, தனது பக்க வார்த்தையாக.

''என்னது? இப்பத் தான் கிளம்புறீங்களா? ஐயோ... மணி இப்பவே ஒன்பது... நீங்க எப்ப வந்து எப்பப் போறது? அதுக்குள்ளே படம் ஆரம்பிச்சிடும்!''

''நம்ம சண்டை போடற நேரத்தில்... நான் பாதி தூரம் வந்திருப்பேன். நீ முதல்ல போனை வை'' என்றவன், அவளது பதிலை எதிர்பார்க்காமல் அழைப்பை வைத்து விட்டான்.

''ச்சை!'' என்று வந்தது, தனுவிற்கு!

ஒன்பதே கால்! ஆளைக் காணவில்லை!

''வீட்டுக்குப் போய்விடலாமா?'' என்று கூடத் தோன்றியது, தனுவிற்கு! ஆனால் உண்மையைச் சொல்லப் போனால், அந்த இருட்டில் தனியாக திரும்பிப் போகப் பயமாய் இருந்தது!

ஒன்பது இருபது... இருபத்தியிரண்டு... இருபத்தி நான்கு... ஹ்ம்ம் தொடரை வந்துவிட்டார்! கூடவே, ஒரு மூட்டை ''சாரி''யை அள்ளிக் கொண்டு!

அவனது வண்டி வந்து அருகே நின்றதும், முகத்தை வேறுபுறம் திருப்பியவளின் கைப்பிடித்து, ''என்னோட புஜ்ஜூக்குட்டி இல்ல... சாரிடா... வா போலாம்!'' என்றான் அவன்.

''இல்ல!'' என அவள் ஒற்றைச் சொல்லாக மறுக்க,

'ப்ளீஸ்டா... நா கிளம்பின நேரம் ஆபீஸ்ல காப் கிளம்புற நேரமாப் போச்சு... அதான் வண்டியை எடுத்திட்டு வெளியே வர நேரமாகிடுச்சு! வா போகலாம்!''

''இப்பப் போனாலும்... படம் ஆரம்பிச்சிடும்! நா வரலை!''

''இந்த நேரம் டிராபிக் இருக்காது, தனு! பத்து நிமிஷத்தில போய்டலாம்... ரெண்டு சீன் தான்டா போயிருக்கும்!'' என அவளைக் கரையாய்க் கரைத்து, வண்டியில் ஏற வைத்தான்.

ஒன்றுமே பேசாமல் வரும் மனைவியை எப்படிச் சமாதானம் செய்வது என்ற யோசனையிலேயே, திரையரங்கிற்கு வந்து சேர்ந்தான் இளம்பரிதி!



நல்லவேளையாக, திரைப்படத்தின் முதலிலேயே ஒரு பாடல் வந்துவிட, பெரிதாய் ஒன்றும் பறிபோய் விடவில்லை!

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் அவன் சீட்டில் சாய, தனு மும்முரமாய் படம் பார்க்கத் தொடங்கினாள்.

நடுவில், ஏதோ ஒரு நகைச்சுவை வர, அதை ரசித்துச் சிரித்தப்படியே, ''இளா... என்னால சிரிப்புத் தாங்க முடியல..'' எனக் கணவனின் தொடையில் தட்டி, அவன் புறம் திரும்பியவள், திகைத்துப் போனாள்!

பின்னே, அவன்... அவள் கணவன் தூங்கியல்லவோ போயிருந்தான்!

திரையரங்கின் குஷன் சீட்டில் நன்றாக சாய்ந்தமர்ந்து, கால்களை விஸ்ராந்தியாக நீட்டி, தலையைத் தனுவின் தோளில் அண்டக் கொடுத்து, ஆனந்தத் தூக்கத்தில் இருந்தவன், தனுவின் அடியில் உறக்கம் களைந்தான்!

அவள் என்னமோ மெதுவாகத் தட்டினாள்! ஆனால், அவனோ ''ஹான்...'' என்று தூக்கி வாரிப் போட, விழித்தெழுந்தான்! ஆம், விழிக்க மட்டுமல்ல... எழவும் செய்தான்!

எழுந்த வேகத்தில் ''என்னாச்சு... என்னாச்சு தனு!?'' என அவன் பதற,

திரையரங்கில் பின்னிருக்கையில அமர்ந்திருந்தவர்கள், ''ஹேய்...'' ''ஊய்...'' ''ப்ச்...'' ''என்னய்யா...'' என்று போட்டச் சத்தத்தில்,

''கடவுளே! மானத்தை வாங்காதீங்க!'' என்று முணுமுணுத்தவாறே, அவனது சட்டையைப் பிடித்து இழுத்து, இருக்கையில் அமர வைத்தாள், தன்னொளி!

அமர்ந்த நிமிடமில்லாமல், ''என்னாச்சு... தனு?'' என்ற அதே வியந்த ரியாக்ஷனை அவன் கொடுக்க,

''அடி வாங்கிடுவீங்க சொல்லிட்டேன்! என்ன... என்னாச்சு? சினிமா பார்க்க வந்தீங்களா? இல்ல... இப்படி குப்பறப்படுத்துத் தூங்க வந்தீங்களா? கருமம்... கருமம்... மானம் போகுது!'' என்று தலையில் அடித்துக்கொண்ட போதும், கணவனின் தூக்கம் கலையாத முகத்தைப் பார்க்கப் பார்க்க, மனைவிக்குச் சிரிப்பே மேலோங்கி வந்தது!

''செம... தூக்கம், தனு!'' என அவன் தலையை கோத விட்ட அழகில், தன்னொளி அடக்கமாட்டாமல் சிரித்து விட்டாள்!

மலர்ந்து சிரிக்கும் மலரவளின் மயக்கச் சிரிப்பில், மன்னவனும் மன்மதனாய் மாறி, தன்னைத் தொலைத்து, அவளை மீட்டான்!

''இவ்வளவு சத்தமா சினிமா ஓடுது... அதுவும் டி.டி. ஹெட்ச் வேற... எப்படிங்க தூங்குறீங்க!'' என தனு வியக்க,

''காலையில இருந்து செம வேலை... தனு! சாப்பிட வேற இல்லையா... அதான்!'' என அசடு வழிந்தான், இளா.

''ஹய்யோ... சாப்பிடலையா? சொல்லியிருக்கலாம் இல்ல...'' என அவள் தாயாய் பதற,

''எங்க... இந்த சினிமாவை முதல் சீன்ல இருந்து கண்ணுக்குள்ள அடைக்கலன்னா உன் ஜென்மமே சாம்பல்யம் அடையாதுங்கிற மாதிரி இல்ல... நீ இருந்தே? இதில, சாப்பிடறதுக்கு நிறுத்தியிருந்தா... நான் சட்னி சாப்பிடறதுக்குப் பதிலா நீ என்னை சட்னி ஆக்கியிருக்க மாட்டே?'' என்றான் அவன், ஏகத்திற்கும் பயந்தவன் போல.



''ஹய்யோ! கடவுளே! வாங்க... முதல போய் சாப்பிடலாம்!'' என தனு எழுந்து கொள்ள முயல,

''வேணாம்... வேணாம்.. இன்டெர்வெல்ல ஏதாவது சாப்பிட்டுக்கலாம்! நீ படம் பாரு!'' என அவளை இழுத்து அமர வைத்தான், கணவன்.

''இல்ல வேணாம்...'' என அவள் இழுக்கும்போதே, திரையில் ''இடைவேளை'' மின்னிவிட்டது.

''வாங்க போலாம்!'' என அவளும், ''வா... வா... பசிக்குது!'' என அவனும் பறக்க ஒருவழியாக அங்கிருந்த நொறுக்குத்தீனிகளில் பாதியை காலி செய்துவிட்டு, அவர்கள் திரையரங்கிற்குள் நுழைந்தபோது, இடைவேளை முடிந்து இரண்டு சீன் ஓடியிருந்தது!

இருக்கையில் அமர்ந்ததும், ''பசியோட இருந்தப்பவே அந்த தூக்கம் தூங்கினீங்க... இப்ப என்னடான்னா கேண்டீன்ல இருந்த பாதிச் சாப்பாடு உங்க வயுத்துக்குள்ள தான் இருக்கு! நல்லா தூங்குங்க!'' என்றாள் தன்னொளி, கிண்டலாக.

''ச்சே... ச்சே! இனிமேல் நான் எப்படி படம் பார்க்கிறேன்னு பாரு... ஹய்யோ இவன் தூங்கியே இருக்கலாமேன்னே நீ ஃபீல் பண்ணலைன்னா என்னை என்னன்னு கேளு!'' என்றான் கணவனோ, முழுக்கைச் சட்டையை மடக்கிவிட்டுக் கொண்டு!

சொன்ன சொல்லைக் காப்பாற்றவும் செய்தான், அந்தச் சத்யவான்!!

ஆனால்... காப்பாற்றிய விதம் தான், தன்னொளிக்கு இடைஞ்சலாய்ப் போனது!

அவனது நல்ல நேரமோ இல்லை தனுவின் நாண நேரமோ தெரியவில்லை... அந்தப் படத்தின் பின்பாதி முழுதும் - காதல்! காதல்! காதல் மட்டுமே!

கதாநாயகன் பேசிய ஓரோர் வசனத்திற்கும், இளா விளக்கம் கொடுக்க, தனுவின் கன்னங்கள் சிவப்பு என்ற நிறத்தை முழுதாய் அப்பிக் கொண்டன!

மனைவியின் தோளில் கைப்போட்டு, அவளைத் தன் தோள் வளைவில் இருத்தி, மறு கையால் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு, அவன் பேசியப் பேச்சுக்களும், செய்த சீண்டல்களும், அந்த மங்கையினுள் ஓர் மோகத்தை விதைத்தது!

ஒரு கட்டத்தில், ''ஷ்.. கொஞ்சம் நேரம் தூங்குங்களேன்!'' என்று அவனைப் பிடித்துத் தள்ளிவிடும் அளவுக்கு, தனுவின் மோக மொட்டுக்கள் மொட்டுவிடத் துவங்கி இருந்தன!

அட்டகாசமாய் சிரித்துவிட்டு, ''எனக்கு சுத்தமா தூக்கம் வரல! செம... ஹாட் அண்ட் லவ் மூட்ல இருக்கேன்... உன்னை ஒரு வழி பண்ணாம விடறதில்லை!'' என்றான் கணவன், தோளைச் சுற்றியிருந்த இடைக் கையால் அவளது கன்னத்தில் தட்டி.

அவன் வகுக்கப் போகும் வழி, என்னவாய் இருக்கும் என்ற கற்பனையிலேயே இருந்த தன்னொளி, மீதி படத்தைப் பார்த்திருப்பாளா என்ன?! ஒரே கனவு தான்! ஒரே குதூகலம் தான்!

ஆனால், அவளது கனவு மெய்ப்படவில்லை! சரியான வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், கணவன் மெய்யாக்க முயலவில்லை!



# 18

திரைப்படம் முடிய பன்னிரெண்டு மணியானது.

அதன்பின்னர், கணவனும் மனைவியுமாய் பயணித்த அரை மணி நேரப் பயணம், வார்த்தைகளின்றி, ஒரு வித மௌனத்துடனே கழிந்தது!

கணவன் நடத்திய காதல் களியாட்டங்களில் மனைவியாள் தன்னைத் தொலைத்திருக்க, கணவனோ வேறொரு யோசனையில் இருந்தான்!

அந்த யோசனை - வண்டியை நிறுத்தியதும், தன் கையைப் பிடித்துக் கொண்டு, தன்னை ஒண்டியே வந்த மனைவியிடம் ''செம டயர்ட்டா இருக்கு, தனு! ஹ்ம்ம்... படுக்கணும்!'' என்று சொல்ல வைத்து, ஐந்தே நிமிடத்தில் உறங்கவும் வைத்தது!

தன்னொளி, ஒரு நிமிடம் மிக அவமானயாய் உணர்ந்தாள்!

ஏனோ அவன் தன்னை ''வேண்டாம்'' என்று தூக்கியெறிந்து விட்டது போல், வலித்தது!

திரையரங்கில், அவன் பேசியப் பேச்சுக்களில் மயங்கி, என்னென்னமோ எதிர்பார்த்திருந்தவளுக்கு, அவனது உறக்கம் அக்கிரமமாய்ப் பட்டது!

படுத்திருந்தவனை எழுப்பி, ''என்னமோ... புள்ளக்குட்டிக்கு வழி பண்றேன்னு பீலா விட்டியே? என்னாச்சு? எல்லாம் வாய் வார்த்தைத் தானா?'' என்று சட்டையைப் பிடித்துக் கேட்க வேண்டும் போல், ஆத்திரம் வந்தது!

ஆனால், உடனேயே ''ஒருவேளை... வெறும் வாய் வார்த்தைத் தானோ? நான் தான்... ஓவரா கற்பனை பண்றேனோ?'' என்ற சந்தேகம் வலுப்பெற்றது!

சிறு துளியாய் இருந்த சந்தேகம், கொஞ்சம் கொஞ்சமாய் ஆற்று வெள்ளமாய் உருவேற, ''தாயின் கடைசி வார்த்தைக்காக மணந்து கொண்டவன், மணந்து கொண்ட பாவத்திற்காக... வேறு வழியில்லாமல், தன்னிடம் நன்றாக நடந்து கொள்ள முயல்கிறான்!'' என்ற எண்ணம் வலுப்பெற்று, ''ஆசைப்பட்டது கிடைக்கவில்லை... கிடைத்ததன் மீது ஆசை வைப்போம் என்ற சராசரி எண்ணம் வந்துவிட்டது போலும்!'' என்ற கணிப்பு உறுதிபெற்று, ''என்னதான் மனதைத் தேற்றிக் கொண்டாலும், அவனால் தன்னுடன் இழைய முடியவில்லை போலும்! அதனால் தான், என்னை அலட்சியப்படுத்துகிறான்!'' என்ற முடிவு தனுவின் மனதினுள் ஆழமாய் பதிந்து போனது!

இதன் விளைவாய் உண்டான கோபம், அவளை அவர்களது அறையிலிருந்து எழுந்து, தானும் பூவும் உபயோகிக்கும் அறைக்குள் சென்று படுக்க வைத்தது!

உள்ளே கனன்று கொண்டிருந்த ஆற்றாமையும், கோபமும் தூக்கத்தைத் துறக்க வைக்க, இரவு வெகு நேரம் கழித்து உறங்கியவள், தூக்கம் களைந்து லேசாய் புரண்டபோது, யாரோ அருகே படுத்திருப்பது புரிந்தது!

''பக்'' என்று உடம்பும் மனசும் தூக்கிவாரிப்போட, கண்ணைத் தேய்த்துவிட்டுக் கொண்டு எழுந்து அமர்ந்தவள், அருகே கணவனைக் கண்டு திகைத்துப் போனாள்!

''இவன் எப்ப இங்க வந்தான்?'' என்ற அவனது கேள்விக்குப் பதிலாய்,



இளாவின் கைகள் தனு படுத்திருந்த வெற்றிடத்தைத் தடவ, ''படு... தனு! இன்னைக்கு சாட்டர்டே தானே... மெதுவா எழலாம்!'' என்றான் அவன் தூக்கக்கலக்கமாய்!

''ம்ம்ம்...'' என்று வாய் முணுமுணுத்தப் போதும், மூளையும் மனமும் ''இவன் எதுக்கு இங்க வந்தான்?'' என்ற கேள்வியிலேயே உழன்று கொண்டிருந்தது!

எழுந்தத் தோரணையிலேயே அமர்ந்திருந்தவளின் கண்கள், என்றைக்கும் இல்லாத திருநாளாய் கணவனின் மேனியை வலம் வந்தன!

களைந்த தேகமும், சோர்ந்த முகமும் என அயர்ந்து படுத்திருந்தவனிடம் ''ஏன்டா என்னைக் கொல்றே? நான் சும்மா தானே இருந்தேன்... நீ தானே... அது இதுன்னு பேசி... என்னைக் கரைச்சே... இப்ப நானே லவ் தானோங்கிற எண்ணத்துக்கு வந்துட்டேன்... இப்ப நீ ஏன்டா பாக் அடிக்கிறே?'' எனத் தன் ஆற்றாமையைக் கேட்டே விட்டாள், தன்னொளி!

கேட்டு முடித்ததும் தான், தான் உளறியது புரிந்தது தனுவிற்கு!

''ஹய்யோ!'' எனத் தலையில் அடித்துக் கொண்டவள், வேகமாய் அந்த இடத்தைக் காலி செய்தாள்.

அவள் அறையை விட்டு வெளியேறுவதற்கும், உதட்டோரம் படர்ந்த சிரிப்புடன் இளா திரும்பிப் படுப்பதற்கும் சரியாக இருக்க, தலையை அழுந்தக் கோதிவிட்டுக் கொண்டு கால்களை நீட்டி, விட்டத்தை நோக்கியவாறே படுத்தான் கணவன்!

உத்தரத்தில் சுற்றிய மின்விசிறியின் மீது பார்வை இருந்தபோதும், மற்றொரு யோசனையிலும் திட்டமிடுதலிலும் மூளை லயித்துப் போயிருந்தது!!

அரை மணி நேரம் கழிந்தபின்னர், ஏதோ முடிவு செய்தவனாய், வெளியே எழுந்து வந்தவன், நேரே அடுக்களைக்குள் சென்றான்.

அவன் வரும் அரவம் கேட்டப்போதும், பால் பாத்திரத்திலேயே பார்வையைப் பதித்திருந்தவள், ''ஜாகிங் போகல?'' என்றாள் கேள்வியாக.

''ஹ்ம்ம்... போணும்...'' என்று இழுத்தவன்.

''ஒரு கப் டீ கிடைக்குமா, தனு?'' என்றான் அவளருமே வந்து நின்று கொண்டு.

''இதென்ன ஹோட்டல்லா? கிடைக்குமான்னு கேட்கிறீங்க? டீ தான்னா தரப் போறேன்!'' என்று அவள் விட்டேத்தியாக கூற,

''எதுக்கும்மா வம்பு? நா டீ கேட்பேன்... நீ டொக்குன்னு கொண்டு வந்து வைப்பே... அது என் மேல சிந்தும்... காலையில் எழுந்ததும் எதுக்கு டீ-ல குளிக்கணும்?'' எனக் கூறித் தோளைக் குலுக்கியவன்,

''உன் மனசு கோணாம நடந்துக்கிட்டா... எனக்கும் நல்லது, உனக்கும் நல்லது! இல்லையா?'' என்றான் அவளது கன்னத்தில் தட்டி.

பட்டென அவனது கையைத் தட்டிவிட்டவள், ''பெரிய நல்லவரு! என் மனசு கோணாம நடந்துக்கிற மூஞ்சியைப் பாரு...'' என்றாள் முணுமுணுப்பாக.

''என்ன தனு சொன்னே? எனக்குச் சரியா கேட்கல...'' - என்றவாறே அவள் பக்கமாய் சாய்ந்தவன், மெல்ல அவளது இடுப்பை வளைத்து, அவளைத் தன் பக்கமாய் இழுத்தான்.

''உங்களுக்குத் தானே? கேட்க வேண்டியதெல்லாம் கேட்காது! கேட்கக் கூடாததெல்லாம் கேட்கும்! உங்க



டீயை எடுத்துக்கிட்டு... இடத்தைக் காலி பண்ணுங்க!'' என்றாள் தனு, ஏகக் கடுப்புடன்.

அவள் கொடுத்தத் தேனீர் கோப்பையை வாங்கிக் கொண்டவன், சமையலறையை விட்டு வெளியேறியவாறே ''ப்ச்! என் மேல நீ எதுக்கே கோபமா இருக்கே... ஆனா... எதுக்குன்னு தான் தெரியல... ப்ச்... ப்ச்... நா பாவம்!'' என்றான் சோகமாய்.

''மரியாதையா போய்டுங்க! என்னைக் கொலைகாரி ஆக்காதீங்க!'' என்று தனு பல்லைக் கடிக்க,

''சரி... சரி'' என்றவனின் முகம், பயந்த குழந்த போலிருந்தப் போதும், உதட்டின் ஓரத்தில் ஓர் குறும்புச் சிரிப்பும், கண்களில் ஓர் கள்ள மின்னலும் வேகமாய் வந்து போயின!

அதன் பின்னர், ஒரு மணி நேரத்திற்கு, அய்யா அம்மாவின் கண்ணில் படவே இல்லை.

''என்ன சத்தத்தையே காணோம்?'' என்று வந்து பார்த்தவளுக்கு, அவனும் அவனது இரண்டாவது மனைவியும் காட்சியளிக்க,

''ஹுக்கும்!'' என்று கழுத்தை நொடித்தவள், ''சாப்பிட வாங்க!'' என்றாள் சத்தமாக.

ஆனால், அவோ ''சாப்பிட வந்துத் தொலைங்க!'' என்ற ரீதியில் இருக்க, ''ஆத்தா மலையேற இன்னும் நேரமாகும் போலவே!'' என்ற அங்கலாய்ப்புடன் உணவு மேசைக்குச் சென்றான், இளா!

சாப்பிடும் போது மௌனமே பிரதானமாய் இருக்க, உணவு முடிந்து கை கழுவியதும் ''எங்கேயாவது வெளில போலாமா, தனு?'' என்றான் இளா.

நேற்றைய கடுப்பில், ''ம்ஹூம்! நா வரலை... நீங்க வேணும்ன்னா போயிட்டு வாங்க!'' என்றாள் தனு, சோம்பலை வலுக்கட்டாயமாக குரலில் வரவழைத்து.

அதற்குப் பதிலாக, ''ஹ்ம்ம்... சரி விடு! வீட்டிலேயே இருக்கலாம்!'' என அவன் சொல்லுவான் என்று தனு எதிர்பார்த்திருக்க,

அவனோ ''சரி... நான் கிளம்புறேன்! வர நைட் ஆகி டும்ன்னு நினைக்கிறேன்... அதனால மதியம் சாப்பாடு வேணாம்!'' என்று அறிவிப்போடு வெளியே கிளம்பிச் சென்றே விட்டான்!!

ஏற்கனவே கனன்று கொண்டிருந்த நெருப்பு, கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது தனுவிற்கு.

பதினோரு மணிக்காய் போன் பண்ணிய இந்திரா விடம் ''யாரு... உங்க மாப்பிள்ள தொர தானே? மைனர் சார்... ஊர் சுத்தப் போயிருக்கார்! நகர் வலம் முடிஞ்சு, நைட் தான் வருவாராம்!'' என்றாள் மகள், ஏகக் கடுப்புடன்.

இரவு பத்து மணி தாண்டி வந்தவன், அவளுடன் பேசியாவது இருக்கலாம்.

வந்த மாத்திரமில்லாமல் ''இந்த மெட்ராஸ்ல வெயில் அடிச்சாலும் தொல்லை... மழை பெஞ்சாலும் தொல்லை! நசு... நசுன்னு! எப்படா படுப்போம்ன்னு இருக்கு!'' என்ற சொல்லோடு, குளியலறைக்குள் நுழைந்தவன், அவளது சாப்பாடு?'' என்ற கேள்விக்கு, ''வேணாம் தனு! நான் பிட்ஸா சாப்பிட்டேன்!'' என்றதோடு படுத்தே விட்டான்.

வெறுமனே ''சாப்பிட்டேன்'' என்று மட்டும் சொல்லி யிருந்தாலும் பரவாயில்லை, அவளுக்குப் பிடித்த ''பிட்ஸா''வை இழுத்து, அவளது வாயில் பீஸ்... பீஸ் ஆகிக் கொண்டிருந்தான் கணவன்!!

சரி, சனிக்கிழமை தான் இளாவுக்கு சனிக்கிரகத்தின் ஆதிக்கத்தில் சென்றது என்றால், அந்தச் சனி, ஞாயிற்றுக் கிழமையும் தொடர்ந்து தன் ஆதிக்க அதிகாரத்தைச் செலுத்தியது! செலுத்த வைத்தான், இளா!



ஞாயிறில் ஞாயிறு விடியக் காத்திருந்தவன் போல், ''தனும்மா! எனக்கு வெளிய கொஞ்சம் வேலையிருக்கு... எனக்கு இன்னைக்கு ஃபுல்லா சாப்பாடு வேணாம்!'' என்றுவிட்டு, ஓடியே போய்விட்டான்!

நொந்து போனாள், தன்னொளி!

ஊரிலிருந்து அரிசி மூட்டை எடுத்துவரவா என்று கேட்பதற்காக அழைத்தக் கட்டபொம்மனிடம் ''பூவைக் கூட்டிட்டு நீங்க சீக்கிரம் வந்துடுங்க, மாமா!'' என்றாள் தனு, ஆயாசமாக!

''ஏன்மா?'' என அவர் துணுக்குற,

''எனக்குப் பயங்கரமா போர் அடிக்குது... வீட்டில நா மட்டுமா எத்தனை நேரம் இருக்கிறது?'' என்றாள் தனு, குரலில் தனிமை வெளிப்பட.

''ஏன்மா? இளா எங்கே? ஆபீஸ் போயிட்டானா?''

''தெரியலை...''

''என்னம்மா தெரியலைங்கற?''

''உங்க பையன் எங்க போறேன்னு என்கிட்டே சொல் லிட்டுப் போனா தானே... நான் உங்ககிட்ட சொல்ல முடியும்? அவர் எங்க போறார்... எப்ப வருவார்... சாப்பிடுவாரா... மாட்டாரா... எதுவும் எனக்குத் தெரியாது!'' என மருகமள் எரிச்சல் கொள்ளவும்,

''அப்படியா? ஞாயிற்றுக்கிழமை என்ன வெட்டி முறிக் கிறான்!! நா பேசுறேன்ம்மா'' என்று அழைப்பேசியை வைத்தார் கட்டபொம்மன்.

மருமகளிடம் வீரா வேசமாய் பேசியவர், மகனிடம் பேசிய பின்னர் பெட்டிப்பாம்பாய் அடங்கிப் போனார் எனலாம்.

அதன் விளைவாய், மருமகள் மாலையில் அழைத்து விவரம் கேட்டபோது ''அவனுக்கு... வெளிய ஏதோ வேலையாம்... நைட் வந்திடுவான்! நீ பத்திரமா

வீட்டைப் பூட்டிட்டு இரும்மா!'' என்று பம்மினார், மாமனார்.

தன்னொளிக்கு சுள்ளென்று வந்தது ''ஆமா... பெரிய பருத்திவீரன் மாதிரி கிளம்பினாரு! இப்ப என்னடான்னா கைப்புள்ள மாதிரி அடங்கிப் போயிட்டாரு!'' என்று மாமனார் மீது வந்த கோபம், கணவன் மீது முழுதாய் திரும்ப, ''ம்ம். சரி மாமா!'' என்ற ஒற்றை வார்த்தையோடு, அழைப்பை வைத்துவிட்டாள்.

எல்லா எரிச்சலும் உச்சம் பெற, ''நைட் வரட்டும்... கிண்டி வச்சிருக்க உப்புமாவை அப்படியே தலையில கொட்டுறேன்!'' என்று கறுவிக் கொண்டிருந்தவள், எப்போது தூங்கினாள் என்றே தெரியவில்லை. கண் விழித்துப் பார்த்தால், மணி ஆறாகி இருந்தது!

சற்று நேரம், தனுவிற்கு ஒன்றுமே புரியவில்லை!

கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்தவளுக்கு, இளம்பரிதி இரவு முழுதும் வீடு திரும்ப வில்லை என்ற உண்மை உரைக்க, கோபம் எல்லாம் பறந்தோட, தாரத்தின் தாயுள்ளம் பதறிப் போனது!

வேகமாய், கைப்பேசியை எடுத்துப் பார்த்தால், ஒரு மிஸ்ட் கால்... ஒரு மெசேஜ்... ஒரு மண்ணுமில்லை.

பயத்தை மீறிய எரிச்சல் வந்தது, தனுவிற்கு!

போய்த் தொலையட்டும் என்று விட்டுவிட மனமும் வரவில்லை! ஆனால், கோபமும் மட்டுப்படவில்லை!

கோபத்தைப் பாசம் வெல்ல, கைப்பேசியை அவள் எடுக்கும் போதே, வீட்டின் அழைப்பு மணி கிணுகிணுத்தது!

போய்த் திறந்தால், நம் சாரி மன்னன், ஒரு ''சாரி'' யுடன் நின்றிருந்தான்.

எப்போதும் சண்டை போட்டு, அவனை ஒரு வழி யாக்கும் தன்னொளிக்கு, இப்போது கண்ணை முட்டிக் கொண்டு, கண்ணீர் வந்தது!



''ம்ஹூம்! இவன் முன்னால் அழக்கூடாது!'' என்ற வைராக்கியம் மேலோங்க, ஒன்றும் பேசாமல் வீட்டினுள் திரும்பினாள், தனு!

ஒரு வார்த்தை கூடப் பேசாமல் முகத்தைத் திருப்பிய மனைவியின் கைப்பிடித்து நிறுத்திய இளம்பரிதி ''சாரி தனு! நேத்து... வேலை முடிய பதினோரு மணிக்கு மேலாச்சு... அப்படியிருந்தும் வீட்டுக்கு வந்தேன், தனு! ரெண்டு வாட்டி... பெல் அடிச்சேன்... நீ திறக்கலை... சரி தூங்கிட்டேன்னு கிளம்பிட்டேன்!'' என்றான் விளக்கம் போல.

ஆயிரத்தியெட்டுக் கேள்விகள், கோடிக்கணக்கில் கோபம் என்றிருந்த தனு, அவன் பிடித்திருந்தக் கையை உருவிக் கொண்டு, அங்கிருந்து மெல்ல நகர்ந்தாள்.

பின்னோடு வந்து, சில பல ''சாரி''களும், ''இல்ல தனு''களும் அவன் வாயிலிருந்து உதிரும் என தனுவின் நெஞ்சம் எதிர்பார்த்திருக்க, அவனோ வரவில்லை!!

எதிலிருந்தோ தப்பிப்பவன் போல, ''தனு... இன்னைக் கும் நாளைக்கும் எனக்கு ஆபீஸ்ல நிறைய வேலையிருக் கும். நான் மூணு வேலையும் அங்கேயே பார்த்துக்கிறேன்... பை... பை...'' என்ற வார்த்தையோடு, அரை மணி நேரத்தில் ஓடியே போய்விட்டான்.

சட்டையைப் பிடித்து ''எங்க போறீங்க?'' என்று கேட்கத் துடித்தது, தனுவின் மனம்!

ஆனால், உள்ளிருந்த ஈகோ இடம் கொடுக்கவில்லை!

''போயேன்!!'' என்று தலையைச் செலுப்பிக் கொண்டு, அலுவலகம் சென்றபோதும், கண்ணைக் கரித்துக் கொண்டு, உப்பு நீர் உணவுக்குழாயை நனைத்தது!

போன் பண்ணித் திட்டிவிடலாமா என்ற எண்ணம் மேலோங்க, கைப்பேசியை எடுத்தபோதெல்லாம்,

''ம்ஹூம்! அவன் என்ன தப்பு செஞ்சாலும்... நாம தானே சண்டை போட்டு... உடனே சமாதானம் ஆகுறோம்! இந்த வாட்டி... அவனா வரட்டும்!'' என்ற விம்பு கைப்பேசியை அணைத்துப்போட்டது!

இதற்கெல்லாம் மகுடம் வைப்பது போல், அலுவலகத்தில் ''வருடாந்திர பராமரிப்பை'' முன்னிட்டு, பத்து நாட்கள் விடுமுறை அறிவித்தனர்.

வருடா வருடம் நடப்பது தான்! ஆண்டின் இறுதியில், பத்து நாட்கள் மெஷின்களுக்கு ஓய்வு கொடுக்கும் சாக்கில் மெஷின்களாய் உருமாறியிருக்கும் மனிதர்கள் ஓய்வெடுத்துக் கொள்வதுண்டு!

ஆனால், முந்தைய வருடங்களைப் போல் இந்த வருடம் சந்தோசம் பொங்கவில்லை!

சுணங்கி நின்ற மனதிடம் ''என்ன காரணம்?'' என்று விசாரித்தப் போது, ''இளா!'' என்றது மூளை, மனதிற்கு ப்ராக்சியாக மாறி!

''ஆம்! இளா தான்... அவனால் தான்!''

விடுமுறை விட்டு என்ன புண்ணியம்? வார இறுதிகளில் கூட, வெளியே கூட்டிச் செல்லாதவன், இப்போது மட்டும் என்ன கிழிக்கப் போகிறான்?

சரி... அவன் என்னவோ தொலைகிறான்... நாம் அம்மா வீட்டுக்குச் செல்வோம் என்றால், அவனைத் தனியே விட்டுச் செல்லவும் மனசு வரவில்லை!

தொய்ந்துப் போய் அமர்ந்திருந்தவளை உசுப்பேத்தவென, ''ஹே என்னடி தனு... இந்த ஹாலிடேல ஹனிமூன் ட்ரிப்பா? எங்க போறீங்க?'' என்றாள், உடன் பணிபுரியும் ஒருத்தி.

''ஆமா... மரத்தில இன்னும் துளிரே விடலையாம்... இதில இவ பழம் பழுத்து கொட்டைப் போட்ட



அளவுக்குப் போயிட்டா!'' என்று நொடிக்கத் தான் தோன்றியது, தனுவிற்கு!

ஆனால், தோழியின் வார்த்தை உள்ளுக்குள் ஓர் இன்பப் பரபரப்பைக் கிளப்பிவிட, ''போகலாமே!'' என்ற எண்ணம் உருவாவதை அவளால்... அவளது கோபத்தால் தடுக்க முடியவில்லை!

அவனிடம் கேட்கலாமா வேண்டாமா என்ற ஒரு மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர், ''சரி... ஒரு முயற்சி செய்துப் பார்ப்போம்!'' என்று கைப்பேசியில் அவனது எண்ணை அழுத்திவிட்டுக் காத்திருந்தாள், தன்னொளி.

முதல் மணியிலேயே எடுத்தவன், ''என்ன தனு பேபி?'' என்றான் குதூகலமாய்!

''பேபியா?? உன்னை அடி சாத்தவேணாம்!'' என்று உள்மனது குரல் கொடுக்க,

''எனக்கு அடுத்த வாரம் திங்கட்கிழமையில இருந்து, பத்து நாள் லீவ்!''

''ஹோ... தெரியுமே?''

''தெரியுமா எப்படி?''

''ஹான்... ஹான்... அதுவா... அது வந்து... உன் கம்பெனில வருஷா வருஷம் இப்படி நியூ இயர் ஹாலிடே விடுவாங்கன்னு தெரியும்! இதே இண்டஸ்ட்ரில இருந்துக்கிட்டு... இது கூடத் தெரியாம இருக்குமா?''

''ஹ்ம்ம்ம்...''

''என்ன தனு... சொல்லு...''

''உங்களுக்கும் லீவா?''

''நானெல்லாம்... உன்னை மாதிரி பெரிய கம்பெனிலேயே வேலை செய்றேன்... எங்க கம்பெனி எல்லாம் ஜுஜுபிம்மா... நோ லீவ்!''

"சரி... சரி... நீங்க லீவ் போடமுடியுமா? இங்க ஏதோ... வெகேஷன் ஆபர் போட்டிருக்காங்க... போலாமா?" என்றாள் தனு, இல்லாத ஆஃபரை உருவாக்கி.

"ஹோ! நோ! முடியாதேடா! லீவே இல்லை! நீ ஒண்ணு பண்ணு... உங்கம்மா வீட்டுக்குப் போயிட்டு வா!" என அவன் கூற,

"நா என்ன பண்ணனும்ன்னு நீங்க சொல்லத் தேவையில்லை! நா போய்ப்பேன்!" என்ற தனு, போனைப் பட்டென வைக்க,

அந்தப் பக்கம் இளம்பரிதியோ "ஹே!!!" என்ற இன்பமாய் கூவினான்!!

## 19

தன்னொளிக்கு இருந்தக் கோபத்திற்கு, அன்றே ஊருக்குக் கிளம்பிச் சென்றுவிட்டாள்! இளம்பரிதியிடம் சொல்லாமல்!

"தேடட்டும்! தவிக்கட்டும்!" என்று கறுவிக் கொண்டே, திருவண்ணாமலை பேருந்து நிலையத்தில் இறங்கி, பேருந்து நிலைய வாசலுக்கு வந்தால், "ஹே அக்கா!" என்ற கூவலுடன் அருள் வந்து நின்றாள்!

திகைத்து நின்ற தனு, "நீ எங்கடி இங்க? பக்கத்தில ஏதாவது வேலையா வந்தியா?" என்றாள் தங்கையிடம்.

"இல்லையே? உன்னைக் கூட்டிட்டுப் போற ஒரே ஒரு ஒத்த வேலையோட தான்... லொங்கு லொங்குன்னு இவ்வளவு தூரம் வந்தேன்! வாம்மா வா, வீட்டுக்குப்



போலாம்!" என அருள், தமக்கையின் கையிலிருந்தப் பெட்டியை வாங்கவும்,

"என்னைக் கூப்பிட்டுப் போகவா? உனக்கு எப்படி நான் வரது தெரியும்?"

"உன் ஆத்துக்காரர் தான் சொன்னாரு!"

"என்னது? என் ஆத்துக்காரரா?" - தனுவிற்கு மயக்கமே வந்துவிட்டது!

"ஏன் இப்படியொரு ரியாக்ஷன் கொடுக்கிறே? ஆட்டோ ரிக்ஸா மாமா பயப்படுறார் இல்ல... சும்மா ஏறு!" என்றபடியே, ஆட்டோவினுள் பெட்டியை வைத்தவள், அயர்ந்து நின்ற தமக்கையை உள்ளே ஏற்றினாள்!

"நீ எப்ப-டி அவர்கிட்டப் பேசினே?"

"ஹே உனக்குத் தெரியாதா? நானும் அத்தானும் தினமும் பேசுவோமே?"

தன்னொளி பார்த்தப் பார்வையில் "அடிப்பாவி! என்னைய சந்தேகப்படறியா? நான் தங்கம்டி... அதைவிட உங்க வீட்டுக்காரர் வைரம்டியம்மா!" என்றாள் அருள், பயந்தவள் போல்.

"ஆமா... சந்தேகப்படறாங்க! கட்டின பொண்டாட்டியையே மனுஷன் ஏறெடுத்துப் பார்க்கலை... இதில மச்சினிச்சியைப் பார்த்துட்டாலும்!" என்று உள்ளம் குமுற,

"ஒருவேளை... ஏதாவது டெக்னிகல் டிஃபக்ட்டா இருக்குமோ? இல்ல... மானுஃபாக்ச்சரிங் கோளாறோ? இப்படி... இருக்கானே?" என்று எக்குத்தப்பாய் சந்தேகம் மண்டையைக் காய வைத்தது!

வீட்டுக்குச் சென்றால், "அண்ணி..." என்று செல்லம் கொஞ்சிக் கொண்டு, பூ வந்து கட்டிப்பிடித்துக் கொள்ள,

"வாடா தனு! எப்படி இருக்கே?" என்று அவள் பின்னோடு வந்தார் இந்திரா.

அதன் பின்னர், சிரிப்பும் அரட்டையும் கூடவே உண வும் முடிய, இரவு உறங்கச் செல்லும் முன்னர், அடுக் களையில் பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்த இந்திராவின் பின்னே சென்று நின்றாள் தன்னொளி.

மகள் வந்த அரவம் கேட்டதும், ''என்னடா தனு? தூங்கலையா?'' என்றார் இந்திரா, குரலில் வாஞ்சையுடன்.

''ஹ்ம்ம், தூங்கணும்...'' என மகள் இழுக்க,

''என்ன தனு... அம்மாகிட்ட ஏதாவது கேட்கணுமா?'' என்றார் இந்திரா, மகளைப் படித்தவராய்.

''ஹ்ம்ம்...'' - முதலில் லேசாய்த் தயங்கியவள், ''அம்மா! கல்யாணம் முடிஞ்சு முதல் வாட்டி... அம்மா வீட்டுக்கு வரேன்... இளா எங்கன்னு ஒரு வார்த்தை கேட்கலை? ஏன்மா?'' என்றாள் நேரடியாக.

கையிலிருந்தப் பாத்திரத்தைக் கூடையில் கவிழ்த்து விட்டு, மகளின் அருகே வந்தவர், ''இந்த செண்டி மெண்ட் எல்லாம் பாட்டிம்மா எங்க படிச்சீங்க?'' என்றார் அவளது கன்னம் தட்டி.

''ஷ்! பேச்சை மாத்தாதீங்க... ஏன் நீங்க கேட்கலை?'' - தனு அதே பிடியில் நிற்க,

''உனக்கு லீவ் நீ வந்தே... மாப்பிள்ளைக்கு லீவ் இல்லை... அவர் வரலை! ஒரு சிம்பிளான விஷயத்தைப் போட்டு எதுக்கு காம்ப்ளிகேட் பண்ணனும் தான்... கேட்கலை!'' என்றாள் இந்திரா, சுலபமாக.

''எனக்கு ஒண்ணும் லீவ் இல்லை... லீவ் போட்டுட்டு வந்தேன்!''

''அப்படியா? ஏன்டா?''

''ம்ம்... உங்க மாப்பிள்ளை மேலே ஏகக் கடுப்பு... எங்க அங்க இருந்தா அவரை அடிச்சிடுவோமோன்னு பயந்து தான் இங்க வந்தேன்!''



''அப்படியா? நல்லது!''

''என்னம்மா அப்படியா... அப்படியான்னுட்டு இருக் கீங்க? சண்டைன்னு சொல்றேன்... என்ன விஷயம்ன்னு கேட்க மாட்டீங்களா?''

''அம்மாவா இருந்தாலும்... நான் உங்க ரெண்டு பேருக்கும் நடுல மூணாவது மனுஷி தான்!'' - குரலில் தெளிவோடு பேசியவர்,

''சின்னப் புள்ள மாதிரி... கோல் மூட்டுறதை விட் டுட்டுப் போய் படு! போ!'' என்றார் கண்டிப்புடன்.

அதற்கு மேல் அங்கு நிற்க, தனு ரோஷமற்றவளா என்ன? விசுக்கென்று அங்கிருந்து நகர்ந்து, படுக்கை யறைக்குள் மறைந்தாள்!

அன்று மட்டுமல்ல, தொடர்ந்து இரண்டு நாட்களும் இளாவைப் பற்றிய பேச்சை எடுக்காமலே நேரத்தை அவள் கடத்த, சில பல மர்மப் புன்னகைகள் பின்னணி யில் பரிமாறப்பட்டன என்பதை அவள் அறியாள்!

இரண்டு நாள் சென்ற பின்னரும், அவன் தன்னை அழைக்கவில்லை என்பதே மனதைப் போட்டுப் பிசைய, நேரம் நகர்வது ரணகளமாய் இருந்தது!

''ச்சே, சென்னையிலேயே இருந்திருக்கலாமோ?'' என்று எண்ணும் அளவிற்கு, தனுவின் நெஞ்சம் அவனைத் தேடியது!

''ஹய்யோ!!! ஏன்டா கல்யாணம் பண்ணிக்கிட் டோம்... அதுவும் ஒரு தயிர்சாதத்தை!'' என்று தன்னொளி, முனங்கும் அளவிற்கு, ஒரோர் நிமிடமும்... சொல்லப் போனால் ஒரோர் நொடியும், அவனை... அவனது பிம் பத்தைப் பிரதிபலிக்க, ஏங்கித் தான் போனாள், தன்னொளி!

ஏக்கம் கோபத்தை உண்டு பண்ண, அதை வெறி யாக்கும் வண்ணம், ''ஹே பூ... உங்க அண்ணனுக்கு

என்ன பெரிய கண்ணதாசன்னு நினைப்பா? கவிதையெல்லாம் தூள் பறக்குது!'' என்றபடியே பூவைக் கலாய்த்துக் கொண்டிருந்தாள் அருள்.

பூ பதில் சொல்வதற்கு முன்னர், ''கவிதையா? அவரோட கவிதையை... நீ எப்படிப் படிச்சே?'' என்று இடைப் புகுந்தாள், தன்னொளி.

''நீ... என்ன ஒரு வாரமா... காந்திஜி செத்துட்டாராங்கிற மாதிரியே ரியாக்ஷன் கொடுத்துக்கிட்டு இருக்கே? என்ன விஷயம்?'' என்று தன் மூக்கில் இல்லாத மூக்குக் கண்ணாடியை ஏற்றிவிட்டுக் கொண்டு அருள் வினவ,

''ப்ச்! சொல்லுடி... எங்க படிச்சே?''

''என்னக்கா நீ? பேஸ்புக்... பேஸ்புக்ன்னு ஒண்ணு இருக்குத் தெரியுமா தெரியாதா? அங்க தான்!'' - அருள் அலட்சியமாய் பதில் சொல்ல,

''நீ அவரோட பிரண்டா இருக்கியா? பேஸ்புக்லேயா?'' என்றாள் தனு, அடுத்தக் கேள்வியாக.

''இது... அடுத்த நேருஜி செத்துட்டாரா கேள்வி போல!'' என்று தோளைக் குலுக்கிய அருள்,

''எப்பவோ! அத்தான் தான்... பிரண்டு ரெக்குவஸ்ட்டே அனுப்பினாங்க!'' - அருளின் வார்த்தை முடியக் காத்திராமல், தனு தன் லாப்டாப்பை உயிர்ப்பித்தாள்.

வேகவேகமாய், பேஸ்புக்குக்குள் சென்று பார்த்தால், ''இளம்பரிதி கட்டபொம்மன்'' என்ற பெயரைத் தாங்கி, ஒரு பிரண்டு ரெக்குவஸ்ட்டும் வரவில்லை!

தனுவிற்கு வந்ததே கோபம்!! அடுத்த நிமிடம், இளாவின் தொலைப்பேசி அலறியது!

அவன் ''ஹலோ'' சொல்வதற்குக் கூடக் காத்திராமல்,

''நீங்க எஃப்.பில இருக்கீங்களா?''



''ஆமா... பேபி! என்ன விஷயம்?''

''அருளுக்கு நீங்க தான் பிரண்டு ரெக்குவஸ்ட் அனுப்பினீங்களா?''

''ஆமா...''

''எனக்கு ஏன் அனுப்பலை?''

''ஹோ! நீ இருக்கியா?''

''பிச்சுடுவேன்... பிச்சு!''

''எதை பேபி?''

''வேணாம்... வெறியாகுது!''

''ஏன் பேபி?''

''பேபி... கீபின்னா அடி பிச்சிடுவேன்!''

''அதான் பேபி! எதை?''

''எதை இல்லை... யாரைன்னு கேளுங்க!''

''ஓகே! யாரை!?''

''உங்களைத் தான்!''

''ஹோ! அப்படியா? சரி!''

''என்ன சரி?''

''சரி விடு! நீ எதுக்கு... என்னை பிச்சிடுவே?''

''ஹான்... ஹான்... அது... அது... வந்து...''

''பார்த்தியா... உனக்கே மறந்து போச்சு! ஹஹஹா!''

''சிரிக்காதீங்க! ஞாபகம் வந்துடுச்சு! எஃப்.பில என்னை ஏன் ஆட் பண்ணலை...''

''சாரி பேபி!''

''இன்னும் ஒரு வாட்டி சாரி சொன்னீங்க... கொன்னுடுவேன் ராஸ்கல்! திமிர் பிடிச்ச ராஸ்கல்! குரங்கு! எருமை! போடா!'' - அதன் பின்னர் என்னென்ன ''நல்ல'' வார்த்தைகள் வந்தனவோ, மூச்சு வாங்க போனை

வைத்துவிட்டு நிமிர்ந்தவளை, பேஸ்புக்கின் திரை "இளம் பரிதியின் தோழர் விண்ணப்பத்தை" ஏந்தி வரவேற்றது!

வேகமாய் "ரிஜெக்ட்" பட்டனை அழுத்தப் போனவள், உள்மனம் குறுகுறுக்க, "முதல அக்ஸப்ட் பண்ணலாம்... அப்புறமா ப்ளாக் பண்ணி விட்டுடுவோம்!" என்ற குருட்டு யோசனையுடன், "அக்ஸப்ட்" பட்டனை அழுத்தினாள்!

"என்னவோ கண்ணதாசன்... கவிதைன்னு உளறிட்டு இருந்தானே... என்னன்னு தான் பார்ப்போம்..." என மனம் உந்த,

அவன் போட்டிருந்த ஸ்டேடஸ் மெசேஜ்களை வேகமாய் வளம் வந்தாள்!

இரு வருடங்கள் முன்னே,
இருநூறு யோசனைகளுக்குப் பின்னே,
முதன்முதலாய் என் மடி சேர்ந்தவள்,

என் சந்தோஷங்களில் துள்ளி
என் ஆசைகளில் தலையசைத்து
என் தவிப்புகளில் பரிதவித்து
என் துக்கங்களில் துவண்டு
என் கோபங்களில் அடிபட்டு
என் கற்பனைகளில் வளைந்து
என் எழுத்துக்களில் மிதிபட்டு
எனது எல்லாவற்றையும் கண்டவள் – இன்றுவரை!
ம்ஹ்ம்ம் நேற்று வரை!

பயணங்களுக்கு மிதிவண்டியாய்
புதையல்களுக்கு புதைகுழியாய்
வெளியுலகிற்கான வாசற்படியாய்



நிழல்களின் நரம்பாய்
பாடல்களின் பதிவாய்
இருந்தவளை உற்ற தோழியென்றோ...
ஜென்ம எதிரி என்றோ எண்ணியதில்லை –
இன்றுவரை! ம்ஹ்ம்ம் நேற்று வரை!

இரு வருடங்களாய் என்னிடம் பட்ட பாட்டிற்கு
ஓய்வு எடுக்கிறாள் போலும்!

ம்ஹூம் இருக்காது!
என் மனைவி மடி சேர்ந்த வேளையில்,
மனைவிக்கு வழி விட்டு இவள் காத்திருந்து,
எனக்கு ஓய்வு கொடுக்கிறாள் அவள்!

அவள் – எனது மடிகணினி!!

ஏனோ என்னால் அவளை "அவன்" என்று பகுத்தறிய முடியவில்லை
என்னதான் அடிபட்ட போதும், நான் மீண்டும் திறக்கையில் அதே சந்தோஷத்துடன்
அவள் இருப்பதாலோ என்னவோ!! தாய் மனதைப் போலவே!

முதல் வரியைப் படித்தவள், "இரண்டு வருஷமா? நமக்குக் கல்யாணமாகி... இரண்டு மாசம் தானே ஆகுது?" எனத் தன் கற்பனையைத் தட்டிவிட்டாள்.

அடுத்த வரியில் "இருநூறு யோசனையா? எதுக்கு யோசிச்சான்? நா என்ன அவ்வளவு மோசமாவா இருக்கேன்? எதுக்கு யோசிக்கணும்?" என்ற கோபம் துளிர் விட்டது!

ஆனால், அடுத்தடுத்த வரிகளில் நெஞ்சம் சந்தோஷத்தில் துள்ளி, ஏகமாய் ஆனந்தக் கூத்தாடியது!

அந்த சந்தோசம் "இன்றுவரை! ம்ஹ்ம்ம் நேற்று வரை!" என்ற வரிகளில், "அச்சோ.. பாவம்! என்னை

ரொம்ப மிஸ் பண்றான் போல! ஹவ் ஸ்வீட்!! என்று மனம், அவனுக்காய்ப் பரிதாபப்பட்டு, தனக்காகப் பெருமைப்பட்டுக் கொண்டது!

இந்தப் பெருமையெல்லாம் அடுத்த வந்த ''இரு வருடங்களாய் என்னிடம் பட்டப் பாட்டிற்கு ஓய்வு எடுக்கிறாள் போலும்!'' எனும் வரிகளில் கொஞ்சம் கொஞ்சமாய் வடிய ஆரம்பித்து,

''அவள் - எனது மடிகணினி'' - என்ற வாக்கியத்தில், சந்தோஷங்கள் எல்லாம் தவுடு பொடியாயின!!

தன்னைப் பிரிந்ததைத் தான் குறிப்பிட்டு உருகி இருக்கிறான் என்றெண்ணியிருந்த தன்னொளிக்கு, அந்த வரியைக் கண்டதும் வந்ததே கோபம்! ம்ஹூம்! கோபம் என்பதை விடவும், ஓர் ஆற்றாமை! ஏக்கம்! எதையோ இழந்து விட்ட வெறுமை!!!

உள்ளம் முழுதும் பொங்கி வந்த உணர்வுகளை, உள்ளுக்குள்ளேயே பூட்டி வைக்காமல்... வைக்க முடியாமல், தனுவின் கைகள் இளாவிற்கு அழைத்தன!

எடுத்த நிமிடமில்லாமல் ''ஹே பிரண்டு ரெக்குவஸ்ட்டை அக்ஸப்ட் பண்ணிட்டே போல! சமத்து பேபி!'' எனவும்,

''நீங்க உங்க மனசில என்ன நினைச்சிட்டு இருக்கீங்க?'' என்றாள் தனு, நிதானமாக, ஆனால், காட்டமாக!

''ஏன் பேபி? உன்னைத் தான்!''

''வாயில ஏதாவது... நல்லா வந்திடும்! சொல்லிட்டேன்!''

''என்னாச்சு பேபி!?'' - இளாவுக்குமே அவளது கோபத்தின் பரிமாணம் ஏதோ விபரீதத்தை உணர்த்தியது போலும்!

''என்ன ஆகணும்? நா தான் இங்க கிடந்து சாகாம சாகுறேன்!'' என்ற தனுவின் வார்த்தைகள் கண்ணீரில் ஊற வைத்த உளுந்தாய் பொதுமியிருந்தன!



''ஹே! அந்த வார்த்தை சொல்லாத தனு! இன்னொரு இழப்பை என்னால தாங்க முடியாது!'' - தனது குறும்பையெல்லாம் விட்டுவிட்டு, இளா பதற,

''சும்மா பேசாதீங்க! உங்களுக்கு... நான் முக்கியமில்லை! உங்களுக்கு... உங்க அம்மா கண்ணோட கல்யாணம் நடக்கணும்... உங்க தங்கச்சிக்கு ஒரு அம்மா வேணும்... உங்க வீட்டைப் பார்த்துக்க ஒரு வேலைக்காரி வேணும்... கூடவே சமைச்சுப் போட ஒரு சமையல்காரி வேணும்! தட்ஸ் இட்! நீங்க என்னைப் பத்தி... என்னோட மனசைப் பத்தி கொஞ்சம் கூட யோசிக்கவே இல்லை! என்னோட ஃபீலிங்க்ஸ் முக்கியமில்லை! என்னோட சந்தோசம் முக்கியமில்லை! ச்சே! உங்களுக்காக... உங்களுக்காகன்னு நா எவ்வளவு மாறினேன்... ஆனா... நீங்க... நீங்க... ச்சே!'' - அதற்கு மேல் தனுவால் பேச முடியவில்லை! போனை அணைத்துத் தூக்கிப் போட்டவள், பொங்கி வந்த அழுகையை அடக்கும் வழி தெரியாமல், குமுறிக் குமுறி அழத் தொடங்கினாள்!!

உணவிற்கு அழைக்க வந்த இந்திராவிடம் ''வேணாம்!'' என அவள் மறுக்க,

''ஷ், தனு! என்ன கோபம்ன்னாலும்... வயித்தைக் காயப் போடக் கூடாதுன்னு எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்... எழுந்து வா!'' என்று அதட்டினார், தாய்.

''விஷயம் தெரியாம அட்வைஸ் பண்ணாதீங்கம்மா!!!'' என்று எரிந்து விழுந்தவள்,

''நா இங்க இருந்து திரும்பிப் போகும்போது, ஹாஸ்டலுக்குத் தான் போவேன்! சொல்லிட்டேன்!'' என்றாள் அறிவுப்புப் போல,

அதற்குப் பதிலாய், ''அடிப்பாவி! என்னடி வார்த்தை சொல்றே?''

''மாப்பிள்ளையோட என்னடி கோபம்?''

''தனும்மா... என்ன சண்டையா இருந்தாலும்... இப்படியெல்லாம் பேசக் கூடாது!''

இப்படியான பேச்சுக்களை மகள் எதிர்ப்பார்த்திருக்க, தாயோ ''ஹாஸ்டலுக்குத் தானே? அதை நாளைக்கு முடிவு பண்ணலாம்! முதல எழுந்து வா! நாளைக்கு விடியற் காலையில் செஞ்சிக்குப் போணும்!'' என்றார் சாதாரணமாக.

தாயின் பேச்சு உண்டு பண்ணிய முதற்கட்ட அதிர்ச்சியை விடவும் ''செஞ்சி'' என்ற ஊர் பீதியைக் கிளப்ப,

''அவங்க ஊருக்கு நாம ஏன் போணும்? நான் வரலை!'' என்றாள் தனு திட்டவட்டமாக.

''நா மாப்பிள்ளை வீட்டுக்குப் போறதா சொன்னேனா என்ன? இல்லையே? சும்மா ஊர் சுத்திப் பார்க்கப் போறோம்... செஞ்சிக் கோட்டையைப் பார்த்திட்டு... பக்கத்தில இருக்கக் கோயிலுக்குப் போயிட்டு வருவோம்!'' என்றார் தாய், அலட்சியமாக.

''நா வரலை!''

''ஏன் வரலை? அருளும் பூவும் எத்தனை நாள் தான் வீட்டிலேயே அடைஞ்சு கிடப்பாங்க! சின்னப் புள்ளைங்க... வெளிய கூட்டிட்டுப் போக வேணாமா?'' என்றார் இந்திரா, அதட்டல் மேலோங்க.

''நீங்க போங்க! நா வரலை!''

''ஏற்கனவே சொல்லிட்டேன், தனு! சின்னப் புள்ள மாதிரி நடந்துக்கிறதுக்கும் ஒரு லிமிட் இருக்குன்னு! நீ வர்றே... அவ்வளவு தான்!''

இதற்குமேல், செஞ்சிக்குப் போகாமலிருக்க தனு என்ன ஊரார் வீட்டுப் பிள்ளையா? இந்திராவின் மகளன்றோ!!



அன்று இரவும் சரி, காலை நான்கு மணிக்குக் கிளம்பி செஞ்சிக்குச் சென்ற போதும் சரி, இளம்பரிதி ஒருமுறை கூட தனுவிற்கு அழைக்க முற்படவில்லை! ஏனோ, தன்னைக் குப்பை போல் அவன் வீசிவிட்ட உணர்வு, தனுவிற்கு! அந்த உணர்வு, உள்ளுக்குள் ஏற்படுத்திய வலியை ஜீரணிக்க முடியாமல், தனு பயணிக்க, அவளது வலிக்கான மருந்து, செஞ்சிக் கோயிலில் காத்திருந்தது!

## 20

செஞ்சிக்குள் வண்டி நுழைந்ததோ, ஊரைத் தாண்டி பயணித்ததோ, வண்டியிலிருந்த அருளும் பூவும் கெக்கே பிக்கே என்று சிரித்ததோ, வண்டி ஓர் அய்யனார் கோவிலின் முன்னே நின்றதோ... எதுவுமே தெரியவில்லை தனுவிற்கு!

தன்னொளிக்குச் சுற்றுப்புறத்தை உணர்த்தும் வகையில், ''வாம்மா தன்னொளி!'' என்ற குரல் ஓங்கி ஒலித்தது!

ஒன்றும் புரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தவள், எருமை... ச்சே... அருமை அத்தையைக் கண்டதும் திகைத்துப் போனாள்!

''என்ன அப்படி பார்க்கிறே? வா... வா... வந்து... சீக்கிரம் ரெடியாகு!''

''எதுக்கு அத்தை...'' என தனு இழுக்க,

''எதுக்கா? என்னடாப்பா இளா... உன் பொண்டாட்டி... எதுக்குன்னு கேட்கிறா?'' என அவர் சிரிக்கவும் தான், கணவனும் அங்கே இருக்கிறான் என்பதே அவளுக்குப் புரிந்தது!

"இளா...!!!" என்றவளின் அதரமும் அகமும் ஒருங்கே மலர,

"சீக்கிரம் பேபி... போய் ரெடியாகிட்டு வா!" என்றான் கணவன், அவளை கைப்பிடித்து முன்னே இழுத்தப் படியே!

"ஆஹா! அவ உங்க பொண்டாட்டி தான்... நாங்க யாரும் இழுத்துக்கிட்டு ஓடிட மாட்டோம்... மெதுவா போங்க!" என்ற கலாட்டா குரல் வரவும்,

"ஹே!! ரேக்ஸ்! நீ எங்கடி இங்க?"

"அவ மட்டுமில்லைம்மா... நாங்களும் தான்!" என்ற கோரஸ் பின்னிருந்து வந்தது!

பார்த்தால், சம்யுக்தாவும் அபர்ணாவும் புடவையில் நின்றிருந்தனர்!!

"ஹே சம்யு! அபி! என்னடி இங்க? அதுவும் சாரீல! சூப்பரா இருக்கீங்கடி!" என்று தனு மகிழ,

"அப்புறம் கல்யாணத்துக்கு வரும் போது, குடும்பக் குத்துவிளக்காட்டம் வர வேணாம்! இந்த அடக்கத்தில் ஏமாந்து, உங்க சொந்தக்காரங்கள ஏதாவது ஒரு சோப் ளாங்கி மாட்டுவான்ல! சிக்க வைப்போம்ல!" என்று அபர்ணா, ராகமிழுக்க "கல்யாணமா? யாருக்கு?" என்று விழித்தாள், தன்னொளி!

"ஹய்யோ! கடவுளே! கொஞ்ச நாளா... காந்திஜி செத் துட்டாராங்கிற ரேஞ்சுல தான் இருந்தா.. இப்ப என்ன டான்னா நான் பொறந்துட்டேனா ரேஞ்சுக்குப் போயிட் டாளே! ஐயோ... மிஸ்டர். பனைமரம்... எங்கக்காவை இப்படிப் பைத்தியமா மாத்திட்டீங்களே!" என்றாள் அருள், தலையில் அடித்துக் கொண்டு.



கையை ஓங்கிக் கொண்டு, தன்னொளி அருளின் புறம் நகரவும், "அவளோட வெட்டிச் சண்டை போடற அளவுக்கு நேரமில்லை, தனு! வாடா!" என்று மறுபுற மாய் இழுத்தான், இளா.

அவனிடமிருந்து கையை உருவிக் கொண்டு "நமக்கா கல்யாணம்?" என்றாள் தனு, அவனது கண்ணை ஊடுருவி!

"ஆமா... நமக்கே நமக்குத் தான்!" என்றவனின் குரலோடு சேர்த்துக் கண்ணும் ஆமோதிக்க,

"இதெல்லாம் உங்க வேலையா?" என முறைத்தாள், மனைவி!

"சண்டை போடறதுக்கு... ராகு காலம்... எமகண்டம் எல்லாம் பார்க்கத் தேவையில்லை! ஆனா... கல்யாணம் பண்றதுக்குப் பார்க்கணும்! அதனால? ப்ளீஸ் வா!" எனக் கெஞ்சிய கணவனிடம்,

"ம்ஹூம், முடியாது! என்ன எப்படியெல்லாம் சுத்த விட்டீங்க... வரமாட்டேன்!" என்று முறுக்கிக் கொண்ட தன்னொளியின் இதழோரம் ஏகப்பட்ட சிரிப்பு! மனம் ஏனோ லேசாகிப் பறப்பது போலிருந்தது. அவளுக்கு!

மகளின் மனதைப் பிரதிபலிப்பவராய், "உனக்காக... உன் சந்தோஷத்துக்கான்னு யோசிச்சு... யோசிச்சு... மாப்பிள்ளை ஒண்ணொண்ணும் பண்ணியிருக்காது, தனு! சும்மா... முரண்டு பண்ணாம... அதையெல்லாம் அனுபவி!" என்றார் பெண்ணின் முதுகு தட்டி.

"நீங்களும் அவரோட சேர்ந்துட்டீங்க இல்ல..." என்று வாய் குறை சொன்னபோதும், குரல் பெருமிதத்தில் குளித்திருந்தது.

"நீ அவரோட சேர்ந்ததால... வேற வழியில்லாம நானும் அவரோட சேர வேண்டியதா போச்சு!" என்று

சிரித்த இந்திராவின் வார்த்தைகளில் ''நீ அவரோட சேர்ந்ததால'' சந்தோஷத்தில் தோய்க்கப் பட்டிருந்தன!

லேசாய் சிணுங்கினாளே ஒழிய, ''இல்லை'' என்று மறுக்காமல் கணவனின் கைப்பிடித்து செல்லும் மகளையே மனம் ததும்பப் பார்த்திருந்தார் அந்த அன்புத் தாயார்!

அகமும் முகமும் ஒருங்கே மலர, கோயிலுக்குள் நுழையப் போனவளை, ''டிரஸ் சேன்ஜ் பண்ணிட்டு... கோவிலுக்குப் போலாம், தனு! அதோ... அங்க இருக்க மண்டபத்துக்குப் போ!'' என்று அனுப்பிவைத்தான், கணவன்.

வேகமாய் மண்டபம் நோக்கி விரைந்தவளை, ஓர் அரக்கு வண்ணப் பட்டும், பொருத்தமான நகைகளும் வரவேற்க, ஏந்தி நின்ற தாயைக் கேள்வியாய் பார்த்தாள் தன்னொளி!

''சேலை... மாப்பிள்ளை எடுத்தது! நகை... உன்னோடது தான்... நான் கொடுத்தது... அண்ணி கொடுத்தது... எல்லாம் கலந்து இருக்கு!'' என்றார் தாய், வியாக.

சிறு வியப்புடன், சேலையைப் பார்த்தவள், அசந்து போனாள்! கண்டிப்பாக, இருபதாயிரம் இருக்கும்! வைர ஊசி வேலைப்பாடுடன், அசாத்தியமாய் மின்னியது!

''நல்லா இருக்கில்லம்மா!'' என அவள் ஆசையாய் சேலையை வருட, தாயோ அவளது தலை வருடி, ''கட்டிட்டு வாடா!'' என்றார் வாஞ்சையாக.

''இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ?'' என்ற இன்பப் பரபரப்பே, தன்னொளியை வேகமாய் வேலை செய்ய வைக்க, அடுத்த இருபதாவது நிமிடம், தன்னொளி தன் தோழிகள் புடைசூழ, கோவிலுக்குள் நுழைந்தாள்!



அவள் பக்க உறவுகள், அவன் பக்கத்துச் சொந்தங்கள், இருவரது தோழர்கள், இந்திராவுடன் பணிபுரிபவர்கள் என்று கூடமே நிரம்பியிருந்தது!

''சீக்கிரம் வாம்மா! நேரமாகுது இல்லை'' என்று உறவுப் பெண்களுக்குள் ஒருத்தி அழைக்க, தன்னொளி சந்நிதி பக்கமாய் நகர்ந்தாள்.

''என்ன மதினி... தாலி கோர்த்துப் போட்டுடுவோமா? இல்ல... முதல கட்டினது அப்படியே இருக்கட்டுமா?'' என ஒரு பெண்மணி வினவ,

''ஹான்! இந்தத் தாலி இருக்கட்டும்... அத்தை இருக்கும் போது கட்டினது... அதுவும் கோவில்ல வச்சுத் தானே கட்டினாங்க... இருக்கட்டும்!! அதுவுமில்லாம... இளா எனக்கு முதன்முதலா கட்டினது... ப்ளீஸ்!!!'' என்ற தனுவின் குரலில் தென்பட்ட பதட்டமும், அவள் தாலியை இறுகப் பிடித்தத் தினுசும், மூத்த உறவுகளை வியக்கச் செய்ய,

''எத்தனையோ சமூகத்தில... ரெண்டு தாலி கட்டுற பழக்கமுண்டு! இருக்கட்டும், விடுங்க!'' என்றார் ஒரு பெரியவர்.

அதன் பின், சடங்குகளும் சம்பிரதாயங்களும் வேகமாய் நடந்தேறின!

தங்கம் சாட்சியாய் கட்டப்பட்ட பொன்மஞ்சம் தாலி, புதுப்பொலிவு பெற்று மிளிர, அதற்கு இன்னமும் அழகு கூட்டுவது போல், இளாவின் கரங்கள் தனுவின் கழுத்தைத் தங்கத்தாலியால் மாலையிட, இருவரது உள்ளத்திலும் இருந்த தங்கம், வெளியிருந்த தங்கத்தாலியை மானசீகமாய் ஆசீர்வாதம் செய்தார்!

அவர் மட்டுமில்லாமல், சுற்றியிருந்த உறவும், நட்பும் வாழ்த்து மழை பொழிய, திருமதி.இளம்பரிதி மீண்டும்

திருமதியானாள்! ஆனால், மீண்டும் திருமதி. இளம் பரிதியாகவே!! மீண்டும் மீண்டும்!

முன்பிருந்த சங்கடங்கள்... மன வருத்தங்கள்... சுணக்கங்கள் என்று எதுவுமில்லாமல், வெறுமனே ''இவன் என் கணவன்!'' என்ற பெருமை மட்டுமே முகத்தில் வீற்றிருக்க, இளாவின் கைப்பிடித்து அக்னியை வலம் வந்தாள், தன்னொளி!!

அதன் பின், ஓரோர் சடங்காய் நடந்தேறி, குலம் வாழும் பிள்ளையை பெரியவர்களிடம் கொடுத்து வாங்கிக் கொள்ளும் சாங்கியம் நடைபெறத் துவங்கியது!

''குலம் வாழும் பிள்ளையைக் கொண்டுவா... அமலா!'' என்று அந்த அத்தை குரல் கொடுக்கும் போதே, தன்னொளியின் பார்வை இளம்பரிதியின் முகத்தில் மோதி நின்றது!

யாருக்கும் தெரியா வண்ணம், அவன் கண்ணடிக்க, 'நா சொன்னதுக்காகவா?'' என்றான் தனு, உதட்டசைவில்.

''ஆமா... உனக்காக! உனக்காக மட்டுமே! எனக்குள்ள இருக்க உனக்காக!'' என்றான் அவனும் உதட்டை மட்டும் அசைத்து.

''ச்சோ... ஸ்வீட்!!'' என தனு உதடு குவித்துக் கொஞ்ச,

''அடடா!! அடடடடடடா!'' என்ற ஆர்ப்பரிப்பும்,

''ஹோ!!!'' என்ற கூச்சலும்,

''ஓரங்க நாடகம் நடந்தேருது!'' என்ற பாடலும்,

''கண்ணாலே... காதல் கவிதை சொன்னாளே! உனக்காக!'' என்ற கோரசும் அரங்கத்தை நிரப்பி, தனுவின் கன்னத்தைச் சிவக்கச் செய்தது!

குலம் வாழும் பிள்ளையை இரு குடும்பத்துப் பெரியவர்களிடம் கொடுத்து ஆசி வாங்கிய பின்னர்,



''இளா... வாடாப்பா! வந்து... உன் பொண்டாட்டியை ஆசீர்வாதம் பண்ணு!'' என்றார் இளாவின் பெரியம்மா.

விரிந்த சிரிப்புடன் அவன் வந்து நிற்க,

''இதுக்கு மேல உன்னால இளிக்க முடியாதாடா? போதும் வழியுது!'' என்று கிண்டல் செய்தனர், இளாவின் நண்பர்கள்.

''அவர் என்ன ஊரான் பொண்டாட்டியைப் பார்த்தா சிரிச்சார்?!! அவர் பொண்டாட்டி... அவர் சிரிச்சார்... ரசிப்பார்... கண்ணாலேயே பேசுவார்... காலால கோலம் போடுவார்... உங்களுக்கேன் பொறாமை!'' என்று வம்பு செய்தது, தனுவின் தோழிக்கூட்டம்!!

கிண்டல் செய்தவர்கள் என்னவோ தங்களுக்குள் பேசிக் கொண்டே இருந்தனர் தான்! ஆனால், கிண்டலுக்கு ஆளானவர்கள்! ம்ஹூம்! இருவருக்குமான தனி உலகத்தில் சந்தோஷமாய் சஞ்சரித்திருந்தனர் மணமக்கள்!

குலம் வாழும் பிள்ளையை அவன் கையில் கொடுத்தத் தன்னொளியை, ''மாப்பிள்ளை... காலில விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கோ... தனு!'' என்று இந்திரா உந்த,

''போட்டோ கிராபர் அண்ணா... இந்த அரிய வினாடியை எவ்வளவு போட்டோ புடிக்க முடியுமோ... அவ்வளவு பிடிச்சுக்கோங்க! மிஸ்டர்.பனமரத்துக்கு ஒரு பத்துக் காப்பி... எங்களுக்கு ஒரு பத்து... ச்சே இருபது காப்பி போட்டுக் கொடுத்திடுங்க! அப்பப்ப... எடுத்துப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக்குவோம்!'' என்று அருள் கலாய்க்க,

அதையெல்லாம் மதிக்கும் மனோநிலையில் தனு இருக்கவில்லை.

முகத்தில் ஓர் நிறைவுடன் அவனது பாதங்களில் பணிந்து எழுந்தவள், புடவைத் தலைப்பை முன்னே விட்டு, அது அவனது பாதத்தை மறைத்த வேளையில், நறுக்கென்று ஒரு கிள்ளு கிள்ளிவிட்டு எழுந்தாள்.

''என்னை எவ்வளவு நாள் தவிக்க விட்டீங்க! அனுபவிங்க!'' என்பது போல் பார்த்தத் தனுவைப் பரிதாபமாய்ப் பார்த்தான், இளம்பரிதி!!

''ஆஅ...'' என்று கத்தப் போனவன், ''ஷப்பா!'' என்றான் முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு.

''என்னத்தான் ஷப்பா...'' என அருள் கவனித்து விட்டுக் கேட்க,

தன்னொளி தன் அதரங்களுக்குள் சிரிப்பை மறைத்து, அவனுக்குக் கண்ணால் கொக்கிப் போட்டாள்!

என்ன பதில் சொல்வது என்று இளம்பரிதி யோசித்துக் கொண்டிருக்க, அவன் முகத்தில் தென்பட்ட அசடில் தனுவின் அதரங்கள் அடக்க மாட்டாமல் துடித்தன!

அவனது நல்ல நேரமோ... அல்லது தனுவின் நல்ல காலமோ ''என்னப்பா இளா... கையில இருக்க பிள்ளையைக் கொடு!'' என ஒருவர் அதட்ட,

மனைவியிடம் அதைக் கொடுத்தவன், ''சீக்கிரமே நிஜப்பிள்ளை ஒண்ணைக் கொடுக்கிறேன்!'' என்றான், சத்தமில்லாமல்!!

அவன் உதடு அசைந்து முடிந்த வினாடி, ''ததாஸ்து!!!'' என்றது ஓர் குரல், மிக அருகில். வேறு யாராய் இருக்க முடியும்? அருளே தான்!

''அதிகப்பிரசங்கி! போடி!'' என்று தனு அடிக்க,

''வர வர... டார்வின் காலத்து ஜந்துக்களுக்கு... தேவதைகள்ன்னு நினைப்பு!'' என்று இளா, உதட்டைப் பிதுக்கினான்.



''ஹான்... என்னைக் குரங்கு சொல்றாங்க... அத்தான்!'' என்று மூக்கால் அழுத அருளை, யாரும் மதிப்பதாய் இல்லை! அடுத்தச் சடங்கைப் பார்க்கப் போயிருந்தனர்!

அம்மி மிதித்து, இளாவின் கரங்கள் தனுவின் கால் விரல்களைப் பிடித்து மெட்டி அணிவித்தபோது, தனுவின் கண்களிலிருந்து கண்ணீர் அவளையுமறியாமல் உருண்டோடி, இளாவின் கைகளைத் தொட்டது!

சட்டென நிமிர்ந்துப் பார்த்த இளாவின் பார்வைப் பதற்றத்தை ஏந்தி நிற்கவும், ''ம்ஹூம்! ஒண்ணுமில்ல!'' என்றாள் தனு, அவசரமாக.

அவனுக்குமே, அவளது மனநிலை புரிந்தது!

முன்பு நடந்தத் திருமணம் அவளை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பதை உணர்ந்தவனாய், மெட்டி மாட்டிய விரல்களால் மெல்ல அவளது பாதத்தில் சிறு அழுத்தம் கொடுத்து எழுந்தான்!!

வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, அவன் வெறுமனே தொட்டான் என்பது போல் தான் இருந்தது! ஆனால், அந்தத் தொடுகையை அனுபவித்த இரு மேனிகளும் மனதால் இணைந்தன!

எல்லா வகையான சடங்குகளும் முடிய, இளம்பரிதியின் வீட்டிற்குச் சென்றனர் அனைவரும்.

இளம்பரிதி ஏற்பாடு செய்திருந்த வேன்களில் சொந்தங்கள் அனைவரும் வர, குடும்பத்தினர் காரில் முன்னே சென்றனர்.

வீட்டினுள் முதன்முதலாய் நுழைந்த மருமகளை, ''சாமிரூம்ல போய் அத்தையைக் கும்பிட்டுக்கோமா... அவ தான் உன்னை ரொம்ப எதிர்பார்த்தா!'' என்றார் கட்டபொம்மன்.

அவர் சொற்படி, பூஜையறைக்குள் சென்றவள், கண்ணில் கனிவும், முகத்தில் வெள்ளந்தித்தனமும், உதடுகளில் விரிந்த புன்னகையுமாய் இருந்த மாமியாரின் படத்தின் முன்னே பணிந்து எழுந்தாள்!!

கூடவே, ''மாமாவை வரச் சொல்லுங்க... இளா!'' எனக் கூறி, அவரது கால்களிலும் மணமக்கள் விழ,

''என்னம்மா மருமகளே, இந்த மாமா என்னமோ புலி மாதிரி பையனைக் கண்டிக்கிறேன்னு கிளம்பினான்... ஆனா ரிடர்ன் வரும்போது எலி மாதிரி பம்முறானேன்னு நினைச்சியா?'' என்றார் பெரியவர் சிரிப்புடன்.

''உங்களுக்கு மைண்ட் ரீடிங் தெரியும்ன்னு எனக்குத் தெரியாம போச்சே மாமா!'' என்று தனு சிரிக்க,

''என்னையே கிண்டல் பண்றியேமா...'' என்று பரிதாபமாகச் சிரித்த கட்டபொம்மன், ''இந்தக் கல்யாணம்... உனக்கு சர்ப்ரைஸா இருக்கணும்ன்னு இளா சொன்னான்... அதான்ம்மா!'' என்றார் விளக்கமாய்.

கூடவே, ''அன்னைக்கு... உனக்கு புடவை நகையெல்லாம் வாங்கப் போயிருக்கான், பிள்ளை! அவனை எப்படித் திட்டுறது? பொறுப்பு வந்து... செய்றவனைத் திட்டுறது தப்பில்லையா?'' என அவர் கேட்க,

''புடவையா? எனக்கா? இளாவா வாங்கினாங்க?'' என தனு ஆச்சரியப்பட,

''நீ இன்னும் பார்க்கலை இல்லையா? வா... அந்தப் பக்கமா எல்லாம் பரப்பி இருக்கு...'' என்று அவளை அழைத்துச் சென்றார், கட்டபொம்மன்.

மாமனாருடன் நடந்தபோதும், ''என்ன இது?'' என்பது போல் அவள் கணவனைப் பார்க்க,



''போய்ப் பாரு...'' என்றான் கணவன் புன்னகையுடன்.

அங்கே சென்று பார்த்தால், புடவையும் சுடிதாரும் கிட்டத்தட்ட ஐம்பது இருந்தது!! கூடவே, இரண்டு செட் நகைகள்!

எண்ணிக்கையில் ஐம்பது இருந்தாலும், முதல் வரிசையில் வீற்றிருந்த லாவெண்டர் வண்ணப் பட்டுப் புடவையும், நடு வரிசையில் இருந்த லாவெண்டர் வண்ணத்தில் வெள்ளைப் பூக்களால் ஜர்தோஷி வொர்க் செய்த டிசைனர் சேலையும், அடுத்த வரிசையிலிருந்த லாவெண்டர் வண்ணச் சுடிதாரும், லாவெண்டர் பூவாய் தனுவை மாற்றி வைக்க, அதை ருசிக்கும் வண்டாய் மாறிப்போனான் இளம்பரிரி!!

அவன் வாங்கியிருந்த பொருட்களின் நேர்த்தியும், தேர்ந்தெடுத்த வண்ணங்களிலிருந்த ரசனையும், உள்ளுக்குள் உற்சாகத்தை ஊற்றாய் பெருக வைத்தது என்றால், ''தன்னொளி... கொடுத்து வச்சவ! சேலை... துணிமணியே இப்படி ஏகப்பட்டது இருக்குன்னா... அவளைப் புகுந்த வீட்டில் எவ்வளவு பிடிச்சிருக்குன்னு புரியுது!'' என்ற புகுந்த வீட்டு உறவுகளின் வார்த்தைகள் மனதை மயிலிறகால் வருடின!

''எல்ல கல்யாணத்திலையும்... பொண்ணு வீட்டுக்கு வரதுக்கு முன்னாடி... மாப்பிள்ளை எடுத்துக் கொடுப்பாங்க தான்! ஆனா... அவ வீட்டுக்கு வந்ததும்... இப்படி செஞ்சுட்டா... அப்படி செஞ்சுட்டா... நாங்க அவளுக்கு இவ்வளவு பண்ணினோம்... ஆனா எங்ககிட்டயே திமிரா நடந்துக்கிறான்னு புலம்புவாங்க! ஆனா... இங்க... பொண்ணு வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறம் தான் இவ்வளவும் வாங்கியிருக்காங்க! அப்பன்னா... பொண்ணு

குணமா இருக்கப் போயி தானே வாங்கியிருக்காங்க! தன்னொளி மட்டுமில்லை.. மாப்பிள்ளை வீட்டுக்காரங்களும் கொடுத்து வச்சவங்க!'' என்ற பிறந்த வீட்டு உறவுகள், தன்னொளியைத் தாங்கிப் பேச,

''நீங்க சொல்றது... நூறு பெர்சென்ட் கரெக்ட்! எங்கண்ணி... சோ ஸ்வீட்!!'' என்று அண்ணியின் கன்னம் தொட்டுக் கொஞ்சியது, அந்த வீட்டுச் சின்னச் சிட்டு!!

அவளைக் கன்னத்தோடு அணைத்துக்கொண்ட தன்னொளி, ''தேங்க்ஸ் பூக்குட்டி!'' என்றாள் சந்தோஷமாய்.

அனைவரும் உணவருந்தச் செல்ல, மகளைத் தனியே அழைத்த இந்திரா, ''இன்னைக்கு மாதிரியே என்னைக்கும் ஒற்றுமையா இருக்கணும், தனு! நீ தான்... பூக்கு எல்லாம் செய்யணும்! அது ஞாபகம் இருக்கட்டும்!'' என்றார் அறிவுரையாக.

''என்னாச்சும்மா... திடீர்ன்னு இப்படிப் பேசுறீங்க? ஒருவேளை... இந்தச் சந்தோஷத்தில... என்னோட பொறுப்பை மறந்துடுவேன்னு நினைக்கிறீங்களா?'' என தனு கேட்கவும்,

இந்திராவால் பதில் சொல்ல முடியவில்லை! பின்னே, மகள் மனதையல்லவோ படித்துவிட்டாள்!?

தாயின் மௌனம் ஆமோதிப்பைக் கொடுக்க, அவரது கைகளைப் பிடித்துக் கொண்டவள் ''நா சின்னப் பொண்ணு தான்... ஆனா... அது உங்களுக்கும்! இளாக்கும் மட்டும் தான்! மத்தவங்களுக்கு... நான் வளர்ந்தவ! முக்கியமா... பூக்கு நான் அம்மா! அந்தப் பொறுப்போட நடந்துப்பேன்! கவலைப்படாதீங்க!'' என்றாள் உறுதியாக.



உதட்டில் புன்னகை நிறைய, ''அதென்ன? மாப்பிள்ளையும் நானும் மட்டும் என்ன பாவம் பண்ணினோம்? எங்களை மட்டும் சின்னப்புள்ள மாதிரி படுத்தலாமா?'' என அம்மா சிரிக்கவும்,

''நீங்க பாவம் பண்ணலை... என் மனசுக்கு ரொம்ப... ரொம்ப... ரொம்பப் பிடிச்சவங்கங்கிற லிஸ்ட் இருந்து... பெரிய புண்ணியத்தைத் தான் தேடிக்கிட்டு இருக்கீங்க!'' என்ற மகளும் மனம் விட்டுச் சிரித்தாள்!

உரிமையும்... நேசமும்... பாசமும் உள்ள இடத்தில் தான், கோபமும் தாபமும் வரும் என்பது அனுபவஸ்தரான இந்திராவுக்குப் புரியாதா என்ன?!!

சிறு சிரிப்புடன், பெண்ணின் தலை தொட்டு ஆசீர்வதித்தார் அன்னை!!

அதன்பின்னர், தடபுடலாய் அசைவு விருந்து நடக்க, நிரம்பிய வயிறும், வாய் நிறைய வாழ்த்துமாய் உறவும் நட்பும் கிளம்பிச் சென்றனர்!!

''அண்ணே... மாப்பிள்ளையும் தனுவும் திருவண்ணாமலைக்கு வரட்டுமா? எங்க வழக்கப்படி... முதலிரவு பொண்ணு வீட்டில தான் நடக்கணும்!'' என்று கோரிக்கை வைத்தார் இந்திரா.

கட்டபொம்மன் பதில் சொல்வதற்கு முன்னர், ''திருவண்ணாமலையில வேணாம்மா! ரெண்டு வயசுப் பொண்ணுங்க இருக்க இடத்தில... அசிங்கமா...'' என்று இழுத்தாள், தனு.

மாப்பிள்ளை என்ன நினைப்பாரோ என்ற சங்கடத்தில், ''இதில என்னடி அசிங்கம்?'' என்று இந்திரா அதட்ட,

''அவ சொல்றது ஒருவகையில சரி தான், அத்தே! நாங்க... சென்னை போய்டுறோம்!'' என்றான் இளம் பரிதி, மனைவியின் சார்பாய்!!

அவன் எதை எண்ணிக் கூறினானோ, ''வாடா... வா! நீ அடி வாங்க வசதியான இடம்... சென்னை தான்! மகனே வா!'' என்று உள்ளுக்குள் திட்டமிட்டப்படியே, கணவனுடன் சென்னைக்குப் பயணப்பட்டாள், தன்னொளி!

## 21

இந்திரா எவ்வளவோ சொல்லியும், இன்றே சென்னை செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டான் இளம்பரிதி.

செஞ்சியில் இருந்து சென்னைக்குப் பேருந்தில் பயணப்பட்டனர், இருவரும். பேருந்தில் அமர்ந்த நிமிடமில்லாமல், தனு கணவனின் தோள் சாய்ந்து உறங்கிவிட, ''ஆஹா... தனு! என்னடா தூங்குறே?!! என்றான் அவன், அவளது கன்னம் தட்டி.

''பின்னே? ஒரு வாரமா எனக்குச் சரியான தூக்கமே இல்லை... தெரியுமா? எல்லாம் உங்களால...'' என்று அவனது புஜத்தில் பலமாய்க் குத்துவிட்டாள், தன்னொளி.

''ஹே... உனக்கு ஒரு சர்ப்ரைஸ் கொடுக்கலாம்ன்னு தான்...'' என அவன் விளக்கம் சொல்ல ஆரம்பிக்க,

''உங்க விளக்கத்தைக் கேட்கிற அளவுக்கு... நான் நல்லவ இல்லை! பேசாம... என்னைத் தூங்க விடுங்க!''



என்ற தன்னொளி, நல்லவசதியாக சாய்ந்து கொண்டு உறங்கியும் போனாள்!

''மகனே! உனக்கு இன்னைக்கு... டின்னு தான்!'' என்ற சங்கு மனதில் ஊதியபோதும், ''பார்த்துக்கலாம்!!'' என்றெண்ணினான், இளா! தெனாவெட்டாய்!

கோயம்பேடு பேருந்து நிலையம் வந்தது கூடத் தெரியாமல், ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மனைவியைப் பார்க்கப் பார்க்க, இளாவிற்குத் தெவிட்டவில்லை!

''பாவம்! ரொம்ப டென்ஷன் ஆகிட்டா போல...'' என்று மனம் சீராட்ட,

''நீ சீராட்டலாம்! தாலாட்டலாம்! ஏன் அலாக்கா தூக்கிக்கூடச் சுத்தலாம்! ஆனா... பஸ்காரன் விடுவானோ? மரியாதையா இறங்கு!'' என்று மூளை எச்சரித்தது!

மூளையின் கட்டளையை மனம் ஒப்பிவிட, ''தனு... சென்னை வந்தாச்சுடா!'' என்றான் தோளில் சாய்ந்திருந்த அவளது முடி ஒதுக்கி!

''ஹ்ம்ம்!'' என்று சிறு சோம்பல் தனத்துடன் எழுந்தவள், ''ச்சே! அதுக்குள்ள சென்னை வந்துடுச்சா?'' என்றாள் ஏமாற்றமாக.

''எனக்கு என்னமோ... அந்த டிரைவர் என்னைக் கடியேத்துறதுக்குன்னே ரொம்ப மெதுவா ஓட்டின மாதிரி இருந்துச்சு!'' என்று உதடு பிதுக்கியவனின் கவனம் முழுதும், மனைவியின் உதடு மேலேயே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது!

அதை அவளும் உணர்ந்தாள் என்பது அதைவிடவும் குறிப்பிடத்தக்கது!

''சரி... சரி... சும்மா வாய் பேச்சு வீராச்சாமியாவே காலத்தைக் கழிக்காம... எழுந்திருங்க!'' என அவள் முன்னே நடக்க,

''எனக்கு வேணும்!!'' என்று தலையில் அடித்துக் கொண்டான், இளம்பரிதி!!

பேருந்து நிலையத்தை விட்டு வெளியே வந்ததும், ''சாப்பிட்டுப் போலாமா, தனு?'' என அவன் வினவ,

''அடேங்கப்பா! சாருக்கு... பொண்டாட்டி பசியோட இருப்பாங்கிற நினைப்பெல்லாம் இருக்காக்கும்!'' என்று புருவம் உயர்த்தி, நக்கலாய்ச் சிரித்தாள் தன்னொளி!

''ஏய்... நீ எதை மனசில வச்சுக்கிட்டு... என்னைக் காய்ச்சி எடுக்கிறேன்னு சொல்லிட்டு காய்ச்சு... ப்ளீஸ்! இல்லன்னா மண்டை காயுது இல்ல!'' என்றான் இளா, கைகளைக் குவித்துப் பரிதாபமாய்!

மாதுளை முத்தெனச் சிரித்தவள்,''முதல் தடவை என்னைப் பார்க்கும் போது... ஒரு பேச்சுக்காவது... சாப்பிடறியான்னு கேட்டீங்களா? நீங்க பாட்டுக்கு பைக்ல ஏறி... சல்லுன்னு போயிட்டீங்க?'' என அவள் குறைபட,

''அடிப்பாவி! அது நடந்து... எத்தனை நாளாச்சு... இப்ப வரைக்கும் மனசில வச்சுக்கிட்டு இருக்கே?'' என நிஜமாகவே வியந்து போனான், இளம்பரிதி!

''அதான் சார்... பொண்ணுங்க! உங்களுக்கு மறக்கிற வியாதின்னா... எங்களுக்கு ஞாபகம் வச்சுக்கிற வியாதி! லேசில... எதையும் மறக்க மாட்டோமாக்கும்!'' என அவள் விஞ்ஞானி போல் சிரிக்க,

''சரிங்க சாமிஜி! வாங்க... போய்ச் சாப்பிடலாம்! அப்புறம்... என் புள்ள கல்யாணத்தன்னைக்கு... நம்ம கல்யாணத்தன்னைக்கு எனக்குச் சாப்பாடு கூட வாங்கித்



தாலைன்னு கம்ப்ளைன்ட் பண்ணாலும் பண்ணுவே!'' என்றபடியே, அவளை அழைத்துக் கொண்டு... ம்ஹூம் இழுத்துக் கொண்டு, அருகிருக்கும் உணவகத்திற்குள் நுழைந்தான்.

உணவு முடிந்து அவர்கள் வீடு திரும்புகையில், இரவு மணி பத்தாகியிருந்தப் போதும், இருவருள்ளும் ஓர் இனம் புரியா உற்சாகம் ஊற்றென ஓடிக்கொண்டிருந்தது!

வீட்டில் நுழைந்த மறுவினாடி, இந்திராவின் அழைப்பை ஏந்தி, கைப்பேசி கிணுகிணுக்க,

வேகமாய் எடுத்து ''என்னம்மா?'' என்றாள் தனு.

''வீட்டுக்கு வந்துட்டீங்களான்னு கேட்கத் தான் போன் பண்ணினேன்... கல்யாணம் முடிஞ்ச நிமிஷமில்லாம இப்படியா கிளம்பி வரது? கொஞ்சம் கூட... பெரியவங்க சொல்றதைக் கேட்கிறதில்லை!'' என்று தன் ஆதங்கத்தைப் பொரிந்து தள்ளிவிட்டார், இந்திரா.

''எதுக்கும்மா இவ்வளவு டென்ஷன்? நாங்க பத்திரமா வந்துட்டோம்! அருளும் பூவும் இருக்கும்போது, நாங்க மட்டும் தனியா... ப்ச்... நல்லா இருக்காதும்மா... அதான்!'' என தனு சமாதானம் சொல்ல,

''ஆமா... அதுங்க ரெண்டும் வாயில விரலை வச்சா கடிக்கத் தெரியாத பச்சப்புள்ளங்க... இவ ஒருத்தி!'' என்று நொந்து கொண்டவர்,

''இன்னும் ரெண்டு வருஷம் போனா... ரெண்டுக்கும் கல்யாணம் பண்ண வேண்டிய வயசு வந்திடும்! இவ என்னடான்னா நூத்துக் கிழவிக்கு அப்பத்தா மாதிரி பேசிக்கிட்டு!'' என்று முணுமுணுத்தவாறே அழைப்பை வைத்தார்.

"ஷ்... போங்கம்மா!" என்று சிணுங்கிவிட்டு, அழைப்பை வைத்தவள்,

அருகே நின்று குறுகுறுவென பார்த்துக் கொண்டிருந்த கணவனிடம் "நீங்க எதுக்கு சென்னை வர ஒத்துக்கிட்டீங்க??" என்றாள் செல்லம் கொஞ்சியவாறே. கூடவே, சன்னமாய் ஓர் அடியுடனும்!

"இதென்ன தனு... அநியாயமா இருக்கு? நீ தான்... சென்னை போகணும்ன்னு ஆரம்பிச்சே... அதான் ஒத்து ஊதினேன்! ஒரு ஹஸ்பண்டோட ஜாபை நல்லபடியா பண்ணினா உனக்குப் பிடிக்காதே!!!???" என்றான் பெரும் ஆச்சரியத்தைக் கண்டவன் போல்.

"ஆமா... இவர் பண்ணின ஜாப்போட லட்சணம் எனக்குத் தெரியாது?! தயிர்சாதம்... தயிர்சாதம்... புளிச்சுப் போன தயிர்சாதம்!!"

"வேணாம்... என்னைப் பத்தி உனக்குத் தெரியாது! தேவையில்லாம என்னைச் சீண்டிவிடாதே!"

"ஆமா... நீங்க என்ன ராஜராஜ சோழன் காலத்துத் தங்கப் புதையலா? தெரியாம இருக்கிறதுக்கு!! எல்லாம் எனக்குத் தெரியும்!!"

அவளது வார்த்தைகளை விடவும், பார்வையிலும் பாவனையிலும் ஏகத்திற்கும் அலட்சியம் தென்பட, "இனி வார்த்தையால் பேசினால் சரிவராது!" என்று முடிவு பண்ணியவனாய், இமைக்கும் நேரத்தில் மனைவியைக் கையிலேந்தி, வீர நடை போட்டான்! படுக்கையறைக்குள்!

காதல் போர்க்களத்தில், முத்தச் சண்டைகள் போடப் பட, அணைப்புகள் அரணாய் மாறிப் போக, சீண்டல்கள்



சக்கரங்களாய் சுழன்று வர, கொஞ்சல்கள் கொடி பிடித்துப் புரட்சி செய்ய, திமிறல்கள் திக்கற்ற அம்புகளாய் உருமாற, அங்கே ஓர் அழகிய யுத்தம் ஆரம்பமானது!

அணையிட்டிருந்த வெள்ளமென அவன் மடை திறக்க, கரையில்லா ஆறு போல் தடுமாறிப் போனான் தன்னொளி!!

ஒரு கட்டத்தில், அவன் இளைப்பாற "இளா!!" என்றாள் தனு, ஆச்சரியமும் சந்தோஷமுமாய்!!

அவளது கண்கள் "நா பார்த்தத் தயிர்சாதமாடா... நீ?" என்ற கேள்வியைத் தாங்கி நிற்க,

"அவனே!" என்பது போல் அவனும் கண்களை அழுந்த மூடி, ஆமோதித்தான்! கூடவே, உதடுகளால் ஓர் கெசட் கையெழுத்துப் போட்டு, உறுதிப் படுத்தினான்!!

கைவளைவில் நின்ற மனைவியின் இடையை அவனது கைகள் இறுக்க, அவளோ அவனது மார்பில் தாடைப் பதித்து, மெல்ல தலையுயர்த்திப் பார்த்தாள்!!

பார்த்த வினாடியில்லாமல் "ஹப்பா... எம்மாம் உயரமா இருக்கீங்க? நினைச்ச உடனே ஒரு முத்தம் கொடுக்க முடியுமா?" என அவள் அங்கலாய்க்க,

"ஆஹா! இந்த நிமிஷம்... இந்த செகண்ட்... உயரமா வளர்ந்ததுக்காக... நா பீல் பண்றேன், தனு!" என்று வருத்தம் கொண்டவன்,

"ஆனா... வளர்ந்த உயரத்தை வெட்டியா எடுக்க முடியும்?" என்றான் சோகமாக.

"பரவாயில்லை! எனக்கு உம்மா கொடுக்கணும் போல இருந்தா... "டேய் பையா... என்னை வந்து தூக்கு..." அப்படின்னு நான் குரல் கொடுப்பேனாம்... நீங்க தூக்

கினதும்... ஹ்ம்ம் உங்களால என்னைத் தூக்க முடியும் தானே?''

''தூக்கிக் காட்டவா?'' என அவன் கண்ணடிக்க,

''வேணாம்... வேணாம்... இருங்க! நான் சொல்லி முடிச்சிடுறேன்...'' என அவனை விட்டு விலகி நின்றாள், தன்னொளி.

விலகி நின்றவள், ஆட்காட்டி விரலால் அவனைச் சுட்டி,''நா... டேய் பையா... இங்க வா... கம் ஹியர்... சொல்வேனா...''

''சும்மா கம் ஹியர்ன்னா எப்படி? என்னத்துக்கு வரச் சொல்றேன்னு எனக்கு எப்படித் தெரியும்? அடிச்சுக் கிடுச்சு வச்சுட்டியானா?'' என கணவன் எழுப்பியச் சந்தேகத்திற்கு,

''அப்புறம்... எனக்கு உன்னைக் கிஸ் பண்ணனும் போல இருக்குன்னு மேடை மேல ஏறி நின்னா கத்த முடியும்! நாசுக்கா சொன்னாப் புரிஞ்சுக்கணும்!'' என்று விடை கொடுத்தாள், மனையாள்.

''நாசுக்கு... இது...'' என அவன் உதடு பிதுக்க,

''இப்ப சொல்லவா வேணாமா?!!'' என்றாள் அவள் கறாராக.

''வேணாம்ன்னு சொல்லிட்டு... நான் ஆரோக்யித் தோட இருந்திட முடியுமா என்ன?'' என்று முணுமுணுத் தவன், அவள்''என்ன?'' என்று முறைக்கவும்,

''இல்ல... இல்ல... சொல்லு! சொல்றதைச் சீக்கிரம் சொன்னா... இருக்கிற வேலையைச் சட்டுப் புட்டுன்னு பார்க்கலாம்ல... அதான் சொன்னேன்!'' என்றான் சமா



தானம் என்ற போர்வையில், ஓர் பெரும் வலையை விரித்து,

''ஹ்ம்ம்!!'' என்று சில நிமிடங்கள், அவனை அவள் முறைக்க,

''ஹ்ம்ம். சொல்லு... டேய் பையா இங்க வான்னு சொல்வியாம்... அப்புறம்...'' என்று எடுத்துக் கொடுத் தான் கணவன்.

''அதான் சொல்லிட்டேனே... தூக்குங்க!!''

அடுத்த நிமிடம், அவன் அவளை ஓர் குழந்தை போல இரு கைகளாலும் ஏந்தியிருக்க,

''அய்யே! இப்படித் தூக்கினா எப்படி? இதுவும் தான் ஹைட் எட்டலை... ஸ்ட்ரைட்டா தூக்குங்க!''

''ஹ்ம்ம்... சரி...'' எனச் சிரித்தவன்,

ஒரு வயது நிரம்பிய குழந்தைகளைத் தூக்குவது போல், முகத்துக்கு நேரே முகம் வரும்படி அவளைத் தூக்கி நிற்க, அவனது சிகையை நன்றாகக் களைத்து விட் டவள், ''எனக்கு ரொம்ப நாளா இப்படிப் பண்ணனும்ன்னு ஆசை!'' என்றாள் சிறு குழந்தை போல்!

மனம் குளிர்ந்து, உடல் சிலிர்த்து, கணவன் சிரிக்க, வேகமாய் அவனது வலக்கன்னத்தில் பலமாய் கடித் தவள், அவனது பிடியிலிருந்து திமிறி வெளிப்பட்டு, படுக்கயறையை விட்டு ஓடப் பார்த்தாள்!

''அடிப்பாவி... இதுக்கா என்னைத் தூக்கச் சொன்னே?'' என அவன் அலற,

''பின்னே... லூசா நீங்க? இவ்வளவு பெரிய உருவத் துக்கு முத்தம் கொடுக்கணும்ன்னா... என்னைத் தூக்கினா

தான் முடியுமா என்ன? நா உங்க ஹைட்டுக்கு வரதை விட, நீங்க என் ஹைட்டுக்கு வரது ஈஸி இல்லையா? மக்கு... மக்கு!'' என்று சிரித்தாள், மனையாள்!

''அதெப்படி... உன் ஹைட்டுக்கு நான் வரது?'' என அவன் குழம்பவும்,

''ஐயோ! அய்யோ! வெறுமே தயிர்சாதம்ன்னு தான் நினைச்சேன்... இப்ப என்னடான்னா ஊசிப் போன தயிர் சாதமா இருக்கீங்களே...'' என அவள் பழிப்புக் காட்ட,

''வேணாம்... ரொம்பக் கிண்டல் பண்ணாத... அனுபவிப்பே! சொல்லிட்டேன்!''

''அப்படி என்னத்த... அனுபவிப்பேன்??''

''அதை சொன்னா புரியாது! செஞ்சாத் தான் புரியும்!'' என்றவன் அதற்கு மேல், அல்லி மேனியளின் முல்லைப் பூ அதரங்களில் முத்தமெனும் தேனைத் திகட்டத் திகட்டப் புகட்டி எடுத்தான்!

வினாடிகள் பெரிதாகி, நிமிடங்கள் கரைந்ததோடி, நேரமெனும் முள் நாணமெனும் அரக்கனை விரட்டிக் கொண்டிருக்க,

''ஷ்... விடுங்க! விடுங்க! விடுங்க!'' என்று ராகம் பாடி, அவனிடமிருந்து தப்பித்தவள்,

''நான் கேட்டக் கேள்விக்குப் பதில் தெரியலைன்னா... இப்படித் தான் என் வாயை அடைக்கிறதா?'' என்றாள் பொய்க்கோபத்துடன்.

''சரிம்மா! அகிலாண்டேஸ்வரி... நீயே பதிலைச் சொல்லிடு!''

'நீங்க என் ஹைட்டுக்கு வரதுன்னா... இப்படி கட்டில்ல உட்காருறது... இல்லை... இப்படிக்கா படுக்கிறது...



அப்பக் கூட என்னால கிஸ் பண்ண முடியும் தானே?'' என்றாள் கண்களைச் சிமிட்டி.

''ச்சே! இது தெரியலை பாரேன்... எனக்கு!!'' என்று தலையில் அடித்துக் கொண்டபோதும்,

''இருந்தாலும்.... நா உன் ஹைட்டுக்கு வரதை விட, நீ என் ஹைட்டுக்கு வரது தான்... எனக்குச் சௌரியம்... ஏன்னு சொல்லு!?'' என்றான் அவளது கைப்பிடித்து இழுத்து.

''ஏன்?'' என அவள் புரியாமல் பார்க்க,

''அந்த டைம்ல தான்... மேடம் என் கண்ட்ரோல்ல இருப்பீங்க... இஷ்டப்படி... என்ன வேணும்னாலும் செய்யலாம்!'' எனக் கண்ணடித்தவன், அதன் பின் தன் இஷ்டத்தை எந்தவிதக் கஷ்டமுமில்லாமல் நிறைவேற்றிக் கொண்டான்!

திருமணத்தைப் பூர்த்தி செய்யும் தாம்பத்தியம், இரு உடல்களின் சேர்க்கையாய் மட்டுமில்லாமல் இரு மனங்களின் சேர்க்கையாகவும் அமைந்ததில், அங்கே இல்லறம் நல்லறமாய் உருபெற்றது!!

உடல்களின் விளையாட்டில் களைப்படையாமல் இரு மனங்களும் உற்சாகம் பெற்று, அடுத்த விளையாட்டுக்கு, ''கெட்... செட்... கோ...'' சொல்ல விருந்த வேளையில்,

''ஏன் இளா... உங்களுக்கும் என் மேல் ஆசை இருக்கு... ஆசைங்கிறது ஒரு பக்கம்... லவ் இருந்திருக்கு... என்னைப் பிடிச்சிருக்கு... ஆனா... ஏன் இளா, என்னைத் தவிக்க விட்டீங்க?'' என்றாள் தனு, குறையாக.

''அன்னைக்கு... அதான்... நம்ம முதல் கல்யாண நாள் அன்னைக்கு... தாலி ஏறினதும்... உன் கண்ணில இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்துச்சு! அந்தக் கண்ணீர்... எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கு... தனு! அதோட... நீ ஒருவாட்டி சொன்னே ஞாபகம் இருக்கா... எதிர்பார்த்தா தானே பிரச்சனை... எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து போறேன்... எனக்கு ரொம்பக் கஷ்டமா போச்சு... தனு! நா... பூ... அம்மா... அப்பா... எல்லாரும் உன்னால சந்தோஷமா இருக்கும் போது, நீ மட்டும் வருத்தப்படுறது எனக்குப் பிடிக்கலை! உன்னை ஓரளவுக்காவது சந்தோஷப்படுத்திட்டுத் தான்... எல்லாம்ன்னு நினைச்சிருந்தேன்... அதான்டா!'' என்றான் விளக்கமாக.

அவள் ''ம்ம்..'' எனவும்,

''டேய் பேபி! நான் உன் பக்கம் சாய்ஞ்சு... ரொம்ப நாளாச்சு... ஆனா... உனக்கு என்னைப் பிடிக்கிற வரைக்கும் இந்தக் கல்யாண ஏற்பாடெல்லாம் வேணாம்... பண்ணக் கூடாதுன்னு வெயிட் பண்ணிட்டே இருந்தேன்! உன்னோட சிக்னல் கிடைச்ச மறுநாள்... வேலையை ஆரம்பிச்சுட்டேன்...''

''எப்படி இளா.. நாலே நாளில...''

''ஊரில எல்லாரும்... கல்யாணத்தைத் திரும்ப நடத்தணும்ன்னு சொல்லிட்டே இருந்தாங்க... நான் தான்... உன் மனசு நிலைப்படட்டும்ன்னு தள்ளிப் போட்டுட்டே இருந்தேன்... நீ இளகி வந்ததும், அப்பாகிட்ட சொல்லி எல்லா ஏற்பாடு பண்ணியாச்சு!''

''அந்த வீக்-எண்டு... சேலை... நகையெல்லாம் வாங்கப் போனீங்களா?''



''ஆமா... எல்லாத்தையும் தூக்கிட்டு வீட்டுக்கா வரமுடியும்? அதான் பிரண்டு வீட்டில வச்சுட்டு வந்தேன்... அடுத்த நாள்... எனக்கே ஒரே பயம் வந்திடுச்சு... எங்க நீ ஏதாவது கேள்வி கேட்டு... ஒரு ஒருவேளை... அழுது... நான் பாட்டுக்கு உளறிட்டா! அதான் வீட்டுக்கே வரலை!'' என்றான் சிரிப்புடன்.

''அய்யே! அவ்வளவு சின்னப் பையனா நீங்க?

''ஆமா பேபி! உன்னைப் பார்த்தா... என்னையும் அறியாம மனசில இருக்கிறது எல்லாம் சொல்லிடணும் போல... மனசு பரபரன்னு இருக்கு!'' என்றான், அவன் தனுவின் இதழில் இதழ் ஒற்றி!

''நானும் பாப்பா தான்... உங்களுக்கும் இளாவுக்கும் மட்டும்!'' என்று தாயிடம் தான் கூறியது, நினைவு வந்தது தனுவிற்கு.

நெஞ்சம் நெகிழ முடியா அளவுக்கு நிறைந்துவிட, ஏனோ தானும் ஏதோ கொஞ்சமாய் புண்ணியம் செய்தது போன்ற கர்வம், அவளுக்கு!

அந்தக் கர்வம் தந்த துணிவோ என்னவோ, அச்சம்... மடம்... நாணம் ஆகியவற்றின் சாயலை முற்றிலும் துறந்தவளாய், அவனை இறுக அணைத்து, கன்னம் நனைத்தாள்! உதடுகளால்!!

தானே கிறங்கிப் போயிருப்பவனை, இப்படிச் சீண்டி விட்டால் சும்மா இருப்பானா என்ன? அடுத்த யுத்தத்திற்கு, போர் முரசு கொட்டப்பட்டு, யானை... சேனை... படை... பட்டாளம் என முத்தங்களும், அணைப்புகளும், சீண்டல்களும், தீண்டல்களும் ரத்தினக்கம்பளம் விரித்து அழைக்கப்பட்டன!!

யுத்தத்தின் இறுதியில், விட்டால் போதுமெனத் தன்னொளி அங்கிருந்து தப்ப எத்தனிக்க, ''போயேன்... எங்கே போய்விடுவாய்!?'' என்ற ரீதியில், அவளை விடுவித்து, கட்டிலில் ஒய்யாரமாய்ச் சாய்ந்திருந்தான் இளம் பரிதி!

வரவேற்பறைக்கு விரைந்தவள், ஐந்து நிமிடம் கழித்தும், கணவன் தன் பின்னோடு வராமல் போகவும், கோபமுற்றவளாய், ''ஹே பையா... ம்ஹூம்... டேய்... டேய் டேய் பையா... இங்க வா... கம் ஹியர்!!'' என்றாள் அதிகாரமாய்!

''அடிங்க!!'' என்று உள்ளிருந்து வெளிப்பட்டவன், அவளைத் துரத்த,

அங்கே ஓர் கபடி நாடகம்... வரவேற்பறையைத் தொடர்ந்து, படுக்கையறைக்குள் களம் மாறியது!

அந்த நாடகத்தின் அரிதாரமாய், தன்னுள்ளிருந்து வெளிப்பட்ட ஒளியால் இளம்பரிதியையும் அவனது குடும்பத்தையும் வசீகரித்தத் தன்னொளி, ஆதவனாய் அரவணைத்த அவளது இளம்சூரியனிடமிருந்து, புத்தொளியைக் கிரகித்து, வெண்பனியில் குளித்தெழுந்த வெண்முத்தாய் மின்னினாள்!!